
உனக்காகவே
வாழ்கிறேன்
அருணாநந்தினி

# உனக்காகவே வாழ்கிறேன்



1

விடியற்காலை நேரம்!

கதிரவன் விழிப்பதற்காக சுப்ரபாதம் பாடும் புள்ளினங்கள்... ஆதவனின் பார்வைக்கு தவமிருக்கும் மலர்க் கூட்டம்... தலையசைத்து வரவேற்கக் காத்திருக்கும் தருக்கள்...

கண்விழித்தாள் சாதனா... உள்ளங்கைகளை தேய்த்துப் பார்வையைப் பதித்தாள்...

இன்றைக்கு இனிய நாளாக விடியட்டும்... நல்ல நாளாகக் கழியட்டும்... வழக்கமாய் வேண்டுவது போலவே இன்றும் மானசீகமாய் வேண்டினாள்...

கூடவே நினைத்த காரியம் தடையின்றி நிறைவேற வேண்டும் என்றும் தான்.

அவளையும் அறியாமல் 'எம்.டி.'யின் முகம் நினைவுக்கு வந்தது...

'உங்களிடம் முக்கியமான விஷயம் பேச வேண்டும் சாதனா..'

'பர்சனல்' விஷயம்...' என்று சொல்லியிருந்தானே அது என்னவாக இருக்கும் என்பதையும் அவளால் ஊகிக்க முடிந்தது.

கொஞ்ச நாட்களாய் அவனது பார்வையை அவளும் படித்துக் கொண்டிருந்தாளே...

காதலாய் கசிந்துருகும் பார்வை... நினைக்கையில் அவளுக்குச் சிரிப்பு வந்தது.

அதற்காகத்தானே அவளும் காத்திருந்தாள்...

சரத்சந்திரனின் கடைக்கண் பார்வைக்காக தவமிருந்த பெண் ஊழியர்களின் மத்தியில்... சாதனாவைக் காதல் பார்வைப் பார்த்தது பெரிய விஷயம் ஆயிற்றே. அவளுக்குள் உற்சாகம் பொங்கியது.

இன்றைக்கு சீக்கிரமே அலுவலகத்திற்குப் போக வேண்டும்... இன்றைக்கு அவளது கனவு நனவாகப் போகிறது... எதிர்பார்த்தது நிறைவேறப் போகிறது. சரத் சந்திரன் கனிவோடு பார்த்து 'ஐ லவ் யூ' என்று சொல்லும் நாள்... அப்புறம்...'

தலையை உதறிக் கொண்டாள்...

நோ... இப்படி 'மசமச'வென்று இருக்கக் கூடாது. சீக்கிரம் கிளம்பு சாதனா... இன்று உன் நாள்... உனக்கு அமைந்திருக்கும் அதிர்ஷ்ட நாள்...



உன் காட்டில் மழை கொட்டப் போகிறது... தூள் கிளப்பு...

போர்வையை எடுத்து வீசிவிட்டு எழுந்தாள்.

ஷவரில் இருந்து மினி அம்புகளாய் விழுந்த நீரில் குளிக்கையில் இன்பமாக இருந்தது. ஏதோ ஒரு பாடலை 'ஹம்மிங்' செய்தவாறு நீராடினாள்.

பூந்துவாலையை எடுத்து உடம்பைச் சுற்றிக் கொண்டு வந்து தனது உடைகளை ஆராய்ந்தாள்.

இன்றைக்கு என்ன உடுத்தலாம்...

சுரிதார்... ஊகூம்... சேலைதான் சரி...

இன்று நடக்கப் போகும் 'ஷோ'விற்கு சேலைதான் பொருத்தம்.

பார்த்து... மெலிதான ரவிக்கையையும்... இளம் சிவப்பு வண்ண சேலையையும் அணிந்தாள்.

சீவி... சிங்காரித்து கனகாம்பரத்தைச் சூட்டிக் கொண்டாள்.

சிரத்தையாய் ஒப்பனை செய்து கொண்டு... தாயிடம் வந்தாள்.

''அம்மா... டிபன் ரெடியா...'' என்று தாயின் தோளை அணைத்துக் கொண்டாள்.

மகளை வியப்புடன் பார்த்தாள் கல்பனா...

''என்னடீ... இன்னிக்கு சீக்கிரம் கிளம்பிட்டே. அதுவும் இத்தனை அழகா அலங்கரித்துக் கொண்டு... ஆபீஸில் ஏதாவது பார்ட்டியா என்ன...''

இட்லியை தட்டில் எடுத்துப் போட்டவாறே கேட்டாள் தாய்.

''இன்னிக்கு என் வாழ்க்கையில் முக்கியமான நாள்ம்மா... என்னோட நாடகத்தோட அரங்கேற்றம் நடக்கப் போவது இன்னிக்குத்தான்...''

இட்லியை விண்டு மிளகாய் பொடியில் தோய்த்து வாயில் போட்டவாறு சொன்னாள் மகள்.

''ஓ... ஆபீஸில் 'பங்க்ஷ'னாக்கும்... நாடகத்தில் நடிக்கிறாயா என்ன...''

அப்பவியாய் கேட்ட தாயைப் பார்த்து 'களுக்'கென்று சிரித்தாள் சாதனா.

''அய்யோ... மக்கு அம்மா... உனக்கு எதுவும் புரியாது. புரியவும் வேண்டாம்... விடு... சரிம்மா... மதுரையிலிருந்து போன் ஏதும் வந்ததா... மீரா ஏதாவது அண்ணாவைப் பற்றிப் பேசினாளா...'' என்று கேட்டாள் சாதனா.

மகன் பற்றிய பேச்சு வந்ததும் பெற்றவள் முகத்தில் வாட்டம் வந்தது.

''ப்ச்சு... ஒரு தகவலும் இல்லை... மனசு கிடந்து தவிக்கிறதுடீ... என் பிள்ளை எப்படி இருக்கிறானோ... என்ன செய்கிறானோ என்று தெரியவில்லையே... நீயாவது உன் தோழிக்குப் போன் பண்ணிக் கேட்கக் கூடாதா சாதனா...'' தவிப்புடன் கேட்டாள் கல்பனா...

''அய்யோ.. அம்மா... அண்ணாவோட நல்லதுக்காகத் தானே நான் அங்கே விட்டு வச்சிருக்கேன். அவன் பழைய படி ஆக வேண்டும் என்பதற்காகத்தான் என் பிரெண்ட் கிட்டே விட்டிருக்கேன். அவள் திறமையான மனநல மருத்துவர்ம்மா... கவலைப்படாமல் இரேன்... கூடிய சீக்கிரமே பழைய நந்துவாய் வருவான் பார்... சரி... நான் புறப்பட்றேன்... எனக்கு நேரமாச்சும்மா...'' என்றவள்... தாயின் கன்னத்தில் செல்லமாய் முத்தமிட்டாள்.



''ச்சீ... என்னடீ இது... கன்னத்தில் எச்சில் பண்ணிண்டு...'' முகத்தை சுளித்தாள் தாய்.

''இன்னிக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கேன்ம்மா... நான் நினைத்ததை சாதிக்கணும்னு என்னை வாழ்த்தி அனுப்பும்மா...'' கொஞ்சலாய் கூறினாள் செல்ல மகள்.

''நீ என்ன நினைச்சேன்னு எனக்கு என்ன தெரியும்... என்னவோ உன் பேச்சும் செய்கையும் விசித்திரமாய் தெரியறதுடீ... எனக்கு வயித்தைக் கலக்கறது... ஏதாவது மனசுக்குள் திட்டம் போட்டிருக்கியா... சொல்லுடீ...''

''ஊகூம்... இப்போ எதுவும் சொல்றதா இல்லை. வந்து சொல்றேன்... ஓ.கே....''

''அம்மாடி! வயித்தில் பாலை வார்த்தியே... வரேன்னு சொன்னாயே... அதுபோதும்...'' முதலில் விழித்துவிட்டு... பிறகு புரிந்து கொண்டவளாய் ''ஓ... நான் இப்படி அழகாய் அலங்கரித்துச் செல்வதைப் பார்த்து... சந்தேகமாக்கும்... அசட்டு அம்மா.. அப்படியெல்லாம் ஓட்ற முட்டாள் இல்லை உன் பெண். இருந்து சாதிக்கிறவம்மா... அதான்... சாதனான்னு பேர் வச்சிருக்கேயே... அய்யோ... நேரமாச்சு... அப்பாகிட்டே சொல்லிடு...''

ஓடாத குறையாய் சென்ற மகளை வெறித்தவாறு நின்றாள் தாய்... என்னவோ புதிர் போட்டு விட்டுப் போகிறாளே... இது நல்லதற்கா... கெட்டதற்கா என்று தெரியவில்லையே... ஈசுவரா.. கல்பனாவின் மனம் பதைத்தது...

பஸ்ஸில் பயணித்த போதில் மனசுக்குள் ஏதேதோ நினைப்புகள்... என்ன செய்ய வேண்டும் என்று அலசல்... கூடவே ஜெயிக்கப் போகிறோம் என்ற களிப்பும்தான்... பின்னே... எத்தனைக் கஷ்டப்பட்டு அந்த அலுவலகத்தில் இடம் பிடித்தாள். அவளுடைய படிப்புக்கு

திறமைக்கும் இரு கரங்கள் நீட்டி வேலையைத் தந்தா லும்... லேசாய் புருவ எழுச்சி...

கோல்ட் மெடலிஸ்ட்... இதை விடப் பெரிய பெரிய 'மல்டி நேஷனல்' கம்பெனியில் வேலை நிச்சயம் கிடைக் குமே... இங்கே எதுக்கு... என்ற கேள்விப் பார்வையும்தான்.

அதற்கு அவள் தந்த பதிலும் மழுப்பலாகவே இருந்தது.

''பெரிய நிறுவனங்களில் படித்த அறிவாளிகள் எத் தனையோ பேருக்கு வேலை கிடைக்கும்... எனக்கு 'ரெக்கக்னேஷன்' கிடைக்கணும்னா இந்த மாதிரிக் கம்பெனியில் தான் முடியும் சார்...''

வேறு யாராக இருந்தாலும் இந்தப் பெண் ஜம்பக்காரி... கர்வம் பிடித்தவள் என்றுதான் நினைத்திருப்பார்கள்... ஆனால்... சரத்சந்திரன் அவளுடைய தன்னம்பிக்கையை மெச்சினான்... தன் திறமை மீது இருந்த நம்பிக்கை... உடனே வேலைக்கான ஆர்டரையும் நீட்டினான்.

அதைக் கையில் வாங்கிக் கொண்டு அவனைப் பார்த்துச் சிரித்தாள் சாதனா. அது வெற்றிக் களிப்பு என்று அவனுக் குத் தெரியாமல்.... வேலை கிடைத்த பூரிப்பு என்று நினைத்துக் கொண்டான் சரத்சந்திரன்.

"இதோ... இந்த ஸீட் தான் உங்களுடையது மிஸ்... சாதனா... இந்தப் பொறுப்புள்ள வேலையை உங்களுக்குத் தந்திருக் கிறேன் என்றால்... அது உங்களுடைய படிப்புக்கோ... திறமைக்கோ மட்டும் இல்லை... பொதுவாய் ஆண்களை விடப் பெண்களுக்குத்தான் பொறுமையும் நிதானமும் அதிகம்... அதுவும் திருமணம் ஆகாத பெண்களுக்கு இன்னும் கூடுதலாய் இருக்கும் என்பது என் அபிப்ராயம்... ஏன் என்றால் அவர்களுக்கு குடும்பப் பிரச்சனைகள் அவ்வளவாக இருக்காது இல்லையா...'' என்றான் அவன்.



'எனக்கும் இந்த வேலை வேண்டியிருந்தது மிஸ்டர் சரத்சந்திரன். அதற்காகத்தானே இத்தனை பகீரதப் பிரயத்தனங்கள்' இது மனக்குரலின் முணுமுணுப்பு...

''டி.வி.எஸ். ஸ்டாப்!'' நடத்துனரின் குரல் தட்டி எழுப்ப அவசரமாய் எழுந்து... நெரிசலின் ஊடே பாம்பாய் உடல் வளைத்துச் சென்று... கஷ்டப்பட்டு இறங்கினாள்.

வியர்வையைத் துடைத்துக் கொண்டு நடக்கையில் பின்னால் தன் கைக்குழந்தையுடன் ஓடி வந்த பிச்சைக் காரி ''அம்மா... பட்டினிம்மா'' என்று யாசிக்க... கைப் பையைத் துளாவி... ஐந்து ரூபாய் நாணயத்தை எடுத்து அவளுக்கு போட்டாள்... அந்தப் பிச்சைக்காரிக்கு பிரமிப்பு... ஐந்து ரூபாயா!

''என்ஜாய்'' குஷி மூடில் இருந்த சாதனா கூற...

''சில்லரையா.. இல்லையேம்மா...'' என்று தலையைச் சொறிந்தாள் அந்தப் பிச்சைக்காரி.

''வேண்டாம்... நீயே வச்சுக்கோ...'' என்று சொல்லி விட்டு அவள் நடக்க...

''மகராசி... நீ நல்லா இருப்பே... உன் மனசு போல எல்லாம் நடக்கும்'' என்று வாழ்த்திவிட்டு சென்றாள்

'யெஸ்... இன்னிக்கு நடக்கத்தான் போகிறது...' குதூகலம் கொப்பளிக்க ஆபீஸுக்குச் சென்றாள் சாதனா...

உள்ளே நுழைந்தவளின் கண்கள் எம்.டி. அறைப் பக்கம் தாவியது.

இன்னும் வரவில்லையோ.. ப்யூன் தங்கவேலு இல்லையே...

அதுவும் நல்லதுதான்... வரட்டும்... நிதானமாய்...

கைக்கடிகாரத்தைப் பார்த்தாள்... பத்து மணிக்கு பதினைந்து நிமிடங்கள் இருந்தன.

பத்து மணிக்கு 'டாண்' என்று வந்து விடுவானே... அவன் வரும்போது 'ஸீட்'டில் இருக்கக் கூடாது. அவனது கண்கள் அலை பாய வேண்டும்... என்னைத் தேட வேண்டும்... சாதனா வரவில்லையா என்று கேட்க வேண்டும்.. அதை மற்றவர்களும் கவனிக்க வேண்டும்...

ஆரம்பத்தில் மேலதிகாரி என்ற மிடுக்குடன் இருந்தவன்... பிறகு மெல்ல மெல்ல நெகிழ்ந்து... தன்னிடம் நெருங்கி வந்ததை நினைத்ததும் அவளுக்குச் சிரிப்பு வந்தது.

அதைத்தானே அவளும் வேண்டியது. அதை எதிர் நோக்கியல்லவா அவளும் காத்திருந்ததும்...

அவனைத் தன் பக்கம் திருப்ப வேண்டும். அவனது கவனத்தை ஈர்க்க வேண்டும்... மெல்ல அவனது மனதை தன் வசப்படுத்த வேண்டும் என்று எண்ணியது நடந்தே விட்டதே... சபாஷ்!

மற்றப் பெண்களைப் போல அவள் வழியவும் இல்லை. இளிக்கவும் இல்லை... தான் உண்டு... தன் வேலை உண்டு என்று இருந்தாள்.

அவளின் நிதானம்... செயல்படும் திறமை... அறிவுத் திறன்... 'பளிச்'சென்ற வெளிப்படையான பேச்சு... அத்தனையும் விட அவளது அழகு...

ஒரு ஆண்மகனை ஈர்க்க இவை போதாது... சரத் சந்திரன் மனம் குழைந்து போனதில் வியப்பே இல்லை.

காய் பழுத்து கனியானது மாதிரி... அவனது உள்ளமும் காதலால் கனிந்து நின்றது.

தன் காதலை வெளிப்படுத்தும் தருணம் நோக்கி காத்திருந்தவன்... இன்று எப்படியாவது அவளிடம் தன் நெஞ்சைத் திறந்து காட்டும் ஆர்வத்துடன் வந்தான்.



சந்தோஷத்தில் முகம் தகதகக்க... ஆசையில் கண்கள் மினுமினுக்க... உல்லாசத்துடன் ஏதோ ஒரு பாட்டை முணுமுணுத்தவாறு ஆபீஸுக்குள் நுழைந்தான்.

தனக்காக பூகம்பம் ஒன்று வெடித்து விழுங்கக் காத்திருப்பதை அறியாதவனாய்...




''சுமதி... நான் போய் கொஞ்சம் புடவையை சரி பண்ணிக் கொண்டு வருகிறேன். என் போன் அலறினால் என்னன்னு கேட்டு வை...'' சொல்லிவிட்டு நகர்ந்தாள் சாதனா.

புடவையெல்லாம் சரியாகத்தான் இருந்தது... சரத்சந்திரனை தவிர்க்கத்தான் அந்தக் காரணத்தைச் சொன்னாள். கொஞ்சம் கண்ணாமூச்சி விளையாடி... அவனைத் தவிக்க வைக்க வேண்டும் என்ற ஆசை...

அதுவும் நடந்தது...

உள்ளே வந்த சரத்சந்திரனின் கண்கள் சாதனாவைத் தேடின... அவளது இடத்தில் அவளைக் காணாமல்... ஒரு தவிப்புடன் நேரே சுமதியிடம் வந்தான்.

''குட்மார்னிங் சார்...'' எழுந்து அவள் மரியாதையுடன் சொல்ல...

''குட்மார்னிங்... சாதனா இன்னும் வரவில்லையா...'' என்று கேட்டான்.

''வந்திருக்கிறாள் சார்...'' என்றதும்... அவனது முகத்தில் தெரிந்த மலர்ச்சி...

ம்ம்... சாதனா கொடுத்து வைத்தவள் தான்... எம்.டி.யின் காதலைப் பெற... சுமதி பெருமூச்சு விட்டாள்.

அவன் தன்னுடைய அறைக்குள் செல்லும்வரை காத்திருந்த சாதனா.. அங்கு வந்தாள்.

''எம்.டி. வந்தாச்சா...'' தெரியாதவள் போல அவள் கேட்டாள்.

''ம்ம்.... வந்ததும் உன்னைத்தான் விசாரித்தார்...''

'அதைத்தானே எதிர்பார்த்தேன்' என்று எண்ணினாள் அவளும்.

தங்கவேலு வந்தான். ''சாதனாம்மா... அய்யா உங்களைக் கூப்பிட்றாங்க...''

'இதையும் எதிர்பார்த்தேன்' என்று உள்ளம் குதிக்க...

''இதோ வரேன்'' என்றாள் சின்னச் சிரிப்புடன். கணக்கு வழக்குகள் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று ஒரு தடவை சரி பார்த்துவிட்டு... ஃபைலுடன் சென்றாள்.

'சாதனா... இப்போதான் நீ நிதானமாய் செயல்பட வேண்டும். அவசரப்பட்டுக் காரியத்தைக் கெடுத்து விடாதே...' மனக்குரல் மெல்ல எச்சரித்தது.

மனசுக்குள் பட்டாம்பூச்சி படபடத்தது.

''குட்மார்னிங் சார்'' உள்ளே நுழைந்தவளை மேலிருந்து கீழாய்... பார்வையால் ரசித்தான்.

சிவப்பு ரோஜா பூத்து நிற்பதுபோல 'பளிச்'சென்ற அழகுடன் நின்றிருந்த சாதனாவைப் பார்த்தவனின் இதயம் குதிரை வேகத்தில் துடித்தது...



கருநீல பாம்பின் வாய் சிக்கிய பூரண சந்திரன் போல அவளது அழகிய முகமும்... அடர்ந்த கூந்தலும்... கடலும் என்னுள் அடக்கம் என்பதைச் சொல்லாமல் சொல்லும் கண்கள்... சின்னதாய்... எடுப்பாய் இழைத்து வைத்த அழகிய நாசி... 'ஓ' போடும் செவிகள்... கொவ்வைச் செவ்வாய் இதழ்கள்... அதனுள் முத்துக்களாய் ஒளிரும் பற்கள்... சங்காய் மினுக்கும் கழுத்து... அளவாய் அமைந்த தேக அங்கங்கள்...

அத்தனை அழகும் ஒட்டு மொத்தமாய் கொட்டிக் கிடந்த வனப்பு!

''சார்... ஏதோ சொல்ல என்னை அழைத்தீர்கள் போல...'' உள்ளூர சிரித்தவாறு கேட்டாள் அவள்.

பிரமிப்பிலிருந்து விடுபட்டவனாய் தலையை உதறிக் கொண்டான் சரத்சந்திரன்.

''ஆ... யெஸ்... சாதனா... உங்களிடம் கொஞ்சம் மனம் திறந்து பேச வேண்டும் என்று தான் அழைத்தேன்...''

புருவங்களை உயர்த்தி... கணகளை மலர்த்தி அவனைப் பார்த்தாள்... 'என்ன விஷயமோ' என்பது போல...

''என்னை மணக்க சம்மதமா... இதை இங்கே... ஆபீஸில் கேட்கக் கூடாதுதான்... மாலை... எங்கேயாவது அழைத்துச் சென்று பேசலாம் என்றால்... அதுவரையில் காத்திருக்கும் பொறுமையில்லை...''

சாதனா கையில் இருந்த ஃபைலை அங்கே இருந்த மேஜையின் மீது வைத்தாள்.

''என் காதலை உங்களிடம் வெளிப்படுத்த எத்தனையோ தடவை முயன்றேன்... ஆனால் அது முடியவில்லை சாதனா. தயக்கம் என்னைக் கட்டிப் போட்டு விட்ட

இன்று எப்படியாவது சொல்லிவிட வேண்டும் என்ற தீர்மானத்துடன் வந்தேன்... தெரியுமா?'' அவள் அவனையே உற்றுப் பார்த்தாள்... இதழோரம் சிறு சுழிப்பாய் புன்னகை... இகழ்ச்சியோ...

''என்னடா... இப்படித் திடீர் என்று காதல்... கல்யாணம் என்று சொல்கிறான் என்று திகைப்பாக இருக்கிறதா உங்களுக்கு... பரவாயில்லை சாதனா... அவசரப்படாமல் நிதானமாய் உங்கள் முடிவைச் சொல்லலாம். என் வீட்டில் நிச்சயம் ஒப்புதல் கிடைக்கும்... வேண்டும் என்றால் உங்கள் வீட்டிற்கு வந்து உங்கள் பெற்றோரிடமும் பேசுகிறேன்...''

அவள் பதில் எதுவும் சொல்லாமல்.... தலையில் செருகி இருந்த 'ஹேர் பின்களை' நீக்கினாள்.

கேசத்தை கலைத்து விட்டாள்.

''முகத்தில் இருந்த ஒப்பனையை துடைத்தவள்... ரவிக்கையின் கைப்பகுதியை விரல் நகங்களால் அழுத்தி இழுக்க... ஜாக்கெட்'டர்' என்று கிழிந்து பரிதாபமாய் தொங்கியது...

அவன் திகைத்துப்போய் அவளை வெறித்தான். இவள் என்ன செய்கிறாள்.

நான் இவளிடம் கேட்டது திருமணம் செய்து கொள்கிறாயா என்று தானே... வேறேதும் இல்லையே... ஏன் இப்படிப் பித்துப் பிடித்தவளாட்டம் நடந்து கொள்கிறாள்...

''சாதனா... என்ன இது...?''

அவளைத் தடுக்க முயன்றான்... அவளது கைப் பிடித்து நிறுத்த முயல... அவனது கரத்தை பிடித்து உதறியவள்... ''அய்யோ... என்னை விடுங்கள்'' என்று கத்திக் கொண்டு அங்கிருந்து ஓடினாள் சாதனா.



அழுது கொண்டு ஓடும் அவளைப் பார்த்தவாறு நின்றிருந்தான் சரத்சந்திரன்...

அதிர்ச்சி அவனை இடியாய் தாக்க... அசையவும் முடியாமல் நின்றிருந்தான் அவன்.

எம்.டி.யின் அறைக்கதவைத் திறந்து.. 'ஓ'வென்று அழுதவாறு ஓடிவந்த சாதனாவைப் பார்த்து அனைவருக்கும் திகைப்பு... என்ன ஆச்சு இவளுக்கு... என்று புரியாமல் விழித்தனர்.

'பாஸ்' ஏதாவது ஏசினாரா... ஊகூம்... இருக்காது. சாதனா என்ற பெயரைக் கேட்டாலே ஐஸ்கிரீமாய் குழைந்து விடும் சரத்சந்திரனாவது... அவளை ஏசுவதாவது...

பின்னே... என்னதான் நடந்திருக்கும்...

அட... இதென்ன கோலம்... இல்லை... அலங்கோலம்... தலையெல்லாம் கலைந்து போய்.... ரவிக்கையில் கிழிசல் வேறு... சேலை கூட கலைந்து போயிருக்கிறது என்றால்... இதற்கு ஒரே ஒரு காரணம் தான் இருக்கும்...

சே... எம்.டி... அப்படிப்பட்டவரா... நம்ப முடியவில்லையே...

அனைவரின் மனதிலும் வியப்பு...

இத்தனை நாட்களாய் எல்லோரிடமும்... முக்கியமாய் வேலை பார்க்கும் பெண்களிடம் கண்ணியத்துடன் நடந்து கொண்டவர்... அவரையா சந்தேகிக்க முடியும். ஒரு வேளை இருந்தாலும் இருக்கலாம்... இத்தனை நாள் கண்டிப்பு காட்டி இறுகி இருந்தவர். சாதனா வந்ததி லிருந்து பாகாய் கரைந்து விடவில்லையா... அடிக்கடி அவளது இருப்பிடத்திற்கு வருவதும்... குழையக் குழைய பேசுவதும்... தேவையில்லாமல் சிரிப்பதும்.. அடிக்க தன் அறைக்கு அழைப்பதும்... தினசரி நடக்கின்ற கூத்

தான் பார்த்தோமே... விசுவாமித்திரரே மேனகைக் காலில் போய் விழுந்து விடவில்லையா... எம்.டி. எம்மாத்திரம்.

எதையும் நம்புவதற்கும் இல்லை...

அதுவும்... இந்த மாதிரி விஷயத்தில் எந்தப் பெண்ணாவது பொய் சொல்லுவாளா... மானம் போகும் விஷயம் ஆயிற்றே.

சாதனா எத்தனை நல்ல பெண்... நிமிர்ந்தும் பார்க்காமல்... தான் உண்டு... தன் வேலையுண்டு என்று இருப்பவள் ஆயிற்றே. ஒரு நாளும் முறை தவறி நடந்து பார்க்கவில்லையே.

அவள் மீது தவறு இருக்காது...

எல்லாம் சபல புத்தியால் வந்தது.. உயர்ந்தவன் என்று நினைத்தோமே... இப்படி வக்கிரபுத்தியாகவா இருக்க வேண்டும்... சே...

பல கண்களில் பலவிதமான கேள்விகள்...

அனைவரும் அவளைப் பரிதாபமாய் பார்க்க... சாதனா கலங்கிய கண்களுடன் தன் கைப்பையை எடுத்துக் கொண்டு வெளியேறினாள்.

அனைத்து ஊழியர்களும் அய்யோ... பாவம் என்று அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளிவந்தான் சரத்சந்திரன்.

இன்னும் அதிர்ச்சியிலிருந்து அவனால் விடுபட முடியவில்லை.

சாதனா ஏன் அப்படிச் செய்தாள் என்று தெரியாமல் குழம்பித் தவித்தான்.

அவளுக்கு ஏதாவது 'நெர்வஸ்' பிராப்ளமா... ஹிஸ்டீரியாவா... இல்லை.. இது ஒரு வகை மனோ வியாதியா...



மண்டைக்குள் நண்டாய் குடைந்தது. எதுவானாலும் அவளிடம் விசாரித்து தெரிந்து கொள்ள வேண்டும் என்று வெளிவந்தான்...

ஆனால்... சாதனா இல்லை...

அது போகட்டும்.

அத்தனை பேரின் பார்வையில் ஏன் ஊசி முனை தெரிகிறது... குற்றவாளியைப் பார்ப்பது போலல்லவா என்னைப் பார்க்கிறார்கள்.

அடச்சே.. ஒரு பெண் அலங்கோலமாய்... வீறிட்டுக் கொண்டு வெளியே ஓடி வந்தால்... யாருக்குத்தான் தப்பாகப் படாது.

அப்படி எதுவும் நடக்கவில்லை என்பதை எப்படி இவர்களுக்கு புரிய வைப்பேன்...

ஏன் இப்படிச் செய்தாய் சாதனா...

என்னை மணக்க விருப்பம் இல்லையென்றால் அதைச் சொல்லி இருக்கலாமே... ஏன் இப்படி ஒரு 'ஸீன் கிரியேட்' செய்தாய்... என் மீது மசியைக் குழைத்துப் பூசவா... அப்படி என்ன தப்பு செய்து விட்டேன்...

அங்கிருந்தவர்களின் பார்வைக் கணைகளின் குத்தலில் உள்ளம் குன்றியவன்... மீண்டும் தன் அறைக்குள் நுழைந்து கொண்டான்.

ஓட்டினுள் ஒடுங்கும் ஆமையாய்... காலையில் வெகு உற்சாகமாய்... உல்லாசமாய் இங்கு வந்தது என்ன... முகத்தில் கரியைப் பூசினது போல நடந்தது என்ன... கன்றாவி... கேவலம்... அவமானம்... மனதிற்குள் குமைந்தான் அவன்...

'ரிங்ங்' என்று சிணுங்கிய டெலிபோன் ஒலியு அவன் காதில் விழவில்லை... அந்த அளவில் அவன உணர்வுகள் மரத்துப் போயிருந்தன...

காற்றுப் போன பலூனாய் அவன் தொய்ந்து அமர்ந் திருந்த அதே நேரம்...

ஹைட்ரஜன் வாயு நிரம்பிய பலூன் போல வானத்தில் பறக்க வேண்டும் போல இருந்தது சாதனாவிற்கு. மீண்டும்... மீண்டும்... சரத்சந்திரனின் திகைத்த பார்வை நினைவுக்கு வர... அவளால் சிரிப்பைக் கட்டுப்படுத்த முடியாமல் போனது... 'ஓ'வென்று சிரித்தாள்.

நல்ல வேளையாய்... அக்கம் பக்கத்தில் ஜனநட மாட்டம் அவ்வளவாக இல்லை...

கண்களில் நீர் வந்தது... சந்தோஷக் கண்ணீரா... இருக் கும்...

“சாதனா... நீ ஜெயிச்சுட்டே.... நினைத்ததை சாதிச் சிட்டே... வெல்டன்... சாதனா...” தன்னையே அவள் மெச்சிக் கொண்டாள்.

பாவம்.. சரத்சந்திரன்... இப்படி ஆகும் என்று எதிர் பார்த்திருக்க மாட்டான்.

அய்யா காலையில் குஷாலாய் வந்திருப்பார்... தன் ஆசையை எடுத்துரைத்ததும்... இந்த சாதனா அவரது மடியில் விழுந்து விடுவாள்... நான் பாக்கியசாலி... உங்களை மணம் செய்து கொள்ள ஜென்ம ஜென்மமாய் புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்றெல்லாம் 'டயலாக்' சொல்வேன் என்று கூட எதிர்பார்த்திருப்பார்... எல்லாம் 'புஸ்'ஸென்று ஆகிவிட்டது. இத்தனை நேரம் இந்த விஷயம் அனைவரது வாயிலும் அவலாகிப் போயி ருக்கும்... அய்யோ... பாவம்... மிஸ்டர் சரத்சந்திரன்... தி கிரேட் பிஸினஸ் மேன்... பேயறை வாங்கியது மாதிரி... ஆடிப்போயிருப்பார்.

இனி யாரும் அவனை மதிக்க மாட்டார்கள்... எல் லோருடைய கண்களுக்கும் தேவனாகத் தெரிந்தவன் இனி



ராட்சசனாய் தெரிவான். கொம்பும்... கோரைப் பல்லும் கொண்ட டிராகுலாவாய்... அதை நினைக்கையில் மறு படியும் சிரிப்பு வந்தது.

ஏய்... மிஸ்டர் சரத்சந்திரன்... உனக்கு இது வேண்டும் தான். உன் கர்வத்திற்கு நான் கொடுத்த சாட்டை அடி... 'நான்' என்ற உன் திமிருக்கு நான் தந்த பேயடி... நாணய மாய்... நேர்மையாய் நடந்து கொள்பவர்களை நம்பாமல்... அவர்களை கேவலமாய் நடத்தினதற்கு இது நெற்றியடி... யூ டிசர்வ் இட்... மனம் கொக்கரித்தது...

அடடா... இதைக் கொண்டாட வேண்டுமே... என்ன செய்யலாம்...’’

உள்ளம் ஆனந்தமாய் துள்ள... கண்களை அலைய விட்டாள்... வாவ்!

அதோ... ஐஸ்க்ரீம் பார்லர்...

அதனை நோக்கி நடந்தாள்.

ஸ்ட்ரா பெர்ரி ஐஸ்க்ரீம் வாயில் கரைந்து... தொண்டைக் குள் இனிப்பாய் வழிந்தது... ஏன்... மனசுக்குள்ளும் தான்...

நிதானமாய் ரசித்து உண்டாள்.




“அம்மா...’’

ஓடிவந்து இறுகி அணைத்த மகளை வியப்புட நோக்கினாள் கல்பனா.

''என்னடீ சந்தோஷம் இப்போ... 'பிரமோஷன்' வந்ததா... இருக்காதே... இப்பத்தானே நீ சேர்ந்தது...''

தாயின் கைப்பற்றி தட்டாமாலைச் சுற்றினாள் சாதனா.

''விடுடீ... என்ன இது... சின்னக் குழந்தையாட்டம்'' தடுமாறிய கல்பனா அதட்டினாள்.

''அம்மா... நான் ரொம்ப... ரொம்ப சந்தோஷமா இருக்கேன்... அப்பா எங்கேம்மா...''

அவளது உரத்த குரலில் வெளிவந்தார் தந்தை கேசவமூர்த்தி.

''என்னம்மா விஷயம்... சாதனா...'' என்று மகளை விசாரித்தார்.

''ஜெயிச்சுட்டேன்ப்பா... ஊரைக் கூட்டி கர்ஜனைப் பண்ணி... நான் சிம்மம்'' என்று காட்டியதே... அது வெறும் 'மியாவ்'ங்கற கள்ளப் பூனைதான்னு எல்லோரும் நினைக்க வச்சுட்டேன்... என்னப்பா... புரியலையா... அந்த சிங்கத்தோட குகையில்... நரியின் தந்திரம் செய்து சேர்ந்தேன் இல்லையா... அதற்குப் பலன் கிடைத்து விட்டது... சிங்கத்தின் முகத்திரையைக் கிழித்து... அசிங்கமாக்கி விட்டேன். பாவம்... அது அவமானத்தில் உடல் சிறுத்து... முகம் கறுத்து... மனம் வெறுத்துப் போய் கிடக்கிறது...'' என்று மகள் சொல்லப் பதறினாள் கல்பனா.

''என்னடீ சொல்றே... யாரை.. என்ன பண்ணிட்டு வந்தே...''

''அதான்... அந்த சரத்சந்திரனைத்தான்... ஒரு வழி பண்ணிட்டேன். இனி அவனால் வெளியே நடமாடவே முடியாது... அவமானத்தில் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாக வேண்டும்... அய்யோ... நினைக்கவே சந்தோஷமா இருக்குப்பா...''



கல்பனா கலவரத்துடன் கணவனைப் பார்த்தாள்... அவர் எதுவும் பேசாமல் இருந்தார்.

''என்னப்பா... இத்தனைக் கஷ்டப்பட்டு நான் நினைத்ததை சாதித்துவிட்டு வந்திருக்கிறேன். நம் குடும்பத்து சந்தோஷத்தை அழித்தவனை பழி வாங்கி விட்டு வந்திருக்கிறேன்... ஒரு பாராட்டுக் கிடையாதா... உங்க மகள் ஜெயித்து விட்டாள் என்கிற ஆனந்தம் உங்களுக்கு இல்லையாப்பா...''

''இல்லேம்மா... சத்தியமா இல்லை... ஒருவன் அடிச்சா பதிலுக்கு அவனைத் திருப்பி அடிக்கிறதில் என்ன சந்தோஷம்... ம்ம்...''

''ஓகோ... ஒரு கன்னம் அறைந்தால் மறு கன்னம் காட்டு என்கிற தத்துவமாக்கும்... சாரிப்பா... அப்படி நடந்து கொள்ள நான் ஒன்றும் இயேசுவோ... மகாத்மாவோ இல்லை... வெறும் மனுஷிதான்...''

''இல்லேம்மா.. ஒருவனை திருப்பி அடிச்சுட்டா... அப்புறம் அவனுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம். தான் செய்தது தப்பு என்பதை அவன் உணரும்படி செய்வது தான் உண்மையான வெற்றி... அதே ஆபீஸுக்கு போய் சேர்ந்தாயேன்னு அப்பவே எனக்குக் கலக்கமாகத் தான் இருந்தது.. போகட்டும்... நிதானமா அந்த சரத்சந்திரனுக்கு அவனோட தப்பை உணர வைப்பாய் என்று சும்மா இருந்தேன்... ஆனா... இப்படி கொக்கரிச்சு நிக்கறதைப் பார்த்தால் ஏதோ ஏடாகூடமா செய்து விட்டாயோ என்று மனசு பதறுகிறது... அப்படி என்ன நடந்தது என்று விவரமாய் சொல்... சாதனா.''

அவள் சொன்னாள்... பெற்றவர்கள் முகம் வெளுத்துப் போனது.

தெய்வமே... அவனை மண்ணைக் கவ்வ வைக்கிறேன் என்ற வெறியில்... என்ன செய்கிறோம் எது செய்கிறோம் என்று அறியாமல்... கண் மூடித்தனமாய் நடந்து கொண்டு... இப்படி சேற்றை எடுத்துப் பூசிக் கொண்டு விட்டாளே... ஊர்வாய் சும்மா இருக்காதே.. கல்லை பாறையாக்கி... பாறையை மலையாக்கிப் பேசுமே... இதை வைத்து இன்னும் என்னென்ன கதைக் கட்டப் போகிறார்களோ... அய்யோ இவளது எதிர் காலம் இருண்டு விடுமே... என்றவளின் வயிறு கலங்கியது...

தந்தைக்கோ சொல்ல முடியாத வேதனைப் பிடுங்கியது. என்ன பெண் இவள்... எதிர்காலத்தை சாம்பலாக்கிவிட்டு... நிகழ்காலத்தில் சாதித்து விட்டதாய் குதிக்கிறாளே. இளரத்தம்... தப்புத் தப்பாய் செய்ய நினைக்கிறது... இவளுக்கு எப்படிச் சொல்லிப் புரிய வைப்பது... நீ செய்தது சாதனை இல்லேம்மா... உனக்கு வந்த சோதனை... நீ எறிந்த கல்... சகதியில் விழுந்து... சேற்றுமண் உன் மீதே தெறித்திருப்பதை நீ அறியவில்லை என்பதை எப்படி உணர்த்துவது... உள்ளம் வெதும்பினார் அவர்.

''என்னப்பா... எதுவுமே பேசாமல் இருக்கிறீர்கள்... பெரிசா பாராட்ட வேண்டாம்... சபாஷ் மகளேன்னு ஒரு வார்த்தை சொல்லலாம் இல்லையா... இதற்காக எத்தனை நாள் பொறுமையாய் செயல்பட்டேன்... அதற்காக நான் பட்ட சிரமங்கள்... செய்த தியாகங்கள்... எத்தனை தெரியுமா... என்னோட மதிப்பெண்களுக்கு பெரிய பெரிய கம்பெனிகளிலிருந்து வந்த வேலை வாய்ப்புகளை ஒதுக்கினேனே... அதையெல்லாம் மறந்துவிட்டு இப்படி பேசுகிறீர்களேப்பா... அந்தக் கம்பெனியில் சேர வேண்டும் என்பதற்காக என்னவெல்லாம் செய்தேன்... உங்க பெயரை கே.மூர்த்தி என்று மாற்றித் தந்து... என் சிநேகிதியின்



விலாசம் கொடுத்து... இன்னும் வேலையில் சேர்ந்தது என்ன சும்மாவா... போங்கப்பா... இந்தக் காலத்தில் நியாயம் தர்மம் என்றெல்லாம் பார்க்கக் கூடாது... 'டிட் ஃபார் டாட்' பழிக்குப் பழி... அவ்வளவுதான்... அம்மா... அப்பா கிடக்கிறார்... விடு... நீ இப்ப என்ன செய்யறே... அருமையா ஸ்வீட் பண்ணி தர்றே... தர்றேதானே... என் செல்ல அம்மா...''

தாயின் கன்னத்தில் முத்தமிட்டு விட்டு ஓடினாள் சாதனா...

கணவனை கலக்கத்துடன் பார்த்தாள் கல்பனா... இது எங்கே போய் முடியப் போகிறதோ...

''முதலில் அவளுக்கு ஒரு நல்ல மாப்பிள்ளையாப் பாருங்கோ... இப்படியே விட்டால் அவ்வளவுதான். மனசுக்குள் பெரிய ஜான்ஸி ராணின்னு நினைப்பு...'' என்று வருத்தத்துடன் சொன்னாள்.

''இந்த விஷயமாத்தான் பேசணும்னு நானும் இருந்தேன். ஒரு நல்ல வரன் வந்திருக்கு. என் சிநேகிதன் பார்த்தசாரதி இல்லே... அவனுக்குத் தெரிந்தவர்களாம்... சாதனாவுக்குப் பார்க்காமலேன்னு கேட்டான்... அதைப்பத்தி பேசலாம் என்று வந்தால்... இப்படி ஒரு குண்டை எடுத்துப் போடுகிறாளே... இவள்...'' என்றார் கேசவ மூர்த்தி.

''பொண்ணா லட்சணமா இல்லாமல் இதென்ன பழி வாங்கறேன்னு கால்ல சலங்கைக் கட்டாத குறையாய் குதியாட்டமோ... இவள் என்ன நீதி தேவதையா... போய் நியாயம் வழங்க... என்னவோ போங்கள்... இவ அங்கே வேலைக்குப் போனதே எனக்குப் பிடிக்கவில்லை. இப்போ... கன்னா பின்னான்னு எதையோ செய்துட்டு இங்கே வந்து ஆகா... ஓகோன்னு குதிக்கிறாளே... எனக்குப் பத்திக்கிட்டு வருகிறது... அவ வர்றா... முதல்ல அவளை அழைத்துப் பேசுங்கோ... இந்தக் கல்யாணத்திற்கு

சம்மதிக்க வையுங்கோ... சீக்கிரம் கல்யாணத்தை நடத்தி விட்டு... அவளை புகுந்த வீட்டிற்கு அனுப்பினப்புறம் தான் எனக்குத் தூக்கம் வரும்...''

புலம்பாத குறையாய் பேசினாள் கல்பனா.

''என்னம்மா... கல்யாணம்... புகுந்த வீடுன்னு பேசறே. என்ன விஷயம்...'' முகத்தை துவாலையால் துடைத்துக் கொண்டு வந்த சாதனா கேட்டாள்.

''அதைத்தான் சொல்ல வந்தேன்ம்மா... நீ கேட்கிற மூடில் இருக்கிறாய் தானே'' மகளிடம் கேட்டார் தந்தை.

''அப்பா... இப்போ நான் ஆகாசத்தில் பறக்காத குறை... மனசு முழுக்க சந்தோஷம்.. இப்ப... நீங்க எது சொன்னாலும் கேட்கத் தயார்...''

''உனக்கு ஒரு பையனை பார்த்திருக்கிறேன் சாதனா...''

''பையன்னா... பத்து வயசாப்பா...''

''விளையாடாமல் 'சீரியஸா' கேளு சாதனா... பையன் சாஃப்ட்வேர் இன்ஜினியர்... நல்ல இடமாம்... ஹைதராபாத்தில் வேலை... என்ன சொல்றே...''

''ஓகேப்பா... நீங்க எது சொன்னாலும் சரி... நீங்க யாரைத் தேர்ந்தெடுத்தாலும் கட்டிக்க ரெடி... போதுமா...''

''அப்போ... 'ப்ரொசீட்' பண்ணலாமா...''

''அதான் ஓகேன்னுட்டேனேப்பா...'' என்று சொல்லி விட்டு... ஏதோ ஒரு பாட்டை முணுமுணுத்தவாறே சென்ற மகளை வியப்புடன் பார்த்து நின்றனர் பெற்றவர்கள்.

விஷயம் இத்தனை எளிதாய் முடியும் என்று அவர்கள் நினைக்கவில்லை.

எப்படியோ... சம்மதித்தாளே என்ற மகிழ்ச்சி வந்தது.



தனது அறையில் ஏதோ ஒரு புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்த சாதனா... தன் 'செல்' ராகம் பாடுவதைக் கேட்டு அதை எடுத்துப் பேசினாள்.

''மீரா... நானே உனக்கு போன் பண்ணனும்னு இருந்தேன்டீ... ஆமாம்.. நந்தண்ணா எப்படி இருக்கிறான். ஏதாவது முன்னேற்றம் தெரிகிறதா...''

''............''

''கேட்கவே சந்தோஷமா இருக்கு மீரா... நல்லா தெளிவா பேசுகிறான் என்று அம்மாவுக்கு சொன்னால் பூரித்து விடுவாள்...''

''..............''

''கண்டிப்பா வருகிறேன்டீ... எனக்கும் அண்ணனைப் பார்க்க ஆசையா இருக்கிறது... உன்னையும் தான். வருவதற்கு முன் உனக்குப் போன் பண்ணுகிறேன். என்ன... சரி... வச்சிடட்டுமா... குட் நைட்.''

இன்றைக்கு என்னவோ நல்ல விஷயங்களாகவே நடக்கின்றது... அதுவும் அண்ணாவோட நிலையில் இம்ப்ரூவ்மெண்ட் தெரிகிறது என்பது அற்புதமான செய்தி.

எப்படி இருந்தவன்... படிப்பில் பிரில்லியண்ட்... வேலைத்திறமையில் படு சுட்டி... அவனது புத்திசாலித்தனத்தைப் பார்த்து எத்தனை பேர் அதிசயப்பட்டார்கள்.

''உன் பிள்ளைக்கு இருக்கும் புத்திசாலித்தனத்திற்கு பாரேன்... அவன் எங்கேயோ போகப் போகிறான்... உச்சாணிக் கொம்பிற்கு...'' என்று உற்றார் உறவினர்களின் மெச்சல் பெற்றவர்களின் மனதைக் குளிர்வித்தது உண்மை...

ஆனால்... அவன் மனநல மருத்துவமனைக்குப் போய் சேரும்படி ஆனதை தலைவிதி என்று சொல்வதா..

இல்லை திருஷ்டி என்பதா... தலையணையை ஓங்கிக் குத்தி னாள் சாதனா... அதை சரத்சந்திரன் என்று நினைத்தாளோ என்னவோ... இருந்தும் ஆத்திரம் அடங்கவில்லை...

எப்படி அடங்கும்... ஒருவனின் எதிர்காலத்தையே அழித்து சூன்யமாக்கியவன் ஆயிற்றே...

காலையில் அவனுக்கு கொடுத்த தண்டனைகூட குறைவுதான்... அவனை... பற்களைக் கடித்தாள் அவள்.

கண்களை மூடிக் கொண்டாள்... நந்துவின் பரிதாப முகம் தான் நிழலாடியது...

'நானில்லை...' 'நானில்லை' என்று திரும்பத் திரும்ப முணுமுணுத்தவாறு வெறித்து நின்ற முகம்... அடிப்பட்ட குழந்தையாய் துடிக்கும் முகம்...

சே... மறக்க வேண்டும் என்று எண்ணினாலும் அது முடியவில்லை... தலையை உதறினாள்.

ஏதோ தெய்வமே நேரில் வந்தது போல... மனநல மருத்துவமனையில் வேலை செய்த தோழியின் சந்திப்பில் இழந்த நிம்மதி கொஞ்சம் திரும்பியது உண்மைதான்.

புதுமுக வகுப்பு வரை அவளுடன் ஒன்றாகப் படித்தவள்... இளங்கலையில் சாதனா கணிதத்தைத் தேர்ந்தெடுக்க மீரா மருத்துவம் படித்து மனநல மருத்துவத்தை சிறப்புப் பாடமாய் எடுத்துக் கொள்ள வேறு வேறு கல்லூரி என்பதால் தொடர்பும் குறைந்து போனது. அவள் ஒரு நல்ல 'சைக்கியாட்ரிஸ்ட்'டாக வேலை பார்ப்பது தெரிந்ததும்... அவளைத் தொடர்பு கொண்டு பேசினாள் சாதனா...

உயிர் சிநேகிதி பேசியதில் மீராவுக்கு ஒரே சந்தோஷம். பழைய சிநேகம் மறுபடியும் துளிர்த்தது...

மீராவிடம் பழைய குறும்பையும்... துள்ளலையும் காண முடியாததில் சாதனாவிற்கு ஏமாற்றம்தான்.



பள்ளி நாட்களில் வகுப்பையே கலக்கியவளா... குறும்புக் காரியாக கொட்டம் அடித்தவளா... இப்படி அமைதியாக மாறி விட்டாள்! சூறாவளியாக சுழன்றவளா... இப்படி தென்றலாய் தணிந்து விட்டாள்...

சாதனாவால் நம்பவும் முடியவில்லை...

ஒருவேளை மனமுதிர்ச்சி ஆளை மாற்றியிருக்கலாம். இல்லை... பலரக நோயாளிகளைப் பார்த்துப் பார்த்து பேச்சில் தெளிவும்... செயலில் நிதானமும் வந்திருக்கலாம்...

மாணவப் பருவம் என்றால் இளங்கன்றின் வேகம்... காட்டாற்றின் ஓட்டம் தான்... அந்தப் பருவத்தைத் தாண்டினால்... தானே அடங்கி விடும்... அதுதான் உண்மை.

மீராவும் அதேதான்... தோழியின் பொறுமை... அமைதி எல்லாவற்றையும் பார்த்ததும் சாதனா அப்படித்தான் நினைத்தாள்... ஆனால் அந்த சிரித்த முகத்தின் பின்னால் ஒரு சோகக் கதை இருக்கிறது என்பது பிறகுதான் தெரிந்தது...

அந்தக் கதையை அறிந்தபோது சாதனா அடைந்த அதிர்ச்சி...

மீரா ஒரு விதவை... கணவனை இழந்தவள் என்ற செய்தியை அவளால் ஜீரணிக்கவும் முடியவில்லை...

கல்லூரியில் படிக்கும்போதே காதல் வயப்பட்டு... பெற்றவர்களை எதிர்த்து திருமணம் செய்து கொண்டவள்... வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற வேகத்துடன் வாழ்க்கையை ஆரம்பிக்கும்போது தான் விதி சிரித்தது.

திருமணம் ஆன இரண்டே மாதங்களில் விபத்தில் இறந்து போனான் கணவன்... அதற்குப் பிறகு ஓடி வந்த உறவுகளை அருகில் சேர்க்கவும் இல்லை மீரா... எல்லா

முடிந்த பின்பு அவர்கள் காட்டிய பாசமும்... பரிவும் அவளுக்கு வேஷமாய் தெரிந்தது...

எனக்கு யார் உதவியும் தேவையில்லை என்று ஒதுங்கி விட்டாள்... உறவுகளும் ஒதுங்கி விட்டன. 'திமிர் பிடித்தவள்... கர்வி...' என்ற முணுமுணுப்புடன்... வாழ்க்கை வேள்வியில் வெந்து... நொந்து... சிந்தை பேதலித்த நோயாளிகளின் துயர் தீர்ப்பதை தன் கடன் என்று நினைத்து வாழ ஆரம்பித்தாள்... இளம் துறவியாய்... என் நோயாளிகள் அனைவருமே எனக்கு குழந்தைகள் மாதிரி... மலர்ந்த முகத்துடன் அவர்கள் விடைபெற்றுச் செல்வதைப் பார்க்கையில் உண்டாகும் ஆத்ம திருப்தி இருக்கிறதே... அதற்கு ஈடு எதுவும் இல்லைடீ சாதனா என்று அவள் சொல்லும்போது அவளது முகத்தில் தெரியும் பூரிப்பு... கண்களில் தெரியும் பிரகாசம்...

வாழ்க்கையில் ஜெயித்துவிட்ட மகிழ்ச்சி!

அப்படிப்பட்ட உன்னதமானவளிடம் தன் அண்ணனை ஒப்படைத்துவிட்டு நிச்சிந்தையாக இருந்தாள் சாதனா.

தோழியின் வாழ்க்கை இப்படி ஆனதே என்ற வேதனை இருக்கத்தான் செய்தது...

''என் ஆசையை சொல்லட்டுமா... ஒரு ஜென்டில்மேன் எனக்கு மணாளனாக வரணும்... கை நிறைய ரெண்டு பேரும் சம்பாதிக்கணும்... குறைந்தது நான்கு பசங்களை யாவது பெத்துக்கணும்... குடும்பத்தோடு உலகம் சுற்றி வரணும்... வாழ்க்கையை ஜாலியா அனுபவிக்கணும்... இதுதாண்டி என் கனவு...'' என்று சொல்லிவிட்டு சிரிப்பாளே... பாவம்... அந்தக் கனவுகள் பூக்காமலே எரிந்து சாம்பலாகி விட்ட அவலம்...

நெஞ்சு விம்மியது சாதனாவிற்கு...



ராகவேந்திரா... என் மீராவின் வாழ்வில் மீண்டும் வசந்தம் வரும்படி செய்... அதைச் சீக்கிரமே நடக்கும்படி செய் என்று மனமுருக வேண்டிக் கொண்டாள் அந்த உயிர்த்தோழி...




எல்லோரும் வருவதற்கு முன்னமே ஆபீஸுக்கு வந்து விட்டான் சரத்சந்திரன்.

இன்னும் அவன் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை என்பது அவனது முகத்தில் தெரிந்த இறுக்கம் சொன்னது. பல கேள்விகள் அவனது உள்ளத்தை வண்டுகளாய் குடைந்தன.

ஏன் சாதனா அப்படிச் செய்தாள்...

அவளுக்கு என்ன குற்றம் செய்தேன்... அவளிடம் தரக்குறைவாக ஏதும் பேசவில்லையே... திருமணம் செய்து கொள்ள சம்மதமா என்று கேட்டது குற்றமா... அதற்காக இப்படியா கேவலமாய் நடந்து அசிங்கப்படுத்துவது...

அவள் மீது எத்தனை மதிப்பும் கௌரவமும் வைத்திருந்தேன்... அதைத் தரை மட்டமாக்கி விட்டாள்... பாவி... விருப்பம் இல்லை என்று சொல்ல இப்படி ஒரு நாடகமா... மீண்டும் மீண்டும் நடந்ததையே நினைத்து மறுகியது உள்ளம்...

அவள் வரட்டும்... அவளையே கேட்டுவிட வேண்டியதான் என்று நினைத்தான்.

அதே சமயம்... அவள் வருவாளா என்ற சந்தேகமும் வந்தது.

அப்படியே வராமல் இருந்தால்... அவளது விலாசத்தைக் கண்டுபிடித்து... வீடு தேடிச் சென்று... அவளிடம் காரணத்தைக் கேட்க வேண்டும்... இல்லாவிட்டால் பைத்தியமே பிடித்து விடும்... பித்துப் பிடித்த நிலையில் இருந்தான் சரத்சந்திரன்.

அவன் சீக்கிரம் வந்ததற்குக் காரணமும் இருந்தது. சாதனாவின் அந்தரங்க கோப்பை எடுத்துப் பார்க்க வேண்டும்.. அவள் யார்... தந்தையின் பெயர் என்ன... எங்கே அவளது வீடு... தெரிந்த விலாசமா என்பதை அறிய வேண்டும் என்றுதான் எல்லோரும் வருவதற்கு முன்பாய் வந்து விட்டான்.

அதுமட்டுமல்ல... வேலை பார்க்கும் ஊழியர்களின் குத்தீட்டிப் பார்வையைத் தவிர்க்கவும் தான்... அதை ஏற்கும் சக்தி அவனுக்கு இல்லையே...

தவறு செய்யாமலே தண்டணையா... அவனால் பொறுக்க முடியவில்லை.

சாதனாவின் கோப்பைப் பிரித்துப் பார்த்தான்.

தந்தை பெயர் கே.மூர்த்தி... ஊகூம்.. பரிச்சயமான பெயராக இல்லையே...

விலாசம்... அதுவும் கூட தெரிந்ததாக இல்லையே... பின்னே... யார் இவள்... எதற்காக என் மீது தார் பூச்சு. காரணம் இல்லாமல் கேவலப்படுத்த அவள் பைத்திய ...ம் இல்லையே... நன்றாக... தெளிவாகத்தானே இருந் ...ள்... குழம்பித் தவித்தான் சரத்சந்திரன்.

வேலைக்கு வந்த ஊழியர்கள் அனைவருக்கும் வியப்போ ...ப்பு!



எம்.டி. வந்தாச்சா! அட! அய்யாவுக்கு என்ன ஆச்சு... எப்போதுமில்லாமல் இத்தனை சீக்கிரம் வந்திருக்கிறார் என்றால்...

''தங்கவேலு... சாதனா மேடம் வரவில்லை போல...'' குசும்புடன் கேட்டான் சங்கர்.

''பாவம்... அந்தப் பொண்ணு... அழுது கொண்டே போச்சு. ராத்திரியெல்லாம் தூங்கியிருக்காது... ஆனாலும்.. நம்ம 'பாஸ்' பசுத்தோல் போர்த்திய புலின்னு தெரியாமல் அவரை நல்லவர்ன்னு நினைச்சோம் பாரு... நாம் முட்டாள் தான்...''

''அதுதான் சொல்றது... எந்தப் புத்தில் என்ன பாம்பு இருக்கும் என்று தெரியாதுன்னு...''

''வாய்க்கு வந்தபடி பேசாதீங்க... இதுநாள் வரைக்கும் யாரையும் தலை நிமிர்ந்து பார்க்காமல்... தானுண்டு தன் வேலையுண்டு என்று இருந்தவர் நம்ம பாஸ்... ஏதோ... கொஞ்சம் தடுமாறி விட்டார் என்பதற்காக இப்படி ஒரேடியாய் பழி சொல்வது பாவம்...''

''அதான்யா சொல்றது... பெரிய மனுஷன் தப்பு செய்தால் அது பெரிசா படாதுன்னு...''

''உஷ்... சாதனா மேடம் வர்றாங்க... பேசாம இருங்க...''

எல்லோர் பார்வைகளும் வாசல் பக்கம் வியப்புடன் தாவ... சாதனா நிதானமாய் வந்து தன் இருப்பிடத்தில் அமர்ந்தாள்... அனைவரையும் பார்த்து ஒரு பரிதாப புன்னகையுடன்...

அதே நேரம் தங்கவேலுவும் அவளிடம் வந்து சொன்னான்...

''நீங்க வந்ததும் உடனே அய்யாவை வந்து பார்க்கணும்னாரு... ஏதோ அவசரம்னாரு...''

எல்லோரும் அர்த்தத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு நமுட்டுச் சிரிப்பு சிரித்தனர்.

மறுபடியுமா...

இன்னொரு மார்னிங் ஷோ?

சாதனாவும் எழுந்து செல்வதைப் பார்த்து புருவங்களை உயர்த்தினர்.

''இதுதாண்டா கலிகாலம் என்கிறது... இப்படி நடந்ததற்கு வேறொரு பொண்ணா இருந்தால்... ஆபீஸ் பக்கம் தலை வைத்தும் படுக்க மாட்டாள்... அந்த திசைக்கே ஒரு கும்பிடு போட்டு விட்டு... வேலையை விட்டுடுவா... ஆனாலும் சாதனாவுக்கு ரொம்பவும் துணிச்சல் தான். ஒரு குரல் மெல்ல முணு முணுக்க...

பெண் ஊழியர்கள் 'பிலு பிலு'வென்று சண்டைக்கு வந்து விட்டனர்.

''அது சரி... தப்பு செய்யறது ஆம்பிளை... தண்டனை மட்டும் பெண்களுக்கா... பார்க்கப் போனா... உங்க 'பாஸ்' தான் முக்காடு போட்டுக் கொண்டு வீட்டில் முடங்கிக் கிடக்கணும்... செய்வதை செய்துவிட்டு எப்படி முகம் காட்ட தைரியம் இருக்கு... திமிர்... ஆம்பளைத் திமிர்.''

''அய்யோ... சொன்னது தப்பாச்சு. வாயை மூடிக் கொள்கிறேன்...'' என்று சொல்லிவிட்டு வாயைப் பொத்திக் கொண்டார் 'கமெண்ட்' அடித்தவர்.

''அது... அந்த பயம் இருக்கட்டும்'' என்று ஒருத்தி சொல்ல... தொடர்ந்து சிரிப்பு எழுந்தது.

வெளியே... தங்களைப் பற்றி அலசுகிறார்கள் என்பதை அறியாமல்... அறையினுள் சரத்சந்திரனும் சாதனாவும்...

கதவைத் திறந்து உள்ளே வந்த சாதனா... 'குட்மார்னிங் சார்' என்று.. எதுவுமே நடக்காதது போல சொல்லவும்... சரத்சந்திரன் திகைப்படைந்தான்.



இவளுக்கு எந்தவித உறுத்தலும் இல்லையா... அவளை உற்றுப் பார்த்தான்.

பிறகு நிதானமாய் கேட்டான்.

''ஏன் அப்படிச் செய்தாய்...''

ஒருமையில் அவளை அழைத்தான்... உனக்கு என்ன மரியாதை வேண்டியிருக்கிறது என்பதுபோல...

''எப்படி...'' புரியாதவள் போல அவள் கேட்க... பற்களைக் கடித்தான் அவன்...

வார்த்தைகள் பற்களிடையே அரைப்பட்டு வந்தன.

''நடிக்காதே... உன் நடிப்பை நேற்றே பார்த்து விட்டேன். இப்போது உண்மையைச் சொல்... என்ன காரணம்...!''

அவள் ஏளனமாய் சிரித்தாள்.

அவனுக்குக் கோபம் 'விர்' என்று ஏறியதை அவனது கடுகடுத்த முகம்... இறுகிய தாடையும் காட்டியது.

''உன்னை மணக்க முன் வந்ததற்கு நீ காட்டும் நன்றியா இது...''

''ஆகா... தேவலோக இந்திரன் நீங்கள்... நீங்கள் கேட்டதும் அப்படியே குளிர்ந்து போக மாட்டேனா...'' என்றாள் எகத்தாளமாய்.

அவளை ஒரு கணம் வெறித்தவன் ''பிடிக்கவில்லை என்றால் 'பளிச்'சென்று சொல்லிவிட வேண்டியதுதானே. எதற்கு இந்த மாதிரி... சே! இது உனக்கே அசிங்கமாகத் தெரியவில்லை...' என்று எரிச்சலுடன் கேட்க...

''இல்லவே இல்லை...'' என்று அழுத்தமாகச் சொன்னாள்.

''உன்னை... நல்ல குடும்பத்துப் பெண் என்று நினை
தேன்... இப்போது புரிகிறது... நீ ஒரு கேவல...''

"மிஸ்டர்... மைண்ட் யுவர் வேர்ட்ஸ்..." உங்களிடம் வேலை செய்வதால்... என்ன வேண்டுமானாலும் பேச லாம் என்று நினைக்க வேண்டாம்... மரியாதைக் கொடுத்து மரியாதை வாங்கப் பாருங்கள்..."

"அந்த மரியாதைக்கும் ஒரு தகுதி வேண்டும்... அது உன்னிடம் இல்லையே.. ஒரு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண் செய்யத் தயங்கும் செயலை அல்லவா நீ செய்திருக்கே... அசிங்கமாய் நாடகமாடி... அநியாயமாய் என் மீது வீண் பழி வரும்படி செய்திருக்கிறாயே... உனக்குக் கூசவில்லை... எந்தக் காரணமும் இல்லாமல்... எதற்கு இந்தக் கூத்து... இதற்கு பதில் சொல்லியே ஆக வேண்டும்." மிரட்டும் குரலில் அவன் சொல்ல...

"பதிலா... இதோ என் பதில்... கண்ணால் கண்பதும் பொய்... காதால் கேட்பதும் பொய்... தீர விசாரிப்பதே மெய்... இப்போ புரிந்ததா... நான் யார் என்று..." புருவங் களை சுருக்கிக் கொண்டு அவளைக் கூர்ந்து நோக்கின வன்... மெல்லக் கேட்டான்.

"யார் நீ..."

"நிதானமாய் யோசித்துப் பாருங்கள்... நீங்கள் செய்த தவறுகளையெல்லாம் தூசுத் தட்டி... அவற்றை... நிதா னமாய் ஒவ்வொன்றாய் அலசிப் பாருங்கள்... மிஸ்டர் சரத் சந்திரன். நான் யார்... எதற்காக இப்படிச் செய்தேன்னு உங்களுக்குத் தெளிவாகப் புரியும்... வரட்டுமா..."

அவள் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்த அவன் மேலும் குழம்பியதுதான் மிச்சம்.

வெற்றிப் புன்னகையுடன் வெளிவந்த சாதனாவைச் சுற்றிக் கொண்டது மகளிர் கூட்டம்.

"எதுக்காக உன்னைக் கூப்பிட்டார்... சாதனா... மறுபடி ...ம் வம்பு பண்ணவா..." என்று கேட்டாள் சுமதி.



"எந்த முகத்தை வைத்துக் கொண்டு உன்னிடம் பேசினார்... செய்வதையும் செய்துவிட்டு... கொஞ்சமும் விவஸ்தை இல்லாமல்... சே... நீ தப்பு செய்துட்டே சாதனா... 'பளார்' என்று கன்னத்தில் அறைந்திருக்க வேண்டும்... நானாக இருந்திருந்தால் அப்படித்தான் செய்திருப்பேன் தெரியுமா..." என்றாள் வசந்தி.

"ஆனாலும் அந்த மனுஷனுக்கு ரொம்பவும்தான் 'கூலாய்... எதுவுமே நடக்காதது மாதிரியல்லவா திரும்ப அழைக்கிறார்.. எல்லாம் திமிர்டீ. பணக்காரத் திமிர்." ஆத்திரத்துடன் தெய்வானை சொல்ல...

"உஷ்... நீங்க நினைக்கிற மாதிரி எதுவும் இல்லை 'பாஸ்' என்னை அழைத்தது என்கிட்டே மன்னிப்புக் கேட்கத்தான்..." என்றாள் சாதனா...

"அடடா... உடனே மன்னித்து விட்டாயாக்கும்... இவனை யெல்லாம் சும்மா விடக்கூடாது சாதனா... இன்னொரு தடவை இந்த மாதிரி தப்பை பண்ணக்கூடாது..."

அதே சமயம்... வாசல் பக்கம் 'பக்' 'பக்' என்று ஹை ஹீல்ஸ் சத்தம் கேட்க... பேச்சை மறந்தனர். எல்லோரும் ஆவலுடன் திரும்பிப் பார்த்தனர்.

ஜாதிக் குதிரையைப் போல விறைப்புடன்... முகத்தில் டன் டன்னாய் கர்வமும்... கண்களில் அலட்சியமும் தெரிய அதி நாகரீக சுந்தரி ஒருத்தி வந்து கொண்டிருந்தாள். யார் இவள்... புதுமுகம்... கேள்வியுடன் பார்த்தாள் சாதனா.

"வந்துட்டாள்ப்பா... இன்னொரு திமிர் கழுதை... மன சுக்குள் பெரிய ஐஸ்வர்யாராய்னு நினைப்பு... உடம்பில் இன்ச்... இன்ச்சிலும் பணத்திமிர்..." காதுபடவே முணு முணுத்தாள் வசந்தி.

"யார் இவள்..." என்று கேட்டாள் சாதனா.

''ராதிகா... பாஸின் ஸிஸ்டர்... கழுத்தில் தலை நிக்கவே நிக்காது... ஏதோ பூமியே இவளைக் கேட்டு சுழல்ற மாதிரி நினைப்பு... லண்டனுக்குப் போய் 'பேஷன் டிஸைனிங் கோர்ஸ்' படிக்கணும்னு போனா... மூணு மாசமா இவ தொல்லை இல்லாம இருந்தோம்... இப்ப... வந்து தொலைச்சிட்டா... இப்ப இங்கே வந்திருப்பது எதுக்குன்னு நினைக்கிறே...'' சுமதியின் கேள்விக்கு வியப்புடன் பதில் சொன்னாள் சாதனா.

''இதென்ன கேள்வி... அண்ணாவைப் பார்க்கத்தான்...''

''அதான் இல்லை... இங்கே வேலை பார்க்கிறானே... நரேந்திரன்... அவனைப் பார்க்கத்தான்... தங்கையின் காதல் விஷயம் அண்ணனுக்கு இன்னும் தெரியாது... அங்கே பாரேன்... கண்ணும் கண்ணும் கலந்து சொந்தம் கொண்டாடுவதை... அடடா... கம்பன் வருணித்த காட்சி தான் நினைவுக்கு வருகிறது... அண்ணலும் நோக்கினான்... அவளும் நோக்கினாள். என்ன கண் கொள்ளாக் காட்சி.''

சாதனாவும் அதை கவனித்தாள் தான்...

ஓ... கதை அப்படிப் போகிறதோ...

அதெப்படி... பணக்காரி ராதிகாவும்... சாதாரண ஊழியன் நரேந்திரனும்... ஊகூம்... பொருந்தவில்லையே.

அதுசரி... காதல் என்ன... ஒவ்வொன்றையும் விசாரித்துக் கொண்டா வருகிறது...

ஆனால்... இந்தக் காதலுக்கு சரத்சந்திரன் கிரீன் சிக்னல் காட்டுவானா... ஏழை மாப்பிள்ளையை ஏற்றுக் கொள்ள மனம் வருமா... அந்தஸ்தும்... பணமும் தடையாய் இருக்குமே...

அதே சமயம்... தன்னை மணந்து கொள்ள சம்மதம் கேட்டது நினைவுக்கு வந்தது... ஒரு மிடில் க்ளாஸ் சாதனாவை மணக்க முன் வந்தவன் ஆயிற்றே... அந்த விஷயத்தில் பரவாயில்லை தான் போலும்...



சாதனாவின் கண்கள் ராதிகாவின் மீதே இருந்தன. இவளிடம் கொஞ்சம் உஷாராய் தான் இருக்க வேண்டும். இவளைப் பகைத்துக் கொள்வதும் தப்பு... ஏன் இவளை வைத்து காரியத்தை சாதித்துக் கொள்ளப் பார்க்கலாமே.

யெஸ்... ஒரே இடத்தில் இரண்டு எதிரிகளை சமாளிப்பதும் கஷ்டம் தான்...

இந்தப் பட்சியை சாதுர்யத்தால் வலையில் விழ வைக்க வேண்டும்... பேசிப் பார்க்கலாமா...

கோபத்தைவிட புன்னகைக்குத் தானே பலம் அதிகம்... அட! அந்தப் பட்சியே தத்தி... தத்தி இங்கே வருகிறதே. நேரம் நல்ல நேரம்தான்... சாதனா... இந்த சந்தர்ப்பத்தை நழுவ விடாதே....

ராதிகாவைப் பார்த்து சிநேகமாய் புன்னகைத்தாள்.

ராதிகா யோசனையுடன் பார்த்தாள்...

அவளது புருவங்களின் மத்தியில் முடிச்சு...

யார் இவள்... புதுசாய்...

அவளது பார்வை சாதனாவை மேலும் கீழுமாய் பார்த்தது.

# 5



''ஹலோ... ஐ'ம் சாதனா...'' சாதனா நட்புக் கரம் நீட்ட....

''ஹே... ஹெள டூ யூ... டூ... நான் லண்டன் போனதும் நீ வேலைக்கு சேர்ந்திருக்க வேண்டும்... அப்படித்தானே.

இது மிகவும் பொறுப்பான வேலை மிஸ் சாதனா.. கவனத்தோட செய்... உனக்கு முன்னால் நந்தகுமார் என்று ஒருத்தர் வேலை செய்தது... சரியான ஃபிராட்... ஆபீஸ் பணத்தைக் கையாடல் செய்ததால்... வேலையிலிருந்து 'டிஸ்மிஸ்' பண்ணி விட்டார் என் அண்ணா... நீ நாணயமா நடந்தா உண்டு... என்ன புரிகிறதா...''

அவள் பேசப் பேச... சாதனாவிற்கு ஆத்திரமும் கோபமும் 'ஜிவ்' என்று ஏறியது... பற்களைக் கடித்து... கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்...

நந்தகுமாரின் சகோதரி என்று தெரியாமல் பேசுகிறாள்.

அது யாருக்கும் தெரியக்கூடாது என்று தானே ஏதேதோ 'கோல்மால்' செய்து இங்கு வந்திருப்பது...

கோபத்தை வெளியில் காட்டிக் கொள்ளக் கூடாது...

கடுகத்தனை சந்தேகம் வந்தாலும் போச்சு..

என் அண்ணன் குற்றமற்றவன் என்று நிரூபிக்க வேண்டும்... அதுவரையில் இங்கு இருந்து தான் ஆக வேண்டும்... இந்த மாதிரி வார்த்தைகளைக் காதில் வாங்கத் தான் வேண்டும்.... வேறு வழியில்லையே... அத்தனையையும் சகித்துத்தான் ஆக வேண்டும். பெருமூச்சு விட்டாள்...

''சட்டாம்பிள்ளை மாதிரி அதிகாரம் பண்ணுவதைப் பார்.. வந்து விட்டாளா... இனி இவளோட கொட்டம்தான். அந்த நரேந்திரன் மட்டும் என்ன... புளியங்கொம்பை வளைச்சுப் பிடித்துவிட்ட பெருமையில் ஜம்பம் அடிப்பான் பார்... இரண்டு பேரும் செம ஜோடி...'' சாதனாவிடம் சுமதி அடிக்குரலில் கிசுகிசுக்க...

''அவர்கள் எப்படிப் போனால் நமக்கென்ன சுமதி... நம் வழிக்கு வராதவரைக்கும் நல்லது... விடு...'' என்றாள்



சாதனா... எதையும் காட்டிக் கொள்ளாமல்... ஆனால்... அவர்களைப் பற்றிய விவரங்களை அறிந்ததில் சந்தோஷமும் வந்தது...

பின்னே...

சதுரங்க விளையாட்டில் அவர்களை யெல்லாம் காய்களாக வைத்ததல்லவா விளையாட வேண்டும்...

சரத்சந்திரனுக்கு 'செக்' வைத்து வீழ்த்த... இந்தக் காய்களைத்தான் முன் நகர்த்தியாக வேண்டும்... குதிரையாய் ராதிகா... சிப்பாய்... நரேந்திரன்... அவளுக்குச் சிரிப்பு வந்தது.

வந்ததில் இருந்தே நரேந்திரன் மீது அவளுக்கு கொஞ்சம் சந்தேகம்தான்...

சாதாரண வேலையில் இருப்பவனிடத்தில் இவ்வளவு பணப் புழக்கமா என்ற வியப்பு... பரம்பரை பணக்காரனும் இல்லையாமே...

கழுத்தில் தடிமனாய் சங்கிலி... விரல்களில் மோதிரங்கள்... வலது கரத்தில் ப்ரேஸ்லெட்... இடக்கையில் டைட்டன் வாட்ச்... தங்கச் சங்கிலியுடன்... உடைகூட உயர்ந்த ரகத்தில்... விதவிதமாய்... எப்படி... யோசிக்க வேண்டும்...

ஒருவேளை ராதிகாவுடன் பழகுவதே... அவளிடமிருந்து பணம் பறிக்கவோ... இருக்கலாம்...

ஆனால் யாரையும் நம்புவதற்கில்லை...

எல்லாம் கொஞ்ச நாளில் வெட்ட வெளிச்சமாகத்தான் போகிறது...

நரேந்திரன்... ராதிகாவின் சிநேகம் வெறும் ஜஸ்ட்லைக் தட் ஃபிரெண்ட்ஷிப்பா... இல்லை காதலா என்று தெரியத்தான் போகிறது...

கத்தரிக்கா முத்தினால்... சந்தைக்கு வந்து தானே ஆக வேண்டும்... பார்ப்போம்...

நாம் வந்திருப்பது அண்ணனுக்கு நேர்ந்த அநியா யத்தை தட்டிக் கேட்க... அவன் மீது விழுந்திருக்கும் பழியைப் போக்கி... அவன் குற்றமற்றவன் என்பதை நிரூபிக்க... இந்தத் துப்பறியும் வேலையில் கவனமாய் இருந்து... உண்மைக் குற்றவாளியைக் கையும் களவுமாய் பிடித்து... சாத்சந்திரன் முன் நிறுத்தியாக வேண்டும்... குற்றம் செய்தவனை விட்டு விட்டு அப்பாவியை பழி வாங்கினாயே பாவி... என்று உலுக்க வேண்டும்... எல் லோர் முன்பும் அவன் தலை கவிழ்ந்து நிற்பதைப் பார்க்க வேண்டும்... அதை ரசித்து மகிழ வேண்டும்... அவன் மன்னிப்பு கேட்டதும்...

தலையை உலுக்கிக் கொண்டாள் அவள்...

கனவு காணக் கூடாது... ஒரு வேளை அது நடக்காமல் போய் விடும்... வேண்டாம்...

காரியத்தில் கண்ணாக இருந்தால் போதும்...

ஆம்... இந்த நரேந்திரன் மீது கண் வைக்க வேண்டும்... அவனைப் பற்றிய விவரங்களை யாரிடம் இருந்து தெரிந்து கொள்வது...

ம்ம்... சுமதி... ஊகூம்... சந்தேகம் வரும்... நரேந்திரன் மீது உனக்கும் 'இது'வா என்பாள்.. வேண்டாம்...

தவிர... அவனைப் பற்றி ஆர்வமாய் விசாரிக்கும் விஷ யம் ஊழியர்கள் வரை கசிந்து போனால்.. அவ்வளவுதான்... 'எம்.டி.' விஷயத்தில் உத்தமி மாதிரி நடந்து கொண் டவள்... இப்போது இன்னொரு ஆண்மகனைப் பற்றி விசாரிப்பது ஏன் என்று புருவங்களை உயர்த்தினால்...

எல்லாமே போச்சு...

யாருக்கும் எந்த சந்தேகமும் வராமல்... நிதானமாய் செயல்பட வேண்டும்... எண்ணங்களில் சிக்கியிருந்த



வளை... தங்கவேலுவின் கரகரத்த குரல் தட்டியெழுப் பியது...

''சாதனாம்மா... இந்தாங்க ஸ்வீட்... எடுத்துக்குங்க...'' என்று லட்டு நிறைந்த பாக்ஸை அவளிடம் நீட்டினான்.

''என்ன விசேஷம் தங்கவேலு... சம்பளத்தைக் கூட்டி யிருக்கிறாரா எம்.டி...'' என்று கேட்டவாறு ஒரு லட்டை எடுத்துக் கொண்டாள் சாதனா.

''இல்லேம்மா... வீட்டிலிருந்து தகவல் வந்திச்சு... என் பொண்ணு வயசுக்கு வந்திருக்காளாம்... அதான்...''

''ஓ! அதுக்கா... உன் பெண்ணிற்கு எத்தனை வயசு...''

''பன்னிரண்டும்மா... இனிமேதான் எனக்கு செலவு. சடங்கு... சாஸ்திரம்னு எல்லாம் செய்தாகணும்... வீட் டுக்கு எல்லாரையும் அழைக்கிறேன். நீங்க கண்டிப்பாய் வரணும்மா...''

''ஒண்ணு கேட்டா... நீ தப்பா நினைக்க மாட்டேயே தங்கவேலு... இந்தக் காலத்தில்... இதெல்லாம் தேவையா... ஏன் வீணா பணத்தை செலவு செய்யறே... அதை அப் படியே 'சேவிங்க்ஸில்' போட்டு வச்சா... எதிர்காலப் படிப் புக்கு உதவும் இல்லையா...''

''அட... நீங்க ஒண்ணும்மா... எங்க சாதியில் இதை யெல்லாம் பண்ணா விட்டால் மரியாதை இல்லை... சாதி சனங்க கண்டபடி பேசுவாங்க... செய்யறதை செய்தே யாகணும்... அப்படியொண்ணும் பெரிய படிப்பாய் பொண்ணை படிக்க வைக்கப் போறதில்லைம்மா... ஏதோ பத்தாம் கிளாஸ் வரைக்கும் தான்... அதுவே ஜாஸ்தி...''

''தப்பு பண்றே தங்கவேலு... பெண்களுக்கு படிப்பு ரொம்ப அவசியம் தெரியுமா... அந்தக் காலத்தில்... இந் மாதிரி சடங்குகள் இருந்ததுக்குக் காரணம்... எங்க வீட்டி

ஒரு வயசு வந்த பெண் இருக்கிறாள் என்று புரிய வைக்கத் தான்... ஆனா இப்போ எல்லாமே மாறிவிட்டது... காலம் இருக்கிற நிலையில்... இந்த மாதிரி 'தண்டோரா' போடுகிற மாதிரி செய்வதெல்லாம் நல்லதற்கு இல்லை தங்கவேலு... பெண் பிள்ளைகளுக்கு பாதுகாப்பும் இல்லை...''

''என்னம்மா நீங்க... என் பொண்ணுக்கு முறைப் பையன் இருக்கிறப்போ எங்களுக்கு எதுக்கு பயம்... சீக்கிரமே கட்டிக் கொடுத்து விடுவேனில்லே...''

''என்ன... சீக்கிரமே கல்யாணமா.. அது சட்டப்படி தப்பு இல்லையா தங்கவேலு...''

''சட்டம் சொல்லிவிட்டுப் போகட்டும்மா... நமக்கு எது நல்லதுன்னு பட்றதோ அதைச் செய்யணும் இல்லே.. சின்ன வயசிலே கட்டிக் கொடுக்காட்டா... அப்புறம் கல்யாணம் நடக்காது... காலமுட்டும் கன்னிதான்...''

''சரி... இதுக்கெல்லாம் பணம் வேண்டாமா... தங்கவேலு. உனக்கு வரும் கம்மி சம்பளத்திற்கு இதெல்லாம் ஆடம்பர செலவு ஆயிற்றே... பணத்திற்கு எங்கே போவே...''

''அட... நீங்க ஒண்ணு... நம்ம நரேந்திரன் சார் இல்லையா... அவர் கிட்டே வாங்கி செய்ய மாட்டேன். இந்த ஆபீஸில் அவசரம்... ஆத்திரம்னா அவர் தான் பணம் கொடுப்பது...''

''பரவாயில்லையே... நரேந்திரன் சார் அத்தனை நல்ல மனசா... சும்மாவே பணம் தருகிறார் என்றால்...''

''சரிதான்... இந்தக் காலத்தில் யாரும்மா சும்மா கொடுக்கிறாங்க... எல்லாம் வட்டிக்குத்தான்.. நூத்துக்கு ஆறில்லே வட்டி... என்ன செய்வது... கடனோ... உடனோ வாங்கியாவது சடங்கை செய்தாகணும்... இல்லாட்டி மரியாதை இல்லேம்மா... நரேந்திரன் சார் கிட்டே எப்போதும் பணம்



இருக்கும்... கேட்டதும் கொடுத்து விடுவார்ம்மா... உங்களுக்கு எதாச்சும் பணம் தேவைப்பட்டா சொல்லுங்க... அவர்கிட்டே சொல்றேன்...''

சாதனா சிரித்தாள்...

''இப்போதைக்கு எனக்குத் தேவையில்லை... தங்கவேலு... தேவைப்பட்டா கேட்கிறேன்...'' என்றாள் ஒரு பேச்சிற்கு... பரவாயில்லை... இன்றைக்கு புதுப்புது விஷயங்கள் வெளிவந்திருக்கின்றன...

ராதிகாவிற்கும் நரேந்திரனுக்கும் காதல்... இது மகா பிரபு சரத்சந்திரனின் கவனத்திற்கு இன்னும் வரவில்லை...

நரேந்திரனிடம் தேவைக்கு அதிகமான பணம்... கணக்கில் வராத 'ப்ளாக் மணி'யோ... இங்கிருப்பவர்களுக்கு கடனுதவி செய்வதும் அவனே... ஒருவேளை நந்து அண்ணாவும் வாங்கியிருப்பானோ... யோசிக்க வேண்டிய விஷயம்தான்...

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாக தெரிந்தது. தங்கவேலுவிடம் கொஞ்சம் பேச்சுக் கொடுத்தால் போதும்... வாந்தி எடுப்பதுபோல எல்லாவற்றையும் கொட்டி விடுவான்...

நந்து அண்ணாவைப் பற்றி பேச்சு எடுத்து... கொஞ்சம் அவன் வாயைக் கிளறினால்... ஏதாவது உண்மை வெளி வராதா...

என் அண்ணா தப்பு எதுவும் செய்யவில்லை என்று நிரூபிக்க ஒரு சின்ன ஆதாரம் கிடைத்தால் கடவுளே... நீதான் இதற்கு உதவ வேண்டும்.

என் நந்து அண்ணா நிரபராதி என்று இங்கு இருப்பவர்களுக்கு நிரூபிக்க எனக்கு பெருந்துணையாய் நீ இருக்க வேண்டும்... மனம் உருகி வேண்டினாள் சாதனா.

அதிகமாய் யோசித்ததாலோ என்னவோ தலையில் கனமேறி... விண்ணென்றது... பேசாமல் அரை நாள் லீவு போட்டுவிட்டு வீட்டுக்குப் போய் விடலாமா... தலையை அமுத்திக் கொண்டாள் அவள்.

ஊகூம்... இனியும் தாங்க முடியாது. போக வேண்டியது தான். நேரே வீட்டுக்குப் போய்... சூடா காபி சாப்பிட்டு விட்டு அம்மா மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டால் தான் சரியாகும். அம்மா நெற்றியில் நீலகிரி தைலத்தைப் பூசி... இதமாய் நீவி விடுவாளே... ஆகா... அந்த மென்மையான விரல்களின் ஸ்பரிசத்தை கண்களை மூடி அனுபவித்தால்... சுகமோ சுகம்...

அந்த நினைவு தந்த இதத்தில் உடனே புறப்பட்டு விட்டாள் சாதனா...

சரத்சந்திரனிடம் போய் அனுமதி கேட்கவும் பிடிக்காமல்... மேனேஜரிடம் சொல்லிவிட்டுச் சென்றாள் அவள்...

ஒரு ஆட்டோவைப் பிடித்து அதில் ஏறி அமர்ந்தாள். அந்த அவசரத்தில்... ஆபீஸ் வாசல் அருகே நின்று... கண் கொத்திப் பாம்பாய் கவனித்துக் கொண்டிருந்த ஒருவன்... அந்த ஆட்டோ கிளம்பியதும்... மின்னல் வேகத்தில் தன் ஸ்ப்லெண்டரில் அமர்ந்து... அதைக் கிளப்பி... அந்த ஆட்டோவைத் தொடர்ந்ததை சாதனா கவனிக்கவில்லை.

வாடிய முகத்துடன் வந்த மகளைப் பார்த்து விட்டுக் கவலையுடன் விசாரித்தாள் தாய்.

''என்னம்மா... உடம்பு சரியில்லையா. சீக்கிரமே வந்துட்டே... இல்லே... ஆபீஸில் ஏதாவது பிரச்சனையா.''

''கொஞ்சம் தலைவலிம்மா... அதான் வந்து விட்டேன். ...டா காபி தர்ரேயாம்மா'' என்றாள் சாதனா.



''இதோ... ஒரு நிமிஷம் இரு... கொண்டு வருகிறேன்...'' என்று விரைந்தாள் பெற்றவள்.

'கம்'மென்ற காபியின் மணம் நாசியைத் துளைத்து உள்ளேறியதில்... தலைச்சுமை கொஞ்சம் குறைந்தாற் போல பிரமை... சூடான அந்த திரவம் வாயினுள் விழுந்து... தொண்டையில் இறங்கும்போது உடம்புக்கே தெம்பு வந்தது போல இருந்தது...

குடித்துவிட்டு தாயிடம் கேட்டாள் ''அம்மா... உன் மடியில் படுத்துக்கறேனே... ப்ளீஸ்...''

அருகே அமர்ந்த தாயின் மடியில் தலை வைத்து படுத்துக் கொண்டு... தாயின் கரத்தை எடுத்து நெற்றியின் மீது வைத்துக் கொண்டாள்.

புரிந்து கொண்டாற் போல கல்பனாவும் பெண்ணின் நெற்றியை நீவிக் கொடுத்தாள்.

மெல்ல... மெல்ல தலை பாரம் குறைந்து... இனிமையான... இதமான ஒரு உணர்வில் ஆழ்ந்தாள்.

இந்த உலகில் தாயின் மடிக்கு ஈடான பரம சுகம் எதுவும் இல்லைதான்... எத்தனை வயதானால் என்ன... அந்தத் தாய்மடியில் படுத்து விட்டால் சின்னக் குழந்தை தான்... உடலைக் குறுகிக் கொண்டு தாயுடன் ஒண்டினாள் சாதனா... எத்தனை நேரம் அப்படிப் படுத்திருந்தாள் என்று தெரியாத நிலையில்...

''என்னடீ இது... சின்னக் குழந்தையாட்டம் மடியில் படுத்துத் தூங்கறா உன் பொண்ணு... வீட்டுக்குள் வந்த கேசவ மூர்த்தி கேலியாய் கேட்க...

''பாவம்... குழந்தை... தலைவலின்னு மடியில் படுத்து கொண்டாள்... நானும் இதமா பிடித்து விட்டேன்... என்றாள் கல்பனா...

''அதுசரி... குழந்தைக்கு குழந்தை பிறக்கிற வயசானாலும் இன்னும் குழந்தையைப் போல நடந்துக்கறாளே... திருமணம் ஆனதும் புகுந்தகம் போனா... அங்கே என்ன செய்வாளாம் உன் அருமை மகள்... ம்ம்...'' என்று பரிகாசம் செய்தார் தந்தை...

''அப்பப் பார்த்துக்கலாம் அப்பா... அதுவரைக்கும் இப்படித்தான்...'' என்றாள் மகள்...

''ஆமாம்... அந்த ஹைதராபாத் வரன் விஷயம் என்னவாயிற்று... கேட்டேளா...'' கல்பனா ஆர்வமாய் கேட்க...

''அதைச் சொல்லணும்னுதான் வந்தேன். நம்ம சாதனாவோட ஜாதகம் வேணும்னு சொல்லியிருக்கிறார்களாம். தயாரா எடுத்து வை... நாளைக்கு கொண்டு போய் கொடுத்து விடுகிறேன்... பார்த்தசாரதிகிட்டே...'' என்றார் அவர்.

''நாளைக்கா... வேண்டாமே... நாளைக்கு அஷ்டமி... இரண்டு நாள் கழிச்சுக் கொடுங்களேன்...''

''ஓ.கே... அப்படியே செய்கிறேன்... ஆமா... எழுந்து எனக்கு காபி கலந்து தராமல்... இப்படியே உன் பொண்ணை சீராடிக் கொண்டிருக்கப் போறேயா என்ன...'' கிண்டலாய் கேட்டார் கேசவமூர்த்தி.

''இதோ... கொண்டு வருகிறேன்... எழுந்திருடீ...'' என்று பரபரப்புடன் எழுந்திருந்தாள் கல்பனா...

கணவருக்கும் மகளுக்கும் காபியைக் கொடுத்துவிட்டு திரும்பும்போது... வாசலில் பெரிய கார் வந்து நின்றது.

நம் வீட்டிற்கா... காரில் வந்திருக்கும் பெரிய மனிதர் யார்... கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ள...

சாதனாவின் முகத்தில் அதிர்ச்சி தெரிந்தது... அந்த சிவப்பு நிற கார்... லேன்சர்...



சரத்சந்திரனுடையது!

அவன்... இங்கே... எப்படி... இந்த விலாசம் அவனுக்குத் தெரியாதே... எப்படிக் கண்டு பிடித்தான்...

கண்கள் விரிய பார்த்தாள்...

காரின் கதவைத் திறந்து வெளிவந்த சரத்சந்திரன் இறுகிய முகத்துடன் வீட்டினுள் நுழைந்தான்.

சாதனாவிற்கு தலைச் சுற்றுவது போல இருந்தது. எதற்கு வந்திருக்கிறான்... தகராறு பண்ணவோ... அப்படிப் பண்ணினால்... அக்கம் பக்கத்தவர் என்ன நினைப்பார்கள்...

கடவுளே... நான் இதை எதிர்பார்க்கவில்லையே... இதயம் 'தடக்' 'தடக்' என்று அடித்துக் கொண்டது.

உள்ளே வந்தவனை விழிகள் - தெறிக்க பார்த்தாள் அவள்...

அவனது கண்கள் கேசவ மூர்த்தியைப் பார்த்துவிட்டுப் பின் சாதனாவின் பக்கம் திரும்பின... அலட்சியத்துடன்.




சத்தியமாய் சாதனா சரத்சந்திரனை எதிர்பார்க்கவில்லை... அவளது வீட்டு விலாசம் அவனுக்குத் தெரியாதபோது அவன் எப்படி வர முடியும் என்ற குருட்டு நம்பிக்கை.

ஆனால்... இதோ வந்து விட்டானே! இந்த வீட்டி முகவரி எப்படி அவனுக்குக் கிடைத்தது... அவனுக்கு ய தந்தார்கள்... குழம்பினாள்... திகைத்தாள்.

சாதித்துவிட்ட மதர்ப்பில் அவன் நின்றிருந்த தோற்றம் கண்டு மனம் புறாவின் சிறகுகளாய் படபடத்தன. அந்தப் பதட்டத்தில் விருந்தோம்பவும் மறந்து போனது.

'வாருங்கள்' என்று அழைக்க வாய் அசைந்தால் தானே... உதடுகள் இரண்டும் உலர்ந்து போய்... ஒட்டிக் கொண்டிருந்தன.

ஆனால்... அந்த நிலையிலும் கேசவ மூர்த்தி அவனை வரவேற்க மறக்கவில்லை... விரோதியானாலும்... வீடு தேடி வந்தால் உபசரிக்கும் பண்பை மறக்காமல் செய்தார்.

''வாங்க... மிஸ்டர் சரத்சந்திரன்... வந்து உட்காருங்கள். கல்பனா... அவருக்கு...'' என்றவரை இடை மறித்தான் அவன்.

''தேவையில்லை... இங்கு உட்கார்ந்து விருந்து சாப்பிட்டு விட்டு செல்ல நான் வரவில்லை... கேட்க வேண்டியதைக் கேட்டு விட்டுப் போய் விடுகிறேன்...'' என்றவன் சாதனா பக்கம் திரும்பினான்.

''ஆக... நீ நந்தகுமாரின் சகோதரி... நீ என் கம்பெனியில் சேர்ந்தது பழி வாங்கும் உத்தேசத்தில்... ஏன்... எதற்கு இந்தப் பழி வாங்கும் படலம்... தப்பு செய்தது உன் சகோதரன்... அதற்கான தண்டனையைத் தான் அவன் அடைந்தது... பின்... எந்த நியாயத்தில் என் மீது பாய்ந் தாய்... உஷ்... எதுவும் பேசாதே... உன்னைப் பார்க்கவே வெறுப்பாக இருக்கிறது. மிஸ்டர். கேசவ மூர்த்தி... அதுதான் உங்கள் பெயர்... அப்படித்தானே... அதைத்தான் கே.மூர்த்தி என்று மாற்றிக் கொடுத்திருக்கிறாள் உங்கள் மகள்... சபாஷ்! உங்கள் மகன் தான் ஆபீஸில் மோசடி செய்து உங்களைத் தலை குனிய வைத்தான் என்றால்... உங்கள் மகளும் சளைத்தவள் இல்லை... அவள் பங்கிற்கு



ஆபீஸில் ப்ரீஷோ காட்டிவிட்டு அசிங்கப்படுத்தியிருக் கிறாள்.

இந்த மாதிரி பிள்ளைகளைப் பெற்ற உங்களுக்கு என் பாராட்டுக்கள்... மகன் கிரிமினல் என்றால் மகள் நய வஞ்சகி...'' என்றான் சீற்றத்துடன்.

சாதனாவின் படபடப்பும் பதற்றமும் மாயமானது... ஆத்திரம் தலைக்கேற... ''நிறுத்துங்கள்... முதல்ல என் அண்ணன் மோசடி செய்தார் என்ற எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள்.. என் அண்ணன் எந்த மோசமும் செய்ய வில்லை. அவனை யாரோ ஏமாற்றி இருக்கிறார்கள்... அதை நிரூபிக்கத்தான் உங்க ஆபீஸுக்கு நான் வந்ததே. தெரிந்து கொள்ளுங்கள் மிஸ்டர் சரத்சந்திரன்'' என்றாள் உரக்க.

''ஓ! அதற்காகத்தான் 'ஸீன் கிரியேட்' பண்ணினா யாக்கும்... சரி... அதனால் நீ என்ன நிரூபித்தாய்... நீ ஒரு நன்னடத்தை இல்லாதவள் என்பது மட்டும்தான்... வேறு என்னத்தைக் கிழித்தாய்...!''

''ஹலோ... அன்றைக்கு சொன்னதை இப்பவும் நினைவூட்டுகிறேன்... கண்ணால் காண்பதும் பொய்... காதால் கேட்பதும் பொய்... தீர விசாரிப்பதே மெய்... அதைத் தான் உங்களுக்கு உறைக்கும்படி உணர்த்திக் காட்டி னேன்... என்ன... புரியவில்லையாக்கும்... அலுவலக ஊழியர்களுக்கு... அவர்களின் பார்வைக்கு இப்ப எம்.டி. பக்கா ஃப்ராட்... பெண் பித்தன். ஸ்திரீ லோலன்... இந்த எண்ணம் வந்து விட்டது. அறைக்குள் நீங்க எந்தத் தப்பும் பண்ணவில்லை... உங்கள் விரல் கூட என் மீது பட வில்லை என்ற விஷயம் நமக்கு மட்டுமே தெரியும். ஆனால்... மற்றவர்களின் கண்ணோட்டத்தில்... உங்கள் மதிப்பு கவிழ்ந்து விட்டதே... எப்படி என் அண்ண

தப்பு செய்யாமலே... சூழ்நிலைக் கைதியாகிப் போய்...
சந்தர்ப்பமும் சாட்சியும் அவருக்கு எதிராகி... குற்றவாளி
என்று நிறுத்தப்பட்டானே... அதே மாதிரி நீங்களும் தவறு
செய்யாமல்... ஆனால் பெரும் பழிக்கு ஆளாகி இருக்
கீங்க...! 'நான் தப்பு செய்யவில்லை...' என்று கூவினாலும்
யார் அதை நம்புவார்கள்... அதற்கு 'ஐ விட்னஸா'
எத்தனை பேர்... இப்போ புரிந்ததா... என் அண்ணா எத்
தனை வேதனைப்பட்டு துடித்திருப்பான் என்று... எவ்வளவு
கதறினான்... 'இல்லை... நான் தப்பு செய்யவில்லை... நிரப
ராதி' என்று... அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்
லையே... இப்போ... உங்க நிலைமையும் அதேதான்...
செய்யாத தப்புக்கு தண்டனை அனுபவிப்பது எத்தனைக்
கொடுமை என்பதை நீங்களும் புரிந்து கொள்ள வேண்
டும் என்று நினைத்தேன்... நடத்திக் காட்டி விட்டேன்...''
கண்கள் பளபளக்க அவள் சொல்ல...

''சாதனா... போதும்...'' அதட்டும் குரலில் கேசவ மூர்த்தி
அடக்கினார்.

''இருங்கப்பா... சொல்ல வேண்டியதைச் சொல்லி
முடித்து விடுகிறேன். ஒரு அப்பாவியின் வாழ்க்கையை
அழித்து விட்டு... எந்தத் தப்பும் செய்யாத மாதிரி ஜாலியா
வலம் வரும் உங்களுக்கு இது ஒரு பாடமாக இருக்கட்டும்
என்றுதான் அன்றைக்கு அப்படி நடந்து கொண்டேன்...
தெரிந்து கொள்ளுங்கள்... மிஸ்டர்... சரத்சந்திரன்...
இனிமேல் யார் மீதும் வீண் பழி சுமத்த மாட்டீர்கள்... அந்த
துணிச்சல் இனி வராது. ஏன்னா... சூடு கண்ட பூனை
யாச்சே... நீங்கள்'' சொல்லி முடிக்கையில் அவளது உதட்
டோரம் ஏளனப் புன்னகை எட்டிப் பார்த்தது.

சரத்சந்திரனின் தாடை இறுகியது... கண்களில் தீப்
பொறிகள் தெறித்தன.



''பழியா... ம்கும்... உன் அண்ணன் மீது இருக்கும்
பாசம் உன்னை அப்படி நினைக்க வைக்கிறது. உன்
அண்ணன் பிடிபட்ட அன்றைக்கு அவனிடம் கட்டுக்
கட்டாய் பணம் இருந்தது... சுளையாய் ஐம்பதாயிரம்...
அத்தனையும் ஆபீஸ் பணம் தான். அந்தப் பணம் எப்படி
வந்தது என்ற கேள்விக்கு... சரியான பதிலும் இல்லை...
ஏதோ 'சைட்' ரிஜிஸ்ட்ரேஷனுக்காக கடன் வாங்கியதாய்
சொல்லிப் புலம்பினான். யாரிடமிருந்து கடன் வாங்கினாய்
என்று கேட்டதற்கு பதில் இல்லை... அவன் குற்றவாளி
இல்லை என்றால் யாரிடமிருந்து வாங்கினான் என்று
'பளிச்'சென்று சொல்லியிருப்பானே... ஏன் சொல்லவில்லை...
கணக்கு வழக்கில் ஏதோ பிசிறடிக்கிறது என்ற சந்தேகத்
தில் நான் குடைந்தபோது குட்டு வெளியானது... எத்
தனையோ தடவை இந்த மாதிரி ஆபீஸ் பணத்தைக்
கையாடியிருக்கிறான் உன் அண்ணன்.. இல்லாவிட்
டால்... வேலைக்குச் சேர்ந்த சில மாதங்களிலேயே
'ஸைட்' வாங்க முடியுமா என்ன... நான் ஒன்றும் முட்டாள்
இல்லை சாதனா... ஒரு கிரிமினலுக்கும்... அப்பாவிக்கும்
வித்தியாசம் தெரிந்து கொள்ள முடியாததற்கு... என்ன...
மிஸ்டர்... கேசவ மூர்த்தி... உங்களுக்கும் எல்லா விவர
மும் தெரியும் தானே... உங்கள் மகளுக்கு எடுத்துச்
சொல்வது தானே...'' என்றான் கோபத்துடன்.

''சாரி... இந்த விஷயத்தில் என் மனசுக்குள்ளும் கொஞ்சம்
நெருடல் இருக்கிறது சார். என் பிள்ளையை நல்ல நாணய
ஸ்தனாய் தான் நான் வளர்த்திருக்கிறேன். அவனுக்கு
பாலப் பாடமாய் நான் சொல்லிக் கொடுத்ததே... இன்
னொருத்தரின் வஸ்துவின் மேல் ஆசை வைக்கக் கூடாது.
அது விஷம் மாதிரி... இந்தக் கலி காலத்தில் பா
குடித்தாலே ஆகறதில்லை... விஷத்தைக் குடித்தா

உருப்பட முடியாதுன்னு சொல்லிச் சொல்லி அவனை வளர்த்திருக்கிறேன்... நிச்சயம் அவன் தப்பு செய்திருக்க மாட்டான் சார்... அவன் என் பிள்ளை... தெரிந்து கொள்ளுங்கள்...'' என்றார் கேசவமூர்த்தி.

''ஓகோ... உங்கள் மகள் என்னைப் பழிவாங்க நினைத்தது சரி என்பது உங்கள் வாதம்... அப்படித்தானே...'' முகச் சுளிப்புடன் கேட்டான் அவன்.

''அதுவும் தப்பு என்கிறேன்... உங்களைப் பழி வாங்குகிறேன் பேர்வழி என்று சகதியை வாரி பூசிக் கொண்டிருக்கிறாளேங்கற வருத்தம் தான் எனக்கு... அதற்காக உங்களிடம் மன்னிப்பும் கேட்டுக் கொள்கிறேன்...''

''தப்பு செய்தவரிடம் நீங்க ஏம்ப்பா மன்னிப்புக் கேட்கணும்... என் அண்ணா நிரபராதி என்று நிரூபிக்கத் தான் போகிறேன்... பாருங்கள்... அப்போ இவர்தான் நம்மிடம் வந்து மன்னிப்புக் கேட்கணும்...'' ஆத்திரத்துடன் சொன்னாள் சாதனா.

''அது நடக்காத காரியம்... உன்னால் அது முடியாது.''

''நிச்சயம் முடியும்.. அப்படி நடத்திக் காட்டினால்...''

''நீ வேண்டுவதைக் கேள்... தருகிறேன்...''

''என் அண்ணனோட சந்தோஷத்தை மீட்டுத் தர முடியுமா உங்களால்... உங்களால் அவன் இழந்த ஆனந்தமான வாழ்க்கையைத் திருப்பித் தர வேண்டும். முடியுமா உங்களால்...''

சரத்சந்திரன் பதில் சொல்லவில்லை... அவனால் அது முடியவில்லை.

''அது முடியாது... இல்லே... அவனோட வாழ்க்கையே அஸ்தமித்து விட்டது... அதற்குக் காரணம் நீங்கள்.



உங்களோட குற்றச்சாட்டினால் என் அண்ணா நொறுங்கிப் போய் விட்டான் தெரியுமா... அன்றைக்கு விழுந்தவன் தான்... தாங்க முடியாத அதிர்ச்சியில் மன உளைச்சலுக்கு ஆளாகி... சித்த பிரம்மை பிடித்தவனாட்டம் ஆகி... சே... அவன் கோலத்தைப் பார்த்த எங்களுக்குத்தான் தெரியும் அந்த அவஸ்தை. கண் முன் தன் ஒரே பிள்ளை புத்தி பேதலிச்ச மாதிரி ஆனதைப் பார்த்து என் அம்மாவும் அப்பாவும் துடித்துப் போனது உங்களுக்கு எங்கேத் தெரியும்... ஏதோ... ஒரு நல்ல டாக்டர் கொடுக்கும் ட்ரீட்மெண்டில் இப்போது கொஞ்சம் கொஞ்சமாய் நார்மலுக்கு வந்து கொண்டிருக்கிறான் என்ற சந்தோஷத்தில் இவர்கள் முகத்தில் தெளிவு வந்திருக்கிறது. நந்த கோகுலமாய் இருந்த எங்கள் குடும்பத்தோட மகிழ்ச்சியை இப்படி சிதற அடித்த உங்களுக்கு என்ன தண்டனை கொடுத்தால் தகும்... ம்ம்... சொல்லுங்கள் மிஸ்டர் சரத்சந்திரன்...''

அவனை உற்றுப் பார்த்தவாறு கேட்டாள் சாதனா.

ஆனால் அவன் அதற்கு அசைந்து கொடுக்கவில்லை.

''உன் அண்ணன் இப்படி மனச்சிதைவுக்கு ஆளானதுக்கு வருந்துகிறேன்... ஆனால் அவன் தப்பு எதுவும் செய்யவில்லை என்று இன்னும் நிரூபணம் ஆகவில்லையே... அதுவரையில் அவன் குற்றவாளிதான்... அதை உன்னால் மறுக்க முடியுமா... சொல்...'' என்றான் விடாப்பிடியாய்.

''ஏன்... கோர்ட்டில் கூட குற்றவாளி என்று உறுதி யாகும் வரை அவன் நிரபராதி என்றுதான் நினைப்ப வழக்கம்... அவன் பக்கத்து நியாயத்தையும் கேட்டுவிட்டு உண்மையை அலசிப் பார்த்து... அப்புறம் குற்றவாளியா இல்லையா என்று தீர்ப்பு கூறுவார்கள்... ஆனா... நீங் என் அண்ணனுக்கு அந்தச் சந்தர்ப்பத்தையும் தர

லையே... ஒரேடியாய் குற்றவாளிதான் என்று முத்திரைக் குத்திவிட்டீர்களே... இது எந்த விதத்தில் நியாயம்...''

''இதோ பார் சாதனா... இந்த 'வளவள' பேச்சைக் கேட்க இங்கு நான் வரவில்லை. அதற்கு எனக்கு நேரமும் கிடையாது... உனக்கு ஆறு மாதம் 'டைம்' கொடுக்கிறேன். உன் அண்ணன் எந்தத் தப்பும் செய்யவில்லை என்பதை நிரூபித்து விடு... அப்படிச் செய்யாவிட்டால்... இந்த வேலைக்கு நீ லாயக்கில்லை... இந்த மட்டும் உன் அண்ணனைப் போலீஸில் பிடித்துக் கொடுக்காமல் விட்டதற்கு நீ சந்தோஷப்படணும்... ஏதோ... உன் அப்பா... என் காலில் விழாத குறையாய் கெஞ்சியதால்... போகட்டும் என்று விட்டு விட்டேன்... இல்லையென்றால்... உன் அண்ணன் ஜெயிலில் கம்பி எண்ணிக் கொண்டிருப்பான்... முறைக்காதே... ஆறு மாதம் தான் 'டைம். குட்பை...''

விறைப்பாய் அவன் செல்வதைப் பார்த்து விட்டு... பெருமூச்சு விட்டார்கள் பெற்றவர்கள்.

''இது தேவையாம்மா... வீண் வம்பை விலைக்கு வாங்கியது மாதிரி இருக்கு... பெரிய மனிதர்களுடன் மல்லுக்கட்டுவது ரொம்பக் கஷ்டம் சாதனா... அவர்கள் கிட்டே பணமும் செல்வாக்கும் இருக்கு... அவர்களோட மோதினா பாதிப்பு நமக்குதாம்மா... விட்டுடும்மா...'' வருத்தத்துடன் சொன்னார் பெற்றவர்.

''நம்மிடம் நியாயம் இருக்குப்பா... எப்பவும் நியாயம் தான் ஜெயிக்கும்... அந்த நம்பிக்கை எனக்கு இருக்குப்பா... என் அண்ணா நேர்மையானவன் என்று நிரூபித்துக் காட்டத்தான் போகிறேன்... பாருங்கள்'' உறுதியான குரலுடன் சொன்னாள் மகள்.

''அதற்கு என்ன செய்வதாய் உத்தேசம்.''



''சொல்லப் போவதில்லை... செய்து முடித்துவிட்டு அப்புறம் பேசுகிறேன்... அப்போ நீங்க என்னைப் பாராட்டுவீங்கப்பா...''

தலையில் அடித்துக் கொண்டாள் கல்பனா.

''இது எங்கே போய் முடியப் போகிறதோ... ஈசுவரா...''

''அப்பா... இந்த சனிக்கிழமை நான் போய் அண்ணாவைப் பார்த்துவிட்டு வருகிறேன். மீரா எனக்குப் போன் பண்ணியிருந்தாள். அண்ணா இப்போ தெளிவாய் இருக்கிறானாம்... அவனைப் பார்த்து விட்டு வந்தால் தான் மனசுக்கு நிம்மதி...'' என்று சாதனா சொல்ல...

''நானும் வருகிறேனே... சாதனா... எனக்கும், என் பிள்ளையைப் பார்க்க வேண்டும் போல இருக்கிறது...'' என்றாள் கல்பனா.

''வேண்டவே வேண்டாம்... செல்லப் பிள்ளையைப் பார்த்ததும் நீ... உணர்ச்சி வசப்பட்டு... 'ஓ'வென்று அழுதுடுவே... தேவையாக்கும். முதல்ல... நான் போய் அவனைப் பார்க்கிறேன்.. மீரா 'எஸ்' என்றால் தான் நீங்க பார்க்க முடியும்...''

''சாதனா சொல்வதும் சரிதான்... கல்பனா... இப்பத்தான் நந்து கொஞ்சம் கொஞ்சமாய் தேறிக் கொண்டு வரு கிறான். இந்த நேரத்தில் நாம் போய் நின்னா... கலங்கிடு வான்... வேண்டாம்... அப்புறம் போகலாம். அவனுக்கு பிடித்த பதார்த்தங்களை செய்து கொடு. என்ன...'' என்ற கேசவமூர்த்தி.

வாட்டத்துடன் இருந்த தாயை அணைத்துக் கொ
டாள் சாதனா.

''அம்மா... நந்துவோட நல்லதுக்குத்தான் சொல்றது... சரி... என்ன செய்து தரப் போறேம்மா... அவனுக்கு பிடித்த ரவா லட்டும்... கைமுறுக்கும் பண்ணிக்கொடேன். மீராவுக்கும் சேர்த்து செய்துதாம்மா... நமக்காக அவள் செய்யற உதவிக்கு நாம் என்ன பண்ணினாலும் போதாது... நந்தண்ணாவை அக்கறையா கவனிச்சுக்கறா... அவனை நோயாளியா நடத்தாமல்... சொந்தமா நினைச்சு 'ட்ரீட்மெண்ட்' கொடுக்கிறா... இந்த நன்றிக்கடனை எப்படித் தீர்ப்பதுன்னு தான் தெரியல்லே'' என்றாள் சாதனா. ''உண்மைதாம்மா... அந்தப் பொண்ணுக்கு நாம் ஏதாவது செய்யணும்... பார்க்கலாம்...'' என்றார் தந்தை...

இரவு படுக்கும்போது ஏதேதோ நினைவுகள்... கலவையாய் கைக் கோர்த்துக் கொண்டு... நந்தண்ணாவின் மனச் சிதைவு... மீராவின் உதவி... சரத்சந்திரனின் கோபம்... அவனது திடீர் வருகை... வார்த்தைகளில் தெறித்த திமிர்த் தனம்... தப்பே செய்யவில்லை என்ற வறட்டு வாதம்... இவற்றையெல்லாம் மறுபடியும் மறுபடியும் நினைத்து... நினைத்து உள்ளம் சோர்ந்தது தான் மிச்சம். எப்படியோ... சரத்சந்திரனுக்கு உண்மை தெரிந்தாகி விட்டது. அதைவிட முக்கியமான விஷயம்... அண்ணா நிரபராதி என்பதை நிரூபிப்பதாய் சவால் விட்டாயிற்று... அவனும் ஆறுமாத 'கெடு' என்று கொடுத்தாயிற்று... அதற்குள் தித்துக் காட்டணும்... பெருமூச்சு விட்டாள் அவள்...

'டென்ஷன்' என்னும் கரும் பூதம் அவளது தலை ல் ஏறி அமர்ந்து கொண்டது...



# 7



அலுவலகத்திற்கு புறப்பட்டுக் கொண்டிருந்த மகளை பெருமிதத்துடன் பார்த்தாள் கல்பனா...

லாவண்டர் நிற சுரிதாரில்... அழகான வயலட் மலர் பூத்து நின்றது போலத் தோற்றம்... என்னமாய் நெடுநெடு வென்று வளர்ந்து விட்டாள்...

என் கண்ணே பட்டுவிடும் போல் இருக்கிறது. குழந் தைக்கு சுற்றிப்போட வேண்டும்... தாயுள்ளம் விம்மியது.

கையில் இருந்த குண்டு மல்லிகை சரத்தை மகளிடம் நீட்டி... ''சாதனா... இதை தலையில் வைத்துக் கொள்...'' என்றாள்.

முகத்தை சுளித்தாள் மகள். ''அய்யே... என் ஹேர் ஸ்டைலுக்கு பூ வைத்தால் 'சூட்' ஆகாதும்மா...'' என்றாள் கெஞ்சலுடன்.

''என்னடீ இது.... பூவை வேண்டாம் என்கிறே... அது என்ன ஸ்டைலோ... கண்றாவி... பொண்ணா லட்சணமா பூச்சூடிக் கொண்டு போகாமல்... திரும்புடீ...'' என்று அவளை வலுக்கட்டாயமாக திருப்பி தலையில் பூச்சரத்தை சொருக யத்தனிக்க...

''விடும்மா... நானே வைத்துக் கொள்கிறேன்...'' என் வாங்கி... ஹேர் பின்னில் செருகி கூந்தலில் வைத் கொண்டு... 'போதுமா' என்றாள்... எரிச்சலைக் காட்டியப

''சுணங்காதேடீ... பொண்ணுக்கு பூவும்... பொட்டும் தான் லட்சணம். அது இருக்கட்டும்... அப்பா சொல்லச் சொன்னார்... மெரின் இன்ஜினியராம் பையன்... என்னிக்கு பெண் பார்க்க வரச் சொல்லலாம்னு தரகர் கேட்கிறார். என்னிக்கு உனக்குத் தோதுப் படும்... சொல்லு..''

செல்லை எடுத்து கைப்பையில் வைத்தவாறு கேட் டாள் மகள்.

''மெரின் இன்ஜினியரா... 'சாஃப்ட்வேர்'னு சொன்னார் அப்பா... அவனில்லையா...''

''அவர்களிடம் இருந்து இன்னும் தகவல் எதும் வரவில்லையாம். அதற்குள் இந்த வரன் வந்திருக்கிறது. நல்ல குடும்பம்... மருமகளை நல்லா வச்சுப்பா... ஏன்னா... அவர்களுக்கு பொண் குழந்தை இல்லைன்னார் அந்த தரகர். உன் முடிவில் தான் இருக்கு.''

''இதோ பார்ம்மா... நீயும் அப்பாவும் யாரைத் தேர்ந் தெடுக்கிறீர்களோ. அவர்தான் மாப்பிள்ளை... போதுமா... தன் பெண்ணுக்கு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுக் கணுங்கற எண்ணம் பெத்தவர்களுக்கு இருக்கும்... உங்க தேர்வு சோடை போகாதும்மா... என்னைக் கேட்கவே வேண்டாம். உங்களுக்குப் பிடித்திருந்தால்... கோ அஹெட்... மணையில் உட்கார் என்றதும் உட்கார்ந்து தாலி கட்டிக் கொள்கிறேன்... ஓகே...'' 'பேக்'கை எடுத்து மாட்டிக் கொண்டவாறு சொன்ன மகளின் கன்னங்களை பாசத்துடன் வருடினாள் கல்பனா.

''என் தங்கம்டீ... எனக்கு ரொம்பப் பெருமையா இருக்கு ாதனா... அப்போ திங்கட்கிழமைன்னு முடிவாச்சு... ால்லிடட்டுமா...'' என்றாள் மகிழ்ச்சியுடன்.



''சரிம்மா... இப்ப எனக்கு நேரமாச்சு... புறப்படுகிறேன். மதியத்திற்கு என்ன செய்து வைத்திருக்கியாம்மா...''

''தக்காளி சாதமும்... கொஞ்சம் தயிர் சாதமும்... சாதனா.. மறுபடியும் ஆபீஸில் தத்து பித்துன்னு நடக்காதேடீ... கல்யாணப் பேச்சு ஆரம்பிச்சாச்சு. ஏதாவது எக்குத் தப்பாச்சுன்னா... அசிங்கமாயிடும்'' தாய் கெஞ்சலாய் சொல்ல...

''டோன்ட் வொர்ரீம்மா... நீ பயப்படுகிற மாதிரி எதுவும் நடக்காது. ஆறு மாசம்... அப்புறம் வேலையை விட்டு விடுவேன். எல்லாம் நல்லபடியா நடக்கும்னு தைரியமா இரும்மா... பை...''

நிமிர்ந்த நடையுடன் நடந்த மகளை யோசனையுடன் பார்த்தாள் கல்பனா.

''ஈசுவரா... இந்தப் பொண்ணுக்கு நல்ல புத்தி தா'' என்று வேண்டிக் கொண்டது அவள் மனம்.

அலுவலகத்தில் சாதனா - சரத்சந்திரனின் விஷயம் ஆறிய கஞ்சியாகி விட்டது.

இப்பாது... 'ஹாட் சூப்'பான விஷயமாக இருந்தது. ராதிகா - நரேந்திரனின் விவகாரம் தான்.

அண்ணனைப் பார்க்கும் சாக்கில் வந்து... நரேந்திர னிடம் சிரித்துப் பேசுவது கண்டு அங்கிருந்த ஊழியர்கள் கமுக்கமாய் சிரித்தனர்.

சாதனா யோசனையுடன் அவர்களைப் பார்த்தாள்.

உண்மையிலேயே இவர்களுக்குள் காதல் தானா...

இல்லை... ஜஸ்ட் லைக் தட் சிநேகமா... இவள் ே நாட்டுக்குப் போய் வந்தவள்... மாடர்ன் கேர்ள்...

நரேந்திரன் அவளுக்கு சரியான இணையா.. ராதிகா வின் ஆட்டத்திற்கு அவனால் நட்டுவாங்கம் செய்ய முடியுமா...

இல்லை... இது 'பாஸிங் கிளவுட்ஸ்' மாதிரியான உற வாகவும் இருக்கலாம்... யார் கண்டது...

சரி... என்ன கண்றாவியாக இருந்தால் நமக்கென்ன... இது பெரிய இடத்து சமாச்சாரம்... அப்படியே அமுங்கி விடும்... இப்போது இந்த நரேந்திரனுடன் இழைந்து பழகி விட்டு... ஒரு சுரேந்திரனை மணந்தாலும் வியப்பில்லை... இந்த வம்பு நமக்கெதுக்கு... நம் வேலையைக் கவனிப் போம்... அவை நிறையவே இருக்கிறதே... மூச்சை இழுத்து விட்டவள் அப்போதுதான் கவனித்தாள். எண்ண வோட்டத்தில் கை எதையோ இறுக்கிக் கொண்டிருப் பதை... அய்யோ... 'பாங்க்'கிற்கு அனுப்ப வேண்டிய ரூபாய் கட்டின் மேல்... ஆயிரம் ரூபாய் நோட்டு! அதுவும் நம்பர் மீது அழுத்தமாய்... அசிங்கமாய்... அப்படி ஒரு கவனக் குறைவா... தன்னையேக் கடிந்து கொண்டாள்.

இன்றைக்கு பாங்கிற்கு இது போயாக வேண்டும். பாங்கில் போடுவது நரேந்திரனின் வேலை... ஆனால் இப்படி ஆகிவிட்டதே...

''என்னடீ... அந்த ரூபாய் நோட்டையே வெறித்துக் கொண்டு இருக்கே... இதற்கு முன் ஆயிரம் ரூபாய் நோட்டைப் பார்த்ததில்லையாக்கும்...'' சுமதியின் கிண்டல் குரல் ஒலிக்க... அவளைப் பரிதாபமாய் பார்த்தாள்.

''ஏதோ நினைவில் ரூபாய் நோட்டில் கிறுக்கி விட் டேன்... சுமதி... பாங்கில் ஏத்துப்பாங்களான்னு தெரியல்லை வேளே...'' என்றாள் கலக்கத்துடன்.



''எங்கே காட்டு... பார்க்கலாம்... சேச்சே... அத்தனை மோசமா இல்லை... ஒண்ணு செய்... முதல் நோட்டை நாலைந்து நோட்டுகளுக்கு கீழே வைத்து அனுப்பிவிடு... பாங்கில் பார்க்க மாட்டார்கள்... அதோ... நரேந்திரன் வரு கிறான்... சட்டென்று செய்... எங்கேயோ கிளம்பிட்டான் மாப்பிள்ளை... ராதிகா காத்திருக்கிறாளோ என்னவோ. தினமும் ஒரு சாக்கு... கொடுத்து வைத்தவன்...'' சுமதி முணுமுணுக்கையில் அங்கு வந்தான் நரேந்திரன்.

''சாதனா மேடம்... இன்னிக்கு பாங்க் போகிற வேலை இருக்கிறதா... நான் இப்போ அவசர வேலையாய் வெளியே போகிறேன்...'' என்றான் அவன்.

''ஒரு நிமிஷம்... இருங்க... மிஸ்டர் நரேந்திரன்...'' என்று அவள் சொன்னதும்...

''ஓகே... ரெடி பண்ணுங்க... நான் போய் மேனேஜர் கிட்டே பேசிட்டு வர்றேன்...'' என்று அவன் நகர்ந்தான்.

அவன் வருவதற்குள் ரூபாய் நோட்டை மாற்றி வைத்தாள் சாதனா...

நரேந்திரன் வந்ததும் அவனிடம் தந்து விட்டு... குறிப் பேட்டில் அன்றைய தேதி... கட்டிய பணத்தொகை... பாங்க் பெயர் எல்லாவற்றையும் குறித்துக் கொண்டாள்.

''சாதனாம்மா... எம்.டி. உங்களை கூப்பிடுகிறாங்க... ஏதோ அர்ச்சனா கம்பெனி ஃபைலாமே... அதை எடுத்துச் கொண்டு வரச் சொன்னாரு...''

ப்யூன் தங்கவேலு வந்து சொல்ல... தேவையானவ எடுத்துக் கொண்டு நடந்தாள்.

அவளது முகத்தை ஏறிட்டும் பார்க்காமல்... கை நீ அதை வாங்கிக் கொண்டான் சரத்சந்திரன்.

அவனது கண்கள் 'லாப் டாப்'பின் மீது பதிந்திருந்தன. சாதனா இன்னும் நின்று கொண்டிருப்பதைக் கண்டு 'என்ன விஷயம்' என்பது போல புருவங்களை உயர்த்தினான்.

''உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்...''

''என்ன...''

''நான் நந்தகுமாரின் தங்கை என்பது இங்கே உள்ளவர்களுக்கு தெரியக்கூடாது...''

அவன் உதட்டில் ஏளனப் புன்னகை எட்டிப் பார்த்தது.

''ஏன்... தெரிந்து விட்டால் கேவலம் என்றா...''

''ஊகூம்... என் அண்ணனை மாட்டி விட்ட அந்த அயோக்கியன் யார் என்று கண்டுபிடிக்கத்தான். அதற்குள் நான் யார் என்று தெரிந்து விட்டால் அவன் உஷாராகி விடுவான் என்ற எண்ணம்.''

''எல்லாம் உன் வீண் கற்பனை... பேசாமல் நீ கதை எழுதப் போகலாம்... ஒன்று தெரிந்து கொள்... இங்கே வேலை செய்பவர்கள் எல்லோரும் விசுவாசமாய் உழைப்பவர்கள்... பல வருடங்களாய் வேலை செய்கிறவர்கள்... அப்படிப் பார்க்கப் போனால்... நீ தான் புது ஆள்... உன்னை நம்பி இந்த வேலையை ஒப்படைத்தது தப்போ என்று இப்போது தோன்றுகிறது. 'அக்கவுண்டன்ஸி'யில் உன் மதிப்பெண்களைப் பார்த்து விட்டு மகிழ்ந்து போய் சேர்த்துக் கொண்டதற்கு... இதுவும் வேண்டும்... இன்னமும் வேண்டும் தான்... சே! டார்ச்சர்...'' கடுப்புடன் சொன்னான் அவன்.

''இன்னும் ஆறு மாதம்... அதற்கு பிறகு உங்களுக்கு எந்த இம்சையும் இல்லை... நானே 'பை' சொல்லிவிட்டுப்



போய் விடுவேன்.. என்ன செய்ய... அது வரையில் நீங்கள் பொறுத்து தான் போக வேண்டும்...'' என்றாள் கிண்டலாய்...

''மை காட்! ஆறு மாதம்! நூற்றி எண்பத்து மூன்று நாட்கள்... சை...''

''வேறு வழியில்லை... மிஸ்டர் சரத்சந்திரன்... எனக்கு ஆறு மாதம் 'டைம்' கொடுத்திருக்கிறீர்கள். அது நமக்குள் நடந்த ஒப்பந்தம்... அதற்கு உங்களது ஒத்துழைப்பு தேவை... நான் கேட்பது இது ஒன்றுதான்... என்ன... செய்வீர்கள்தானே...''

அவளை முறைத்தான் சரத்சந்திரன்.

''முடியாது என்று சொல்ல வேண்டும் போல் தோன்றுகிறது. ஆனால் கெஞ்சிக் கேட்கிறாயே. சரி கடைசியாய் ஒரு சந்தர்ப்பம் கொடுக்கிறேன். இப்போதாவது நான் ஒரு ஜென்டில்மேன்னு நீ புரிந்து கொள்...'' என்றான் வேண்டா வெறுப்பாய்...

''அப்படியே இருக்கட்டும்... இதை ஜென்டில்மேன் அக்ரிமெண்ட் என்றே நினைத்துக் கொள்கிறேன்... தாங்க்ஸ்'' என்று சொல்லிவிட்டுச் சென்றாள் சாதனா.

அவள் சென்ற பின்பும் அவள் சூடியிருந்த மல்லிகையின் மணம் அவனைக் கிறங்க வைத்தது. நெஞ்சம் கனத்தது.

தன் உள்ளம் கவர்ந்தவள் இப்படி மனதை வலிக்கச் செய்து விட்டாளே...

சாதாரண சூழ்நிலையில் அவள் வேலைக்கு வந்திருந்தால் என் காதலுக்கு இசைந்திருக்கலாம்...

பெருமூச்சு விட்டான் அவன்.

'டாண்' என்று ஐந்து மணியானதும் அலுவலகத்தில் இருந்த மகளிர் கூட்டம் எழுந்து கொண்டது. பெண்கள் ஐந்து மணிக்கே கிளம்பலாம் என்ற சலுகைதான்.

ஆனால் ஆண் ஊழியர்களுக்கு ஐந்தரை மணி வரை இருக்க வேண்டும் என்ற நிபந்தனை.

நரேந்திரன் மட்டும் இதற்கு விதி விலக்கு. அவனது வேலை பெரும்பாலும் வெளியே தான். பாங்கிற்குப் போய் பணம் எடுப்பதும்... இல்லை பணம் போடுவதும் அவனது கடமை... மேலும் வாடிக்கையாளர்கள் தரும் காசோலைகளை 'கலெக்ட்' பண்ணுவதும் அதை பாங்கில் சேர்ப்பதும்... ஆபீஸுக்கு தேவையான சாதனங்களை வாங்கி வருவதும்.. கம்பெனியில் நடக்கும் பார்ட்டி... டிரிப்... விழா இவைகளுக்கு பொறுப்பேற்று ஏற்பாடு செய்வது... எல்லாம் நரேந்திரனின் வேலைகள்... அதனால் அவன் எப்போது வேண்டுமானாலும் வெளியே செல்லலாம்... வரலாம்.... அவனை யாரும் கேள்வி கேட்க இயலாது.

சாதனா புறப்பட்டபோது சுமதி அவளிடம் சொன்னாள் ''சாதனா.. இன்றைக்கு எனக்காக ஒரு இருபது நிமிடம் ஒதுக்க முடியுமா... உன்கிட்டே 'பர்சனலா' பேசணும்டீ... உன் 'சஜஷன்' எனக்கு வேண்டும்...''

''என்னடீ... காதல் விஷயமா...''

எச்சரிக்கையுடன் சுற்றிப் பார்த்தாள் சுமதி.

''உஷ்... மெல்லடீ... யார் காதிலாவது விழுந்து தொலைக்கப் போகிறது'' என்றாள் அடிக்குரலில்.

''கீதாஞ்சலி ஓட்டலுக்குப் போகலாம்... சூடா காபி சாப்பிடணும்போல இருக்கு... லேசா தலை வலிக்கிறது... உனக்கு மறுப்பில்லையே...''



''ஊகூம்... எனக்கும் காபி குடிக்கணும் போல இருக்கிறது. ஏதேதோ யோசனையில் மண்டையும் காய்ந்து போச்சு... தொண்டையும் வறண்டு கிடக்கிறது... சரி... வா'' இருவரும் புறப்பட்டனர்.

ஓட்டலில் எதிரும் புதிருமாய் அமர்ந்திருந்தார்கள் சாதனாவும் சுமதியும்.

''ஏதாவது சாப்பிடலாமா... இங்கே வாசனைப் பிடித்ததும் வயிறு பிராண்ட ஆரம்பித்து விட்டது'' என்றாள் சுமதி.

''எனக்கும் தான்... ஆப்பம் குருமாவுக்கு சொல்வோமா...''

ஆர்டர் கொடுத்துவிட்டு சுமதியிடம் கேட்டாள் சாதனா...

''ம்ம்... இப்ப சொல்லு... யார் அந்த ஹீரோ... உன் உள்ளம் கவர்ந்த கள்வன்... விவரமா சொல்லு...''

''மண்ணாங்கட்டி... காதலும் இல்லை... கத்தரிக்காயும் இல்லை... என் வீட்டு நிலைமைதான் உனக்குத் தெரியுமே... என் அப்பா என்னம்மாவைப் பிரிந்து போனப்புறம் எனக்கு அம்மாதான் எல்லாம். எங்களை கஷ்டப்பட்டு படிக்க வச்சு... எங்கக்காவுக்கு கல்யாணம் பண்ணி வச்சு... ப்ச்சு... இன்னும் அந்தக் கடனே முடியலே... அதற்குள் என்னைப் பிடித்திருக்கிறதுன்னு சொல்லி ஒருத்தர் பெண் கேட்டு வந்திருக்கிறார்... வழக்கமாய் என்னை பஸ் ஸ்டாப்பில் பார்ப்பாராம். ஒரு நாள் என் பஸ்ஸில் ஏறி... என்னை கவனித்திருக்கிறார். வம்பு தும்பில்லாமல்... அமைதியாய் ஒரு புத்தகத்தை படித்துக் கொண்டிருந்தது அவருக்கு பிடித்திருந்ததாம். அப்புறம் வேலை செய்யும் ஆபீஸையும் பார்த்துவிட்டுப் போயிருக்கிறார்... தான் நினைத்த மாதிரியே அடக்கமான... அமைதியான பெண்ணா தெரிகிறேன் என்று விரும்பியிருக்கிறாராம்

''யார்... நீ அமைதியானவளா... போச்சுடா... பாவம் அந்த ஆள்டீ.. ஏமாந்து விட்டார்...'' என்று தோழியைக் கிண்டல் செய்தாள் சாதனா.

''அப்ப... நான் என்ன கோபக்காரி என்கிறாயாக்கும்'' என்றாள் சுமதி.

''வேடிக்கைக்கு சொன்னேன். சுமி... நீ பூ மாதிரி... ரொம்ப மென்மைதான்... போதுமா...''

''தாங்க்ஸ்...''

''என்ன... அப்பப்ப... கொஞ்சம் கோபம் வரும்... அது அவருக்குத் தெரியாது... பாவம்...'' என்றாள் சீண்டுவது போல...

''இப்போ இதுதான் முக்கியமாக்கும்... என்னோட நிலைமையப் புரிஞ்சுக்காமல் பேசறேயேடீ... வீட்டை சுத்தி கடன்... அதை தீர்க்கறதிலேயே என் முழு ஆயுசு முடிந்து விடும் போல இருக்கு... அம்மா... பாவம்... எந்த சுகமும் அனுபவிக்கவில்லை... இப்பத்தான்... அதாவது நான் சம்பாதிக்க ஆரம்பித்ததும்... அவங்களோட சுமையை நான் வாங்கிக் கொண்டப்புறம்தான் மூச்சு விடவே ஆரம்பித்திருக்கிறாங்க. இந்த நிலைமையில் என்னோட கல்யாணம்... ப்ச்சு... அபத்தமா இல்லே... ஆனா அம்மாவுக்கு அது புரியல்லேடீ... நல்ல சம்பந்தம்... அதுவா தேடி வந்திருக்கு... எதுக்கு விடணும்னு புலம்பறாங்க... கேட்டு... கேட்டு என் தலை வீங்கிப் போச்சுடீ... சாதனா இப்போ சொல்லு... நான் என்ன செய்யட்டும்...''

''ஹையோ... இது நீ தீர்மானிக்க வேண்டிய விஷயம் டீ... நீதான் முடிவெடுக்க வேண்டும்... உனக்கு இருக்கிறது இரண்டு 'ஆப்ஷன்...' ஒண்ணு... உங்கம்மா விருப்பப்படி கல்யாணத்திற்கு நீ ஒத்துக்கொள்ள



வேண்டும்... இல்லை... இப்போதைக்கு எனக்குக் கல்யாணமே வேண்டாம் என்று 'பட்'டென்று சொல்லி விடுவதுதான்... யோசிச்சு முடிவு பண்ணு...''

''இதில் முடிவு பண்றதுக்கு என்ன இருக்குடீ... முதல்லே கடன் தீரணும்... அதுவரைக்கும் வேறு எதுபத்தியும் சிந்தனை இல்லை...''

''அப்போ... அதை உன் அம்மாகிட்டே சொல்லிடேன். உங்கம்மாவை 'கன்வின்ஸ்' பண்ணு...''

''சொல்லிப் பார்த்தாச்சு... அதிர்ஷ்டம் ஒரு தடவை தான் எட்டிப் பார்க்குமாம்... அதை தெரிஞ்சுக்காம ஏதேதோ உளறுகிறேனாம்...''

''சரி.. உன்னை விரும்பும் ஆளிடம் உன் எண்ணத்தை சொல்லிடேன்... உன் நிலைமை இப்படி இருக்கிறது. இப்போதைக்கு எனக்குக் கல்யாண எண்ணமே இல்லைன்னு சொல்... ஒரு வேளை அவர் புரிந்து கொள்ளலாம் இல்லையா... நானும் உதவுகிறேன் என்று கூட அவர் சொல்லலாமே... இல்லை... என் ஆசைக்கனியே... உன் கடன் தீரும் வரை காத்திருப்பேன் என்று காதல் வசனமும் பேசலாம்... யார் கண்டது...''

''நீ சொல்வதும் சரிதான்... அந்த ஆசாமியிடம் பேசிப் பார்க்கிறேன்...''

சாப்பிட்டதும் பில் வந்தது.

'பில்லை' எடுக்கப்போன சுமதியின் கையைத் தட்டி விட்டு அதை எடுத்துக் கொண்டாள் சாதனா.

''நான் தானே அழைத்தது... நான் கொடுப்பது தான் முறை... விடுடீ...'' என்று 'பில்'லைப் பிடுங்க எத்தனிக்க...

சாதனா அதை அவள் கைக்குக் கிட்டாமல் மறைத்து கொண்டு சொன்னாள்...

''சும்மா இரு சுமதி... யார் கொடுத்தால் என்ன... இந்தத் தடவை நான் தருகிறேன்... அடுத்த தடவை நீ தருவேயாம்...''

கைப்பையிலிருந்து பணத்தை எடுத்துக் கொண்டிருக் கையில் ஓட்டல் மேனேஜர் பதட்டத்துடன் கூவியது கேட்டது.

''டேய்... போய் அந்த ஜீன்ஸ் போட்ட மேடத்தை போய் கூட்டிட்டு வா... இந்த ரூபாய் நோட்டைத் திருப்பித் தாணும். இந்த நோட்டு சரியில்லை... ஓடுடா...'' என்றவர் பில்லையும் பணத்தையும் நீட்டிய சாதனாவிடம் புலம்ப ஆரம்பித்தார்.

''பத்து ரூபாயா... இருபது ரூபாயா... போகட்டும்னு விட்றதுக்கு... ஆயிரம் ரூபாய் நோட்டும்மா... இந்த நோட்டை யாருக்காவது கொடுத்தால் வாங்குவார்களா... நீயே சொல்லும்மா... பகட்டா வர்றவங்கதாம்மா இப்படி ஏதாவது பிரச்சனை செய்துட்டுப் போறாங்க... பெரிய இடம்னு நம்புறோம் பாரு... அதான்...''

இது உங்க தலைவலி... இதில் என்னை ஏன் இழுக் கிறீர்கள் என்று தோன்றினாலும்... பாவம்... சொல்கிறாரே என்று அந்த நோட்டைப் பார்த்து தலையாட்டினாள் சாதனா.

உண்மையிலே மோசமாய் கிறுக்கப்பட்டிருந்தது. மசி அப்பினாற்... போ...ல்... அட... இது நான் கிறுக்கியதா யிற்றே... இங்கே எப்படி வந்தது... அது எப்படி கைமாறி இங்கே வந்து சேர்ந்தது.. யாரிடமிருந்தது!

இது பாங்கிக்கு அல்லவா போயிருக்க வேண்டும். இங்கே வந்திருக்கிறதே... கண் கட்டி வித்தை போல... விந்தையிலயும் விந்தை... தலையைச் சுற்றுவது போல 'கிர்' என்றது அவளுக்கு.



ஒருவேளை... நரேந்திரன் அந்த நோட்டிற்கு பதிலாய் வேறு நோட்டை வைத்து 'பாங்கில்' கட்டியிருப்பாரோ...

அப்படியே இருந்தாலும்... நான் கிறுக்கிய நோட்டு எப்படி சிறகு முளைத்து இங்கு வந்தது... மேடம் என்கிறார் இந்த மேனேஜர்... அதுவும் ஜீன்ஸ் போட்ட மேடமாம்... நரேந்திரனுக்கு இன்னும் திருமணமும் ஆகவில்லை... ஒருவேளை... அவனது தங்கை... உறவு என்று யாராவது...

குழம்பினாள் அவள்.

அதே நேரம்... ஓட்டல் பையன் ஓடி வர...

''டேய்... அந்த அம்மணியை அழைத்து வந்தீயா...'' என்று விசாரித்தார் மேனேஜர்.

''வர்றாங்கய்யா.. அதோ....'' என்று சுட்டிக் காட்டினான் அந்தச் சிறுவன்... யார் அது... ஆவலுடன் திரும்பிப் பார்த்தாள் சாதனா...

ராதிகா!... அவளேதான்... ஆமாம்... அவளிடம் எப்படி.. அதிர்ச்சியுடன் நின்றிருந்தாள் சாதனா.

ஏதோ இடிக்கிறதே... அவளது மனம் முணுமுணுத்தது.




ராதிகாவிற்கும் அதிர்ச்சி! சாதனாவையும் சுமதியையும் பார்த்துவிட்டு அதிர்ந்து போனாள்... அவர்களை அங்கு எதிர்பார்க்கவில்லை.

இவர்கள் முன்னே... சே...

கடுப்புடன் மேனேஜரிடம் சொன்னாள்.

"சார்... உங்க ஓட்டலில் நானும் என் ஃபிரெண்ட்ஸும் சேர்ந்து சாப்பிட்ட 'பில்' எவ்வளவு தெரியுமா... முழுசா இரண்டாயிரத்து எழுநூறு... 'டிப்ஸே' நூறு ரூபாய் வைத்தேன்... இந்தப் பணம் எனக்கு ஜுஜுபி... அதுக்குத் தான் இந்த மாதிரி ஓட்டலுக்கு வருவதே இல்லை. என் தலையெழுத்து... இன்றைக்கு வந்து தொலைத்து விட்டேன். ஏதோ கவனக் குறைவில் கொடுத்து விட்டதற்கு... இப்படியா ரகளை பண்ணுவீர்கள். இந்தாங்க... ஆயிரம் ரூபாய்... நல்லா பார்த்துக்குங்க. புத்தம் புது நோட்டு... அந்த நோட்டை கொடுங்க இப்படி..." என்று அதை வாங்கி... சுக்கு நூறாய் கிழித்தாள்.

"நான் பெரிய தொழிலதிபரோட பொண்ணு... தெரிஞ்சுக்குங்க... வருகிற கஸ்டமரை எப்படிக் கௌரவமா நடத்தணும்னு முதல்ல தெரிஞ்சுக்குங்க... இந்த ஊரில் உங்க ஓட்டல் மட்டும்தான் என்கிற மாதிரி குதிக்காதீங்க..." என்று படபடவென்று பொரிந்து தள்ளிவிட்டுச் சென்றாள் ராதிகா.

"பார்த்தியாம்மா... திமிரை... எல்லாம் பணக் கொழுப்பு... பெரிய சீமாட்டின்னு நினைப்பு..." என்றார் ஓட்டல் முதலாளி.

அவருக்குத் தலையாட்டிவிட்டு வெளியே வந்தார்கள் தோழிகள்...

"ஆமாம்... ராதிகா எங்கிருந்தாள்... நாம் அவளை கவனிக்கவே இல்லையே..." என்ற சிநேகிதியின் கேள்விக்கு...

"மேலே ஏ.ஸி. அறையில் இருந்திருக்க வேண்டும். நாம் உள்ளே ஒதுக்குப் புறமாய் அமர்ந்திருந்ததில் கவனிக்கவில்லை" என்று பதில் சொன்னாள் சாதனா.



"அவளது பணத்திமிரை பாரேன். அந்த ரூபாய் நோட்டைக் கிழித்துப் போட்டாளே... என்ன அகங்காரம் அவளுக்கு..."

"அதை விடு... நம் எதிரில்... ஓட்டல் முதலாளி அழைத்து கேட்டதில்... அவமானம் அவளுக்கு... அதான்...!"

"இருந்தாலும் அவளுக்கு ரொம்பத் திமிர்தான்டீ..." சாதனா பதில் சொல்லவில்லை.... அவள் மண்டையில் வண்டின் குடைச்சல்... அந்த நோட்டு எப்படி ராதிகாவின் கைக்கு வந்தது... நரேந்திரனுக்கும்... ராதிகாவுக்கும் இடையே இப்படி பணமும் கைமாறுகிறது என்றால்... இதை முதலில் 'செக்' பண்ணணும்... ஆபீஸ் பணம் எப்படி இப்படிச் சுழல்கிறது என்று...

"ஏய்... என்ன யோசனை... பேசாமல் வருகிறாய் என்றால்... பலமான யோசனையாகத்தான் இருக்கணும்டீ..." என்றாள் சுமதி.

"ராதிகா விஷயம் தான்... நடந்ததை நினைத்தேன்..."

"ரப்பிஷ்... விட்டுத் தள்ளுடி..." முகம் சுளித்தாள் சுமதி.

ரூபாய் நோட்டைப் பற்றி சுமதியிடம் எதுவும் அவள் சொல்லவில்லை... அது ரகசியமாக இருப்பதே நல்லது.

வீட்டினுள் அவள் நுழைகையில் நெய் மணம் அவளை ஈர்த்தது.

அம்மா இனிப்பு செய்கிறாள்... ஓ! அண்ணாவிற்காகவா...

நைட்டியை உடுத்திக் கொண்டு... கை கால்.. முகம் கழுவிக் கொண்டு வந்தவள்...

"உன் செல்லப் பிள்ளைக்கு ஏதேதோ செய்திருக்கே போலிருக்கிறது..." என்று பரிகாசம் செய்தாள்.

''நந்துவிற்கு பிடிச்ச ரவா லட்டும்... முந்திரி கேக்கும் செய்திருக்கேன். 'டேஸ்ட்' பண்ணுகிறாயா...'' என்றாள் பெற்றவள்.

''ஓகோ.. டேஸ்ட்டுக்கு மட்டும் தான் தருவாயாக்கும். உம்ம்... என்ன இருந்தாலும் உனக்குப் பிள்ளை தான் உசத்தி'' என்று வேண்டும் என்றே தாயைச் சீண்டினாள்.

''வாயில் போடுவேன்... என்னைக்குடி உன்னை தாழ்த்தியா நடத்தியிருக்கிறேன்... பார்க்கப் போனால்... பிறத்தியார் வீட்டுக்கு போறவளாச்சேன்னு உனக்குத்தான் இந்த வீட்டில் அதிகச் செல்லம் தர்றோம்... ஏதோ... பிள்ளையைப் பார்க்காத பாசத்தில்... இதையாவது செய்து அனுப்பலாமேன்னு ஆசைப்பட்டால்...''

தாயின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள் சாதனா...

''எனக்குத் தெரியாதாம்மா... சும்மா உன்னைச் சீண்டி னேன். அவ்வளவுதான்... சரி... வெறும் இனிப்பு மட்டும் தானா...'' என்றாள் அவள்.

''ஊகூம்... கொஞ்சம் வெண்ணெய் முறுக்கும் தான். அதை அப்புறம் பிழியணும்...''

''ஏம்மா கஷ்டப்பட்றே... இப்படி அலட்டிக் கொண்டு அப்புறம் 'கையில் குடைச்சல்... முதுகில் வலி... இடுப்பில் பிடித்துக் கொண்டு விட்டது... அமிர்தாஞ்சனை தடவுடீ... 'மூவ்' இருக்கான்னு' 'புலம்பறது... கடையில் இப்ப வகை வகையாக கிடைக்கிறது. வாங்கிக்கலாம் இல்லையா...''

''கடையில் விற்கிறது என்றைக்கு செய்ததோ... எந்த ண்ணெயில் செய்தானோ.. யாருக்குத் தெரியும். வீட்டில் ண்ணுகிற மாதிரி இருக்குமா.. சொல்லு..'' ரவா லட்டை டுக்கியவாறு சொன்னாள் கல்பனா.



''சரி... வேண்டாம்.. ஆனால் ஒரே நாளில் பண்ணணும் என்று இல்லையே... நாளைக்கு கொஞ்சம் பண்ணலாம் தானே...''

''நாளைக்கா... சரிதான்.. வெள்ளிக்கிழமை வேறு... எண்ணெய் குளியல்... பூஜைன்னு சரியாய் இருக்கும்... அதான்... இன்னிக்கே முடிச்சிடலாமேன்னு பண்ணு கிறேன்... இந்தா... டேஸ்ட் பண்ணிவிட்டு என்ன குறைன்னு சொல்லு...'' ஒரு தட்டில் இரண்டு முந்திரி கேக்கையும், இரண்டு ரவா உருண்டைகளையும் வைத்துக் கொடுத்தாள். முந்திரி கேக்கை கொஞ்சம் விண்டு வாயில் போட்டு ருசி பார்த்துவிட்டு ''ம்ம்... அருமையா இருக் கும்மா... இரு... இரு... ரவா லாடையும் சாப்பிட்டு விட்டு உனக்கு 'சர்டிபிகேட்' தருகிறேன்... ம்ம்... ஏதோ கம்மியா படுகிறதே... நெய் வாசனை இருக்கிறது. இனிப்பும் அளவா இருக்கிறது. பின்னே... யெஸ்... தெரிந்து விட்டது... பச்சைக் கற்பூரம் வாசனை... அது இல்லை...'' என்றாள் மகள்.

''பார்த்தியா... அதைப் போட மறந்து விட்டேன். இப்ப ஒரு வேலைக்கு.. இருவேலை... பிடிச்ச உருண்டைகளை உதிர்த்து விட்டு... மறுபடியும் செய்யணும்... எல்லாம் என் மறதி... வயசாச்சில்லையா... அதான்...'' என்று அலுத்துக் கொண்டாள் தாய்.

''போம்மா... இத்தனை சீக்கிரத்தில் மறதி வந்து விடாது. அப்பாவும் சொல்வாரே... உங்கம்மாவுக்கு யானை மாதிரி ஞாபக சக்தி... உன் பாட்டி பேசியதை மறக்காமல் சொல்கிறாள் பார் என்று... என்னவோ... பிள்ளைக்கு செய்து அனுப்புவது நன்றாய் அமைய வேண்டும் என்கிற டென்ஷன் உனக்கு... அதில் மறந்து விட்டது. சரிம்மா. காரமா ஏதாவது கொடேன்... இனிப்பு சாப்பிட்டதி

தொண்டைக்குள் திகட்டுவது போல இருக்கிறது.'' என்று சாதனா சொல்ல...

''மத்தியானம் செய்த வாழைக்காய் கறி இருக்கு... சாப்பிடுகிறாயா...'' என்றாள் கல்பனா.

''கொடும்மா... வாய் 'நமநம' என்கிறது.'' என்று அதை தட்டில் பொட்டுக் கொண்டு சாப்பிட்டாள்.

''சாதனா... உன் சிநேகிதியைக் கேளுடீ... எப்போ நாங்க நந்துவைப் பார்க்கலாம்னு. அவனைப் பார்க்காமல்... என் கண்களைக் கட்டி விட்ட மாதிரி இருக்குடீ... ஒரு தடவையாவது அவனைப் பார்த்தாகணும்...''

''வருத்தப்படாதேம்மா... இந்தத் தடவை கண்டிப்பா கேட்டு வருகிறேன்... போதுமா...''

''மறக்காமல் செய்... அப்புறம்... திங்கள் கிழமை நாள் நல்லா இருக்கு... மாப்பிள்ளை வீட்டாரை மாலையில் வரச் சொல்லலாமா என்றார் அப்பா... நானும் சரி என்று சொல்லி விட்டேன்... அன்னிக்கு ஆபீஸுக்கு லீவு போட்டு விடுகிறாயா சாதனா...''

''லீவா... ஊகூம்... முடியவே முடியாதம்மா... வேணும்னா... பர்மிஷன் கேட்டுக் கொண்டு வந்து விடுகிறேன். ஓகேயா... ஆனால் ஒண்ணும்மா... பட்டுப் புடவையைக் கட்டிக் கொண்டு... கொலு பொம்மை மாதிரி நிற்கணும்னு மட்டும் சொல்லாதே... நான் நானாகத்தான் இருப்பேன்...'' என்றாள் மகள்... உறுதியான குரலில்...

''ஒரு நாள் தானேம்மா... கட்டிக் கொண்டால் என்ன வாம்...''

''முடியாதும்மா... சாதாரணமா... எப்பவும் இருக்கிற மாதிரி இயல்பா இருப்பேன்... சொல்லிட்டேன்... அப்



புறம்... பழம் பஞ்சாங்கம் மாதிரி... வந்து.. கீழே விழுந்து நமஸ்காரம் பண்ணு என்றும் சொல்லாதே... அது எனக்குப் பிடிக்காது... கோபித்துக் கொள்ளாதேம்மா... கொஞ்சம் புரிஞ்சுக்கோ... என் கழுத்தில் தாலி ஏறும் வரை அவர்கள் எல்லோரும் மூன்றாம் மனிதர்கள்தான். கண்டவர்களுக்கு விழுந்து வணங்கறது என்கிறது எனக்கு அசிங்கமா படுகிறதும்மா...''

கல்பனா சிரித்தாள்.

''ஏம்மா சிரிக்கிறே... நான் சொன்னது வேடிக்கையா இருக்கிறதா...'' என்று கேட்டாள் அருமை மகள்.

''இல்லேடீ... எங்க காலத்தை நினைத்தேன்... சிரிப்பு வந்தது. பொண்ணை வரச் சொல்லுங்கோன்னு உத்திரவு வந்ததும்... தட்டில் காபியுடன் தலை குனிந்து... நிதான மாய் நடந்து வந்து... ஒவ்வொருத்தருக்கும் கொடுத்து விட்டு... அடுத்த கட்டளைக்காக காத்திருக்கணும்.. அம்மா காதில் கிசுகிசுப்பாய்... 'நமஸ்காரம் பண்ணுடீ..' என்றதும்... வந்தவர்களுக்கு விழுந்து நமஸ்கரித்து எழ ணும்... அப்புறம் அடுத்த கட்டளை வரும்... பொண் ணுக்கு பாட்டு... வீணை வருமா... எங்கே ஒரு பாட்டு பாடட்டும். பாடச் சொல்லுங்கோன்னு... என்னவோ... தின மும் கச்சேரி பண்ணி மகிழ்கிற மாதிரிதான்.... இதுக் காகவே நாலைந்து கீர்த்தனைகளைக் கத்து வச்சிருப் போம். அது வரலைன்னா... பக்திப் பாடல்தான்... அதுக் கப்புறம் நல்லா சமைப்பாளா... என் பிள்ளைக்கு வக் கணையா சாப்பிடணும்... அவனோட அப்பாவுக்கு பி.பி... எனக்கு சர்க்கரை வியாதி... அதற்கு பத்தியமா சமைக்கத் தெரியணும்... உங்க பொண்ணுக்கு கோலம் போட வருமா... தையல் கத்திருக்கிறாளா... எம்ராய்டரியெ

லாம் தெரியுமா... கூடை பின்னுவாளா... இத்யாதி கேள்வி
கள்... எரிச்சலா வந்தாலும்... அதைக் காட்டிக்கக் கூடாது.
அமைதியா... பதவிசா இருக்கணும்... இல்லேன்னா அடங்
காப் பிடாரின்னு பேர் வரும்... இப்போ... இந்தத் தலை
முறையில் இந்தக் கர்மங்கள் எல்லாம் மாறியாச்சு... அந்த
வரையில் சந்தோஷம் தான்!''

தாயின் வார்த்தைகளைக் கேட்டு புன்னகைத்தாள் மகள்.

''இன்னும் மாறணும்மா... சந்தை மாட்டை பார்த்து விலை பேசி ஓட்டிக் கொண்டு போகிற மாதிரி படுகிறது எனக்கு... முன்னே மாதிரி பாடத் தெரியுமா... ஆடத் தெரியுமா என்கிற கேள்விகள் இல்லைன்னாலும்... வேறே மாதிரியான கேள்விக் கணைகள் இப்போ... நீங்க இருக்கிறது சொந்த வீடா... நிலம் வாங்கிப் போட்டிருக் கிறீர்களா... உங்க வருட வருமானம் எத்தனை... உங்க பிள்ளையின் சம்பளம் எவ்வளவு... உங்கப் பொண்ணு வருமானம் எல்லாம் 'சேவிங்'க்ஸில் இருக்கா... இந்த மாதிரி... இதெல்லாம் ஒழியணும்னா அது இளைஞர் கையில் தான் இருக்கிறது. வரதட்சணை பெயர் எடுத் தால்... எனக்குக் கல்யாணம் வேண்டாம் என்று சொல்லி விட்டால் பெற்றவர்கள் ஏன் ஆட்டம் போடுகிறார்கள்... இல்லேம்மா...''

''உண்மைதான்... ஆனா இன்னொன்றையும் யோசிக் கணும் சாதனா... பெண்ணைப் பெத்தவங்களில் பல பேருக்கு இந்த வரதட்சணை... சீர்... செனத்தின்னு தந்தால் தங்களுக்குப் பெருமைங்கற நினைப்பு இருக் கிறதே... அதற்கு என்ன சொல்றே... அதை விட விந்தை ன்னன்னா... இப்போ விஷயம் வேறே விதமாய் திரும்பி ட்டது... நம்ம காமாட்சி மாமியோட பேரனுக்கு வரன்



வந்திருக்கு... பெண்ணைப் பெத்தவர்கள், தங்கள் பெண் ணோட ஜாதகத்தை எடுத்துக் கொண்டு வந்திருக்கா... வீட்டைச் சுற்றிப் பார்த்தார்களாம். இது சொந்த வீடா... எவ்வளவு தேறும் என்று விசாரித்தார்களாம். அது மட்டுமில்லை... பையனுக்கு சகோதரிகள் எத்தனை... அவர்களுக்கு கல்யாணம் ஆச்சா... அவர்கள் உள்ளூரா... வெளியூரா... பையனுக்கு கை நிறைய சம்பளமா... பையன் பேர்ல ஏதாவது நிலம் இருக்கா... அவனுக்கு வெளிநாடு போகும் சந்தர்ப்பம் இருக்கா... இப்படியெல் லாம் கேட்டு துளைத்து விட்டார்களாம். பார்த்தாயாடீ... எல்லாம் தலைகீழ் சமாச்சாரமாகி விட்டது. எல்லாம் கலிகாலம்...'' என்று கல்பனா சொன்னதும்...

''சொல்ல முடியாதும்மா... வருகிற பையன் வீட்டா ரிடம் நீயும் இந்த மாதிரி கேள்விகளை கேட்பாயோ... என் னவோ... யார் கண்டது...'' என்று பரிகாசம் செய்தாள் மகள்.

''மாட்டேன்டீ... எனக்குப் பையனோட சம்பளம் முக் கியம் இல்லை... வருகிற சம்பளத்தில் உன்னைக் கண் கலங்காமல் வைத்துக் கொண்டால் அது போதும்... புகுந்த வீட்டில் உன்னை அன்பா வைத்துக் கொண்டால் பெத்தவங்களுக்கு அதைவிட வேறு என்ன வேண்டும்... மத்ததெல்லாம் இரண்டாம் பட்சம்தாண்டீ... சரி... என் வேலை ஆச்சு... கொஞ்சம் நேரம் கழித்து முறுக்குக்கு மாவு பிசைகிறேன்... சாதனா.. இந்த வேலை மும்முரத்தில் உலர்ந்த துணிகளை எடுத்து வரவில்லை... எடுத்து வந்து மடித்து வையேன்...''

தாயின் வார்த்தைக்கு பணிந்து அந்த வேலையை முடித்தாள்... தன் அறைக்குள் வந்து அமர்ந்தவளுக்கு மீண்டும் ஓட்டல் சம்பவம் நினைவுக்கு வந்தது...

அடங்கிக் கிடந்த கேள்வி.... திரும்ப பாம்பாய் படம் எடுத்து ஆடியது... அந்த ரூபாய் எப்படி ராதிகாவிடம் வந்தது என்று தெரியவில்லையே... ஏதோ சொல்ல முடியாத தவிப்பு மனசுக்குள்... நரேந்திரன் நம்பிக்கை யானவன் இல்லையோ... அவனை நம்பி பணம் தரலாம் என்றார்களே இப்படி அவன் செய்தது முதல் தடவையா... இல்லை... வழக்கமாய் இதேதானா. கணக்கில் சிக்கல் வருமே... அண்ணாவின் நாணயத்தை நிரூபிக்க வந்துவிட்டு... இப்போ என் தலைக்கே வந்துவிடும் போல் இருக்கிறதே... சரத்சந்திரன் என்னையும் இழிவாய் பேசுவானே. இப்போது என்ன செய்வது... தலை வெடித்துச் சுக்கல் நூறாய் ஆகிவிடும்போல்... தெறித்தது. உள்ளத்தில் தடுமாற்றம்... மனதை சமனப் படுத்த முடியாமல் தவித்தாள்.

**''ததியுறுமத்தில் புழலுமென்னாவி தளர்விலதோர்**
**கதியுறுவண்ணம் கருதுகண்டாய் கமலாலயனும்**
**மதியுறுவேணி மகிழ்நனும் மாலும் வணங்கிஎன்றும்**
**துதியுறு சேவடியாய் சிந்துரானை சுந்தரியே...''**

பூஜை அறையிலிருந்து தாயின் 'கணீர்' குரல் கேட்டது... வழக்கம் போல் விளக்கேற்றி வைத்து... அபிராமி அந்தாதி பாடிக் கொண்டிருந்தாள்... ஆனால் இன்றைக்கு ஏனோ அவளை நெக்குருகச் செய்தது... அப்போதைய மனநிலை அப்படி... பூஜை அறையை நோக்கி நடந்தாள்... ஊது பத்தியின் மணம் மெய்மறக்க வைத்தது... மல்லிகையின் மணமும்... ஊதுபத்தியின் நறுமணமும் சேர்ந்து சூழ் நிலையை ரம்யமாக்கியது...

தாயின் அருகே போய் அமர்ந்தாள்... கண்களை மூடிக் கொண்டாள்...



''தாயே... குழம்பித் தவிக்கும் என் சிந்தனையை சமனப் படுத்து... நான் எடுத்த காரியம் ஜெயமாக நீயே துணை...''

**''அழகுக் கொருவருமொவ்வாத வல்லியரு மறைகள்**
**பழகிச் சிவந்த பதாம்புயத்தாள் பனிமாமதியின்**
**குழவித் திருமுடிக் கோமலியாமளை கொம்பிருக்க**
**இழவுற்ற நின்ற நெஞ்சேயிரங்கேலுனக் கென்குறையே.**

சாதனாவின் உடம்பெல்லாம் புல்லரித்தது... தன் வேண்டுதலுக்கு கிடைத்த பதிலா... அது தாயின் வாய் வழி வெளிப்பட்டதா... உண்மையில் மனதுக்குள் அலை ஓய்ந்த அமைதி உண்டானதை உணர்ந்தாள்.

பாடி முடித்துவிட்டு மகளிடம் சொன்னாள் கல்பனா.

''சாதனா... இன்னிக்கு வியாழக்கிழமை... சாயி சரிதம் படியேன்.''

தாயின் குரலில் விழித்த சாதனா... அருகே அடுக்கப் பட்டிருந்த பக்தி புத்தகங்களிலிருந்து சாய்சத் சரிதத்தை எடுத்துப் பதினோராம் அத்தியாயத்தைப் படித்தாள். படித்து முடித்ததும் மனதில் தெம்பு... இறைவனை சரணடைந்து விட்டதால் வந்த தெம்போ... அப்படித்தான்.




அலுவலகத்திற்கு முன்னதாகவே வந்து விட்டாள் சாதனா.

மற்றவர்கள் வருவதற்கு முன்னே வந்தால்தானே யாரும் அறியாமல் நரேந்திரனின் மேஜை இழுப் பறையைத் தேடி... பாஸ் புக்கை எடுத்துப் பார்க்க முடியும்.

பணம் கட்டிய செல்லான்களும்... 'பாஸ் புக்'குகளும் அவனது பொறுப்பில் தான் இருந்தன.

எல்லாம் சரியாகத்தான் இருக்கும் என்ற நினைப்பில் இதுவரையில் அவற்றை வாங்கிப் பார்த்ததில்லை.

சரத்சந்திரன் தான் சொல்லி விட்டானே... அலுவல கத்தில் இருந்த அனைவருமே நம்பிக்கைக்குரியவர்கள்... நாணயஸ்தர்கள் என்று... அந்த குழாமில் நரேந்திரனும் சேர்த்தி தானே...

ஆனால் சந்தேகம் துளிர் விட்டதுமே... அதை ஆய்ந்து... அலசி... தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் உண்டானது இயல்பு...

அவள் நினைத்த மாதிரியே... அலுவலக கணக்கு வைத்திருக்கும் அனைத்து வங்கி பாஸ் புத்தகங்களையும் 'ரப்பர் பாண்டில்' அடக்கி... மேஜை இழுப்பறையில் வைத்திருந்தான்.

அதிலிருந்து தனக்கு வேண்டியதை மட்டும் எடுத்துக் கொண்டாள்.

அப்புறம் 'செலான்'... எதையும் கலைத்து விடாமல் நிதானமாய் தேடினாள்... அதுவும் கண்ணில் பட்டது. ஒரு சின்ன டைரிக்குள் பத்திரமாய்... கடைசியாய் அனுப்பிய பணத்திற்குரிய செலானைத் தேடினாள்... அது இல்லை.... மனதுக்குள் 'திக்' என்றது.

ஒருவேளை அவன் கட்டவே இல்லையோ....

அடக்கடவுளே....



அடுத்த கணமே அவளுக்கு உறைத்தது.

அடச்சே... என்ன மடத்தனம்... நேற்று தான் பணம் கட்டியதே... அதெப்படி 'செலான்' இங்கு இருக்கும். அது நரேந்திரனிடம் அல்லவா இருக்கும்.

அவனிடமிருந்து கேட்டு வாங்கிப் பார்க்கலாம் என்றால் அவனுக்கு சந்தேகம் வந்து விடும்...

அதைவிட....

கைக்கடிகாரத்தைப் பார்த்தாள்... அலுவலக நேரத்திற்கு இன்னும் அரைமணி நேரம் இருந்தது.

அதற்குள் பாங்கிற்குப் போய் வந்து விட்டால்...

அவளைப் பார்த்ததும் தங்கவேலு வியப்புடன் கேட்டான்.

''என்னம்மா... சீக்கிரம் வந்துட்டீங்க... அவசர வேலை ஏதாச்சும் இருந்ததா...'' என்றவன்... அவளது பதிலை எதிர்பார்க்காமல் சொன்னான்.

''அம்மா... நான் போய் எதிர் கடையில் ஏதாவது சாப் பிட்டு வர்றேன்... காலையில் நாஷ்டா பண்ணாம வந்து விட்டேன்... வயிறு கபகபன்னு பசிக்கிறது. கொஞ்சம் பாத்துக்குங்க...''

''சீக்கிரமே வந்துவிடு தங்கவேலு...''

''இதோ... உடனே வந்துட்றேன்'' என்று சென்றான் சொன்னபடியே சீக்கிரமாய் வந்து விட்டான்...

''தங்கவேலு... நாளைக்கு மதுரைக்கு புறப்பட இருக் கிறேன்...'' டிராவல்ஸில் டிக்கெட் கிடைக்குமான்னு கேட் டுப் பார்த்து விட்டு வந்து விடுகிறேன்...'' என்று அவ சொல்ல...

''என்னம்மா... திடீர்னு... மீனாட்சி அம்மன் கோவிலுக் வர்றதாய் வேண்டுதலா...'' என்று கேட்டான் தங்கவே

அவனே பதிலை உணர்த்திவிட... 'ஆமாம்' என்று தலையசைத்தாள் அவள்.

''போய் வாங்கம்மா... எல்லோருக்கும் சேர்த்தி வேண்டிட்டு வாங்க... அப்படியே... இந்தாங்க... இந்தப் பதினோரு ரூபாயை கோவில் உண்டியலில் போட்டுடுங்க'' என்று சட்டைப் பையிலிருந்து ரூபாயை எடுத்துக் கொடுத்தான்.

அவளும் அதை வாங்கிக் கொண்டாள்...

அருகிலேயே 'பாங்க்' என்பதால் அதிக நேரமும் எடுக்கவில்லை. வங்கியில் அதிக கூட்டமில்லை.

'பாஸ்புக்'கில் என்ட்ரி ஆனதும் அவசரமாய் பிரித்துப் பார்த்தாள்.

தேதி வாரியாய் எத்தனை கட்டியது என்பது நினைவில் இல்லைதான்... ஆனால் நேற்றைய விவரம் நன்றாக நினைவில் இருக்கிறதே...

அதைப் பார்த்தவளின் முகம் பேயறைந்தாற்போல் ஆனது...

நாற்பதாயிரம் மட்டுமே பாங்கில் போடப்பட்டு இருந்தது. மீதி பத்தாயிரம்... என்ன... காந்தி கணக்கிலா... இதென்ன மோசம்... அக்கிரமம்.. அவளுக்கு இரத்தம் கொதித்தது.

அதனால் தானோ அய்யாவின் கையில் இந்த அளவு பணப் புழுக்கம்... இந்த மாதிரி பணத்தைக் கையாடி அதையே இங்குள்ளவர்களுக்கு கடனாய் கொடுக்கிறான் போலும்...

கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்த மாதிரிதான் இருக்கிறது.

இதில் ராதிகாவிற்கும் பங்கு... அவளுக்கு அள்ளித் ருகின்ற வள்ளல் தான்... இதில் ராதிகாவும் கூட்டா...



அண்ணனுக்கு மோசம் செய்வாளா தங்கை... ஒரு வேளை... இது அவளுக்குத் தெரியாதா. ஆனால் நரேந்திரன் பலே கில்லாடிதான்... எல்லார் கண்களிலும் மண்ணைத் தூவிவிட்டு... பெரிய யோக்கியன் மாதிரியல்லவா நடிக்கிறான்...

கலியுகத்தில்... அயோக்கியர்களுக்குத்தான் காலம் என்பது ரொம்ப சரியாகத்தான் இருக்கிறது.

ஃபிராட் நரேந்திரனை நம்பும் சரத்சந்திரன்... தவறு எதும் செய்யாத அண்ணனை நம்ப மறுக்கிறானே...

ஏதோ... நான் கண்டு கொண்டதால் தெரிந்தது.

இதே மாதிரி...

'மடேர்' என்று தலையில் சம்மட்டியால் ஓங்கி அடித்தாற் போல இருந்தது...

ஒருவேளை... நரேந்திரன் செய்த பண மோசடிதான் பழியாய் அண்ணா மேல் விழுந்திருக்குமோ...

அப்பாவியான அண்ணன் மீது திருட்டுப் பழி வந்ததில் நரேந்திரனுக்கு தான் அனுகூலம்.

பழி ஒரு பக்கம்... பாவம் ஒரு பக்கம் என்பார்களே... அதற்கு இந்த சம்பவமே சாட்சி.

அந்த நினைப்பில் உடம்பெல்லாம் பதறியது. இன்னும் எத்தனை முறை இந்த மாதிரி பணத்தை சுரண்டியிருக்கிறானோ அந்தப் பாவி. முதலில் அதை 'செக்' பண்ண வேண்டும். என்னவொரு நயவஞ்சகம்... பாஸ்புக்கும் செலானும் தன்னிடமே இருப்பதில் வசதிதான். அவனை... பற்களைக் கடித்தாள் சாதனா.

இனிமேல் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்... கண் கொத்திப் பாம்பாய் நரேந்திரனின் ஒவ்வொரு செயலையும் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

மனக் கொதிப்புடன் அலுவலகத்திற்கு வந்தவள்... தான் எழுதி வைத்திருந்த வங்கிக் குறிப்புகளை எடுத்து வைத்துக் கொண்டு 'பாஸ்' புத்தகத்துடன் ஒப்பிட்டு சரியாக இருக்கிறதா என்று 'செக்' செய்தாள்.

பலே கில்லாடி! சில 'டிபாசிட்'டுகள் சரியாக இருந்தன. நடுநடுவே பத்தாயிரம்... ஐந்தாயிரம் என்று உருவல்... ஒரேடியாய் தொடர்ந்து எடுத்தால் தெரிந்து போகும் என்று... ஆகா கிரிமினல் மைண்ட்!

அவள் வேலையில் சேர்ந்த பின்பு... பாங்க் டெபாசிட் பணத்தில் அறுபதாயிரத்தை எடுத்திருக்கிறான் என்றால்... அதற்கு முன்பு எவ்வளவோ... தலையில் இடி விழுந்த மாதிரி இருந்தது சாதனாவிற்கு.

இதை எப்படி சரிப்படுத்த முடியும்...

அது இருக்கட்டும்... இதை சரத்சந்திரன் நம்ப வேண்டுமே.

நான் கொடுத்த தொகை அவ்வளவுதான் என்று நரேந்திரன் சாதித்தால்... அவன் சொல்வதை தான் நம்புவான்... ஏற்கனவே நந்தகுமாரின் தங்கை என்று சந்தேகக் கண்களுடன் பார்ப்பவனுக்கு... இன்னும் உசுப்பி விட்ட மாதிரியல்லவா ஆகும்.

பெரியதாய்... துப்பு துலக்கப் போகிறேன் பார் என்றேன். எல்லோரும் காறி துப்பும்படி ஆகுமே... அடக் கடவுளே!

தங்கவேலு மினரல் வாட்டரை கொண்டு வந்து ஊற்றி விட்டு அவளிடம் வந்தான்.

''என்னம்மா... போயிட்டு வந்தாச்சா... டிக்கெட் கிடைச்சா...'' என்று கேட்டான்.

''மத்தியான்ம் போகணும் தங்கவேலு... அது சரி... இன்னும் யாரும் வரவில்லையே...'' என்றாள் அவள்.



''வருவாங்கம்மா... இன்னும் பத்து நிமிஷம் இருக்கே... பஸ்ஸில் வர்றவங்க கொஞ்சம் முன்னே பின்னே வருவாங்க... 'வெஹிக்கல்'ல வர்றவங்களுக்கு 'சிக்னல்' 'பிராப்ளம்' இருக்கும்மா... வரவர 'டிராஃபிக்கே' தலை வலியாயிடுச்சு... என்ன செய்றது...'' அலுத்த குரலில் அவன் சொன்னான்.

''என்ன தங்கவேலு... இங்கிருக்கிற எல்லோரும் ரொம்ப வருஷமா இங்குதான் வேலை செய்கிறார்களா...'' பேச்சு வாக்கில் கேட்பதைப் போல அவள் வினவ...

''ஆமாம்மா.... நீங்கதான் சமீபத்தில் சேர்ந்தது... உங்களுக்கு முன்னால் நந்தகுமார்னு ஒருத்தர் வேலைப் பார்த்தாங்கம்மா... நல்லவர்தான்... பாவம்... போதாத காலம்... கெட்ட பெயர் வந்திடுச்சு... அவர் அப்படிப் பண்ணுவாரான்னு கூட ஆச்சர்யப்பட்டேன்ம்மா. ஆனா இந்தக் காலத்தில் யாரையும் நம்ப முடியாதுன்னுதான் எனக்குத் தோணிச்சு... அவங்க சேர்றதுக்கு ஆறேழு மாசம் முன்னாலதான் நரேந்திரன் சாரு இங்கு வந்தாரும்மா... ம்ம்... அவரோட நல்ல நேரம் உசந்துட்டாரு... நந்தகுமார் சாரோட கெட்ட நேரம்... பாவம்... கவிழ்ந்துட்டாரு'' என்றான் தங்கவேலு...

பொங்கி வந்த வேதனையை அடக்கிக் கொண்டு கேட்டாள் அவள்.

''இதுக்கு முன்னால் நரேந்திரன் சார் எங்கே வேலை பார்த்தாராம்...''

''யாருக்குத் தெரியும்மா... நரேந்திரன் சாரோட மாமா பெரிய முதலாளியோட டிரைவரா இருந்தவர்னு கேள்விப் பட்டேன். அவரோட சிபாரிசில் தான் இங்கே வேலைக்கு வந்திருக்கிறாராம். தாய் மாமன் நம்பிக்கையானவர் என்

மதிப்பில் தான் இந்த வேலையைக் கொடுத்திருக் காங்க...''

''அப்படியா... பார்த்தால் பணக்காரராய் தெரிகிறார் அத்தனை வசதியானவரா தங்கவேலு.''

''ஆமாம்மா... சொந்த ஊரில் நிலபுலன் இருக்கிறதாம்... நான் பணக்கார வீட்டுப் பிள்ளைன்னு நரேந்திரன் சார் அடிக்கடி சொல்லுவார்... நான் வேலை பார்த்துதான் வாழ ணும்னு இல்லை... எல்லாம் ஒரு பொழுது போக்கிற்கு தான் இந்த வேலைன்னு பேசுவாரு... அவர் ராஜா வீட்டுக் கன்னுக்குட்டிம்மா... கைநிறைய பணம்... அதை வட் டிக்கு விட்டுப் புரட்டுகிறார்... ஆங்... நம்ம ஆளுங்க வர ஆரம்பிச்சாச்சு. சரி... நான் என் வேலையைப் பார்க் கிறேன்...'' என்று அங்கிருந்து நகர்ந்தான் ப்யூன்...

அவன் சொன்ன விஷயம் தான் நெருடியது. பணக்கார னாமே... பணக்காரனுக்கு ஏன் திருட்டு புத்தி... வேலை பார்த்துதான் வாழணும்னு இல்லை என்கிறவனுக்கு வரு மானமே அதிகப்படி ஆயிற்றே. எதற்கு ஆபீஸ் பணத்தில் கை வைக்க வேண்டும். இதையெல்லாம் யோசித்தால்... நரேந்திரன் சொல்வது எல்லாம் வெறும் 'கப்ஸா' என்று தான் தோன்றுகிறது. திருட்டுத்தனம் பண்ணுகிறவனுக்கு 'கப்ஸா' விடச் சொல்லியாத் தர வேண்டும்...

இப்போது உண்மை வெட்ட வெளிச்சமாகி விட்டது... அதை சரத்சந்திரனிடம் சொல்லி...

ஊகூம்... அவன் நம்ப மாட்டானே... நந்தகுமாரின் தங்கை என்ற கோணத்தில் பார்ப்பவனுக்கு என்ன சொல்லி ரிய வைப்பது... சாட்சி இருக்கிறதா... எவிடென்ஸ் ருக்கிறதா... நரேந்திரன் தான் குற்றவாளி என்பதற்கு ான ஆதாரம் இருக்கிறது... ஏன்... உன் அண்ணா மீது



தவறே இல்லை என்று சாதிக்க... நீயே பணத்தை எடுத்த ஒளித்து வைத்து விட்டு... நரேந்திரன் மீது பழியைப் போட்டிருக்கலாம் இல்லையா... இல்லை... உன் அண்ண னின் சுரண்டல் புத்தி. உனக்கிருந்து... அவனை மாதிரியே களவாடல் செய்திருப்பாய் என்று கூடச் சொல்லலாம்... இப்படி என்னையே திருப்பிக் கேட்டால்... வேண்டாம். அது நரேந்திரனுக்கு கொண்டாட்டமாகி விடும்...

அதைவிட... சரியான நேரம் பார்த்து அவனைக் கையும் களவுமாய் பிடித்து... அவனுடைய முகத்திரையைக் கிழித்துக் காட்ட வேண்டும்... அதுதான் அதிகம். அது வரை பொறுமை வேண்டும்...

பெருமூச்சு விட்டாள் சாதனா... யார் குற்றவாளி என்று தெரிந்த பின்பும் மௌனமாய் இருக்க வேண்டி இருக் கிறதே... உள்ளுக்குள் புழுங்கினாள்.

''குட்மார்னிங்... சார்'' சுமதியின் குரல்... தொடர்ந்து, ''குட்மார்னிங்...'' என்ற குரல் அவளை அதிர வைத்தது.

சரத்சந்திரன் வந்து விட்டானா...

''அவசரமாய் 'குட்மார்னிங்' என்று சொல்ல வாயெ டுத்த போது... அவளைக் காணாதது போல கடந்து சென் றான் அவன்...

எரிச்சலாய் வந்தது சாதனாவிற்கு.

அழுத்தக்காரன்... உதாசீனமாய் செல்லும் அவனை... பற்களைக் கடித்தாள்.

அப்போதே ஓடிப்போய் 'ஏய்... மிஸ்டர்... என்னவோ, தப்பு செய்தவனைத் தண்டித்து விட்டதாய் கொக்கரித் தாயே. உன் தவற்றைச் சுட்டிக் காட்டட்டுமா...' என்று கத்த வேண்டும் போல ஒரு வேகம்... கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்...

சாதனா... அடங்கு... நிதானம் வேண்டும்... வேகம் கூடாது. விவேகம் முக்கியம்... தப்பு செய்தவன் அதை ஒப்புக் கொள்ளப் போவதில்லை... அதிலும்... இந்த நரேந்திரன் ஒரு விலாங்கு மீன்... அவனை வலை போட்டுத் தான் பிடிக்க வேண்டும்... அவன் ஒரு குள்ள நரி... கண்ணி வைத்துத் தான் சிக்க வைக்க வேண்டும்...

லஞ்ச ஒழிப்பு அதிகாரிகள் செய்வது போல கையும் களவுமாய்... ஏற்கனவே சிபாரிசில் வந்தவன் வேறு... முதலாளியின் நம்பிக்கையை சம்பாதித்து வைத்திருக்கிறான்...

அவசரப்படக்கூடாது... அவசரப்பட்டால் காரியம் கெட்டு விடும். அப்புறம் அத்தனை முயற்சியும் வீண்தான்...

சரத்சந்திரனைப் பார்க்க மனமில்லை என்றாலும்... ஒரு முக்கியமான 'ஸ்டேட்மெண்ட்டில்' கையெழுத்து வாங்க வேண்டியிருந்ததால் அவனது அறையை நோக்கி நடந்தாள்.

அவன் வெகு மும்முரமாய் 'லாப் டாப்'பில் தன் பார்வையைப் பதித்திருந்தான்.

'மே ஐ கம் இன்' என்று அவள் கேட்டது காதில் விழாத அளவு... வேலையில் ஆழ்ந்திருந்தான்.

அவனது கவனத்தை எப்படி ஈர்ப்பது... யோசனையுடன் அவனையே பார்த்தவளுக்கு லேசாய் திகைப்பு...

அந்தத் திகைப்பிற்கு காரணம் அவனது வசீகரத் தோற்றம். அமர்ந்த நிலையில் அவனது விரிந்த மார்பும்... ...டமான தோள்களும் வெகு கவர்ச்சியாகக் காட்டின... அந்த ...ந்தன நிற சட்டை அவனுக்கு வெகு பொருத்தமாய்... எடுப் ...ய் இருந்தது.. முகத்தில் ராஜகளையும்... கண்களில்



தெரிந்த கூர்மையும் எந்தப் பெண்ணின் மனதையும் சலனப்படுத்தி விடும்தான்...

இவனது புன்னகையில் எந்த மங்கையும் மயங்கி விடுவாள் என்பது நிச்சயம்...

ஒருவேளை... நந்தண்ணா விஷயம் மட்டும் குறுக்கீடாய் இல்லாதிருந்தால்... நானும் அப்படித்தானோ...

இவனது வசீகரத் தோற்றத்தில் வசம் இழந்திருப்பேன் போலும்... புன்னகையில் புளாங்கிதம் அடைந்திருப்பேன்.

'ஐ லவ் யூ' என்றால் ஐஸ்கிரீமாய் கரைந்திருப்பேனோ என்னவோ.

அடுத்த கணமே அவள் தலையை உதறிக் கொண்டாள். அய்யா... இவனையா... என் குடும்பத்தின் ஒட்டு மொத்த ஆனந்தத்தை சீக்குலைத்தவனைப் பார்த்தா... மை காட்! என்னவொரு நீச்சமான நினைப்பு எனக்கு...

நந்தண்ணா விஷயம் இல்லாதிருந்தால் இவனை சந்தித்திருக்கவே முடியாதே... அப்புறம் உருகல் ஏது... கரைதல் ஏது... சே... எதற்கு அசட்டு பிசட்டு எண்ணங்கள் தோன்றுகிறதோ... கண்றாவி... எதற்காகவோ நிமிர்ந்த சரத்சந்திரன் சிலை மாதிரி நின்றிருக்கும் சாதனாவைப் பார்த்தான்.

வியப்பில் புருவங்கள் மேலேறின...

''என்ன விஷயம்...'' என்று அவன் கேட்டதும் சுதாரித்துக் கொண்டாள் அவள்.

வெட்கம் அவளைப் பிடுங்கித் தின்றது... சே... அவன் என்ன நினைத்தானோ... தான் அப்படி வெறித்துப் பார்த்ததை... உடம்பு முழுக்கக் கூசியது.

''வந்த விஷயத்தை சொல்... சாதனா. எனக்கு நிறைய வேலை இருக்கிறது... டைம் இஸ் பிளாட்டினம் எனக்கு... 'சட்'டென்று சொல்... டோன்ட் வேஸ்ட் மை டைம்...'' கறாராய் ஒலித்தது அவனது குரல்.

தான் கொண்டு வந்த ஸ்டேட்மெண்டை அவன் முன் வைத்தாள் சாதனா.

அதை ஒரு தரம் பார்த்துவிட்டு தன் கையெழுத்தைப் போட்டான் சரத்சந்திரன்...

திருத்தமான கையெழுத்து... அதை எழுதிய விரல் களின் அமைப்பும் அம்சமாய்... நீண்ட விரல்கள்... சிவந்திருந்த... சுத்தமான நகங்கள்... ஆரோக்கியத்தின் அடையாளமாய்...

அழகும்... ஆண்மையும் சேர்ந்து அமைவது அபூர்வம் தான். அது அவனுக்கு இருந்தது.

இவனை மணப்பவள் யாரோ... அவளுக்கு பெருமித மாய் இருக்கும்தான்... இவனருகே தலை நிமிர்ந்து கர்வத்துடன் நடப்பாள்... இந்த ஆணழகன் என்னவர் என்று...

அதே நேரம் மனக்குரல் இடித்தது.

''அடி அசடே... நினைத்திருந்தால் அது நீயாக இருந் திருப்பாய்... உன்னை விரும்புகிறேன் என்று அவன் உன்னிடம் சொல்லியும் மறுத்து விட்டு... அந்த வாய்ப்பை இழந்து விட்டாயே...''

அவனது குரல் கனைப்பு அவளைத் தட்டி எழுப்பியது. தலில் இந்த மனக்குதிரைக்கு கடிவாளம் போட்டு டக்க வேண்டும்... குருட்டுத்தனமாய் ஏதேதோ னத்து... கன்னா பின்னாவென்று அலைகிறது.



''இது ஒன்றுதானே.. வேறில்லையே... ஏனென்றால் அவசர வேலையாய் இருக்கிறேன்... இடையில் வந்து 'டிஸ்டர்ப்' செய்ய வேண்டாம். புரிந்ததா...'' என்றவன் மறுபடியும் 'லாப் டாப்'பில் ஆழ்ந்தான். அதாவது... நீ போகலாம் என்று மறைமுகக் குறிப்பு...

அவனது உதாசீனப் போக்கும்... அலட்சியமும் அவளை இம்சித்தன... உள்ளத்தில் வலித்தது... ஏன்... எதற்கு என்று புரியவில்லை... அவமானம் என்ற நினைப்பாக இருக்கலாம்.

அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு திரும்பி நடந்தாள்.

''ஒன்மினிட் மிஸ் சாதனா'' அவனது குரல் தடுத்து நிறுத்த... அவனைப் பார்த்தாள்.

''உன் 'டிடெக்டிவ்' வேலை எதுவரைக்கும் வந்திருக் கிறது என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா.'' சொல்லி விடலாமா என்று எழுந்த உத்வேகத்தை தலையில் குட்டி அடக்கினாள்.

''இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாது. இதை மட்டும் சொல்வேன்... மர்மத்தின் ஒரு முனை மட்டும் கிடைத்திருக்கிறது. அதை வைத்து முழுசையும் கண்டு பிடித்து விடுவேன்... கண்டுபிடித்ததும் உங்களுக்கு சொல்கிறேன்...'' என்றாள் உறுதியான குரலில்.

''குட்... ஆல் தி பெஸ்ட்...''

அவனது குரலில் தெரிந்தது நக்கலா... ஏளனமா... ஏதோ... அவளுக்கு எரிச்சல் ஊட்டியது.

இருக்கட்டும்... முடிவு தெரிய வந்த பிறகு அவன் தலை குனியப் போவது நிச்சயம்...

அதுவரைக்கும் பழிப்பாய் பேசட்டும்... ஏளனம் செய்யட்டும்.

அதுவரைக்கும் அவனது நக்கல் பேச்சையும்... உதா சீனப் போக்கையும் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும். வேறு வழியில்லை...

சாதனா... பொறுமை... பொறுமை...

மனசுக்குச் சொல்லிக் கொண்டாள். சாதனா.

அங்கே நிற்கவும் பிடிக்காமல் அங்கிருந்து விரைந்தாள்.




பொற்றாமரைக் குளத்தின் மேற்படியில் அமர்ந்திருந் தனர் தோழிகள் இருவரும்.

அம்மனை தரிசித்து விட்டதில் உள்ளத்தில் நிறைந்து தளும்புவது போலப் பரவச உணர்வு.

அர்ச்சனை குங்குமத்தின் தாழம்பூ மணம் மெய்மறக்க செய்தது... அமமாவிற்கு ரொம்பவும் பிடிக்கும்... வாங்கிக் கொண்டு போக வேண்டும்...

''என்னடீ... எதுவும் பேசாமல் உட்கார்ந்திருக்கே... அப்படி என்ன யோசனை...'' மீராவின் கேள்வியில் கவனம் திரும்பியது.

''அழைத்து வந்தது நீ... நீதான் சொல்ல வேண்டும்... ந்ததும் கோவிலுக்குப் போகலாம் வா என்று அழைத்



தாயே... ஏதாவது சொல்ல நினைக்கிறேன்னு படுகிறது. என்ன விஷயம் மீரா... அண்ணாவைப் பத்தியா...'' என்று வினவினாள் சாதனா.

''ஆமாம்... உன் அண்ணா கிட்டத்தட்ட 'நார்மலுக்கு வந்தாச்சு... சாதனா.... அவர்கிட்டே மெல்லப் பேசிப் பார்த் தேன்... ஒரேடியாய் கேட்காமல் அப்பப்போ கிரகித்ததில் அவர் எந்தத் தவறும் செய்யவில்லை என்று தோன்று கிறது. செய்யாத தப்புக்கு தண்டனையா என்ற வேதனை யில் வந்த 'டிப்ரஷென்' தான் காரணம். உன் அண்ணா ரொம்ப 'சென்ஸிடிவ்' டைப் வேறு... அதுதான் அவருடைய மனச்சிதைவுக்குக் காரணமே...''

''எனக்கும் அதேதான் பட்டது மீரா... ஆரம்பத்தி லிருந்து அவன் தப்பு செய்யவில்லை என்றுதான் நம்பி னேன். ஆனால் ஆபீஸில் எல்லோரும் அவனைக் குற்ற வாளியாகத் தான் நினைக்கிறார்கள்... மீரா... யாரோ செய்த குற்றத்திற்கு... பாவம்... நந்து அண்ணா பலியாடாகிப் போனது பரிதாபம்... அந்த 'யாரோ' யார் என்றும் கண்டு பிடித்து விட்டேன் மீரா...''

''யார் அது... சாது...''

''நரேந்திரன்னு ஒருத்தன்... பணத்தை அப்பப்போ பெருச்சாளி மாதிரி சுரண்டியிருப்பது கன்ஃபர்மா தெரிந்து விட்டது... இந்த விஷயம் அண்ணாவிற்குத் தெரியுமா... இல்லை... தெரியாமலே ஏமாற்றப்பட்டிருக்கிறானா என்றுதான் புரியவில்லை. அப்புறம் எங்க எம்.டி... மிஸ்டர் சரத்சந்திரன் அண்ணாவை கையும் களவுமாய் பிடித்ததாய் சொல்கிறார்.. அப்போது நந்தண்ணாவிடம் அம்பதாயிர இருந்ததாம். ஏதோ வீட்டுமனை வாங்க வைத்திருந்தத சொன்னானாம். இது பத்தி அவன் எங்களிடம் எதுவ

சொல்லவில்லை மீரா... அது ஆபீஸ் பணம்தான் என்கிறார் அந்த எம்.டி... அங்கேதான் இடிக்கிறதுடீ... இது பத்தி அண்ணா ஏதும் சொன்னானா...''

''ஊகூம்... எதுவும் சொல்லவில்லை...''

''சரி... நரேந்திரனைப் பத்தி ஏதாவது...''

''அவன் பெயரையும் சொல்லவில்லை சாது... யாரோ ஏமாத்திட்டான்... என்னால் என் குடும்பத்திற்கு தலை குனிவுன்னு புலம்புகிறார் உன் அண்ணா... இந்த விஷயத்தால் அவரது காதலும் முறிந்து விட்டதாமே...''

சாதனா திகைத்துப் போனாள்... காதலா...

''இதென்ன புதுக் கதை!''

''அட... இந்த விஷயம் உனக்குத் தெரியாதா... உன் அண்ணா ஒரு பெண்ணைக் காதலிக்கிறார்...''

''யாராம் அது...''

''யாரோ சுவாதியாமே... உனக்குப் பரிச்சயமானவளா சாதனா...''

சுவாதியா... அலுவலகத்தில் அந்தப் பெயரில் யாரும் கிடையாது... பின்னே...

உதட்டைப் பிதுக்கினாள் அவள்.

''கல்லூரியில் அவனுடன் படித்த மாணவியாம்... வேலை ஸ்திரம் ஆனதும் வீட்டில் சொல்லலாம் என்று நினைத்தாராம். அதற்குள் இந்தக் களேபரம் நடந்து போனதால் மறுநாளே அவள் போன் பண்ணி ஒரு பிராட்டை மணக்க தனக்கு விருப்பம் இல்லை என்று சொல்லி விட்டாளாம்.''

''அவளுக்கு எப்படித் தெரிந்தது... அத்தனை சீக்கிரத் ம்.''



''அவளது அப்பா பெரிய கிரிமினல் லாயராமே... எங்கே என்ன தப்பு நடந்தாலும் அவர் காதுக்கு வந்து விடும் போல... ஏற்கனவே மனதில் அடிபட்டவருக்கு... இதுவும் ஒரு பேயடியாய் விழ... பாவம் சித்தம் கலங்கி விட்டார்.

''மை காட்! இதெல்லாம் தெரியாமல்... சே... என்ன மாதிரி காதல் அது... நம்பிக்கை இல்லாமல் இப்படியா அவசர முடிவு எடுப்பாள் ஒருத்தி... இந்த மாதிரி நம்பிக்கை இல்லாத ஒருத்தியை காதலிப்பதே தப்பு என்பேன்... ஏன் மீரா... அண்ணாகிட்டே இதைப் பத்தி பேசலாமா... மறுபடியும் கிளறினால் பழைய மாதிரி சுருண்டு விட மாட்டானே...!''

அதைக் கேட்டு தோழி சிரித்தாள்.

''நான்தான் சொன்னேனேடீ... அவர் 'நார்மல்' நிலைக்குத் திரும்பியாச்சு என்று... ஆனா... உன் அண்ணாவிடம் நீ பேசும்போது... அவர் மீது உனக்கு நம்பிக்கை இருக்கு என்று அவருக்கு தெரிய வைக்கணும்... சந்தேகத்துடன் கேட்கிற மாதிரி இருக்கக் கூடாது... நீ தப்பு ஏதும் செய்யவில்லை... அது எனக்கு நல்லா புரிகிறது என்கிற மாதிரி பேச வேண்டும்... புரிகிறதா... அதைச் சொல்லத்தான் உன்னை இங்கு அழைத்து வந்தேன்'' என்றாள் மீரா.

''எனக்குப் புரிகிறதுடீ... அப்புறம் இன்னொரு விஷயம். என் அம்மாவுக்கு தன் செல்லப் பிள்ளையைப் பார்க்க வேண்டுமாம். வரலாமா என்கிறாள். என்ன சொல்லட்டும்...'' என்று கேட்டாள் சாதனா.

''ஓ... தாராளமாய் வரலாம். ஆனால் பிள்ளையைப் பார்த்த சந்தோஷத்தில் அழக்கூடாது. அம்மா பாசத்தில் அழுகிறாள் என்று உன் அண்ணாவுக்கு புரியாது... இந்த கதிக்கு வந்து விட்டேன் என்ற வேதனையில் அழுகிறாள்

என்று நினைத்து அவர் மரவட்டையாய் சுருண்டு விடுவார்... வந்து சாதாரணமாய் பேசிவிட்டுப் போகட்டும்...''

''சரி... இன்னும் எத்தனை நாள் அவர் இங்கு இருக்க வேண்டும் மீரா...''

''சொல்கிறேன்... முதலில் உங்க அம்மா... அப்பாவிடம் எப்படி நடந்து கொள்கிறார் என்பதை நான் 'அப்சர்வ்' பண்ணனும்... ஏன்னா... அவரைப் பெரிசாய் பாதித்திருப்பது... பெற்றவர்களைத் தலைகுனிய வச்சிட்டோம் என்பதுதான். அப்புறம் சாது... அவர்களிடமும் சொல்லிவை... அவரை 'பேஷண்டா' பார்க்கக் கூடாது... நடந்த விஷயத்தை பெரிசு படுத்திப் பேசவும் கூடாது என்று... நடந்து போன சம்பவத்தால் அவர்கள் பெரியதாய் பாதிக்கப்படவில்லை என்பது போல காட்டிக் கொள்ளவேண்டும். என்ன...

''அப்படியே டாக்டர்ஜி... சொல்ல வேண்டியதெல்லாம் சொல்லியாகி விட்டதா... இனி என் அண்ணாவைப் பார்க்க அனுமதி உண்டு தானே...'' பரிகாசக் குரலில் அவள் கேட்க...

அவள் அடிப்பது போல கையை ஓங்கினாள்.. இருவரும் சிரித்துக் கொண்டே எழுந்தார்கள்.

''ஒரு நிமிஷம் மீரா... தாழம்பூ குங்குமம் வாங்கிக் கொண்டு... அப்படியே உண்டியலில் பணம் போட்டு விட்டு வந்து விடுகிறேன்...'' என்றாள் சாதனா.

''நானும் வருகிறேன்'' என்று உடன் சென்றாள் தோழி...

அம்மா ஆசையாய் செய்து அனுப்பிய திண்பண்ட வகைகளை ருசி பார்த்துக் கொண்டிருந்தான் நந்தகுமார்.

அவனைப் பார்க்கையில் உள்ளத்தில் மகிழ்ச்சி தளும்பியது.



தொய்ந்து கிடந்த நிலைமாறி... பழைய மாதிரியே தெம்பாய் காணப்பட்டான் அவன்... உடம்பும் கூட கொஞ்சம் சதை கூடித் தெரிந்தது. முகத்தில் தெளிவு வந்த மாதிரியும் இருந்தது. பஞ்சடைந்து... சூனியப் பார்வை பார்த்த கண்கள்... இப்போது பல்பு வெளிச்சம் கண்டது போல ஒளிர்ந்தன...

மொத்தத்தில் பழைய நந்தண்ணாவைப் பார்த்த மாதிரி இருந்தது. என்ன... பழைய கலகலப்புதான் இல்லை. இந்த மட்டும் மாறினானே... அது போதும்.

அதற்கு... மீராவிற்கு தான் நன்றி சொல்ல வேண்டும். விரைவிலேயே அவனை 'நார்மலு'க்கு கொண்டு வந்து விட்டாளே...

வெறும் 'நோயாளி' என்ற கண்ணோட்டமின்றி... தன் உறவாய் நினைத்து கரிசனத்துடன் பார்த்துக் கொண்ட அவளுக்கு என்ன செய்தாலும் தகும்... இந்த நன்றிக்கடனை பணத்தால் தீர்த்து விட முடியாது. அதற்கு மேல்... பார்க்கலாம்... அதற்கு ஒரு சந்தர்ப்பம் வாய்க்காமலா போகும்...

''சாதனா...'' அண்ணாவின் அழைப்பில் கவனத்தை அவனிடம் கொண்டு வந்தாள்.

''அம்மாவும்... அப்பாவும் எப்படி இருக்கிறார்கள்... அவர்களைப் பார்க்க வேண்டும் என்று தோன்றுகிறது. அம்மா கையால் சாப்பிட்டு எத்தனை நாளாச்சு... என் மேல் அவர்களுக்கு வருத்தம் இல்லையே...''

''என்னண்ணா... உன் மேல் அவர்களுக்கு என்ன வருத்தம்... உன்னைப் பார்க்காததில்தான் அவர்களுக்கு வருத்தமே... தெரியுமா...''

''இல்லை... சாது... நான் தப்பு செய்து விட்டேன் என்ற கோபம் அவர்களுக்கு... அதான் என்னை வந்து பார்க்கவும் இல்லை.''

''அதெல்லாம் ஒரு மண்ணும் இல்லை... பெத்தவங்களுக்கு ஒரு நாளும் பிள்ளைகள் மீது கோபம் வராது. இங்கே மீரா உன்னை அருமையா பார்த்துக் கொள்கிறாள் என்று நிம்மதியாய் இருக்கிறார்கள். அவர்களுக்கு மட்டும் என்ன ஆசையில்லையா... நான் தான் இப்போ வேண்டாம். அடுத்த தடவை வந்தால் போதும்னு சொல்லிவிட்டு வந்தேன். அடுத்த தடவை கண்டிப்பாய் வருவார்கள்... பாரேன்...'' அவனது கையைப் பற்றி அழுத்தினாள் தங்கை.

''உன் அண்ணாவிற்கு என் முகத்தையே பார்த்து சலித்துவிட்டதோ என்னவோ... சாது... அதுதான் இப்படிச் சொல்கிறார்...'' எலுமிச்சை சர்பத்துடன் வந்த மீரா பரிகாசம் செய்வதுபோல சொல்ல...

''நோ... நோ... அப்படியொன்றும் இல்லை... மீரா... உங்களுடன் பேசிக் கொண்டிருப்பதில் எனக்கு பொழுது போவதும் தெரிவதில்லை... எப்படிச் சலிக்கும்...'' என்றான் நந்தகுமார்.

''அய்யோ அண்ணா... மீராவுக்கு என் வயசுதான். இந்த 'ங்க' மரியாதை வேண்டாமே... என்னவோ போல் இருக்கிறது'' என்றாள் தங்கை.

''நன்றாக சொல் சாதனா... இப்படி... வாங்க... சொல்லுங்கன்னு பேசுகையில் நான் கிழவியாகி விட்டேனோ என்று தோன்றுகிறது. கண்ணாடியில் அடிக்கடி பார்த்துக் கொள்கிறேன்... நரை... திரை... மூப்பு எல்லாம் வந்து விட்டதோன்னு... நல்ல வேளை... அப்படி ஏதுமில்லை...'' குறைபடுவது போல் வேடிக்கையாய் சொன்னாள் மீரா.

''அதெல்லாம் இல்லை... எப்படி உரிமை எடுத்துக் ...ாள்ள முடியும் என்ற தயக்கம் தான்...''



''ஓகோ... அப்படியென்றால்... என்னை தூரமாய் தள்ளி வைக்கும் எண்ணமாக்கும். இந்தக் கலியுகத்தில் நல்லதுக்கு காலமில்லைப்பா... ஈசுவரா...'' வானத்தைப் பார்த்து முறையிட....

நந்தகுமாருக்கு சிரிப்பு வந்துவிட்டது.

அந்தச் சிரிப்பைப் பார்த்ததும் கண்கள் ஈரமாயின சாதனாவிற்கு... நெஞ்சம் விம்மியது.

இந்தச் சிரிப்பை மறுபடியும் அவன் முகத்தில் பார்க்க மாட்டோமா என்று ஏங்கியது அவளுக்குத்தானே தெரியும்.

''சரி... அண்ணனும் தங்கையும் பேசிக் கொண்டிருங்கள். நான் போய் டின்னருக்கு ஏற்பாடு செய்கிறேன்'' என்று மீரா எழுந்து சென்றாள்.

அவள் சென்றதும் தங்கையின் பக்கம் திரும்பி சொன்னான் நந்தகுமார்.

''உன் சிநேகிதி ரொம்ப நல்லவள் சாதனா... என்ன இதயமாய்... மனசை வருடித் தருகிற மாதிரி பேசுகிறாள் தெரியுமா... உலகமே வெறுத்துப் போய் கிடந்த என்னை தட்டியெழுப்பி... உலகம் இத்துடன் முடிந்து விடவில்லை. ''வேக் அப்... அண்ட்... சியர் அப்'' என்று எனக்கு உற்சாக 'டானிக்' கொடுத்து... என்னை மறுபடியும் மனுஷனாக்கியதை நினைக்கும்போது... ரியலி... ஷி இஸ் கிரேட். என்னைத் தெளிவாக்க அவள் பட்ட பாடு... சொல்ல வார்த்தைகளே இல்லை... சாது... அவளோட லைஃப் ஹிஸ்டரியை அறிந்தபோது... என்னோட காதல் தோல்வி அவளோட சோகத்திற்கு முன் சுண்டைக்காய் என்று பட்டது. தெரியுமா... நான் என் சோகத்திலிருந்து மீண்டு வரவில்லையா... ஆண் சிங்கம் நீங்கள்... உங்களால் முடியும் என்று சொல்லி நிமிரச் செய்ததும் அவள் தான்.

உன் சிநேகிதிக்கு எப்படி நன்றி சொல்வது என்று புரியாமல் தவிக்கிறேன் சாது...''

''எனக்கும் பெருமையாக இருக்கிறதண்ணா... நீ வேதனையிலிருந்து மீண்டது மட்டுமல்ல... எனக்கு ஒரு நல்ல சிநேகிதியின் துணை கிடைத்ததிலும் தான்... அது இருக்கட்டும்... உன்னிடம் ஒன்று கேட்கட்டுமா... உன் தங்கை நான்... என்னிடம் கூட உன் காதல் விஷயத்தைச் சொல்லாமல் மறைத்து விட்டாயே அண்ணா...''

''சொல்ல வேண்டும் என்று நினைப்பேன்... ஆனால் வேலை நிரந்தரம் ஆகட்டுமே... அப்புறம் சொல்லிக் கொள்ளலாம் என்று தோன்றும்... அப்படியே தள்ளிப் போய் விட்டது. ப்ச்சு... இப்போ அது போயே போச்சு. அந்தப் பேச்சு வேண்டாமே சாதனா...''

''ஓ.கே. பேசவில்லை. ஆனால் ஒரு உண்மையை மட்டும் உன்கிட்டே இருந்து தெரிந்து கொள்ள வேண்டும் அண்ணா. அதை சொல்லும் மனநிலையில் நீ இருக்கிறாய் தானே... உன்னிடம் அந்த அம்பதாயிரம் எப்படி வந்தது. அது ஆபீஸ் பணம் இல்லை. உன் பணம் என்றாயாமே. நீ எந்த நிலைமையிலும் பொய் சொல்ல மாட்டாய் என்று எனக்குத் தெரியும். அதான் கேட்கிறேன்... உனக்கு யார் மீது சந்தேகம்... சொல்லண்ணா.''

''தெரியல்லே சாதனா... ஆனா... நரேந்திரன்னு ஒருத்தன்... என் ஆபீஸில் இருக்கிறான். பாங்கில் பணம் போடுவது... எடுத்து வருவது அவனுடைய வேலை... அதில் கொஞ்சம் தில்லு முல்லு நடந்திருப்பது எனக்கு தெரிய வந்தது அதைப்பற்றி அவனிடம் கேட்டேன்... தோ மழுப்பலாய் பதில் வந்தது... இது எம்.டி.யின் துக்கு போகக் கூடாது என்றால்... அந்தக் கணக்கை சரி



பண்ணு. இல்லையென்றால் இது விஷயமாய் எம்.டி. வரை போக வேண்டி வரும் என்றேன். அவனைக் கடுமையாகவும் பேசவில்லை. ஏன்னா... அவனை ஒரு நல்ல நண்பனாக நினைத்துப் பழகினேன்... அவனை நம்பினேன்... அந்த நம்பிக்கையை வீணாக்கி விட்டானே என்ற ஆதங்கம் எனக்கு... அப்போத்தான்... ஒரு நல்ல இடத்தில் வீட்டு மனைகள் 'ரீசனபிள்' விலையில் கிடைக்கிறது என்று ஆபீஸில் பேச்சு வந்தது... முதலில் பத்தாயிரம் கொடுத்து பதிவு செய்து கொள்ள வேண்டும்.. மீது பணத்தை 'டைம்' கேட்டுக் கொண்டு கட்டிவிட்டு 'ரிஜிஸ்ட்ரேஷன்' பண்ணிக் கொள்ளலாம் என்றார்கள்.''

''இந்த விஷயத்தை உனக்கு சொன்னது யார்.''

''ப்யூன் தங்கவேலுதான்... இந்த மாதிரி விஷயங்களை எல்லாம் நரேந்திரன் வந்து சொல்வது வழக்கம். அவன்தான் தங்கவேலுவிடம் சொல்லியிருக்க வேண்டும். ஆபீஸில் இருந்தவர்களில் ஆறு ஏழு பேர் பணத்தைக் கட்டத் தயாரானதும்... நானும் தைரியமாய் பத்தாயிரம் கட்டினேன்... அடுத்தக் கட்ட பணத்திற்கு பாங்கில் 'லோன்' வாங்கலாமா என்று யோசிக்கையில் தான் நரேந்திரன் எனக்குப் பணம் தருவதாய் சொன்னான். இது ஒரு நல்ல சந்தர்ப்பம்... சீக்கிரம் பணத்தைக் கட்டி வீட்டு மனையை 'ரிஜிஸ்டர்' பண்ணிடு... ஆனா பாங்க் 'லோன்' என்றால் உடனே கிடைக்காது... அட்ரஸ் ப்ரூஃப்... சாலரி ஸ்டேட்மெண்ட்... அது.. இது என்று லோலோன்னு அலைய வைத்து விடுவார்கள்... நான் உனக்குப் பணம் தருகிறேன்... ஆனால் நான் கொடுத்தேன் என்று யார்கிட் டேயும் மூச்சு விடக்கூடாது. ஏன்னா... வீட்டு மனை வாங் விரும்பும் மத்தவங்களும் எனக்குக் கொடுன்னு என்னை

நச்சரிக்க ஆரம்பித்து விடுவார்கள். என்னிடம் அவ்வளவு பணம் இல்லை நந்து... உனக்கு மட்டும்தான் கொடுக்க முடியும்'' என்றான் அவன்.

''அந்தப் பணத்தைக் கொண்டு அவன் எடுத்ததை க்ளியர் பண்ணியிருக்கலாம் இல்லையா...''

''நானும் அதேதான் கேட்டேன்... ஆனால் அவன் அதைப் பத்தி கவலைப்படாதே நந்து... அதற்கும் ஏற்பாடு பண்ணியாச்சு. சீக்கிரம் அதைக் கட்டி விடுவேன். ஆனா... உனக்கு இப்போ இது அவசியம்... பணம் கட்டா விட்டால் 'ஸைட்' கைவிட்டுப் போய் விடும்... பரவாயில்லையா'' என்றான்... வீட்டு மனை வாங்க வேண்டும் என்ற உத் வேகத்தில்... அப்போது அவன் சொன்னதும் சரியாகவே பட்டது... சாதனா...''

''இருக்கட்டும்.. இது பத்தி நம் வீட்டில் சொல்லி இருக்கலாமேண்ணா. அப்பா பணத்திற்கு ஏதாவது ஏற்பாடு பண்ணியிருப்பார் இல்லையா...''

''அதுதான் கூடாது என்று நினைத்தேன்... சாது... அப்பா கிட்டே பணம் வாங்கி 'சைட்' வாங்கப் பிடிக்க வில்லை. என் உழைப்பில் வாங்க வேண்டும். அதை அப்பா பேரில் ரிஜிஸ்ட்ரேஷன் பண்ணிக் கொடுக்கணும்... அப்பாவுக்கும் அம்மாவிற்கும் 'சர்ப்ரைஸ்' தரணும்னு ஏதேதோ ஆசைப்பட்டேன்... ஆனால்... எல்லாம் தலைகீழ் ஆகிவிட்டது...'' அவனது குரல் உடைந்தது போல ஒலித் தது. அவனது கரத்தைப் பற்றி மெல்ல அழுத்தினாள் சாதனா.

''அண்ணா... நம் அப்பா அம்மாவிற்கு சொத்து... நிலம் மக்கியமில்லை... நம்ம சந்தோஷம் தான் முக்கியம். ந்ததெல்லாம் இரண்டாம் பட்சம்தான். என் பிள்ளை



தப்பு செய்யவே மாட்டான்... நான் அப்படி வளர்க்க வில்லைன்னு தலை நிமிர்ந்து சொன்னார் தெரியுமாண்ணா. அதைவிடவா அவருக்கு சொத்து முக்கியம்... விடு... நீ அந்த அம்பதாயிரம் ரூபாயை நரேந்திரனிடம் இருந்து வாங்கியதை உன் எம்.டி.யிடம் ஏன் சொல்லவில்லை.''

பெருமூச்சு விட்டான் நந்தகுமார்.

''திடீர் என்று எம்.டி. பாங்க் பாலன்ஸ் எல்லாம் 'செக்' பண்ணனும். அடுத்த மாதம் 'ஆடிட்டிங்' என்றதும் பதறிப் போனேன்... அதை நான் எதிர்பார்க்கவும் இல்லை... பாஸ் புத்தகங்களையும்... பாங்க் ஸ்டேட்மெண்ட்களையும் அலசி பார்த்துவிட்டு 'பிராட்' நடந்திருக்கிறது... கொடுத்த பணத்திற்கு சரியான கணக்கில்லை என்றார் எம்.டி.''

''அப்போ... நரேந்திரனைக் காட்டிக் கொடுத்திருக்க லாமே...''

''அவன் அவகாசம் கேட்டிருந்தான். பாவம்... காட்டிக் கொடுக்க வேண்டாமே என்று நினைத்தேன். நானும் எம்டியிடம் வாதாடிப் பார்த்தேன்... நான் எந்தத் தப்பும் பண்ணவில்லை. கொடுக்கப்பட்ட பணத்தை அப்படியே நரேந்திரனிடம் கொடுத்து விடுவதுடன் என் வேலை முடிந்தது என்றேன்.''

''அதற்கு அவர் என்ன சொன்னார்.''

''ஓகோ... நரேந்திரன் தான் செய்திருக்க வேண்டும் என்கிறாயா... இதோ பார்... நீ வருதற்கு முன்... கொடுத்த பணம் பைசா குறையாமல் அப்படியே பாங்கில் போடப் பட்டிருக்கிறது... அதுவும் சீஃப் அக்கவுண்டன்ட் யாரும் இல்லாதபோது... நீ வந்தபின்புதான் இந்த தில்லு முல் லும்... கணக்கில் குளறுபடியும்... சரி... எடுத்த பணத்தை என்ன செய்தாய் என்று கேட்டு விட்டு என்னுடை

கைப்பையைத் திறந்து பார்த்தார். அதில் நரேந்திரன் தந்த அம்பதாயிரம் அப்படியே இருந்தது... கம்பெனி பணத்தை சுரண்டி இதில் வைத்திருக்கிறாய்... அதெப்படி இல்லை என்று மறுக்கிறாய் என்று சீறினார் அவர். இது என் பணம் இல்லை... வீட்டு மனை வாங்க கடன் வாங்கியது என்று சொன்னேன்...''

''அதையும் நம்பவில்லையா...''

''ஊகூம்... நான் சொன்னதே தப்பாகி விட்டது. சாது.''

''வந்த சில மாதங்களில் 'சைட்' வாங்கும் அளவு பணம் சேர்த்து விட்டே... இல்லே... அதுவும் உன் சம்பளப் பணம் இருபதாயிரத்தில்... ம்ம்... யார் காதில் பூ சுத்துகிறாய் உண்மையைச் சொல்... இது நீ கையாடிய பணம் தானே என்ன... பதில் இல்லை... கடன் வாங்கியது என்றால் யார் கொடுத்தது என்று சொல்... அவரிடம் போய் விசாரித்துத் தெரிந்து கொள்கிறேன்...'' என்று மிரட்டினார் எம்.டி.... நான் நரேந்திரனைப் பார்த்தேன். அவன் கெஞ்சுவது போல பார்த்தான். 'ப்ளீஸ்.. காட்டிக் கொடுக்காதே' என்று... அதனால் மௌனமாக இருந்தேன். என்னைக் களவாடி என்றே முடிவு செய்து விட்டார் எம்.டி. என் சட்டையைப் பிடித்து வெளியே தள்ளி... இன்னும் இரண்டு மாதத்திற்குள் எடுத்த பணத்தை திருப்பித்தர வேண்டும்... இல்லை... போலீஸுக்கு போவேன் என்று பயமுறுத்தினார். என்னால் அந்த அவமானத்தைத் தாள முடியவில்லை... சாதனா... நொந்து நூலாகிப் போய் விட்டேன்... அப்பாதான் அந்தப் பணத்தை செட்டில் பண்ணினார்... செய்யாத குற்றத்திற்கு தண்டனை... சே... அவருக்கு சுமையாகி விட்டேனே என்பதை என்னால் தாள முடியவில்லை'' தலையில் அடித்துக் கொண்டான் நந்தகுமார்.



''அண்ணா... நீதான் தப்பு செய்யவில்லையே... எதுக்கு வருந்துகிறாய்... நேரம் சரியில்லாதபோது இந்த மாதிரியெல்லாம் நடக்கத்தான் செய்யும்... அதற்காக மனதைத் தளர விடாதே... பாரேன்... என்றைக்காவது ஒரு நாள் அந்த நரேந்திரன் பிடிபடத்தான் போகிறான்... அப்போ உன்னைப் பற்றித் தெரிந்து கொள்வார் அந்த எம்.டி. அது நடக்கத்தான் போகிறது... பார்த்துக் கொள்'' சொன்னாள் தங்கை.

''ப்ச்சு... அதெல்லாம் கனவு... ஒரு நாளும் நடக்கப் போவதில்லை... குற்றவாளின்னு என் மீது முத்திரை குத்தியாச்சு... இனி எங்கே போய் வேலை செய்வேன்.. தெரியவில்லை...'' வேதனையுடன் சொன்ன தமையனை பரிதாபமாய் பார்த்தாள் அவள்.

அடிபட்டவர்களுக்குத்தான் அதன் வலி தெரியும்.

நொந்து போயிருக்கிறான் பாவம்... அவனை எப்படி தேற்றுவது.

''அதைப்பத்தி அப்புறம் யோசிக்கலாம் அண்ணா. அதையெல்லாம் நினைத்து மனதைப் போட்டுக் குழப்பிக்க வேண்டாம். எல்லாம் நல்லபடியாய் நடக்கும்னு அம்மா அடிக்கடி சொல்லவாளே... அதை நம்பு... நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று நம்பிக்கையுடன் இரு... எதுவும் எப்பவும் நிரந்தரம் இல்லை... புரிஞ்சுக்கோ... நந்தண்ணா.''

அந்த நேரத்தில் அங்கே வந்த மீரா நடுவே பேசினாள்.

''கரெக்ட் சாதனா... சரியாகச் சொன்னே... எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது... எது நடக்கிறதோ அ நன்றாகவே நடக்கிறது. எது நடக்க இருக்கிறதோ அது நன்றாக நடக்கும். இதை நான் சொல்லவில்

கீதையில் ஸ்ரீகிருஷ்ணர் சொல்லியிருக்கிறார். அதனால் மனதைத் தளர விடக்கூடாதுன்னு உன் அண்ணனுக்கு சொல் சாது... இப்போ... இரண்டு பேரும் சாப்பிட வந்தால் அது நன்றாக இருக்கும்.'' அண்ணாவும் தங்கையும் கைக் கோர்த்துக் கொண்டு சென்றனர்.

அன்று இரவு சாதனாவிற்கு உறக்கம் லேசில் வர வில்லை.

நந்தகுமார் சொன்ன வார்த்தைகள் மனசுக்குள் சுற்றிச் சுழன்று வந்தன.

அண்ணா சொல்வதை வைத்துப் பார்த்தால்... அது இயல்பாய் நடந்த மாதிரி இல்லையே... ஏதோ சூழ்ச்சி மாதிரி படுகிறதே... இதுவும் நரேந்திரனின் நயவஞ்சகமாக இருக்குமோ...

பிள்ளையும் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டினது... போல அல்லவா தெரிகிறது.

அண்ணா எங்கே தன்னைப் பற்றி எம்.டி.யிடம் சொல்லி விடுவானோ என்று அஞ்சி... தானே முந்திக் கொண்டானோ... அப்படித்தான் இருக்கும். என்னவொரு கிரிமினல் புத்தி... முதலில் யோக்கியனாய் நடித்து... பழி போட ஒருவன் சிக்கியதும் அயோக்கியனாய் சே! ராஸ்கல்...

ஒருவேளை... அண்ணாவிற்கு பணம் கொடுத்தது கூட அவனை மாட்டி விடத்தானோ என்னவோ... பாவி... பாவி... தன் குட்டு வெளிவராமல் இருக்க அதையும் செய்திருப்பான்.. பாவம்... அப்பாவியான அண்ணா அவனை நம்பி ஏமாளியானானே... இப்போது எல்லாமே வெட்ட வெளிச்சமாகி விட்டது... இனிமேல்தான் நிதான மாய் செயல்பட வேண்டும். அண்ணனை ஏமாற்றியது போல அவன் என்னை ஏமாற்ற முடியாது.



அவனைக் கையும் களவுமாய் பிடிக்க வேண்டும்...

காட்டு யானையைப் பிடிப்பார்களே... அழகாய் குழி வெட்டி... அது தெரியாமல் இருக்க மேலே இலை தழைகளைப் போட்டு மூடி... அந்தப் பள்ளத்தில் விழ வைத்து 'லபக்' என்று பிடிக்கின்ற மாதிரி...

அவனை... அவனுக்கேத் தெரியாமல் வீழ்த்தி... 'கப்' பென்று வளைத்து விட வேண்டும்.

அதுவரையில் எதையும் காட்டிக் கொள்ளக் கூடாது. கணக்கில் வராத பணத்தைப் பற்றி மூச்சும் விடக் கூடாது... நேரம் வரும் போது அவனைக் குறி வைத்து காரியத்தை வெற்றிகரமாய் நடத்தி முடிக்க வேண்டும். முடிப்பேன்... அந்த நரேந்திரனுக்கு ஒரு முடிவு கட்டுவேன்...

அதே நினைவில் இருந்தவளுக்கு எப்போது நித்ரா தேவி வந்து ஆசையாய் வந்து அணைத்துக் கொண்டாள் என்று தெரியவில்லை.

## 11



வீட்டின் இனிய சூழல் அன்றைக்கு நடக்க இருக்கும் சந்தோஷமான நிகழ்ச்சியைச் சுட்டியது. வீடு சுத்தமாய்... வருபவர்களை வரவேற்கத் தயார் நிலையில் இருந்தது. அடுக்களையில் இருந்து நாசியைத் துளைக்கும் சர்க்கரைப் பாகின் மணம்... அம்மா ஜாமூன் செய்கிறாள் என்று தெரிந்தது.

செருப்புகளை வாசலில் உதறியவாறே... 'அப்பா எங்கேம்மா' என்று கேட்டாள் அவள்.

சமையலறையில் இருந்து எட்டிப் பார்த்தாள் கல்பனா.

''வந்துட்டியா... அம்மாடி... இப்பதான் நிம்மதியாச்சு... இன்னும் வரல்லையேன்னு தவித்துப் போய் விட்டேன்டி.. ஆமாம்... இன்னும் கொஞ்சம் முன்னதாக வந்திருக்கலாம் இல்லையா...''

''அத்தனை சீக்கிரம் வரமுடியுமாம்மா... ஆபீஸில் வேலைகளை முடித்துவிட்டு புறப்பட வேண்டி இருக்கிறது... அதையெல்லாம் சீக்கிரம் முடித்துக் கொடுத்து விட்டு வந்தேன்.. மேனேஜரிடம் 'பர்மிஷன்' கேட்கவும் என்னவோ போல் இருந்ததும்மா... அவசர வேலை என்று சொல்லிவிட்டு வந்தேன்.''

''ஏன்... உண்மையைச் சொல்லலாம் இல்லையா... 'பெண் பார்க்க வருகிறார்கள்' என்றால் போகாதே என்பார்களா... என்ன... 'அட அப்படியா... சீக்கிரம் போம்மா' என்று தான் சொல்வார்கள்.''

''அம்மா... பெண் பார்க்க வந்ததும் கல்யாணம் என்று நிச்சயமில்லை... அதுவரைக்கும் விஷயத்தை மூடு மந்திரமாய் தான் வைத்திருக்கணும்... இந்த இடம் நிச்சயம் என்று எப்படிச் சொல்லுவே...''

''வாயை மூடுடி... அச்சானியமாப் பேசிக் கொண்டு... எல்லாம் நல்லபடியா நடக்க வேண்டுமே என்று தெய்வத்தை வேண்டிக் கொண்டு இருக்கிறேன்... அசடு மாதிரி உளறுகிறாயே...''

சாதனா சிரித்தாள்... ''நீதான் சொல்லிவியேம்மா... நெருப்பு என்றால் வாய் சுட்டு விடுமான்னு...'' என்றாள் கேலியாய்.



''அது நல்ல விஷயங்களுக்கு கிடையாது. போய் ரெடியாகு... இங்கே நின்னு வளவளன்னு பேசிக் கொண்டு இருக்காதே...''

தயாராகிய சர்க்கரைப் பாகில்... கோலி உருண்டைகளாய் பொரித்து வைத்திருந்த ஜாமூன்களைப் போட்டு... பாத்திரத்தை அகன்ற தட்டில் நீர் ஊற்றி அதில் வைத்து... எறும்புகள் நெருங்காதவாறு.

அடுத்து... பஜ்ஜியா... போண்டாவா என்று யோசித்து விட்டு... பஜ்ஜியே போட்டு விடலாம் என்ற முடிவுக்கு வந்தாள்.

உருளைக்கிழங்கை 'மளமள'வென்று சீவினாள்... கைகள் மட்டுமல்ல... கூடவே மனமும் பரபரத்துக் கொண்டிருந்தன.

இந்த வீட்டில் நடக்கப் போகும் முதல் விசேஷம்... அது நல்லபடியாய் நடக்க வேண்டும். மாப்பிள்ளை வீட்டார்க்கு சாதனாவைப் பிடித்து விட்டால் போதும்... தாயுள்ளம் வேண்டியது...

அதே சமயம்... என் மகளுக்கு என்ன கம்மி... துடைத்து விட்ட குத்து விளக்காய் 'பளிச்'சென்று இருக்கும் அவளைப் பிடிக்கவில்லை என்று சொல்ல முடியுமா... அவளது அழகும்... படித்த படிப்பும்... வாங்கும் சம்பளமும் பார்த்து விட்டு யாருக்குத்தான் பிடிக்காமல் போகும்... கண்களை மூடிக் கொண்டு தலையாட்டி விடுவார்கள் தான். சித்திரப் பாவை மாதிரி இருக்கிறாள்... எதையும் சாதிக்கும் திறமையும் இருக்கிறது... இன்னும் என்ன... கி மாதிரி வந்து கொத்திக் கொண்டு போவார்கள் என்ப நிச்சயம்... அந்த விஷயத்தில் சந்தேகமே இல்லை...

கைகள் இயந்திர கதியில் இயங்க... பஜ்ஜி 'ஸொய்' என்று எண்ணெயில் இறங்கி பூரித்தது.

பஜ்ஜி என்றால் நந்தகுமாருக்கு பஞ்சப் பிராணம்... விரும்பி சாப்பிடுவான்... அவன் இல்லையே என்று வருந்தியது பெற்ற மனம்.

தங்கைக்கு பெண் பார்க்க வரும்போது... அவனும் இருந்திருந்தால் இன்னும் சந்தோஷம் கூடியிருக்கும். அண்ணன் என்ற பொறுப்பில் அவர்களை வரவேற்றிருப் பான்... தங்கையை சீண்டி வேடிக்கை செய்திருப்பான்.. உருளைக்கிழங்கு பஜ்ஜியை 'டேஸ்ட்' பார்க்கிறேன் என்று ஒரு கை பார்த்திருப்பான் என் பிள்ளை.

அந்த வேதனையில் கண்களில் கசிவு... அதை முந்தானையால் துடைத்துக் கொண்டாள்.

''அம்மா... இந்தப் புடவை பரவாயில்லையா'' மகளின் குரல் கேட்டுத் திரும்பினாள் கல்பனா. சாதனா.. அதிக பகட்டில்லாத... வெளிர் நீல நிறப் புடவையை கையில் வைத்திருந்தாள்.

முந்தானையால் தன் கண்களைத் துடைத்துக் கொண் டாள் கல்பனா.

''அழுதாயா... அண்ணனோட நினைப்பாம்மா... ப்ச்சு... என்னம்மா இது...''

''இல்லைடீ... இந்த நேரத்தில் அவன் இல்லை யேன்னு நினைத்தேன். சுடச் சுட பஜ்ஜியென்றால் அவனுக்கு ரொம்பப் பிடிக்கும்... அந்த நினைப்பில் கண்ணீர் வந்து விட்டது...''

''அப்போ... இந்த ஏற்பாட்டை பண்ணியிருக்கக் கூடாது. அண்ணா வர்ற வரைக்கும் காத்திருக்க



வேண்டும்... எதுக்கு - இந்த அவசரம்... நான் கேட்டே னம்மா...''

''அதில்லைம்மா.. 'சுபஸ்ய சீக்கிரம்' என்று சொல்லு வார்கள். எதையும் தள்ளிப் போடக் கூடாதும்மா... அவர்கள் வருகிறேன் என்றதும் சரின்னு சொல்லியாச்சு...''

''அப்படின்னா... அழக்கூடாதும்மா... அண்ணாவும் சீக்கிரம் வந்துடுவான்... அதுக்கப்புறம் எல்லாம் பார்த்துக் கொள்ளலாம்... ஓகேயா... சரி... இப்ப உன் பொண்ணுக்கு ஒரு பஜ்ஜி தா பாப்போம்... அண்ணாவுக்கும் சேர்த்து நான் சாப்பிடுகிறேன்.''

''நீ முதல்ல போய் புடவையைக் கட்டிக் கொண்டு வா... அப்புறம் சாப்பிடுவாயாம்... அவர்கள் எந்த நேரத்தில் வருவார்களோ தெரியாது...''

''ஆமாம்... அப்பா எங்கேம்மா... வந்ததும் கேட்டேன். நீ பதில் சொல்லவில்லை.''

''கடைக்குப் போயிருக்கிறார். வெத்திலை வாழைப்பழம் வாங்கி வர... வந்து விடுவார். நீ போய் ரெடியாகு'' என்று மகளை விரட்டினாள் கல்பனா.

அரை மணி நேரம் கழித்து மாப்பிள்ளை வீட்டார் வந்தனர்.

தாய்... தந்தை... பிள்ளை... கூடவே தரகரும்... தாய் இரட்டை நாடி உடம்பு... மாநிறம்... தந்தை கொஞ்சம் ஒடிசலாய்... உயரமாய் இருந்தார்... அவர் முகத்தில் நான் மாப்பிள்ளையின் தந்தையாக்கும் என்ற மிடுக்குத் தெரிந்தது... பையன் தந்தையைப் போல ஒடிசலாய். தாயின் நிறத்தைக் கொண்டு இருந்தான்.

அப்படியொன்றும் அழகன் இல்லைதான். ஆனால் படித்த களை முகத்தில் தெரிந்தது...

கல்பனாவிற்கு லேசாய் ஏமாற்றம் வந்தாலும் சுதாரித்துக் கொண்டாள். ஆண் பிள்ளைக்கு அழகா முக்கியம் கட்டியவளை கண் கலங்காமல் வைத்துக் கொண்டால் அதுதான் அழகு... பையன் கறுப்பாக இல்லையே... மாநிறம்... அது போதும். நல்ல வேலை... கொள்ளையாய் வருமானம்... அதைவிட என்ன வேண்டும். எல்லாமே அமைந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் தப்பு...

அது மட்டும் அல்ல... முக்கியமாய் சாதனாவிற்கு பிடித்தால் போதும்.. காலம் முழுக்க அவள் தானே அவனுடன் வாழ வேண்டும்... அப்புறம் என்ன... மனதை சமாதானப்படுத்திக் கொண்டாள் அவள்.

சாதனா நிதானமாய் நடந்து வந்து கரங்களைக் குவித்து நமஸ்கரித்தாள்.

''என்கிட்டே வந்து உட்காரும்மா...'' என்று அழைத்து அருகே அமர்த்திக் கொண்டாள் பையனின் தாயார்.

''என் பையன் பெயர் பாலகிருஷ்ணன்... அடக்கமான பையன். ஒரு கெட்ட பழக்கமும் இல்லை... சாது... தப்புத் தண்டாவுக்குப் போக மாட்டான். தானுண்டு... தன் வேலை உண்டு என்று இருப்பான்... அவன் வேலையில் கடல் வாசம் ஆறு மாதம் நில வாசம் ஆறு மாதம் என்று இருக்கும்... அதை அனுசரித்துப் போகும் பொண்ணா இருக்க வேண்டும் என்பதுதான் என் ஆசை... தவிர... அவனைப் பார்த்துக் கொள்ள ஒருத்தி வேண்டும்... நான் போய் இருக்க முடியுமா... அதுதான். அவனுக்கு ஒரு கல்யாணம் கட்டி வைத்து விட்டால்... அவன் பாட்டிற்கு



சந்தோஷமா இருப்பான்... எங்களுக்கும் நிம்மதி... வரப்போகும் மருமகளுக்கு சூசகமாய் உணர்த்தினாள். அந்த அம்மாள். கப்பல் பயணம் என்று அலைவதைக் கண்டு எரிச்சல் படக்கூடாது... சலிப்பைக் காட்டிக் கொள்ளக் கூடாது... அவனை நன்றாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்... கூடவே... தனிக் குடித்தன வாழ்க்கை என்ற குறிப்பு வேறு... தூண்டில் மீன்!

மெரீன் இன்ஜினியர் என்றால் எத்தனையோ பெண்கள் ஒப்புவதில்லை... வெறும் உப்பு நீரைப் பார்த்துக் கொண்டிருப்பதில் என்ன சந்தோஷம்... போர்... நீ கப்பலில் இரு... நான் கரையில் காத்திருக்கிறேன் என்று சொல்லி விட்டுத் தனியாய் வாழ வேண்டுமா... அதை விட கல்யாணமே வேண்டாமே... ஊரில் வேறு மாப்பிள்ளையா இல்லை என்று நினைப்புத்தான்... சாதனாவிற்கு சிரிப்பு வந்தது. அடக்கிக் கொண்டாள்.

''என்னம்மா... என் பையனை நன்றாகப் பார்த்துக் கொண்டாயா... இந்தப் பெண் பார்க்கும் நிகழ்ச்சியே பையனும் பெண்ணும் ஒருத்தரை யொருத்தர் நன்றாகப் பார்க்க வேண்டும் என்பதுதான்... விருப்பப்பட்டா தனியா போய் பேசிக் கொள்ளலாம்... என்னடா... பேச வேண்டுமா.''

சாதனா அவனைப் பார்த்தாள்... அப்படியொன்றும் மோசம் என்று சொல்லும் அளவுக்கு இல்லையென்றாலும்... பார்த்தவுடன் 'பச்'சென்று மனதில் ஒட்டிக் கொள்ளும் தோற்றம் இல்லைதான்.

சந்தன நிறத்தில் சட்டையணிந்திருந்தான்... மாநிறத்திற்கு அத்தனை எடுப்பாய் தெரியவில்லை...

இதே சந்தன நிற 'ஷர்ட்'டை சரத்சந்திரன் உடுத்தி இருந்தானே... அவனுக்கு என்ன அழகாய் பொருந்தியது. பையன் கேசத்தை விரலால் அளைந்து கொண்டிருந்தான். மேனரிஸமோ... கேசம் ஒன்றும் அப்படி அடர்த்தியும் இல்லையே... உப்புநீர் பட்டு.. பட்டு உதிர்ந்து விட்டதோ. கூடிய சீக்கிரம் வழுக்கை விழுந்து விடும் போல் தோன்றுகிறது...

ஆண் பிள்ளைக்கு கரும் பட்டாய் கேசம் இருக்க வேண்டும் அதுதான் கவர்ச்சி... சரத்சந்திரனுக்கு இருப்பது போல... மூக்கு கண்ணாடி கூட எத்தனை கவர்ச்சியூட்டியது. அதே 'ரிம்லெஸ்' மூக்கு கண்ணாடிதான்... இந்த முகத்தைக் கொஞ்சம் அசடாய் காட்டுகிறதே...

சரத்சந்திரன் முன் இவன்...

அப்போதுதான் அவளுக்கு உறைத்தது... இதென்ன... இவனை சரத்சந்திரனுடன் ஒப்பிட்டுப் பார்க்கிறேனே... அவன் நினைவு எதற்கு இப்போது வந்தது.. சே... தலையை உதறிக் கொண்டாள் அவள்.

''பின்னே... எங்க பக்கத்திலிருந்து ஓகே... உங்களுக்கும் சம்மதம்னா... சீக்கிரம் நிச்சயதார்த்தத்தை வைத்துக் கொள்ளலாம்... என்ன சொல்றீங்க...''

முதன் முதலாய் வாய் மலர்ந்தார் பையனின் தந்தை...

''ஒரு நிமிஷம்'' என்று சொல்லி விட்டு கேசவமூர்த்தி மகளை அழைத்துக் கொண்டு அறைக்குள் வந்தார்.

''இதோ பார் சாதனா... உனக்குப் பையனைப் பிடிக்கல லேன்னா 'பளிச்'சென்று சொல்லிவிடு... உன்னை யாரும்



வற்புறுத்தவில்லை... உன் விருப்பம் இருந்தால் தான் இந்தக் கல்யாணம்...'' என்று சொன்னார்.

அப்போது அங்கே வந்தாள் கல்பனா...

''அப்பா சொல்வது சரிதான் சாதனா... உனக்குப் பையனை பிடிச்சிருக்கா... இல்லைன்னா வேண்டாம்.''

''அப்பா... அம்மா... எனக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. யாரோ ஒருவனை உட்கார வைத்து பிடித்திருக்கிறதா என்று கேட்டால் உடனே அதற்குப் பதில் சொல்ல முடியுமா... இப்பவும் சொல்கிறேன்ப்பா... உங்களுக்கு இந்த வரன் பிடித்திருந்தால் அது போதும். உங்களுக்குப் பிடித்த பையன் எனக்கும் பிடித்த மாதிரி தான்... இந்த மாதிரி இஷ்டமா... இல்லையா... பண்ணிக் கொள்கிறாயா... வேண்டாமா கேள்விகள் எல்லாம் வேண்டாமே.''

''அப்படியில்லைம்மா... எங்களுக்குப் பிடித்தால் மட்டும் போதாது. காலம் முழுக்க அவனுடன் வாழப் போவது நீதான்... உன் மனசுக்குப் பிடிக்க வேண்டும்... அதான் கேட்கிறேன்...'' என்றார் தந்தை.

''அதையெல்லாம் எதிர் பார்க்காதீர்கள்ப்பா... யாரையும் 'சட்'டென்று மனசு ஏற்றுக் கொள்ளாது...''

''இப்ப... என்ன சொல்றே சாதனா... சரி என்கிறாயா... வேண்டாம் என்கிறாயா...''

''மனசுக்குப் பிடிக்க வேண்டும் என்று எதிர்பார்க்க வேண்டாம் என்கிறேன்... ஒரு கல்யாணம் என்றால் அது எல்லோருக்கும் சந்தோஷத்தைத் தர வேண்டும்... இந்தக் கல்யாணத்தால் நம் குடும்பத்தில் எல்லோருக்கும் மகிழ்ச்சி என்றால் எனக்கும் ஓ.கே...''

''அவதான் சொல்லியாச்சே... பின்னே என்ன... நல்ல குடும்பமா தெரியுது... நல்ல பையனா இருக்கிறான் சரின்னு சொல்லிடுங்கோ...''

''என்னம்மா... சொல்லிடவா... பையன் மெரின் இன்ஜினியர் என்று தயக்கம் ஏதுமில்லையே.. அப்படீன்னா ஓ.கே...''

ஆக... கல்யாணம் முடிவானது.

''அடுத்த மாதம் நல்ல முகூர்த்தம் பார்த்து நிச்சயதார்த்தத்தை வைத்துக் கொள்ளலாமா... ஜோசியரிடம் நாலைந்து தேதியை கேட்டுச் சொல்கிறோம்... அதில் ஒன்றைப் பார்க்கலாம்'' என்று சொல்லி விட்டுப் புறப்பட்டுச் சென்றனர் பிள்ளை வீட்டார்.

''இந்தக் காலத்துப் பிள்ளைகளைப் போல பையனிடம் அலட்டலோ ஆர்ப்பாட்டமோ இல்லை... கவனித்தீர்களா... அவ்வளவா பேச்சும் இல்லை...'' என்று கல்பனா ஆரம்பிக்க...

''ஆமாம்... கொஞ்சம் 'ரிஸர்வ்ட்' டைப்போலத் தெரிகிறான். ஆனால் நல்ல சுபாவம் போலத் தெரிகிறது... நம்ம சாதனா கிட்ட தனியா பேசணுமா என்று கேட்டதற்கு வேண்டாம் என்று சொல்லி விட்டான் பார்... இந்தக் காலத்திலயும் இப்படியா என்றுதான் ஆச்சர்யம்.'' என்றார் கேசவமூர்த்தி.

''எனக்கும் அதுதான் பிடித்திருந்தது... எப்படியோ முதலில் பார்த்த வரனே அமைந்தாச்சு... அதில் சந்தோஷம் எனக்கு'' தாயும் தந்தையும் மாறி மாறிப் பேசுதைக் கேட்டு சிரித்தவாறு தன் அறைக்கு சென்று டையை மாற்றிக் கொண்டாள்.



மீராவிடம் இருந்து போன் வந்தது.

''வந்தார்களா... என்னவாயிற்று... பையன் எப்படி'' என்று அறியும் ஆவல்தான்.

எல்லாவற்றையும் விவரித்தாள் சாதனா.

பையன் அப்படியொன்றும் அழகு இல்லை... பரவாயில்லை என்று சொன்னதும்... மீரா சட்டென்று கேட்டாள்.

''அப்படியென்றால் நீ முழு மனதுடன் ஒப்புக் கொள்ளவில்லை அப்படித்தானே...''

''அப்படியொன்றுமில்லை... நீ சொல்கிற மாதிரி இருந்திருந்தால் நான் வேண்டாம் என்று சொல்லியிருப்பேன் மீரா...''

''சுமாரான ஒருவனைக் கூட மனசுக்குப் பிடித்து விட்டால் அவன் மன்மதனாகத் தெரிவான்டீ... என் குமார் என் கண்களுக்கு அழகனாகத் தெரிந்தார். என் திருமணத்தின் போது வந்த தோழிகள் இவரையா. இப்படி விழுந்து விழுந்து காதலித்தாய் என்று கேட்டார்கள். உலகிலேயே அழகான அற்புதமான மனிதர் என் கணவர் தான் என்றேன் நான். இப்போ புரிந்ததா... ஏன் அப்படிக் கேட்டேன் என்று.''

''என்னைக் குழப்பாதேடீ இவளே... நீ சொல்கிற மாதிரி அழகு ஒன்றும் எனக்கு முக்கியமாகப் படவில்லைடீ... அழகாய் இருக்கிற எத்தனை பேர் வக்கிர புத்தியுடன் இருக்கிறார்கள்... வெளியே, அழகா இருந்து உள்ளுக்கு விஷமாய் இருப்பவரை விட மேல்...'' சரத் சந்திர மாதிரி.

''அப்படி என்கிறே... அப்போ சரிதான்...''

"இன்னிக்கு என் அம்மாவும் அப்பாவும் சந்தோஷமாக இருக்கிறார்கள்... துள்ளி குதிக்காத குறைதான் தெரியுமா, மீரா..."

"உனக்கு... உனக்கு எப்படி சாது... துள்ளிக் குதிக்காத குறையா... ஆகாசத்தில் பறக்காத குறையா... எந்த அளவில் சந்தோஷம்.. என்ன சத்தத்தையே காணோம்.. சாது... சாதனா..."

"பதில் சொல்லத் தெரியவில்லை மீரா... அதான்"

"சரி... ரொம்பவும் குழப்பிக்காதே... நீ நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்பதற்காகக் கேட்டேன்... மற்றபடி உனக்குப் பிடித்திருந்தால் போதும்... உன் அண்ணா கிட்டே விஷயத்தை சொல்லட்டுமா... இல்லை... நீயே சொல்கிறாயா..."

"நீயே சொல்லிடு... நான் அப்புறம் நிதானமாய் பேசுகிறேன்..."

பேசி முடித்த பின்பும்... குழப்பம் தீர்ந்தபாடில்லை.

மீராவுடன் பேசியதில் தெளிவுக்கு பதில் குழப்பம் தான் வந்தது.

வெளியே வந்தபோது... தாயும் தந்தையும் அருகருகே அமர்ந்து கொண்டு... நிச்சயதார்த்தத்திற்கு என்ன செய்ய வேண்டும். யாரை அழைக்க வேண்டும்... மெனு என்ன என்பதைப் பற்றிக் குஷியாய் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்ததும் குழப்பம் மாயமானது. அவர்கள் முகத்தில் தெரிந்த பிரகாசம்... பூரிப்பு... இது போதும்... இவர்களுக்காக எதுவும் செய்யலாம்.. ஏன் இந்தத் திருமணம் கூடத் தான்...

அவளது இதழ்களில் புன்னகை பிறந்தது.



## 12



அலுவலகத்திற்கு வந்ததுமே அவள் முன் தங்கவேலு வந்து நின்றான்.

"என்ன தங்கவேலு... என்ன விஷயம்..."

"உங்களை எம்.டி. வரச் சொன்னாரு சாதனாம்மா..."

புருவங்களை உயர்த்தினாள் அவள்.

"எதுக்கு... ஏதாவது பைல் வேண்டும் என்றாரா..."

"அதெல்லாம் தெரியாதும்மா... வந்ததும் உடனே வந்து என்னைப் பார்க்கச் சொல் என்றாரு..."

எதற்காக இருக்கும்... என்று யோசித்தவாறு அவனது அறையை நோக்கி நடந்தாள் சாதனா.

ஏதாவது புது வேலை வந்திருக்குமோ... அதைப் பற்றி சொல்வதற்கா...

கதவைத் திறந்து உள்ளே சென்றாள்.

'செல்'லில் ஏதோ பேசிக் கொண்டிருந்தான் சரத் சந்திரன். அவளைப் பார்த்ததும் தலையசைத்தான்.

அவள் நிற்பதைப் பார்த்து எதிரே இருந்த நா காலியைச் சுட்டிக் காட்டி... உட்காரும்படி சை செய்தான்.

அதில் அமர்ந்தாள் சாதனா.

'செல்'லில் பேசிவிட்டு....அவள் பக்கம் திரும்பினான் அவன்.

''என்னை அழைத்த காரணத்தை தெரிந்து கொள்ள லாமா எம்.டி. சார்...''

''சொல்கிறேன்... நேற்று... மூன்று மணிக்கு மேல் நீ இங்கு இல்லையே. எங்கே போனாய் சாதனா...''

அவள் மௌனமாக இருப்பதைப் பார்த்துவிட்டு தொடர்ந்தான்.

''ஏதோ ஒரு வேலை விஷயமாய் உன்னிடம் கேட்க வேண்டி இருந்தது... தங்கவேலு நீ உன் 'ஸீட்'டில் இல்லை என்றான். என்னிடம் அனுமதி கேட்காமல் போனது ஏன்.''

''சாரி... நான் அவசரமாய் வீட்டிற்குப் போக வேண்டி இருந்தது. மேனேஜரிடம் அனுமதி கேட்டுக் கொண்டு தான் சென்றேன்...''

''அப்படி என்ன அவசர வேலை... சாதனா..''

''சொல்லத்தான் வேண்டுமோ.''

''அலுவலக வேலைக்கு தொந்திரவு வந்தது என்பதால் அதைச் சொல்லித்தான் ஆக வேண்டும்.''

''என்னைப் பெண் பார்க்க வந்தார்கள்... போதுமா.''

அதைக் கேட்டு அவனது முகம் இறுகியது...

''ஓ... கங்கிராட்ஸ்... ஆமாம்... வந்தவர்களுக்கு உன் அண்ணன் விஷயம் தெரியுமா... இல்லை... அதை மறைத்துவிட்டு இந்தக் கல்யாண ஏற்பாடா...'' என்றான் எகத்தாளமாய்.

அவனது பேச்சில் எரிச்சல் வர... அவனை முறைத்துப் பார்த்தாள்.



''ஹலோ... அப்படி மறைக்கும்படியாய் என் அண்ணா எந்தத் தவறும் செய்யவில்லை... ஃபார் யுவர் கைண்ட் இன்ஃபர்மேஷன்... மாப்பிள்ளை வீட்டாரும் நல்லவர்கள். அடுத்த மாதம் எங்கேஜ் மெண்ட்டும் ஃபிக்ஸ் ஆகி யிருக்கிறது தெரிந்து கொள்ளுங்கள்... சரி... விசாரணை முடிந்ததா... இப்போது நான் போகலாம் தானே!''

அந்த நேரத்தில் கதவு திறந்தது... ஒய்யாரமாய் உள்ளே வந்தாள் ராதிகா.

''அண்ணா... உன்னிடம் முக்கியமான விஷயம் ஒன்று சொல்ல வேண்டும்...'' என்று ஆரம்பித்தவள்... சாதனாவை ஒரு பார்வை பார்க்க... அவளும் அங்கிருந்து விரைந்தாள்.

அவள் மனதில் தகிப்பு... சே... அவனுடன் பேசினாலே, மூட் அவுட் தான்... என்னமாய் குத்திப் பேசுகிறான்... நாக்கில் 'ஆசிட்' பூசியிருப்பானோ என்னவோ...

அவனிடம் சொல்லவே கூடாது என்று நினைத்தாலும் திருமண ஏற்பாடு பத்திச் சொல்லும்படி ஆனதே... அதை வாய்விட்டுச் சொல்ல வைத்து விட்டானே... உள்ளம் உலைகளமாய் கொதித்தது.

சீக்கிரமே வந்த வேலையை முடித்துவிட்டு இங் கிருந்து போய்விட வேண்டும்.

அடச்சே.. திருமணம் ஆனதும் இங்கிருந்து என்ன... இந்த ஊரை விட்டே போய்த்தானே ஆக வேண்டும். அதை மறந்தேனே... அதை எண்ணி சந்தோஷம் வர் தாலும்... தாலி கழுத்தில் வாங்கியதும்... புகுந்த வீ டாருடன் செல்ல வேணடும்... பெற்றவர்களை விட் விட்டு... உடன் பிறந்த சகோதரனை விட்டு விட்

பிறந்து வளர்ந்த வீட்டையும்.... சொந்த ஊரையும் விட்டு விட்டு எங்கேயோ... யாருடனோ.... அதை நினைக்கும்போது நெஞ்சுக் கூட்டுக்குள் 'பகீர்' என்றது. எப்படி இருக்கப் போகிறோம்... புது ஊரில்... புது உறவுகளுடன்... எப்படி... அய்யோ நினைக்க 'திக்' என்று இருக்கிறதே... கண்களை கறுப்புத் துணியால் கட்டி விட்டுக் காட்டில் அலைய விட்ட மாதிரி...

பெண்களுக்கு மட்டும் ஏன் இந்த நிலை.... அகத்தின் வேதனை முகத்தில் தெரிந்ததோ...

''என்னடீ ஆச்சு... முகமே சரியில்லை.. எம்.டி.யிடம் ஏதாவது வாங்கிக் கட்டிக் கொண்டாயாக்கும். விடு... அது என்னவோ உனக்கும் எம்.டி.க்கும் ஏழாம் பொருத்தமாகவே இருக்கு. அது போகட்டும்... நேற்று என்ன ஆச்சு... கிரீன் லைட்டா இல்லை 'ரெட்'லைட்டா... இல்லைடீ... 'எஸ்'ஸா... 'நோ'வா என்பதை அப்படிக் கேட்டேன்...''

''யெஸ்'தான்... அடுத்த மாதமே நிச்சயதார்த்தமாம்...''

''அதை ஏண்டி சுரத்தில்லாமல் சொல்கிறாய். கொஞ்சம் சிரித்த முகமாய் சொல்ல வேண்டியது தானே...''

''ப்ச்சு... அப்பா அம்மாவையெல்லாம் விட்டு விட்டுப் போக வேண்டும் என்று நினைக்கையில் கஷ்டமாக இருக்குடீ சுமதி...''

''அதுக்குத்தான் நான் திருமணமே வேண்டாம் என்று சொல்லி விட்டேன்... திருமணம் செய்து கொண்டவர்கள் எல்லோரும் என்னத்தை சாதித்து விட்டார்கள். சம்சாரம் அது சாகரம்னு மூழ்க வேண்டியதுதான். அதை விட இப்படி ஹாயாக இருந்துடலாம்!''



''அது பெற்றவர்களை திருப்தி படுத்தாதே சுமதி... அவர்களுக்காகவாவது நாம் பண்ணிக் கொள்ளத்தான் வேண்டும்.''

''இது வெத்துப் பேச்சுடீ. நாம் நமக்காக வாழ வேண்டும். இது நம் வாழ்க்கைடீ... நம் விருப்பம்தான் முக்கியம்... பாரு... திருமணம் என்றாலே உன் முகம் வாடுகிறது. இது தேவையா... சாரி டீ... என் 'பாலிஸி'யை உன் மீது திணிப்பது தப்பு... உனக்கு எது சரி என்று படுகிறதோ அதை செய் சாதனா...''

அந்த சமயத்தில் அண்ணனின் அறையிலிருந்து வெளிப்பட்டாள் ராதிகா...

அவளைப் பார்த்து விட்டு சுமதி சொன்னாள்.

''ஓ... பட்சி வந்திருக்கா... அதானே பார்த்தேன்... சாது... உனக்கு ஒரு விஷயம் தெரியுமா... சிங்கப்பூரில் ஆரம்பிக்க இருக்கும் கம்பெனிக்கு நரேந்திரனை அனுப்பி வைக்க ராதிகா சிபாரிசு பண்ணப் போகிறாளாம்... இது காத்து வாக்கில் வந்த பேச்சு... அந்தக் கம்பெனி உருப்பட்ட மாதிரிதான். அடிக்குரலில் பேசினாள் அவள்.

நரேந்திரன் சிங்கப்பூருக்கா... சிபாரிசு பலமாக இருந்தால்... இது நடந்தாலும் நடக்கும்... அதற்குள் அவனுடைய சாயத்தை வெளுக்கச் செய்ய வேண்டும். அதை விரைவாய் நடத்தி விட வேண்டியதுதான்.

அதற்கு சரத்சந்திரனின் ஒத்தாசையும் தேவையாயிற்றே... ராதிகாவிற்காக காத்திருந்தது போல நரேந்திரன் வந்து சேர... இருவரும் ஈஷாத குறையாய் செல்வது கண்டு பலர் முகம் சுளித்தனர்.

''அண்ணனுக்கேத்த தங்கைதான்... கொஞ்சம் கூட கூச்ச நாச்சம் இல்லாமல்... சே!'' என்று ஒருவர் வெளிப் படையாய் சொல்ல...

சாதனாவிற்கு உள்ளுக்குள் உறுத்தல் வந்தது... தப்பு செய்யாமலே சரத்சந்திரனுக்கு அவப் பெயர்... அதற்கு தானே காரணம்....

அடுத்த கணமே... அவனுக்கு அது தேவைதான் என்று சமாதானம் செய்து கொண்டாள்... உப்பு தின்றவன் நீர் குடித்தே ஆக வேண்டும்.. இது உலக நியதி ஆயிற்றே. நன்றாகக் குடிக்கட்டும்... பொருமினாள் அவள்.

கல்பனா ஒரே முடிவாய் இருந்தாள். உடனே பிள் ளையைப் பார்க்க வேண்டும்... என்னை அழைத்துப் போ சாதனா என்று புலம்பினாள்...

''எத்தனை நாள்டீ அவனைப் பார்க்காமலே இருப்பது. என்னால முடியல்லே சாதனா... நீயும் ஏதாவது ஒரு சாக்கு சொல்லி தள்ளி போடுகிறே... இந்தத் தடவை நான் அவனைப் பார்க்கத்தான் வேண்டும்... மீராவிடம் சொல்லு. நாம் புறப்பட்டு வர்றோம்னு'' என்றாள் மக ளிடம்.

''என்னம்மா... திடீர்னு கிளம்ப முடியுமா... சனிக் கிழமை வரைக்கும் பொறு... அப்பத்தான் முடியும்... உனக்கு என்ன... முன்னூத்தி அறுபத்தைந்து நாளும் லீவு தான். எங்களுக்கு அப்படியா...'' என்று சொன்னாள் மகள்.

இனியும் தாயை நிறுத்தி வைக்க முடியாது என்று தோன்றியதால் மீராவுக்கு போன் பண்ணினாள். சனிக் கிழமை மூவரும் மதுரைக்குப் புறப்பட்டனர்.

''நந்து... நந்து கண்ணா... எப்படிடா இருக்கே...'' கனை இழுத்து அணைத்து உச்சி முகர்ந்தாள் கல்பனா.



முதலிலேயே சாதனா எச்சரித்திருந்தபடியால் கண்ணீர் விட்டு... உணர்ச்சி வசப்படாமல் இருந்தாள்.

நந்துவின் முகத்திலும் ஜொலிப்பு தெரிந்தது... பெற்ற வர்களைப் பார்த்த ஆனந்தம் போலும்...

கேசவ மூர்த்தி மகனின் தோளை அரவணைத்து தன் பாசத்தை தெரிவித்தார்...

மகன் தெளிவாய் இருப்பது கண்டு இருவருமே மகிழ்ந்து போனார்கள்...

''ஏம்மா... மீரா... இன்னும் எத்தனை நாள் நந்து இங்கே இருக்க வேண்டும்... இன்றைக்கே அழைத்துச் செல்ல லாமா... எத்தனை நாள் உனக்கும் தொந்திரவு தர முடி யும்... உனக்கும் வேலை இருக்கிறதேம்மா...''

என்றார் கேசவ மூர்த்தி.

''எனக்கு எந்த சிரமமும் இல்லை அங்கிள்... நந்துவை நான் வேற்று மனுஷனாகவே பார்க்கவில்லை... எனக்கும் அவர் உறவினராகத்தான் நினைக்கிறேன்... என் சாதனா வின் அண்ணா எனக்கு அந்நியமாகத் தெரிவரா என்ன...''

''ரொம்ப சந்தோஷம்மா... இந்தக் காலத்தில் யார் இத்தனை அக்கறையாய். பொறுப்பெடுத்துக் கொண்டு பார்த்துக் கொள்கிறார்கள்... சொந்தமே ஒதுங்கிக் கொள்ளும் காலம் இது... உனக்கு எப்படி நன்றி சொல்வது என்று தெரியவில்லைம்மா... மீரா... என் மகனை எங்களுக்கு மீட்டுக் கொடுத்ததற்கு ஜென்ம ஜென்மமாய் நாங்க கடன் பட்டிருக்கிறோம்மா...'' உணர்ச்சி மிகுதியில் குரல் தழுதழுக்க கேசவ மூர்த்தி சொல்ல...

''அய்யோ.. என்ன அங்கிள்... பெரிய பெரிய வார்த்தை களைச் சொல்கிறீர்கள்... ஒரு டாக்டர் செய்ய வேண்டி

கடமையைத்தான் செய்தேன்... அதைப் பெரிசு படுத்தா தீங்களேன் ப்ளீஸ்...'' என்று கெஞ்சும் குரலில் மீரா கூறினாள்.

''நாங்க நந்துவை அழைத்துப் போகலாமா மீரா... அடுத்த மாதம் நிச்சயதார்த்தம் வச்சாச்சு... இந்த சந்தோஷ நேரத்தில் அவனும் அங்கு இருக்கட்டும் என்று ஆசை தான்... அப்புறம் கண்டிப்பாய் உன் சிநேகிதியின் நிச்சய தார்த்தத்திற்கு நீ வரணும்...'' என்று அழைத்தாள் கல்பனா...

தயக்கத்துடன் பார்த்தாள் அவள்...

''நானா... நான் எதற்கு... வேண்டாமே ஆன்ட்டீ...'' என்றாள் தடுமாற்றத்துடன். அவளது தயக்கத்தின் காரணத்தைப் புரிந்து கொண்ட கேசவ மூர்த்தி... இதமாய் சொன்னார்...

''எதுக்கும்மா தயங்கறே... யாரும் உன்னை எதுவும் சொல்ல மாட்டார்கள்... அந்தக் காலம் எல்லாம் போச்சு... உன் தோழியை வாழ்த்த நீ அங்கு இருக்க வேண்டாமா மீரா... அவளோட நீதான் இருக்க வேண்டும்.... என்ன... சாதனா... நீயும் மீராவுக்கு எடுத்துச் சொல்லும்மா...''

''கவலைப்படாதீங்கப்பா... அவள் வரவில்லை என்றால் என்னோட நிச்சயதார்த்தமே நடக்காது என்று சொல்லி விடுகிறேன்... அப்ப... அவள் கண்டிப்பா வந்து விடுவாள் பாருங்கள்...'' என்று சொல்லி விட்டு.. சிநேகிதியைப் பார்த்து கண் சிமிட்டினாள்.

கிளம்புகையில் மீராவின் கணகளில் கண்ணீர் தெரிந்தது போல உணர்ந்தாள் சாதனா...

அவளை தனியாய் அழைத்துப் போய் வினவினாள்.



''ஏண்டி... கண் கலங்குகிறது... மீரா... அண்ணா புறப்படுகிறான். என்றா... அத்தனை ஒட்டுதலா டீ...''

''தப்பா நினைக்காதேடீ... மறுபடியும் இந்த வீட்டில் ஒண்டியாய் வளைய வர வேண்டுமே... பேச்சுத் துணைக்கு யாரும் இல்லையே என்ற வருத்தம்தான்... ப்ச்சு... இரண்டு நாளில் சரியாகி விடும்... விடு...''

''சரி... நீயும் எங்களோடு வரலாம் இல்லையா... உனக்கும் மனசுக்கு இதமாக இருக்கும் மீரா... உனக்கும் ஒரு 'சேஞ்ச் ஆக இருக்கும்டீ... என்ன சொல்றே...''

''வேண்டாம்... சாது... நான்தான் சொன்னேனே... இரண்டு நாளில் சரியாகி விடும்னு... நான் அங்கு வந்தால்... நாலைந்து நாள் இருக்கிற மாதிரி வரணும்... இல்லா விட்டால் வீண்... பயணத்திலே பாதி நேரம் போயிடும். சரி... நீங்க புறப்படுங்க... சாதனா... அப்பப்ப... உன் அண்ணலைப் பற்றி என்னிடம் சொல்... கொஞ்சம் கவனத்தோட அவரிடம் பேசுங்கள் என்ன.''

அவர்கள் புறப்பட்ட டாக்ஸி கண்ணிலிருந்து மறையும் வரை கையசைத்துக் கொண்டிருந்தாள் மீரா... ஏனோ அவள் உள்ளம் கனத்தது... வேதனையோ... வீட்டினுள் நுழைந்தபோது நந்தகுமாரின் முகத்தில் மலர்ச்சி...

கல்பனா பூஜை அறைக்குள் சென்று கண் மூடி வேண்டிக் கொண்டு.. விபூதி டப்பாவை எடுத்து வந்தாள்.

விபூதியை அவனது நெற்றியில் பூசிவிட்டு...

''யாருடைய திருஷ்டியோ... இல்லை... கெட்ட நேரமே எல்லாம் போய்.. பழைய சந்தோஷத்துடன் நீ இரு வேண்டும்... ஈசுவரா... உன் கருணை இருக்கட்டும் என்றாள் அவள்.

''அவ்வளவுதானே... அண்ணா... காலேஜில் படிக்கிறபோது கொட்டமடிப்போமே... அம்மா அலறுவாளே என்ன இது காட்டுக்கத்தல்... தலை வீங்குகிறதுன்னு... மறுபடியும் அதை ஆரம்பித்து விடுவோமா... அம்மா தான் 'பர்மிஷன்' கொடுத்தாச்சே... என்னம்மா... சொல்றே... அப்புறம் என் தலை வீங்குகிறது... வெடிக்கப் போகிறது என்று கத்தக்கூடாது...'' குறும்பாய் சொன்னாள் மகள்.

''கல்யாணமாகி புகுந்த வீட்டுக்குப் போக வேண்டியவ... பேசற பேச்சாடீ... கொட்டமடிக்கிறாளாம்... கொட்டம்.''

''ஏன்... கல்யாணம்னா... ஜாலியாக இருக்கக் கூடாது என்று சட்டம் இருக்காம்மா... அண்ணா... அம்மாவோட பேச்சைக் கண்டு கொள்ளாதே... சரியான பழம் பஞ்சாங்கம்... கட்டுப் பெட்டி... பத்தாம் பசலி... நாம் ஜாலியா 'என்ஜாய்' பண்ணி ஜமாய்ப்போம்... என்ன சொல்கிறாய்... கர்நாடகமான பேச்சையெல்லாம் காதில் போட்டுக் கொள்ளவே கூடாது...''

''எல்லாம் வாய் கொழுப்புடீ... எல்லாம் என்கிட்டே தான் நடக்கும்... அங்கே... மாமியார் வீட்டுக்குப் போனதும் 'கப்சிப்' என்று இருப்பே... அப்போ சொல்கிறேன்'' முறைத்து விட்டு சென்ற தாயைப் பார்த்து அவள் சிரிக்க... கூடவே நந்தகுமாரும் சிரித்தான்... அவனது சிரிப்பைப் பார்த்துவிட்டு மனம் குளிர்ந்தது சாதனாவிற்கு... அம்மாவை வேண்டும் என்றே வம்புக்கு இழுத்த காரணமே அதற்கு தானே... அண்ணாவின் முகத்தில் அந்தச் சிரிப்பு நிலைத்து நிற்க வேண்டும் என்று வேண்டியது உள்ளம்.. ஆனால்...






கண்ணாடி பாத்திரத்தைக் கையாளுவது போல என்னதான் பார்த்து நடந்து கொண்டாலும்... விதியின் விளையாட்டே வேறாய் இருக்கிறதே...

பெற்றவர்களும்... சகோதரிகளும் நந்தகுமாரின் மனம் சுருங்காமல் அதி ஜாக்கிரதையாய் வார்த்தையாடி... அவன் உள்ளம் சோர்வு அடையாமல் வேடிக்கையாய் பேசி... நடந்து முடிந்த கசப்பான நினைவுகளை மறக்கடிக்க முயன்றனர்...

அவனும் பழைய நந்தகுமாராய் மீண்டு வந்தபோது தான் அந்த அழைப்பிதழ் வந்து சேர வேண்டுமா.

வீட்டுக்குள் நுழைந்த சாதனா... வீட்டில் நிலவியிருந்த ஆழ்ந்த மௌனத்தைக் கண்டு வியந்தாள்... என்றும் இல்லாத அமைதி ஏன்...

நந்தண்ணா வந்த பிறகு வீட்டின் சூழ்நிலையில் கொஞ்சம் மாற்றம்...

அண்ணாவின் பொழுது போக்கிற்காக ஏதாவது ஒரு ஆங்கிலப் படம் ஓடும்... அல்லது எஃப்.எம். அலறும்.

இரண்டும் இல்லாவிட்டால் கேசவமூர்த்தி மகனுடன் கேரமோ.. 'செஸ்'ஸோ ஆடுவார்.

எதுவும் இல்லை என்றால்... கையில் ஒரு புத்தக துடன் காத்திருப்பான். அவனது சிந்தனையில் ஃபிளா

பேச் வரவே கூடாது என்ற எண்ணம்தான் அனை வருக்கும்... இன்று டி.வி.யில் எதுவும் ஓடவில்லை... எஃப்.எம். அலறவில்லை... அண்ணனும் கண்ணில் படவில்லையே... ஒருவேளை தூங்குகிறானோ... ஊகூம்... இந்த நேரத்தில் அது வழக்கம் இல்லையே...

சரி... அப்பாவையும் காணோம்... அம்மா எங்கே... யோசனையுடன் அம்மாவைத் தேடினாள்.

பின் கட்டில் துணியைக் காயப்போட்டுக் கொண்டிருந் தாள் கல்பனா.

''என்னம்மா செய்றே... இப்போ துணியைக் காயப் போடுகிறாயா...'' என்று கேட்டாள் மகள்.

''காலையில் இருந்து வேலை சரியாக இருக்கு... சாப்பிட்டதும் கொஞ்சம் படுத்து விட்டேன்.. இப்பத்தான் எனக்கு நேரம் கிடச்சதும்மா...''

''ஆமாம்... அண்ணா தூங்குகிறானா... சத்தமே காணோம்.''

''ஊகூம்... அவன் அறையில் இருக்கிறான்... கொஞ்சம் மூட் அவுட்டாய் தெரிகிறான்... என்னன்னு தெரியல்லே.''

''நீங்க ஏதாவது பேசினீர்களா... பழசைப் பத்தி...''

''என்னடீ இது... நாங்க ஏன் பேசப் போகிறோம்... திடீர்னு 'மூட் அவுட்...' ஆங்... சொல்ல மறந்துவிட் டேனே... இன்னைக்கு 'போஸ்டி'ல் அவன் பெயருக்கு ஒரு 'இன்விடேஷன்' வந்தது... அதைப் பார்த்ததும் முகம் இறுகிப் போனது... அப்புறம் எதுவும் பேசவில்லை... போய்... அறைக்குள் முடங்கி விட்டான்... ஏன்னு தெரிய வில்லையே...''

''எங்கே அந்த 'இன்விடேஷன்.'''



''டீபாய் மேல் இருக்கு... பார்.''

சாதனா அந்த அழைப்பிதழை எடுத்துப் பார்த்தாள்.

திருமண அழைப்பிதழ்!

மணமக்கள் ஸ்வாதி... சுரேஷ் குமார் என்று இருந்தது.

சாதனா பதறிப் பானாள்.

அய்யோ... அண்ணா தேறி வரும் வேளையில் இது ஏன் வந்தது...

அண்ணா சுருண்டு போனதில் வியப்பே இல்லை... உதறிச் சென்ற காதலிக்கு திருமணம் என்ற செய்தி அவனை ஒடுங்க வைத்து விட்டது போலும்.

ஏற்கனவே ரணமாகிப் போயிருக்கும் உள்ளத்தில் சூட்டுக்கோலை நுழைத்ததுபோல் இருக்குமே...

நினைக்கையில் இதயம் வலித்தது. மறுபடியும் பழைய நிலைக்கு போய் விடுவானோ என்ற பயமும் வந்தது.

இப்போது என்ன செய்வது... பதட்டமும் ஒன்று சேர... தவித்தாள்.

உடனே மீராவிடம் பேச வேண்டும்... இதைப்பற்றி சொல்ல வேண்டும்.. அவளது ஆலோசனை கேட்க வேண்டும்...

மீராவிடம் பேசினாள்.

''என்ன செய்வதுன்னு தெரியல்லே மீரா... இப்படி நடக்கும் என்று நினைக்கவில்லை...'' என்றாள் தோழி யிடம்.

''என்றைக்கு கல்யாணம்'' என்று விசாரித்தாள் மீரா.

''வர்ற புதன்கிழமைடீ...''

''சரி... உன் அண்ணாவை அந்தக் கல்யாணத்திற்கு அனுப்பி வைடீ...''

திகைத்துப் போனாள் சாதனா...

''என்ன... விளையாடுகிறாயா மீரா...''

''ஆமாம்... எனக்கு வேலை எதுவும் இல்லை பார்... அதான் உன்னுடன் விளையாடுகிறேன்... நான் சொல்கிற படி செய் சாதனா... உன் அண்ணாவுக்கு நிதர்ஸனத்தை எதிர்கொள்ள வேண்டிய மனதிடம் வரணும்... இது கசப்பு மருந்து சாப்பிடுகிற மாதிரிதான்... என்னை நம்புடீ...''

''எனக்கு என்னவோ பயமாக இருக்கிறதடீ... இது எதிர் மறையாக முடிந்து விட்டால்...''

''கவலைப்படாதே... அப்படி நடக்காது... சரி... செவ்வாய்கிழமை நான் அங்கு வருகிறேன்... ஓ.கே... இதை என்னிடம் விட்டுவிடு... சாதனா...''

சரியென்றாலும்... மனசுக்குள் பதைப்புத்தான் அவளுக்கு. கடவுளே... இப்போதுதான் பழைய மாதிரி சிரித்த முகமாய் வளைய வருகிறான் அண்ணா... தன் காதலியைத் திருமணக் கோலத்தில் பார்த்தால்... திரும்பநத்தையாய் சுருண்டு கொள்வானே...

மீரா என்னவோ தைரியமாய் அனுப்பு என்கிறாளே. இது சரிப்படுமா... குழம்பினாள் அவள்.

அதே குழப்பத்துடன் மறுநாள் காலை ஆபீஸுக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தாள்... அவளிடம் ஏதோ சொல்ல வந்தாள் கல்பனா.

''என்னம்மா... ஏதாவது சொல்ல வேண்டுமா.''

கூந்தலை 'கிளிப்'பில் அடக்கியவாறு கேட்டாள் மகள்.



''நிச்சயதார்த்தத்திற்கு நாள் குறிச்சாச்சும்மா... வர்ற மாதம் பதினைந்தாம் தேதி நிறைந்த முகூர்த்த நாளாம். அதுக்கு... மாப்பிள்ளைக்கு மோதிரம்... டிரஸ் எல்லாம் வாங்க வேண்டும்.''

''அடுத்த மாதம் தானே... இன்னும் நிறைய நாள் இருக்கேம்மா... எதுக்கு அவசரப் பட்றே... நிதானமாய் போய் வாங்கலாம்...''

''நிறையவா... போடீ... 'விசுக்'குன்னு நிமிஷமா பறந்து விடும். ஒவ்வொண்ணா.... சிரத்தையா பண்ண வேண்டும்... அதுக்கு உடனே ஆரம்பிக்கணும்டீ... வர்ற வெள்ளிக்கிழமை நல்ல நாளா இருக்கு.. போய் வாங்கி வந்து விடலாம்னு சொல்கிறார் உன் அப்பா...''

''உங்க இஷ்டம்மா... போய் வாங்கி வந்து விடுங்களேன்...''

''ஏன்... நீ வரப் போறதில்லையா...''

''ப்ச்சு... நான் எதுக்கும்மா... எனக்கு நேரமும் இல்லை... இதுக்கெல்லாம் என்னை அழைக்காதே ம்மா... ப்ளீஸ்...'' கெஞ்சும் குரலில் சொன்னாள் பெண்.

''ஏண்டி... நீ கட்டிக்கப் போறவனுக்கு வாங்கப் போகிறோம். அதை நீ 'செலக்ட்' பண்ண வேண்டாமா'' என்றாள் அன்னை...

''அதெல்லாம் தேவையில்லை... மாப்பிள்ளை தேர்வை உங்களிடம் விட்ட மாதிரி... இந்தபொறுப்பையும் உங்களுக்கே விட்டாச்சு... ஜமாயுங்கம்மா...''

''என்ன பொண்ணுடீ... கல்யாணம் என்றதும் காலில் சலங்கைக் கட்டிக் கொள்ளாத குறையாய் 'தை தை'ன்னு குதிக்கிறாங்க இந்தக் காலத்துப் பொண்ணுகள்... என்

கல்யாணத்துக்கு அது வாங்கணும்... இது வாங்கணும்னு அலையறதையும் பார்க்கிறேன்... நீ என்னடான்னா... எருமை மாட்டு மேலே மழை பெய்யற மாதிரி அசிரத்தையா பேசறே... ஏண்டி... உனக்கு இந்தக் கல்யாணத்தில் இஷ்டம் இல்லையா... சொல்லிடு...''

''அய்யோ... அம்மா... பெரியவங்களுக்கு மரியாதைக் கொடுத்து... நீங்களே பார்த்துச் செய்யுங்கள் என்று சொல்றது கூடத் தப்பா... ஏம்மா... சும்மா நொய் நொய்ங்கறே... ஆபிஸில் மறுபடியும் லீவு கேட்கவும் முடியாது... பர்மிஷன் தான்... அதுவும் அடிக்கடி கேட்க முடியாது... அதான்... நீங்களே 'ஷாப்பிங்' செய்து விடுங்கள் என்றேன்...''

''சரி... கல்யாணத்திற்கும் இதே பேச்சுத்தானா. அதுக்கும் லீவு கிடையாதாக்கும்...'' கிண்டலாய் கேட்டாள் தாய்.

''முதலில் நிச்சயதார்த்தம் நல்லபடியாய் நடக்கட்டும்மா. அப்புறம் கல்யாணம் விஷயத்துக்கு வருவோம். ஆபீஸுக்கு புறப்படும் வேளையில் கண்டதெல்லாம் பேசி என் 'மூட்'டை கெடுக்காதம்மா... நான் புறப்படணும்'' கெஞ்சுவது போலச் சொன்னாள் மகள்.

''ஏண்டி... இது உன் திருமண விஷயம்... உன்னோட வாழ்க்கைப் பிரச்சனைடீ... இது உனக்கு கண்டதெல்லாமா... சரியாப் போச்சு... உன்கிட்டே பேச வந்தேன் பார்... என்னைச் சொல்லணும்...'' கோபத்துடன் சொன்னாள் கல்பனா.

''நான் வர்றேன்'' என்று புறப்பட்டாள் சாதனா.

''இரு... இரு... சாப்பாட்டு கேரியர் எடுத்து வைத்துக் கொண்டாய் தானே... நீர் பாட்டில்... ஜாக்கிரதையா போய்



வா... பர்ஸ் எடுத்துக் கொண்டாயோ...'' இதுதான் அம்மா... சிரித்துக் கொண்டே புறப்பட்டாள் அவள்.

ஆபீஸில் தலைக்கு மேல் வேலைகள்...

அவற்றில் மூழ்கியிருந்தவளிடம் தங்கவேலு வந்து சொன்னான்... ''சாதனாம்மா... உங்களைப் பார்க்க யாரோ ஒருத்தர் வந்திருக்கிறாங்க...''

''என்னையா... யார் அது தங்கவேலு...'' என்று வினவினாள் சாதனா.

''தெரியாதம்மா... யாரோ பாலகிருஷ்ணனாம்...!''

''பாலகிருஷ்ணன்...!'' அவரா... வியப்பில் புருவங்கள் வில்லாய் வளைந்தன...

இன்னும் நிச்சயதார்த்தமே நடக்கவில்லை. அதற்குள் உரிமையாய் பார்க்க வந்துவிட்டாரா என்ன... எழுந்து சென்றாள்.

அவளைப் பார்த்துவிட்டு எழுந்து நின்றான் பாலகிருஷ்ணன்.

''சாரி... வேலை செய்யும்போது தொந்திரவு கொடுத்து விட்டேனா...'' என்று கேட்டான் அவன்.

''அதெல்லாம் இல்லை... உட்காருங்கள்'' என்றாள் அவள்.

அதே நேரம்... சுமதியிடம் தங்கவேலு சாதனாவைப் பார்க்க வந்த விசிட்டரைப் பத்திச் சொல்லிக் கொண்டு இருந்தான்.

''யாரு... பாலகிருஷ்ணனா... மெரின் இன்ஜினியர் என்றாரா... அடடா... அவர்தான் தங்கவேலு... சாதனாவோட வருங்காலக் கணவர்... அவளைப் பார்க்கும் ஆர்வத்தில் இங்கேயே வந்துவிட்டார் போல... இரு... நான் போ

கொஞ்சம் கிண்டலடித்துவிட்டு வருகிறேன்'' என்று எழுந்து சென்றாள் அவள்.

சாதனாவிடம் ''ஏன் சாதனா... எனக்கு உன் 'ஃபியான்ஸி'யை அறிமுகப்படுத்த மாட்டாயா...'' என்று கேலி செய்ய...

சாதனா அவளை அறிமுகப்படுத்தி வைத்தாள்.

''என்ன சார்... வந்த சில மாதங்களில் எங்க சாதனாவைக் கொத்திக் கொண்டு போகப் பார்க்கிறீர்களே... மெரின் இன்ஜீனியர் என்றால் கடல் வாசம் ஜாஸ்தி... சாதனாவையும் அழைத்துச் செல்வீர்கள்தானே...''

சுமதியின் பேச்சைக் கேட்டு சங்கடத்தில் நெளிந்தான் பாலகிருஷ்ணன்...

இந்த மாதிரிப் பேசுவது அவனுக்குப் பிடிக்கவில்லையோ... சுமதியின் கையைத் தட்டி ''உஷ்... சும்மா இருடீ... அவர் கொஞ்சம் 'ரிஸர்வ்ட்' 'டைப்...'' என்றாள் சாதனா.

''அட.... பாருடா... இப்பவே இவருக்கு வக்காலத்து வாங்கறதை...'' என்று பரிகாசம் செய்தாள் சுமதி...

அதே சமயம்... தங்கவேலுவின் உபயத்தால் சாதனாவின் வருங்கால வாழ்க்கைத் துணைவன் அவளைத் தேடி வந்திருக்கிறான் என்ற சேதி பரவி விட... அலுவலகத்தின் மகளிர் அணி அந்த இடத்திற்கு படையெடுத்து வந்தது. அவர்களையும் அறிமுகப்படுத்தினாள் சாதனா.

அவர்களைப் பார்த்ததும் பாலகிருஷ்ணனின் முகம் சிவந்து போனது. அவன் இதை எதிர்பார்க்கவும் இல்லை...

சாதனாவை தனியே அழைத்துப் பேச வேண்டும் என்ற நோக்கத்துடன் வந்தவனுக்கு இது அதிர்ச்சிதான்.



தடுமாற்றத்துடன் ''நான் புறப்படுகிறேன்'' என்றான் அவன்...

''என்ன கொடுமை சார்... இத்தனை தூரம் வந்து விட்டு அப்படியே புறப்பட்டு விடுவதா... உங்க வருங்கால மனைவியை எங்கேயாவது அழைத்துப் போய் தனிமையில் இனிமையாய் பேசாமல்... அதெப்படி... போவீர்களாம்.. ஏதாவது நல்ல ஓட்டலுக்கு போய் ரெண்டு பேரும் ஐஸ்கிரீமோ... ஜூஸோ சாப்பிட்டு விட்டு வாங்க சார்... ஓ... எங்கே நாங்கல்லாம் கரடிகளாய் உடன் வந்து விடுவோம் என்ற பயமாக்கும்... ஊகூம்... சத்தியமா நாங்க வரமாட்டோம். ஜாலியா ஒரு 'ரவுண்ட்' அடித்து விட்டு வாங்க...'' வாயாடியான ஒருத்தி சொல்லவும்... 'குபீர்' என்று சிரிப்பு அங்கே...

பாலகிருஷ்ணனின் முகத்தில் அசடு வழிந்தது போல தெரிந்தது சாதனாவிற்கு...

எப்படிச் சமாளிப்பது என்று புரியாமல் அவள் விழித்துக் கொண்டிருக்கும்போதுதான் ஏதோ அவசர வேலையாய் போய் விட்டு வந்த சரத்சந்திரன் ஆபீஸுக்குள் நுழைந்தது.

புது ஆள் ஒருத்தரும்... அவரைச் சுற்றி மகளிர் கூட்டம் நின்று அரட்டை அடித்துக் கொண்டிருப்பதைக் கண்டு அவன் முகத்தில் வியப்பு... என்ன நடக்கிறது இங்கே...

''சார்... இவர்தான் சாதனாவோட 'ஃபியான்ஸி' மிஸ்டர் பாலகிருஷ்ணன்... மெரீன் இன்ஜினியர்...'' என்று அறிமுகப்படுத்தினாள் வசந்தி.

சரத்சந்திரன் முகத்தில் இப்போது அதிர்ச்சி தெரிந்தது சில வினாடிகள் தான்... அதற்குள் முகபாவத்தை மாற்றி கொண்டு தன் கரத்தை நீட்டினான்.

ஏன் இப்படியெல்லாம் நடக்கிறது... எதற்காக இந்த பாலகிருஷ்ணன் இங்கே வரவேண்டும்... சே... உள்ளுக்குள் குமைந்து... புழுங்கினாள் சாதனா.

இனிமேல் இங்கெல்லாம் வந்து பேசக்கூடாது என்று கறாராய் இவரிடம் சொல்லிவிட வேண்டும்...

இவருக்கோ அனைவரிடத்திலும் சகஜமாய் பழகத் தெரியவில்லை... 'ஜோவியல்' என்றால் என்ன என்று கேட்பார் போலும்.

இந்தக் காலத்தில் இப்படி உம்மண்ணா மூஞ்சியாய் இருப்பதும் விநோதம்தான்...

இந்த அம்மாஞ்சியையா நீ கட்டிக்கப் போகிறாய் என்று கேட்பது போல் இருந்தது... சரத்சந்திரன் பார்வை... உள்ளுக்குள் குன்றினாள் அவள்.

''ஐம் சரத்சந்திரன்... எம்.டி... மிஸ் சாதனா வெட்க மிகுதியில் என்னைப் பற்றிச் சொல்ல மறந்து விட்டார்கள் என்று நினைக்கிறேன்...'' என்றபோது தான் தன் தவற்றை உணர்ந்தாள்.

ஒரு பரிதவிப்புடன் இருவரையும் பார்த்தாள்.

அவளையும் அறியாமல். பாழும். மனம் இருவரையும் ஒப்பிட்டுப் பார்த்தது.

பாலகிருஷ்ணன் 'அழகன்' என்று சொல்ல முடியாது தான்... ஆனால் அவலட்சணம் இல்லை... அப்படி இருந்தால் வேண்டாம் என்றிருப்பாளே...

ஆனால்...

இப்போது... சரத்சந்திரன் முன்னே இன்னும் சுமாராகத் தெரிந்ததை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்...



பாலகிருஷ்ணன் எதிரே, சரத்சந்திரன்... பூரண சந்திரனைப் போல பிரகாசித்தான் என்பதை முழு மனதாய் ஒப்புக் கொண்டது உள்ளம்.

உயரத்திற்கு ஏற்ற உடல் கட்டு... நல்ல நிறம்... முக வசீகரம்... கருமையான... அடர்த்தியான... அலை அலையான கேசம்... ஜொலிப்பையும்... எதிர்ப்பையும் மாறி மாறி காட்டும் கண்கள்... புன்னகை சிந்தி... மனதை வசப்படுத்தும் அந்த உதடுகள்... ஏதோ சொல்லிக் கொண்டே சாதனா பக்கம் திரும்பியவனின் கணகளில் மினுமினுப்பு... புருவங்கள் உச்சியைத் தொட்டுத் திரும்பின... உதடுகளில் ஒரு விஷம சிரிப்பு வேறு... அதன் காரணமும் புரிந்தது.

பார்வையைத் திருப்பிக் கொண்டாள் சாதனா... அவளுக்கு அவமானமாய் இருந்தது. அவனைப் பார்த்துக் கொண்டு நின்றதை வேறு அர்த்தத்தில் எடுத்துக் கொண்டிருப்பான்...

உண்மையும் அதுதானே.. கட்டிக் கொள்ளப் போகும் கணவன் அருகே இருக்க... அவனைப் பார்க்காமல்... சரத் சந்திரனின் அழகை ஆராய்ந்ததும் மகா தப்புதான்.... அதை எப்படி எடுத்துக் கொண்டானோ... சே... மகாக் கேவலம்!

அந்த நினைப்பில் உடம்பெல்லாம் கூசிப் போனது.

சரத் சந்திரன் அங்கிருந்து நகர்ந்ததும் மூச்சை இழுத்து விட்டாள்... அதுவரை மூச்சு முட்டிக் கொண்டிருந்தது போல இருந்த உணர்வு 'சட்'டென்று விலகியது...

''எனக்கு நேரமாகிவிட்டது. பிறகு சந்திப்போம்'' என்று முணுமுணுத்து விட்டுக் கிளம்பினான் பாலகிருஷ்ணன்

அவனுடன் தனிமையில் பேச முடியவில்லையே என்ற ஏக்கம் எழவில்லையே ஏன்... அவளுக்கு அது வியப்பாக இருந்தது.

போகப்போகச் சரிப்படும் என்று சமாதானமடைந்தாள்.

இருந்தும்... ஏனோ அவளால் மும்முரமாய் வேலை பார்க்க இயலவில்லை... பாலகிருஷ்ணனின் வருகையா... சரத்சந்திரனின் பேச்சா... இருவரையும் ஒப்பிட்டுப் பார்த்ததில் எழுந்த குற்ற உணர்வா... இல்லை... சரத் சந்திரனின் குறுகுறுத்த பார்வையா... எதனாலோ அவளது மனதில் பதட்டமும்... சஞ்சலமும்...

''ஒரு விஷயம் சொல்லட்டுமா... சாது.. உன் அவர் அப்பிராணி மாதிரி தெரிகிறார்டீ... பேசக் காசு கேட்பார் போல... கலகலப்பு இல்லையேடீ... நீ அவரை மாற்ற ணும்... இல்லா விட்டால் வாழ்க்கை போர் தான்.''

சுமதி பாதி கேலியாய்... பாதி சீரியஸாய் சொல்ல... அதை ஒரு வறட்டுப் புன்னகையுடன் ஏற்றுக் கொண்டாள்.

''எப்போ கல்யாணம்டீ... ஃபிக்ஸ் ஆகிவிட்டதா'' என்று கேட்டாள் தோழி.

''இன்னும் இல்லை... ஆமாம்... உன் விஷயம் என்ன வாயிற்று...'' பதிலக்கு வினவினாள் சாதனா.

''அது அடங்கிப் போச்சு... இனி என் திருமணப் பேச்சை எடுக்கவே கூடாது என்று சொல்லவிட்டேன்... வீட்டில் 'கப்சிப்' ஆகிவிட்டது... அப்பாடா.. நிம்மதி...'' சிமிட்டி னாள் சுமதி.

அவளின் நிம்மதி தனக்கு இல்லையோ என்ற சந் தேகம் சாதனாவுக்கு வந்தது உண்மைதான்.






குழம்பித் தவித்த மனதிற்கு மீராவின் வரவு இதமாக தெரிந்தது... அவளைப் பார்த்ததும் முகம் தாமரையாய் மலர்ந்தது சாதனாவிற்கு...

அவள் மட்டுமா...

நந்தகுமாரும்தான்... மீராவைப் பார்த்த மகிழ்ச்சியில் அவனது கண்கள் பளிச்சிட்டன.

''என்ன மீரா... இந்த திடீர் வருகை...'' என்று அவளைக் கேட்டான் நந்தகுமார்.

''ஏன் வரக்கூடாதா... நந்து... உங்கள் எல்லோரையும் பார்க்க வேண்டும் போல இருந்தது வந்தேன்... சரி... எப்படி இருக்கீங்க நந்து...'' என்று நலம் விசாரித்தாள் அவள்.

''அம்மாவுக்கு இன்னும் குழந்தையாகவே இருக்கேன் மீரா... எனக்கு ஊட்டாத குறைதான்...''

''பார்த்தாலே தெரிகிறது... அம்மாவின் கையால் சாப்பிட்டு நாலு கிலோ ஏறியிருப்பது போல இருக்கு...''

பரிகாச குரலில் சொன்னாள் அவள்...

தனிமையில் தோழிகள் இருவரும் நிறையப் பேசினார் கள். பாலகிருஷ்ணன் தன்னைப் பார்க்க வந்ததை அவளிடம் விவரமாய் சொன்னாள்... எதுவும் சொல்லா மலே அவன் போய் விட்டதையும் கூறினாள் சாதனா.

இரவு சாப்பிட்டதும் நந்தகுமாரிடம் வந்து பேசினாள்.

''சுவாதிக்கு திருமணமாமே... போகப் போகிறீர்களா...?''

''ப்ச்சு... எனக்குப் போகப் பிடிக்கவில்லை...''

''ஏன்... இன்னும் அவளது நினைப்பிலேயே இருக்கிறீர்களா நந்து...''

''இல்லை... மீரா... என்னைப் பொறுத்த வரையில் இந்தக் கல்யாணம் முக்கியமாகப் படவில்லை...''

''நோ.. நோ... இந்தக் கல்யாணத்திற்கு நீங்க போக வேண்டும் நந்து... அவளைக் காதலி என்பதை மறந்து விட்டு... உங்களுடன் படித்த சிநேகிதி என்று நினைத்துச் செல்லுங்கள்.''

நந்தகுமார் மௌனமாய் இருந்தான்.

''ஒன்று செய்யலாம் நந்து... நானும் வருகிறேன்... உங்களுடன்... நாம் இருவரும் போகலாம்... அந்த சுவாதியை நானும் பார்க்க வேண்டும்...'' என்றாள் மீரா...

''எனக்கு அங்கே போகப் பிடிக்கவில்லை மீரா... எதுக்கு வீண் அலைச்சல்... விடும்மா...''

''இல்லை நந்து... அந்தக் கல்யாணத்திற்கு நாம் போகிறோம்... போய் சுவாதியை நாம் வாழ்த்துகிறோம்... அவ்வளவுதான்...'' உறுதியாய் சொன்னாள்.

ஆனால் சாதனாவிற்கு தான் உதறலாய் இருந்தது.

''எனக்கென்னவோ இது விஷப் பரிட்சைன்னு தோன்றுகிறது மீரா... பயமாக இருக்குடீ...'' என்றாள் பதட்டத்துடன்..

''என் மீது உனக்கு நம்பிக்கை இல்லையா.. சாது... இதுவும் ஒரு மாதிரியான 'ட்ரீட்மெண்ட்' என்று வைத்துக் கொள்ளேன்..'' மீரா தைரியம் சொன்னபோதும் படபடப்பு தீரவில்லை.



இருவரும் ரிசப்ஷனுக்கு புறப்பட்டபோது... நந்தகுமார் வேண்டா வெறுப்பாகச் சென்றான்.

பிரம்மாண்டமான கல்யாண மண்டபம்... செல்வந்தர்களுக்காகவே கட்டப்பட்டது...

பூக்களால் ஜோடிக்கப்பட்ட சுவாதியின் பெயர் அவனைப் பார்த்து ஏளனமாய் சிரிப்பது போல இருந்தது... தோரணங்களாய் தொங்கும் மின் பல்புகள் 'ஏய்... ஏமாளி...' என்று கண் அடிப்பது போலவும் பிரமை...

மண்டபத்திற்குள் எங்கு பார்த்தாலும் ஆர்கிட் மலர். அலங்காரம்... எல்லாப் பக்கங்களிலும் பணக்காரத்தனம். மேடையில் அலங்கார பொம்மையாய் நின்றிருந்தாள். சுவாதி... அருகே... விலையுயர்ந்த சூட்டில் கம்பீரமாய் தெரிந்தான் மாப்பிள்ளை... கோடீசுவரனோ... முகம் சுளித்தான் நந்தகுமார். அதை ஓரக் கண்ணால் கவனித்தாள் மீரா. அவனைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள் அவள்...

ஏதோ முள் இருக்கையில் அமர்ந்திருப்பது போல... தவிப்புடன் நெளிந்தான் அவன்...

மீராவும் சுவாதியைப் பார்த்துவிட்டு உதட்டை சுளித்தாள். நந்தகுமாரை உதறியவள் இவள்தானா... அருகே... கணவன் என்ற உரிமையை பெற்றவன்... அப்படியொன்றும் லட்சணமில்லை... சுமார்தான்.

ஆனால் பணம் படைத்தவன் ஆயிற்றே... அந்த அந்தஸ்து இருந்தால் போதுமே... பத்தும் செய்கிற பணம் ஆயிற்றே.

பித்துப் பிடிக்க வைக்காதா என்ன.

மேடையையே வெறித்துக் கொண்டு இறுக்கத்துடன் அமர்ந்திருந்தவனிடம்... ஏதேதோ வேடிக்கையாய் பேசி அந்த இறுக்கத்தை தளர்த்த முயற்சித்துக் கொண்டிருந்தாள் மீரா...

புழுவாய் தவித்த நந்தகுமார் அவளிடம் ''போய் விடலாம் மீரா...'' என்றான்.

''ஏன் நந்து... சுவாதிக்கு வாழ்த்துச் சொல்ல வேண்டாமா... அது நன்றாக இருக்காதே...'' என்றாள் பதிலுக்கு.

''எனக்கு இங்கே இருக்கப் பிடிக்கவில்லை... உன் வற்புறுத்தலுக்காகத்தான் நான் வந்தது. அவனைப் பார்க்கணும்னு வந்தே... பார்த்தாகி விட்டது. இல்லையா... போய் விடலாம்... வா...''

''இன்னொருத்தனுக்கு மனைவியானாள் என்ற பொறாமையா நந்து...'' விடாமல் கேட்டாள் மீரா. இல்லை என்று தலையசைத்தான் அவன்.

''பின்னே...''

''இவளையா நான் காதலித்தேன் என்ற வெறுப்பு... என் மீதே கோபம்... என் மீது நம்பிக்கை இல்லாத ஒருத்தியை நான் ஆசைப்பட்டேனே என்ற எரிச்சல்...''

''அப்போ... இப்ப அவள் மீது உங்களுக்கு காதல் இல்லை. அப்படித்தானே...''

''அது என்றோ செத்துவிட்டது மீரா... இப்போ அவள் யாரோ ஒருத்தியாக எனக்குத் தெரிகிறாள் அவ்வளவு தான்.''

''அப்போ என்ன... வாங்க நந்து... உங்களுடன் படித்த யாரோ ஒருத்தியை... சக மாணவியை வாழ்த்திவிட்டு...



இந்த 'பொக்கே'யை கொடுத்து விட்டுப் போகலாம். அட... எழுந்திருங்கள் நந்து.'' அவனது கரத்தைப் பிடித்து இழுத்துக் கொண்டு நடந்தாள் மீரா.

வரிசையில் பொறுமையாக நின்று... மேடை ஏறி... மணமக்களை அணுகி... பூங்கொத்தை சுவாதியிடம் நீட்டியபோது சுவாதியின் முகத்தில் வியப்பு தெரிந்தது.

''வாழ்த்துக்கள்'' என்று சம்பிரதாயமாய் கூறியது அவனது வாய்.

மீராவும் புன்சிரிப்புடன் வாழ்த்துக் கூற... இவள் யார் என்பது போல அவனைப் பார்த்தாள் சுவாதி.

''சுவாதிக்கு நான் யார் என்று அறிமுகப்படுத்தவில்லையே நந்து...'' என்று மீரா சொல்லவும்... அவளது கரத்தை எடுத்து தன் கரத்தினுள் அடக்கிக் கொண்டு சொன்னான் நந்தகுமார்.

''இவள் மீரா... என் வருங்கால மனைவி. என் மீது அளவற்ற அன்பும் நம்பிக்கையும் கொண்டவள். அந்த விஷயத்தில் நான் பாக்கியசாலி என்று சந்தோஷப்படுகிறேன்... மீரா... வா.. போகலாம்.''

''சார்... வீடியோ எடுக்கணும். கொஞ்சம் நில்லுங்க'' என்ற கூவல் காதில் விழாதது போல... அவளையும் இழுத்துக் கொண்டு மேடையிலிருந்து இறங்கினான்.

மீராவுக்கு முதலில் திகைப்பு... அது மின்னலாய் மறைந்து பதிலுக்கு சிரிப்பு வந்தது.

அவள் அதை எதிர்பார்க்கவும் இல்லை... திடீர் என்று அவன் இப்படிச் சொல்வான் என்று அவள் நினைக்கவும் இல்லை. அதனால் வந்த திகைப்பு...

பின் ஏன் என்ற காரணம் புரிந்ததால் வந்த சிரிப்பு...

ஒரு ஆண்மகன் தனக்குத் தோல்வியா என்ற நினைப்பில் துவளுவது இயல்பு... அதுவும் காதல் தோல்வி என்றால் சொல்லவே வேண்டாம்...

தன்னை வேண்டாம் என்றாளே என்ற ஆத்திரத்தில் அடிபட்ட 'ஈகோ'வை நிமிர்த்த... நீ இல்லாவிட்டால் என்ன... என்னைப் புரிந்து கொள்ள ஒருத்தி கிடைத்து விட்டாள் என்று காட்டும் துடிப்பு... அதற்காகத்தான் அப்படிச் சொல்லியிருக்கிறான் என்று உணர்ந்ததும்... மனநல மருத்துவரான அவளுக்கு அது சிரிப்பைத் தந்தது... அவனது பேச்சையும் சீரியஸாய் எடுத்துக் கொள்ள வில்லை...

வீடு வந்து சேரும் வரை இருவரும் பேசிக் கொள்ள வில்லை. சாதனாவிடம் நடந்ததை எடுத்துரைத்தாள் மீரா.

''இதை நானும் எதிர்பார்க்கவில்லை சாது... உன் அண்ணா இப்படிச் சொல்வார் என்று சத்தியமாய் நான் நினைக்கவே இல்லை... ஆனால் எப்படியோ சமாளித்து விட்டு வந்தேன்.. அந்த சுவாதியின் முகம் போன போக்கை பார்க்க நீ இல்லையே என்ற குறைதான் எனக்கு...''

ஆனால் சாதனாவின் காதில் அவை விழுந்ததாய் தெரியவில்லை... அவள் தீவிரமாய் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

அண்ணா சமாளிப்புக்காக சொன்னானா... இல்லை... உள்ளத்தில் இருந்ததை வெளிப் படுத்தினானா... என்று குழம்பினாள்...

அதையும் மீறி ஒரு சந்தோஷம்... அடடா... இதை ஏன் நான் முன்னமேயே யோசிக்காமல் போனேன். அண்ணாவை வாழ வைத்தவள் மீரா... அவளுக்கு நன்றிக் கடன் பட்டிருக்கோம் என்ற குறுகுறுப்பு இருந்து கொண்டே



இருக்கிறது. அந்த நன்றிக் கடனை இப்படித் தீர்த்துக் கொண்டால்...

அவளுக்கும் மறுவாழ்வு கிடைத்த மாதிரியும் இருக்குமே. ஊகூம்... முதலில் நந்தண்ணாவின் எண்ணத்தை அறிய வேண்டும்...

உண்மையிலேயே அவனுக்கு மீரா மீது அன்பு... இல்லை... இல்லை காதலா... இல்லை... காதலியை கல்யாணக் கோலத்தில் பார்த்த ஆத்திரத்தில்... ஏதோ ஒரு வேகத்தில் பேசி விட்டானா... அதைத் தெரிந்து கொண்ட பின்புதான் மற்றதெல்லாம்... அதுவரைக்கும் மூச்...

மீரா மறுநாளே கிளம்பிப் போனாள்... அதுவும் நல்லது தான் என்று நினைத்தாள் சாதனா.

அண்ணாவிடம் கொஞ்சம் மனம் விட்டுப்பேச வேண்டும். மீரா இல்லாமல் இருப்பது நல்லதுதான்.

அன்று இரவு உணவுக்குப் பின் அண்ணனைத் தேடிக் கொண்டு மொட்டைமாடிக்குச் சென்றாள்.

வீட்டினுள் மின்தடைக் காரணமாய் புழுக்கம் என்பதால் மாடியில் பாய் விரித்துப் படுத்திருந்தான்...

வேப்பமரத்து காற்று சுகமாய் வீசியது... காற்றில் ஆடிய இலைகளின் சலசலப்பு ராகமாய் தெரிந்தது.

அதை அனுபவித்தவாறு கண்களை மூடிக் கொண்டு படுத்திருந்தான் நந்தகுமார்.

''அண்ணா...'' என்று அழைத்தாள் சாதனா. கண்களைத் திறந்தான் அவன்.

''என்ன அதுக்குள் தூக்கமாக்கும்... எழுந்திரேன் உன்னிடம் பேசலாம் என்று வந்திருக்கிறேன்...''

எழுந்து அமர்ந்தான் அவன்.

''என்ன விஷயம் சாது... இப்படி என்னை எழுப்பிச் சொல்ல வேண்டும் என்றால் ஏதோ முக்கியமானதாய் இருக்கும்... அப்படித்தானே... உன் கல்யாண விஷயமா.''

''ஊகூம்... உன் காதல் விஷயம்...''

அவன் விழித்தான், காதலா...

''என்ன முழிக்கிறே... சுவாதியின் 'ரிஸப்ஷனில்' ஏதோ சொன்னாயாமே... மீராவை அறிமுகப்படுத்தும் போது... உண்மையா... இல்லை ஒரு சமாளிப்பிற்காக அப்படிச் சொன்னாயா...''

''அது... வந்து... சாதனா...'' என்று தடுமாறினான் நந்த குமார்.

''இதோ பார் அண்ணா... வெறும் சமாளிப்பிற்காக நீ சொல்லியிருந்தால்... அது தப்பில்லையா... ம்ம்... பாவம்... மீரா... அவளுக்கு அது வேதனையைத் தருமே என்று நீ யோசிக்கவில்லையேண்ணா... ஒரு பெண்ணிற்கு 'நோஸ் கட்' தர இன்னொருத்தியை 'யூஸ்' பண்ணிக் கொண்டது தப்பு... அதுவும் மீராவை என்பது மகா தப்பு... இது எனக்குப் பிடிக்கவில்லைண்ணா...''

ஒரு கணம் மௌனமாய் இருந்து விட்டு அவன் கேட்டான்.

''மீரா ஏதாவது சொன்னாளா சாதனா.''

''அவள் எதுவும் சொல்லவில்லைண்ணா... ஆனால் எனக்குத் தான் இந்த விஷயம் உறுத்தலாய் இருக்கிறது. ஏற்கனவே 'லவ் மேரேஜ்' பண்ணிக் கொண்டு அந்த வாழ்க்கையும் நிலைக்காமல் அந்த நினைப்பில் சோகமாய் இருந்தவள் மீரா... இப்போ... நீ எதையாவது அசட்டுத்



தனமாய் சொல்லி அவளது மனதைப் புண்படுத்தி விடுவாயோ என்று தான் பயப்படுகிறேன். நீ உண்மையை சொன்னாயோ... இல்லை ஒரு பேச்சுக்கு சொன்னாயோ எனக்குத் தெரியாது... அவளுக்கு இதில் சம்மதமா என்று அறியாமல் நீ பாட்டுக்கு 'பட்'டென்று சொல்லி விட்டாயே... இது உனக்கு சரியாகப் படுகிறதா நந்தண்ணா...'' படபடவென்று பொரிந்தாள் சாதனா.

''தப்புதான் சாதனா... ஏதோ ஒரு வேகத்தில் அப்படிச் சொல்லி விட்டேன். ஆனால் அது பொய் இல்லைடா... உண்மையைத்தான் சொன்னேன்... உண்மையிலேயே மீராவைத் தான் என் மனம் விரும்புகிறது சாது... என்ன அப்படிப் பார்க்கிறே... என்னடா. சுவாதின்னான்... இப்போ மீரா என்கிறானே என்றா... இல்லே சாது... சுவாதி மீது இருந்தது காதலே இல்லை... அதை அவளது திருமணத்தின் போது தான் உணர்ந்தேன்.. அந்தக் கணத்தில் நான் புரிந்து கொண்டது என்ன தெரியுமா.. சுவாதி இல்லாமல் என்னால் வாழ முடியும்... ஆனால் மீரா இல்லாமல் வாழவே முடியாது என்பதுதான். ஜடமா இருந்த எனக்கு உயிர் கொடுத்தது உன் தோழி தான்... சாது... அந்த உயிர் இல்லாவிட்டால் நான் மீண்டும் ஜடமாகி விடுவேன் என்பது சர்வ நிச்சயம் சாது... இப்போ என் மனசை. நீ புரிந்து கொண்டாய் தானே...''

சாதனாவிற்கு குஷியோ குஷி... முதலில் அந்த சுவாதியின் திருமணத்தால் அண்ணன் பாதிக்கப்படவில்லை என்ற சந்தோஷம்... அதுதான் அவளுக்கு பயமாக இருந்தது.

எங்கே மறுபடியும் அவன் 'டிப்ரஷனு'க்குப் போய் விடுவானோ என்ற பயம் தீர்த்து விட்டது. அடுத்தது... த தோழியை விரும்புகிறான் என்ற சந்தோஷம்... மீ

மிகவும் நல்லவள்... அவள் இந்த வீட்டிற்கு மருமகளாய் வந்தால் இந்த வீடு நந்தகோகுலம்தான்...

மேலும்... அவள் செய்த உதவிக்கு இதைவிட சிறந்த பிரதிபலன் வேறு ஏதும் இல்லைதான்.

ஒற்றைப் பறவையாய்... வாழ்க்கையில் பிடிப்பின்றி இருக்கும் அவளுக்கும் ஒரு நல்ல வாழ்க்கை அமைந்த மாதிரிதான்...

எப்படி அவளுக்கு நன்றி சொல்லப் போகிறேன் என்று தவித்தோமே... அதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் இப்போது கிடைத்திருக்கிறது... அது போதும்...

அண்ணா இன்னும் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது. காது கொடுத்தாள்...

"அம்மாவிடம் இதை எடுத்துச் சொல்லி... அம்மாவை சம்மதிக்க வைப்பாயா... சாது... ஊரிலிருந்து வந்த பிறகு எதையோ இழந்த தவிப்பில் இருந்தேன் சாதனா... அவஸ்தை... உள்ளுக்குள் வெறுமைதான்... ஆனால் நேற்று மீரா திடீர் என்று வந்து நின்றதும் 'குபீர்' என்று வாழ்க்கை பூப்பூத்த நந்தவனமாய் தெரிந்தது... அவள் என்னுடன் இருந்தாலே போதும்.. எனக்கு ஆயிரம் யானை பலம் கிடைத்த மாதிரி உணருகிறேன்... தெரியுமா... இதை அம்மாவும் அப்பாவும் புரிந்து கொள்வார்கள் தானே..."

அவளுக்கும் அந்தக் கேள்வி தோன்றியது...

அப்பா.. ஓகே... புரிந்து கொள்வார்... ஆனால் அம்மா... சம்மதிப்பாளா...

மீராவைப் போன்ற உறுதியான மனம் படைத்த... மனோதிடம் கொண்ட ஒரு பெண் தான் அண்ணாவுக்கு



துணையாய் வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளாமல்.. தாம் தூம் என்று குதிப்பாளோ...

தெரியவில்லையே... அந்தக் கேள்விதான் அவளைக் குடைந்தெடுத்தது.




அவள் நினைத்தது போலவே கல்பனா தாம் தூம் என்று குதித்தாள்.

"என்னடீ இது கூத்து... எனக்கு இருப்பது ஒரே பிள்ளை. அவனுக்கு நல்ல மனைவியாய் அமையணும்ங்கற ஆசை எனக்கு இருக்காதா... கல்யாணம் ஆகி விதவையானவளையா அவன் கட்டிக்கணும். கேட்கவே எனக்கு அசிங்கமா இருக்குடீ... இதோ பாரு... மீராவைக் குறை சொல்றேன்னு நினைக்காதே சாதனா... உன் சிநேகிதி நல்லவள்தான்... அதை நான் மறுக்கமாட்டேன். நமக்கு செய்திருக்கும் உதவியையும் ஜென்மத்துக்கும் மறக்க முடியாதுதான்... ஆனால் அதுக்குப் பணமா எதாவது கொடு... இல்லையா... நகையா கொடு... அதுக்காக இந்த முடிவுக்கா வரணும்டீ... சொந்த பந்தத்தில் கேட்பார்கள்... ஏன் உன் பிள்ளைக்கு வேற பொண்ணே கிடைக்கவில்லையான்னு... நம்ம நந்துவுக்கு என்னடீ குற... இப்பவும் பொண்ணு கொடுக்க நான்... நீன்னு போட் போட்டுக் கொண்டு வந்து நிற்பார்கள்... ஏதோ... இந்

பிரபஞ்சத்தில் உன் தோழியை விட்டா வேறே பொண்ணே இல்லைங்கற மாதிரியில்லையா நீ பேசறே...''

தாயின் கோபம் அவள் எதிர்பார்த்ததுதான்... ஆனால் அதை எப்படி அணைப்பது... அவளுக்கு எப்படி புரிய வைப்பது என்றுதான் தெரியவில்லை...

நந்தண்ணா அம்மாவின் செல்லப்பிள்ளை... அவனுக்கு அருமையான பொண்ணாய் பார்க்க வேண்டும்... ஆர்ப்பாட்டமாய் கல்யாணம் பண்ண வேண்டும் என்றெல்லாம் எத்தனையோ ஆசைகள் அவளுக்கு இருந்திருக்கும். அது மட்டுமல்ல... மீராவிற்கு உறவு என்று யாரும் இல்லை... அதுவும் அம்மாவிற்கு குறையாகத் தெரியும். நந்தண்ணாவிற்கு மாமனார் மாமியார் மச்சினன் நாத்தினி என்று உறவுகள் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் நிறையவே இருந்தது... மாப்பிள்ளை என்று மாமியார் வீட்டில் தன் பிள்ளை விருந்து உபசாரத்துடன் சீராடிவிட்டு வரவேண்டும் என்ற ஆசை எல்லா தாயாருக்கும் இருப்பது இயல்பு... அம்மா மட்டும் விதிவிலக்கில்லையே. மீராவிற்கு அப்படி யாரும் இல்லையே என்ற எண்ணமும் கூட.

ஆனால்... நந்தண்ணா மனதில் இருப்பது மீராதான் என்று தெரிந்த பின்பும் எப்படி ஒதுக்க முடியும். தந்தையை பரிதாபமாய் பார்த்தாள்...

அந்தப் பார்வையை புரிந்து கொண்டவராய் மகளுடன் சேர்ந்து கொண்டார் கேசவமூர்த்தி...

அது கல்பனாவின் எரிச்சலை மேலும் கிளப்பி விட்டது.

''என்ன... பெண்ணுடன் சேர்ந்து ஒத்து ஊதுகிறீர்களா. கல்யாணத்தை கன்னிகாதானம் என்றுதான் சொல்



வார்கள்... எனக்கு கல்யாணம் ஆகாத கன்னிப் பெண்தான் மருமகளா வரணும்... அதை விட்டுட்டு இப்படி கைம்பெண்ண வேண்டாம்... என்னால் அதை ஏத்துக்கவும் முடியாது... ஆமாம்... சொல்லி விட்டேன்'' பிடிவாதமாய் சொன்னாள் கல்பனா...

''சரி... உன் இஷ்டப்படியே செய்யலாம். ஆனால் அதன் விளைவை சந்திக்க நீ தயாரா கல்பனா... ஏற்கனவே ஒரு தடவை காதல் தோல்வியில் சித்தம் பேதலிக்கும் 'லெவலு'க்குப் போனவன் நந்து... இப்போது அவன் விருப்பத்துக்கு இணங்காவிட்டால்... மறுபடியும் பழைய நிலைக்குத் திரும்ப மாட்டான் என்பது என்ன நிச்சயம். அப்புறம் தலையில் அடித்துக் கொண்டு அழுது என்ன பிரயோசனம்... நல்லா யோசி கல்பனா...''

''என்ன பயமுறுத்துகிறீர்கள்...''

''உனக்குப் பயம் காட்டல்லே கல்பனா... நம் பிள்ளைக்கு எதுவும் ஆகக்கூடாதேங்கிற ஆதங்கத்தில் சொல்கிறேன். எனக்கு 'ரிஸ்க்' எடுக்க விருப்பம் இல்லை... அப்புறம் உன் இஷ்டம்...''

எங்கே அடித்தால் எங்கு வலிக்கும் என்ற வித்தை அறிந்திருந்தார் கேசவமூர்த்தி... சொல்லும் விதத்தில் சொல்லி மனைவியை ஒத்துக்க வைத்து விட்டார்... கல்பனாவும் சம்மதித்தாள். அரை மனமாய்...

அப்பாடா... என்று நிம்மதியுடன் பெருமூச்சு விட்டாள் சாதனா...

உடனே... நிதானிக்காமல் மீராவுடன் போனில் பேசினாள் சாதனா.

''ஹலோ... யார்... என் அண்ணனின் உள்ளத்தைத் திருடிய கள்ளி மீராவா...'' வேண்டும் என்றே பரிகாசத் துடன் ஆரம்பித்தாள் அவள்.

''என்னடீ இது கிண்டல்... அன்னிக்கு சொன்ன விஷயத்தை வைத்துக் கொண்டு கிண்டலடிக்கிறா யாக்கும்...'' என்றாள் தோழி.

''சேச்சே... அதெல்லாம் இல்லை... நீ இந்த வீட்டுக்கு மருமகளாய் வரப்போகிறாய் என்று நிச்சயம் செய்து கொண்டு பேசுகிறேன்டீ... என்ன... சத்தத்தையே காணோம்... திகைப்பா இருக்கிறதா.. இருக்கும் தான்... நாங்களே அசந்து போயிருக்கோம்...''

''சாது... என்னடீ இது விளையாட்டு... பீ சீரியஸ்.... நடக்காத ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசி... பொழுதை வீணாக்காதேடீ...''

''நடக்காத விஷயமா... ஏய்... என்ன பேசறே... நடக்கப் போகும் சமாச்சாரம்டீ... ஆமாம் மீரா... அண்ணாவிடம் பேசியதில்... அவன் மனம் விட்டுச் சொன்னான்... சுவா தியை என்னிக்கோ உதறியாச்சு... இப்போ என் மனதில் இருப்பது மீரா தான்... அவள் இல்லாத வாழ்க்கையை நினைத்துப் பார்க்க முடியவில்லை... அப்படி இப்படி என்று அளந்தான் தெரியுமா...''

''என்னடீ சொல்கிறே...'' பதட்டத்துடன் ஒலித்தது மீராவின் குரல்.

''இல்லேடீ... உண்மையில் அண்ணா உன்னைப் பற்றிப் பேசும்போது உணர்ச்சி வசப்பட்டான்டீ... அந்த அளவு அவன் உன்னைக் காதலிக்கிறான் என்று பட்டது எனக்கு... இப்போ... எனக்கு உன் பக்கம் எப்படி என்று



தெரிந்தாக வேண்டும். அதற்கு தான் இந்தக் 'கால்'... ம்ம்... சொல்லுடீ...''

மறுமனையில் தயக்கமே தெரிந்தது... யோசிக் கிறாளா... இல்லை... தயக்கமா...

''என்னடீ... பேச்சு மூச்சில்லை.. மயக்கம் போட்டு விழுந்துவிட்டாயா என்ன...'' கேலியாய் கேட்டாள் சாதனா.

''ஊகூம்... இந்த விஷயத்தை எப்படி ஏற்பது என்ற தயக்கம் தான்... என் மனநிலை உனக்குப் புரியுமே சாது... ஏற்கனவே காதல் திருமணம் செய்து அது நிலைக் காமல்... அவதிப்படும் துர்அதிர்ஷ்டசாலி நான். மறுபடி யும்... வேண்டாம்டீ... உன் அண்ணாவிற்கு வேறு ஒரு நல்ல பெண்ணாப் பார்த்து கல்யாணம் பண்ணி வையுங் கள்... நான் அவருக்கு பொருத்தமானவள் இல்லை சாதனா...''

''ஆனால் நந்தண்ணா மனசில் இருப்பது நீதானே... அதை நினை... பார்க்கப் போனால்... யூ போத் ஆர் செயிலிங் இன் தி ஸேம் போட்... மாதிரிதான்... உனக்கு முதல் கல்யாணம் நிலைக்கல்லே... அண்ணாவோட முதல் காதல் நடக்கல்லே... இரண்டு பேரும் வாழ்க் கையில் அடிபட்டவர்கள்... மனதளவில் காயம் பட்டவர் கள்... நீங்கள் இரண்டு பேரும் ஒருத்தருக்கொருத்தர் ஆதரவா... அனுசரணையா இருப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு மீரா...''

''ஊகூம்... எனக்கு இது சரியாகப் படவில்லைடீ. 'கல்யாணம்' என்பது வாழ்க்கையில் ஒருமுறை தான்

அது எனக்கு முடிந்த சாப்டர்... உன் அண்ணாவிற்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது... சாது... என்னைப் போல ஒரு அபாக்கியவதியின் துணை அவருக்கு வேண்டவே வேண்டாம்.''

''அப்போ... உன் மனசில் என் அண்ணனுக்கு துளியும் இடம் இல்லை என்கிறே... அப்படித்தானே... சரி விடு...''

''கோவித்துக் கொள்ளாதே சாதனா... என் நிலையில் இருந்து யோசி... உனக்குப் புரியும்டீ...''

''ஓகே... புரிந்து கொண்டேன்... உன் பதிலை இப்போ அண்ணாவிடம் சொல்லப் போவதில்லை மீரா... அவனுக்கு இரண்டு நாளாய்...''

''என்ன... என்ன ஆச்சு சாதனா... அவருக்கு உடம்புக்கு ஏதாவது சரியில்லையா என்ன... இல்லை... மனதளவில் பாதிப்பா... சீக்கிரம் சொல்லேன்... நான் புறப்பட்டு வரட்டுமா... என்ன விஷயம்டீ...'' ஏதோ தவிப்புடன் மீரா கேட்க... 'பக்'கென்று சிரித்து விட்டாள் சாதனா.

''இந்த... இந்த அக்கறைதாண்டி எனக்குப் பிடிக்கிறது. இதுதான் என் நந்தண்ணாவுக்கு வேண்டியிருக்கிறது. எங்கே... இப்போ சொல்... பார்க்கலாம்... என் அண்ணா மேல் உனக்கு அன்பே இல்லைன்னு...''

''அது இருக்கட்டும்... உன் அண்ணாவுக்கு உடம்புக்கு...''

''ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை... அவனுக்கு இரண்டு நாளாய் உன் நினைவுதான்... மீரா பஜனை செய்கிறான்னு சொல்ல வந்தேன்... அதற்குள் பதறி



உன்னைக் காட்டிக் கொண்டு விட்டாய்... என் அம்மா சொல்லும் பழமொழிதான் எனக்கு நினைவுக்கு வருகிறதுடீ... கத்தரிக்காய் முத்தினால் அது கடைத்தெருவுக்கு வந்தே தான் ஆகணும்னு... அது சரியாகி விட்டது... இனியும் நீ மறைத்தால்... வெளி வேஷம் போடுகிறாய் என்றுதான் நினைப்பேன்... ஆமாம்...''

அப்புறம் என்ன... தயங்கி... தயங்கி ஒப்புக் கொண்டாள் மீரா... தன்னையும் அறியாமல் நந்தகுமாரிடம் அன்பு துளிர்த்து விட்டது என்று... ஆனால் அது நடக்குமா என்றுதான் மறைத்தாளாம்.

''அடி அசடு... பெயரிலே பொருத்தம் வந்தப்புறம் நடக்காமல் என்னவாம்... மீரா... நந்தகுமார்... ஆகா... என்ன பொருத்தம்... சரி... எனக்கொரு சந்தேகம்டீ... உன்னை மீரா என்று அழைப்பதா இல்லை 'அண்ணி' என்பதா... அப்புறம் இன்னொரு விஷயம்... இனிமே என்னை நீ விழுந்து கவனிக்க வேண்டுமாக்கும்... உன் நாத்தனார் ஆயிற்றே...''

''கண்டிப்பாய்... வந்து... நன்றாய்... கவனிக்கிறேன் இரு...'' நன்றாய் என்ற வார்த்தையை அழுத்தி சொன்னாள் மீரா.

சாதனா சிரித்து விட்டுப் போனை துண்டித்தாள்.

அவளுக்கு மனம் நிறைந்து தளும்பியது போல இருந்தது...

அண்ணன் வாழ்வு மலர்ந்தது என்ற சந்தோஷத்துடன் கூடவே... தன் ஆத்மார்த்த தோழியே அண்ணியாக வந்து விட்டாள் என்ற ஆனந்தமும் சேர்ந்து அவளை திக்குமுக்காட வைத்தது.

ஆனால் கல்பனாதான் எதையோ பறிகொடுத்தவள் போல முகத்தை வைத்துக் கொண்டிருந்தாள். அவ்வப் போது கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அதற்கு என்ன காரணம் என்று தெரிந்திருந்தாலும் அதைப் பற்றிப் பேசிப் பெரிது படுத்த விரும்பவும் இல்லை. கேசவமூர்த்தியும் சொல்லி விட்டார்... ''உன் அம்மாவை அவளது போக்கில் விட்டு விடு சாதனா... ஆரம்பத்தில் 'குர்' என்று இருந்தாலும்... போகப் போக சரியாகி விடும்... தான் நினைத்தது எதுவும் நிறைவேறவில்லையே என்ற ஆதங்கம்... ஒரு நாள் புரிந்து கொள்வாள்... நடப்பது எல்லாம் நன்மைக்காகத்தான் என்று...''

அதே சமயம் மனைவியை தேற்றவும் தவறவில்லை. ''ஏன் உம்மண்ணா மூஞ்சியா இருக்கே கல்பனா... எதுவும் நம் கையில் இல்லை... தெய்வ சித்தப்படி தான் நடக்கும்... அதை புரிந்து கொள்ள முயற்சி செய்ம்மா.. இந்த வீட்டில் இரண்டு கல்யாணம் நடக்கப் போறது... அது சந்தோஷம் இல்லையா... நம்ம இரண்டு குழந்தை களும் அருமையா குடும்பம் நடத்தினால் அது போதும்மா... அவங்களோட விருப்பம் தான் நமக்கு முக்கியம்.. எதை எதையோ நினைத்து மனசை உழப்பிக்காதே... புரிகிறதா.''

அது அவளது உள்ளத்தை மாற்றியதாகத் தெரிய வில்லை...

மதியம்... தாய் கட்டிக் கொடுத்திருந்த சீமைக் கத்தரிக்காய் கூட்டு சாதத்தை ருசி பார்த்துக் கொண்டிருந்த வேளையில்... தங்கவேலு முகம் எல்லாம் பல்லாய். வந்து சொன்னான்.



''அம்மா... மாப்பிள்ளை சார் வந்திருக்கிறார்... உங் களைப் பார்க்கணுமாம்...''

பாலகிருஷ்ணனா... மறுபடியுமா... அனைவரின் பார்வை குறுகுறுப்பாய் தன் மீது படிவதை உணர்ந்து வெட்கமடைந்தாள் சாதனா.

சே... இவனை யார் வரச் சொன்னது. அப்படியே பார்க்க வேண்டும் என்றாலும் வீட்டுக்கு வரலாமே.. ஆபீஸுக்கு வந்து ஏன் கழுத்தறுக்க வேண்டும்... பற்களை நறநற வென்று கடித்தாள். இன்றைக்கு ஒரு முடிவாய் அவனிடம் சொல்லிவிட வேண்டும். இனிமேல் இப்படி வந்து சந்திப்பதை நிறுத்துங்கள். எனக்குப் பிடிக்கவில்லை என்று... கையை உதறிக் கொண்டு எழுந்தாள்.

பாலகிருஷ்ணன் ஏதோ ஒரு தவிப்புடன் அவளுக்காகக் காத்திருந்தான்... கண்களில் தெரிந்தது... கலக்கமா... ஆனால் அவன் நார்மலாக இல்லை என்பது புரிந்தது.

அவளைப் பார்த்ததும் ''சாரி... மன்னிக்க வேண்டும். மறுபடியும் தொந்திரவு கொடுத்ததிற்கு... ஆனால் சென்ற முறை உங்களிடம் பேச முடியாததால்... இன்றைக்கு உங்களை சந்தித்துப் பேசியாக வேண்டும் என்று வந் தேன்...''

சாதனாவிற்கு உள்ளுணர்வு சொன்னது... ஏதோ சரி யில்லை என்று.

''என்ன விஷயம்...'' என்று கேட்டாள்.

''வெளியில் போய் பேசலாமா...'' தயக்கத்துடன் வினவினான் அவன்.

''பரவாயில்லை.. இங்கே யாரும் வரமாட்டார்கள். நீங்க தைரியமாய் பேசலாம்.''

"இந்தக் கல்யாணத்தில் எனக்கு விருப்பமில்லை. ஏன் என்றால்... நான்..."

"யாரையோ காதலிக்கிறீர்கள் அப்படித்தானே..." வியப்புடன் அவளைப் பார்த்தான் அவன்.

"அது எப்படி உங்களுக்கு."

"அப்படித்தான் இருக்கும் என்று ஊகிக்க முடியாதா என்ன... சரி... இதை உங்கள் வீட்டில் சொல்லி நிறுத்தியிருக்கலாம் தானே... என்னிடம் சொல்வது ஏன்..."

பெருமூச்சு விட்டான் அவன்.

"என் நிலைமையை உங்களுக்கு புரிய வைக்க வேண்டும் மிஸ் சாதனா... நான் காதலிக்கும் பெண் ஒரு அனாதை. அனாதை ஆசிரமத்தில் வளர்ந்தவள்... அவளைப் பற்றி என் அம்மாவிடம் சொன்னேன். ஆனால் அவருக்கு இஷ்டமில்லை... யார்... எந்தக் குலம்... ஜாதி என்று தெரியாதவளை எப்படி மருமகளாய் ஏற்றுக் கொள்வது... முடியவே முடியாது என்று மறுத்து விட்டார்கள். நான் பார்க்கும் பெண்ணைத் தான் நீ மணக்க வேண்டும்... இல்லாவிட்டால் என்னை உயிருடன் பார்க்க முடியாது என்று சொன்னதால் வேறு வழியின்றி பெண் பார்க்க வந்தேன்" என்று சொன்னான்.

அடக்கடவுளே... வீட்டுக்கு வீடு வாசப்படியா... இங்கே அம்மாவுக்கு விருப்பம் இல்லாத மாதிரி அங்கேயுமா, சரிதான்...

"சரி... இப்ப நான் என்ன செய்ய வேண்டும். சொல்லுங்கள் மிஸ்டர் பாலகிருஷ்ணன்."

"இந்தக் கல்யாணம் நின்று விடணும்... அதுக்கு உங்க க்கத்திலிருந்து மறுப்பு வரணும்..."



"ஓ.கே... அதற்குப் பிறகும் ஒவ்வொரு பொண்ணாகப் பார்த்துக் கொண்டிருக்காமல்... துணிந்து முடிவு எடுங்கள். உங்கள் காதல் வாழ என் வாழ்த்துக்கள்..."

நன்றி தெரிவித்து விட்டுச் சென்றான் அவன்.

அவனையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள் சாதனா.

பெற்றவர்களுக்குத் தெரிந்தால்... தெரிந்தால் என்ன... தெரியத்தான் போகிறது... எப்படி எடுத்துக் கொள்வார்களோ... முக்கியமாய்... அம்மா... பாவம்... இடிந்து போவாள்...

என்ன செய்ய... வாழ்க்கையில் நினைப்பது எதுவும் நடப்பதில்லை. நினைக்காதது நடந்து விடுகிறது... விநோதம் தான்!




கல்பனா தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டாள்... தன் வீட்டில் மட்டும் ஏன் இப்படி எல்லாமே கோணல் மாணலாய் நடக்கிறது. நினைப்பது எதுவுமே நடப்பது இல்லையே... உள்ளுக்குள் குமைந்தாள் அவள்...

பிள்ளை படிப்பை நல்லவிதமாய் முடித்து விட்டு... இனி அருமையான வேலையில் அமர்ந்து விட்டான்.

கவலை இல்லை என்று நினைத்ததுக்கு மாறாய்... ஆபீஸில் அவன் மீது அபாண்டமாய் பழி விழுந்து... வேலையிலிருந்தே அனுப்பிவிட்டது முதல் கோணல் என்றால்... அப்புறம் நடப்பது எல்லாமே முற்றும் கோணலாக அல்லவா இருக்கிறது.

அவனுக்கு ஒரு நல்ல பெண்ணாய் பார்த்து முடிக்கலாம் என்று எண்ணினால்... போயும் போயும் கல்யாணம் ஆகி... கணவனை இழந்த ஒருவனைக் கட்டிக் கொள்வேன் என்று குதிக்கிறான். அதுக்கு அப்பாவும் பொண்ணும் ஜால்ரா போடுகிறார்கள்.

இதுதான் இப்படி என்றால்... பொண்ணிற்கு பார்த்த வரனாவது குதிர்ந்ததா என்றால் அதுவும் இல்லை... அங்கேயும் ஒரு குளறுபடி... ஏதோ என் ஜாதகத்தில் தான் பிசகு போல... இதையெல்லாம் பார்த்து... பார்த்து மறுக வேண்டும் என்ற தலையெழுத்து... சே!

என் வேதனை இவர்களுக்கு தெரியவில்லையே... இவர் என்னடா என்றால் எதுவுமே நடக்காதது மாதிரி இருக்கிறார்... கிணற்றில் விழுந்த கல் மாதிரி... ஊகூம்... அதில் கூட 'ப்ளக்' என்ற சத்தமாவது வரும்... இவரிடம் எந்த சலனமும் வரலையே... ஒரு வருத்தம்... ஏமாற்றம்... நிராசை... ஊகூம்... ஒரு மண்ணும் இல்லை. சாதனா மட்டும் என்ன... இப்படி ஆனதே என்ற துயரமோ... வேதனையோ இல்லாமல்... வெகு சுலபமாய் "அப்பா... விஷயம் தெரிந்த பின்னும் சும்மா இருப்பது சரியில்லை... இந்த கல்யாணம் நடக்காது என்று அவர்களிடம் சொல்லி விடுவது நல்லது..." என்கிறாளே... அப்பாவுக்கு ஏற்ற பொண்தான்...

"நல்லவேளை... நிச்சயதார்த்தம் நடப்பதற்கு மன்பே விஷயம் வெளிவந்ததே... அதுக்கு நாம் சந்தோஷப்பட



வேண்டும்... இல்லையாப்பா..." போதாதற்கு நந்தகுமாரும் சேர்ந்து ஒத்து ஊதுகிறான்... யாருக்காவது இப்படி நிச்சயித்தது நடக்கவில்லையேங்கற ஆதங்கம் இருக்கிறதா...

"என்ன கல்பனா... இப்படி இடி விழுந்த மாதிரி உட்கார்ந்திருக்கே... சே... பையனோட வண்டவாளம் தெரிந்ததால் வந்த அதிர்ச்சியா... எல்லாம் நம்ம நல்ல வேளை என்று நினைத்துக் கொள்... நம்ம பொண்ணு கழுத்தில் தாலி கட்டும் முன்பே தெரிந்ததே என்று..." கேசவ மூர்த்தி சொல்ல...

"சரி... அடுத்தது என்ன பண்ணுவதாய் உத்தேசம்" என்று கோபத்துடன் கேட்டாள் கல்பனா.

"ஏன்... கல்யாணத்தை நிறுத்தி விடுவதுதான்... பிள்ளையோட லட்சணம் தெரிந்தும் பொண்ணைக் கொடுக்க என்ன தலையெழுத்தா... என்ன காரணம் சொல்லுவது என்றுதான் பார்க்கிறேன்..."

"ஏன்... நிஜத்தை சொல்லி விடுங்களேன்... உங்க பையன் யாரையோ காதலிக்கிறானாமே... அவளையே கட்டி வையுங்கன்னு..." கோபத்துடன் சொன்னாள் கல்பனா.

"வேண்டாம்ப்பா... நமக்கு உண்மை தெரிந்ததாகவே காட்டிக் கொள்ள வேண்டாம்... நம்மால் அவர்கள் வீட்டில் பிரச்னை எழ வேண்டாம். வேறே ஏதாவது சொல்லுங்கப்பா... எனக்கு மேலே படிக்க ஆசை... இல்லை... இப்போதைக்கு என் பொண்ணுக்கு கல்யாணம் பண்றதாய் உத்தேசம் இல்லை... இப்படி ஏதாவது சொல்லி மறுத்து விடுங்கள்..."

''சரிம்மா... எதையோ சொல்லிச் சமாளிக்கிறேன் விடு... மறுபடியும் அந்த தரகரை...''

''அதெல்லாம் வேண்டாம்ப்பா... தரகர் கொண்டு வருவதில் ஏதாச்சும் வில்லங்கம் வருகிறது! பேசாமல் மேட்ரி மோனியல் டாட்காம்...' திருமண மையங்கள் வழியில் போகலாம்...''

''அதிலும்கூட பித்தலாட்டம் நடக்கிறது. பார்க்கலாம். அவசரப்படாமல் நிதானமாய் பார்த்து முடிவு எடுக்கலாம். சாதனா... நீ வருத்தப்படாமல் இரு...'' என்றார் தந்தை. அவளுக்கு சிரிப்பு வந்தது.

வருத்தமா... எனக்கா... அய்யோ அப்பா... எனக்கு இல்லவே இல்லை... ஏதோ இருட்டறைக்குள் மூச்சு முட்டிக் கொண்டு இருந்துவிட்டு... கதவு திறந்து கொண்டு வெளிவந்து புத்தம் புதுக் காற்றைச் சுவாசித்த மாதிரி இருக்கிறது... உள் மனம் முணுமுணுத்தது.

என்னவோ தெரியவில்லை... அலுவலகத்திற்குப் புறப்பட்டபோது... என்றைக்குமில்லாத ஆனந்தம்... பரவசம்... உள்ளத்தில் குமிழிட்டது... மனசுக்கு இறக்கை முளைத்தது போல... வானில் உல்லாசமாய் பறப்பது போல ஒரு இனிய உணர்வு...

எதனால் என்று புரிந்துகொள்ள முடியவில்லை. திருமணம் என்ற பந்தம் சிக்கலாய் தெரிந்து... அதில் அகப்படாமல் தப்பித்து விட்ட மகிழ்ச்சியாலா... இல்லை... தோழியே அண்ணியாய் வரப்போகும் வேளையில்... குஷியாய் அவளுடன் இருக்கலாம் என்ற நிம்மதியாலா... இன்ன காரணம் என்று தெரியாவிட்டாலும்... ஒரு விடுதலையுணர்வு வந்தது என்னவோ உண்மை...



ஆனால்... திருமணப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டாயிற்று என்ற விஷயத்தை அலுவலகத்தில் மூச்சு விடவும் இல்லை...

சுமதிக்கு மட்டுமே சொல்லி விட்டு... ''ப்ளீஸ் சுமா யாருக்கும் தெரிய வேண்டாம். எல்லோரும் ஏதோ இழவு நடந்த மாதிரி அனுதாபமா பேச ஆரம்பிப்பார்கள்... ஏதோ... ஒரு பெண்ணிற்கு கல்யாணம் தான் சகலமும் என்பது மாதிரி... அதையெல்லாம் கேட்க எனக்குப் பிடிக்கவில்லை. சமயம் வந்தபோது நானே விஷயத்தை சொல்கிறேன்...''

இந்த ஆபீஸை விட்டு போனபின்பு தெரியட்டும் என்று உள்ளுக்குள் நினைத்தாள்.

''வெரிகுட் சாதனா... நல்ல முடிவு இது... நீ எடுத்த முடிவில் மூன்று பேரின் வாழ்க்கையும் பாழாகாமல் போனது பார்... அதுவரைக்கும் நல்லது... திருமணம் என்பது... ஆர அமர... நிதானமாய் செயல்பட்டு நடத்த வேண்டிய சமாச்சாரம். அள்ளித் தெளித்த அவசரக் கோலமாய் நடந்தால்... அது அலங்கோலமாய் முடியும்... இதை ஏன் பெற்றவர்கள் புரிந்துகொள்ள மாட்டேன் கிறார்கள் என்று தெரியவில்லைடீ... பெண்கள் வயசுக்கு வந்ததும் திருமணம் என்று பேச ஆரம்பித்து விடு கிறார்கள்... காலா காலத்தில் கட்டிக் கொடுத்து விட்டு... கடமையைக் கழித்துக் கொள்ளலாம் என்ற நினைப்பு... பெண்ணிற்கு 'மென்டல் மெச்சூரிட்டி' வரட்டும் என்றும் யோசிப்பதில்லை... அதுதான்டீ... எத்தனையோ திரு மணங்கள் தோல்வியில் முடிகிறது. முதல்ல... பெற்ற வர்கள் பிள்ளைகளிடம் பேசி... அவர்களோட மனதை சரியாகப் புரிந்து கொண்டு அப்புறம் அவர்களுக்கு ஏற்ற

துணையை தேட வேண்டும் என்கிறேன்... நீ என்ன சொல்றே சாதனா'' சுமதி சொல்லி முடிக்க... சத்தமின்றி கைகளைத் தட்டினாள் சாதனா.

''வாவ்... அருமையான கருத்துக்கள்... மேடையில் பேசியிருந்தால் பெரியதாய் கைத்தட்டல் கிடைத்திருக்கும்... இங்கே... நான் ஒருத்தி மட்டும் தான்டீ... ஒரு கை ஓசை மாதிரி... ஏய்... அங்கே பார்... யார் இந்தப் புதுமுகம்... நரேந்திரனைப் பார்க்க வந்திருக்கிறாரோ...'' என்றாள் தோழியிடம்.

தோள்களைக் குலுக்கினாள் அவள்.

''அவனுக்கு ஆயிரம் பேரைத் தெரியும். அதில் இவர் யாரோ யாருக்குத் தெரியும்... நாம் நம் வேலையை கவனிப்போம்...'' என்றாள் அசட்டையாக.

ஆனால்... சாதனா தன் வேலையைப் பார்க்கவில்லை. அதைவிட முக்கிய வேலை நரேந்திரனைக் கண்காணிப்பது ஆயிற்றே... செய்தாள்.

வந்தவருக்கு ஐம்பது வயதிருக்கும். அவரை... வாயெல்லாம் பல்லாக வரவேற்றான் நரேந்திரன்... ஆக வந்தவர் அவனுக்கு மிகவும் வேண்டியவர். அவர் நரேந்திரனை பாசத்துடன் அணைத்துக் கொள்வதையும் கவனித்தாள்... நிச்சயம் நெருங்கிய உறவாகத்தான் இருக்கும்...

நரேந்திரன் தங்கவேலுவை அழைத்து ஏதோ சொல்வதைக் கண்டு... தங்கவேலுக்கு தெரிந்திருக்கும் என்று நினைத்தாள். அவனை விசாரித்தால் தெரிந்து விடுகிறது.

அதேபோல... தங்கவேலுவிடம் மெல்ல விசாரிக்க... ''அவர்தான்ம்மா சாரோட தாய்மாமன்... சாருக்கு இங்கே



வேலை வாங்கிக் கொடுத்தவர்...'' என்று சொன்னான் அவன்.

''ஓ... அவரா... மருமகனை ஆசையாய் பார்க்க வந்திருக்கிறார் போலிருக்கிறது'' மெல்ல வாய் கொடுத்தாள் சாதனா.

''அதில்லேம்மா... அவருக்கு ஏதோ பண நெருக்கடி... அவரோட மனைவியை ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறாராம்... பதினைந்தாயிரம் இருக்குமான்னு சார் கிட்டே கேட்க வந்திருக்கிறார்... பாவம்...''

''நரேந்திரன் சாருக்கு இளகிய மனம் வேறு... மறுக்காமல் கொடுத்திருப்பாரே...''

''அதை ஏன் கேட்கிறீங்கம்மா... எப்பவும் கையில் காசு புழங்கும் அந்த மனுசருக்கு... இன்னிக்குன்னு பார்த்து பணம் இல்லையாம்... நாளைக்கு மாமனை வரச் சொல்லியிருக்கிறார்... சாயங்காலமா வாங்க மாமா... நீங்க கேட்ட பணத்தை ரெடி பண்ணித் தர்றேன்''னு சொன்னார்... சொன்ன மாதிரியே ரெடி பண்ணிடுவாரும்மா...''

''வட்டிக்கு இல்லையா கொடுக்கிறார்... அதான்.''

''அட... நீங்க ஒண்ணு... இந்தக் காலத்தில் வட்டிக்கும் கூடப் பணம் கிடைக்க மாட்டேன்கிறதும்மா... பத்து ரூபாய் வட்டி வேறு... ஏதோ... இந்த மட்டும் ஆறு ரூபாய் வட்டிக்குத் தருகிறாரே... அதை மெச்சணும்... அந்த மனசு யாருக்கு வரும்மா...''

வராதுதான்... ஊரான் வீட்டு நெய்யே... என் பெண்டாட்டி கையே மாதிரி தாராள மனம் தான்.

இப்போது பணம் இல்லையாமே... ஆக... ஆபீஸ் பணத்திற்காகக் காத்திருக்கிறானோ...

அடடா... இதுவல்லவோ சரியான தருணம்... உடனே செயல்பட வேண்டும்... கொக்கு மாதிரி... பரபரப்புடன் எழுந்தாள் சாதனா.

''உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும்.''

சாதனாவின் குரல் கேட்டு நிமிர்ந்தான் சரத்சந்திரன். அவனது கண்களின் கூர்மை அவளது நெஞ்சில் படபடப்பை வரவழைத்தது.

''என்ன விஷயமாய்.''

''ஆபீஸ் சம்பந்தமாய் தான்... நான் சொன்னதை நிருபிக்க வேண்டிய நேரம் வந்து விட்டது...''

''ஓ! நிருபணம் கிடைத்து விட்டது என்கிறாயா...''

ஆம் என்று தலையசைத்தாள் அவள்.

''யார் என்று தெரிந்து விட்டது... அவரை 'ரெட் ஹாண்ட்'டாய் பிடித்து... தோலுரித்துக் காட்ட உங்களது ஒத்துழைப்பு வேண்டும்.''

அவனது புருவங்களின் இடைவெளி சுருங்கியது.

''யார் அது...''

''சொன்னால் நீங்கள் நம்பப் போவதில்லை...''

''சொல்... பார்க்கலாம்...''

''நரேந்திரன்...''

''ரப்பிஷ்... சரியான பிதற்றல்.''

''பார்த்தீர்களா... நான் சொன்னது போல நீங்க நம்ப வில்லை. நான் நிருபிக்கும் வரை உங்களது ஒத்துழைப்பு வேண்டும் என்று குறிப்பிட்டது இதற்குத்தான்... நிரப ராதியை குற்றவாளி ஆக்கியதில் அவசரம் காட்டிய



நீங்கள்... உண்மையான குற்றவாளியைப் பிடிக்க... தயக்கம் காட்டுகிறீர்களே... நான்தான் 'ப்ரூவ்' பண்ணு கிறேன் என்றேனே...''

அவளது குரலில் எரிச்சல் தெரிந்தது.

அதைப் புரிந்து கொண்டது போலக் கேட்டான் அவன்.

''நான் என்ன செய்ய வேண்டும்... சொல்.''

''எனக்கு ஆபீஸ் பணம் எழுபத்தைந்தாயிரம் தர வேண்டும்...''

அவன் அதிர்ந்து போய் அவளைப் பார்த்தான்.

''பயப்படாதீர்கள் எம்.டி. சார்... அதை எடுத்துக் கொண்டு ஓடிவிட மாட்டேன்... அந்தப் பணத்தின் நம்பர்களை நீங்களே குறித்து வைத்துக் கொள்ளுங்கள்... அதை பாங்கில் போட வேண்டும் என்று நரேந்திரனிடம் தரப்போகிறேன். எவ்வளவு பணம் பாங்கிற்குப் போகிறது... எவ்வளவு பணம் அவனது 'பாக்கெட்'டுக்குப் போகிறது என்பதை உங்களுக்கு காட்டுகிறேன்'' என்றாள் சாதனா.

அவன் விழித்தான். ''நீ சொல்வது புரியவில்லை சாதனா... கொஞ்சம் விளக்கமாய் சொன்னால் புரிந்து கொள்வேன்'' என்றான் அவன்.

நடந்தவற்றை அவனுக்கு விளக்கினாள் அவள். நரேந்திரன் செய்த கையாடலை... அதை தான் கண்டு பிடித்த விதத்தை எடுத்துரைத்து... அதைப் பற்றி தன் சகோதரன் சொன்னதையும் விலாவாரியாய் சொன் னாள்.

ஏற்கனவே நந்தகுமாருக்குத் தெரிந்து விட்டதால்... எங்கே தன்னைக் காட்டிக் கொடுத்து விடுவானோ என்

அஞ்சி... அவனே முந்திக் கொண்டு... பழியை தன் அண்ணன் மேல் சுமத்தி விட்டான் என்பதை சரத் சந்திரனுக்கு உணர்த்தினாள்.

அதைக் கேட்ட சரத்சந்திரனுக்கு அதிர்ச்சி...

உண்மை குற்றவாளி நரேந்திரன்! அதை அறியாமல்... சே! குற்ற உணர்வில் தவித்தான் அவன்...

''மை காட்! அவனை நம்பி... தப்பு செய்து விட்டேனே... அன்றைக்கு என்னிடம் வந்து 'பாங்க் கணக்கில் மோசம் நடக்கிறது... 'செக்' பண்ணுங்கள் சார்... புதுசா வந்த நந்தகுமார் தான் செய்திருக்க வேண்டும். அவனிடம் கத்தை கத்தையாய் பணம் இருக்கிறது' என்று சொன்னதை உண்மை என்று நம்பி... நந்தகுமாரை உலுக்கி எடுத்தேனே... டேமிட்...'' மேஜையை குத்தி னான் சரத் சந்திரன்.

அதைப் பார்த்துவிட்டு வரட்டுச் சிரிப்பை உதிர்த்தாள் சாதனா.

''இதைத்தான் அன்றைக்கு சொன்னேன். 'கண்ணால் காண்பதும் பொய்... காதல் கேட்டதும் பொய்... தீர விசாரிப்பதே மெய்' என்று... அதன் அர்த்தம் இப்போது புரிந்து கொண்டிருப்பீர்களே... மிஸ்டர் சரத்சந்திரன்.''

அவளது வார்த்தைகள் தீயாய் சுட.... உள்ளுக்குள் கூனிக் குறுகினான் அவன்.

தலையை பிடித்துக் கொண்டான்.

''சாரி... வெரி சாரி... சாதனா.. என் அவசர புத்தியால்... உன் அண்ணனைத் தண்டித்து விட்டேன். ப்ளீஸ்... மன்னித்து விடு'' குரல் தழைய அவன் சொன்னபோது...



முதலில் உள்ளம் இளகினாலும்... அடுத்த கணமே இரும்பாய் இறுகியது...

''சாரி' என்ற வார்த்தை வேதனையை முழுவதுமாய் துடைத்து விடுமா சரத்சந்திரன். இழந்த சந்தோஷத்தை மீட்டுத் தர முடியுமா... அண்ணாவோட ஆனந்தமான நாட்களை... சாதிப்பேன் என்ற நம்பிக்கையைத் திருப்பிக் கொடுக்குமா.... சொல்லுங்கள்... உங்களுடைய அவசர புத்தியால்... ஆத்திர நடவடிக்கையால் அவனுக்கு நேர்ந் தது தலை குனிவும்... அவமானமும் மட்டுமில்லை... காதல் தோல்வியும் தான். தெரிந்து கொள்ளுங்கள்... அந்த வேதனையில் தான் அவனுக்கு மனநிலை பாதிக்கப்பட்டு விட்டது. சுக்கு நூறாகிப்போய் ஏறக்குறைய சித்த பிரமை நிலை... இதையெல்லாம் மாற்றி விடுமா உங்களது 'சாரி' என்கிற வார்த்தை... இவற்றை எல்லாம் சரிப்பண்ணும் சக்தி உங்களுக்கு இருந்தால் சொல்லுங்கள் மிஸ்டர் சரத் சந்திரன்'' கோபத்துடன் சொன்னாள் சாதனா.

அவன் எதுவும் பேசமுடியாத நிலையில் இருந்தான்.

''இனியும் உங்களால் செய்ய முடிவது ஒன்றுதான். எல்லோருக்கும் என் அண்ணா நிரபராதி... எந்தத் தப்பும் செய்யவில்லை... நடந்த தப்புக்கும் அவனுக்கும் துளியும் சம்பந்தமில்லை... அநியாயமாய் தண்டிக்கப்பட்டான் என்று தெரிய வைத்தால் போதும்... அதுவே பெரிய உதவி...''

''செய்கிறேன் சாதனா... நான் செய்த தவற்றை நானே சரி பண்ணுதுதான் நியாயம்... நீ என்ன சொல்கிறாயோ... அதைக் கேட்கிறேன். நான் என்ன செய்ய வேண்டும் என்று... சொல்'' செய்த தப்புக்கு பிராயச்சித்தம் தேட துடிக்கிறான் என்பதை உணர்ந்து கொண்டாள் சாதனா.

அவளும் மெல்ல விளக்கினாள்...

நரேந்திரனுக்காக வலையொன்று அங்கே தயாரானது....




**சா**தனா சொன்ன திட்டத்தை கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்த சரத்சந்திரனுக்கு வியப்பு...

ஒரு பெண்ணிற்குள் இத்தனை திறமையா... துப்பறியும் நிபுணரைப் போல் அல்லவா அசர வைக்கிறாள்...

சாதாரண பெண்ணாக இருந்திருந்தால் 'காச் மூச்' என்று கத்தி... நரேந்திரனை வசை பாடியிருப்பாள். நரேந்திரனைப் பகைத்துக் கொண்டு... நந்தகுமார் மாதிரி ஏமாற்றப்பட்டிருப்பாள்...

ஆனால் சாதனா... வெகு ஜாக்கிரதையாக... யோசித்து செயல்படுகிறாளே... சிந்தித்து ஒவ்வொன்றாய் நடத்துகிறாளே... இவளது நிதானமும்... தெளிவும் எனக்கும் இல்லாமல் போனது தான் மகா கேவலம்...

''கேட்டுக் கொண்டு இருக்கிறீர்கள் தானே... சரி... நரேந்திரனை அவன் வழியில் போய் தான் சிக்க வைக்க வேண்டும். என் அண்ணனை எப்படி வலையில் சிக்க வைத்தானோ... அதே மாதிரி... அவனிடம் நீங்கள்



கொடுத்த பணத்தை அப்படியே தந்து... அதை பாங்கில் போடச் சொல்வேன்... நிச்சயம் அவன் அதிலிருந்து பணத்தை எடுப்பான். அந்த நோட்டுக்களின் நம்பர்களைக் குறித்துக் கொண்டு தான் பணத்தைத் தர வேண்டும்... அப்போதுதான் அது ஆபீஸ் பணம் என்று தெரிய வரும்... அவன் அதை வட்டிக்கு விட்டு வசூல் செய்கிறான் என்று உங்களுக்குத் தெரிந்திருக்க நியாய மில்லை எம்.டி. சார். இன்றைக்கும் பணம் கேட்டு அவரது தாய் மாமன் வந்ததைப் பார்த்தேன்.''

''யார்.. நாராயணனா...''

''பெயர் தெரியாது... அவரை நாளைக்கு சாயந்திரம் வரச் சொல்லியிருக்கிறானாம். இந்தப் பணம் அவரது கைக்குப் போகும் என்பது என் ஊகம்...''

''மைகாட்! அவர் நல்லவர் என்று...''

''நோ... நோ... அவர் நல்லவர்தான்... அவருக்கு நரேந்திரனின் களவாடல் பத்தி எதுவும் தெரியாது. நீங்கள் செய்ய வேண்டியது இதுதான் எம்.டி. சார் அவரை நலம் விசாரிப்பது போல் உங்கள் அறைக்கு அழைத்து வந்து... வந்த விஷயம் பற்றி விசாரித்தால்... மனிதர் உங்களிடம் மறைக்காமல் சொல்லி விடுவார்... நீங்கள் எஜமானராயிற்றே. அந்த விசுவாசத்தில் எதையும் ஒளிக்க மாட்டார் என்று நினைக்கிறேன். ஆனால்... சமயத்தில் நரேந்திரன் அலுவலக வளாகத்தில் இருக்கவே கூடாது. அடடா... எங்களிடம் நாணயமாய் வேலை பார்த்தவராயிற்றே... என்னிடம் கேட்டிருக்கலாமே... நானே தருகிறேன் என்று சொன்னால்... வாங்கிய கடனை வேண்டாம் என்று நிச்சயம் நினைப்பார். நைச்சியமாய் அதை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்...''

''அவர் என்னிடம் தருவாரா என்ன... சந்தேகம் தான்...''

''ஆங்... அதற்குத்தான் நரேந்திரனை ஏதாவது வேலை கொடுத்து அனுப்பி விடுங்கள் என்று சொன்னேன். தைரியமாய் நீங்கள் சொல்லலாம்.''

''நரேந்திரன் இல்லையே... பரவாயில்லை. அந்த பணத்தை என்னிடம் கொடுங்கள்... நான் கொடுத்து விடுகிறேன்' என்று... அவருக்கு இருக்கும் அவசரத்தில் திரும்ப வரும் சிரமம் குறைந்தது என்று நினைத்து உங்களிடம் தந்து விடுவார்... அவர் சென்றதும் நம்பரை 'செக்' பண்ணுங்கள்... தெரிந்து விடும்...''

அவளையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் சரத்சந்திரன்...

அழகுடன் அறிவும் சேர்ந்திருப்பது அபூர்வம்தான். கூடவே சாதிக்கும் திறமையும் தான்...

உள்ளுக்குள் அவளை மெச்சிக் கொண்டான் அவன்.

வெளிப்படையாய் ''ஓகே... அவனை கையும் களவுமாய் பிடித்ததும்... போலீஸில்...'' என்று சொல்ல...

''அடடா... மறுபடியும் அவசரப்படுகிறீர்களே எம்.டி. சார். அவன் என்ன செய்வான் என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டாமா... அவனது 'கோல் மாலை' நான் கண்டு பிடித்து விட்டேன் என்று தெரிந்ததும்... நேரே அவன் உங்களிடம் தான் வருவான். என் மீது பழி சுமத்த என்னை உங்களிடம் மாட்டி வைக்க... அப்போது அவனைப் பற்றி உங்களுக்கு முழுமையாக தெரியவரும்.. அவன் ஒரு ஜெகஜ்ஜால கில்லாடி என்று உங்களுக்கு புரிய வரும். அதுவரைக்கும் நீங்கள் எதையும் வெளிக் காட்டாமல் இருப்பது நல்லது மிஸ்டர் சரத்சந்திரன்.''



''வரவர நான் 'பாஸ்' என்பதே மறந்து விட்டது.
இப்போதைய நிலையில் சாட்டையில் சுற்றும் பம்பரம்
மாதிரி உணருகிறேன்... ஆட்டி வைப்பது நீதான் சாதனா...
ஆனால் இதையும் நான் ரசிக்கிறேன்...'' என்று சொல்லி
விட்டு அவளை குறுகுறுவென்று பார்த்தான்.

அந்தப் பார்வையில் அவளது இதயம் தடகள ஓட்டப்
பயிற்சி எடுத்தது...

சுதாரித்துக் கொண்டவளாய் பேசினாள்.

''என் அண்ணாவின் பெயரில் இருக்கும் களங்கம்
தீர்ந்தால் போதும்... அடுத்த மாதம் நடக்கப் போகும்
நிச்சயதார்த்த வைபவத்திற்குள் அது நடக்க வேண்டும்...
உங்களுடைய இந்த உதவிக்காக... உங்களை சிறப்பு
விருந்தினராக வரவேற்போம்... போதுமா...'' என்றாள்
சாதனா...

அவள் மனதில் இருந்ததும் அதுதான்... அனைவரை
யும்... முக்கியமாய் சரத் சந்திரனையும் எங்கேஜ்மெண்ட்
விழாவிற்கு அழைத்து... ''என் அண்ணா ஒன்றும்
நொறுங்கி விடவில்லை... பீனிக்ஸ் பறவை மாதிரி
உயிர்த்து எழுந்து விட்டானாக்கும்... முன்னை விட
வலிமையுடன் உற்சாகத்துடன்... தெம்புடன் நிமிர்ந்து
விட்டான் பாருங்கள்... என்று காட்ட வேண்டும்...
அவனுக்குத் தோள் கொடுத்து தாங்க அருமையான
மனைவியும் வந்து விட்டாள் என்பதை பெருமையோடு
சொல்ல வேண்டும்... அவனை அவமதிப்பாய் பேசிய
வாய்கள் 'ஆ'வென்று வியப்பில் பிளக்க அண்ணாவின்
நிச்சயதார்த்தத்தை நடத்த வேண்டும்...''

கற்பனையில் மிதந்து கொண்டிருந்தவளின் க
களில் சரத்சந்திரனின் முகத்தில் வந்த மாற்றம் படவில்லை

மலர்ந்த முகம் சட்டென்று இறுகியது. புன்னகை சிந்திய உதடுகளில்.. இப்போது, அழுத்தம் வந்தது...

''என் வாழ்த்துக்கள் சாதனா... என்னால் அதற்கு வர முடியாமல் போகலாம். சிங்கப்பூரில் ஒரு கம்பெனி ஆரம்பிப்பதாய் இருப்பதால் அதற்கான வேலைகள் நிறைய இருக்கிறது. இனி அங்குதான் வாசம்... சாரி...''

''அப்போ... இந்தக் கம்பெனி..'' தொண்டை வறண்டது போலக் கரகரத்தது அவளது குரல்.

''என் தந்தை கவனித்துக் கொள்வார்.''

''ஓ!'' இவன் மீது கோபம் அப்படியே இருக்கிறதே. இருந்தும் ஏன் நெஞ்சில் அறைந்தது போல வலிக்கிறது... புரியவில்லையே...

ஒருவேளை... அந்தக் கோபம் பொய் கோபமோ...

''ஓ.கே. அவ்வளவுதானே... இன்னும் கொஞ்ச நேரத்தில் உன் இடத்திற்கு பணம் வந்து விடும்...''

''தாங்க்யூ... தாங்க்யூ வெரிமச் சார்...''

அறையை விட்டு வெளி வந்தபோது... எந்த நோக்கத்திற்காக இந்த வேலைக்கு வந்தோமோ... அது நிறைவேறப் போகிறது... நினைத்ததை சாதித்து விட்டோம் என்ற மகிழ்ச்சி வருவதற்கு பதிலாய்... ஏதோ ஒன்று வேதனையாய் உள்ளுக்குள் அரித்தது.... இதயத்தைப் பிழிந்தது போல ஒரு அவஸ்தை வாட்டியது. அது புதிராக இருந்தது சாதனாவிற்கு.

''என்ன மேடம்... இன்றைக்கு பாங்கில் போடுவதற்கு போக வேண்டி இருக்கா... இருந்தால் இப்போதே கொடுத்திடுங்க... நான் சீக்கிரமா புறப்படணும்'' நரேந்திரன் வந்து கேட்பதற்காகவே காத்திருந்தது போல தயாராய் வைத்திருந்த பணத்தை எடுத்து நீட்டினாள் சாதனா.



அவன் அதை வாங்கிக் கொண்டு செல்வது கண்டு மனசுக்குள் சிரித்துக் கொண்டாள்.

வலை விரித்தாகி விட்டது... நரி சிக்கிக் கொள்ளப் போகிறது...

சிலந்தி வலையில் இரை வந்து ஒட்டிக் கொள்ளப் போகிறது.

காத்திருக்க வேண்டும்.

தாய் மாமன் வந்ததும் அவனை அழைத்துக் கொண்டு தனியிடத்திற்குச் சென்றதையும் பார்த்தாள். சரத் சந்திரனுக்கு இன்டர்காமில் அதைக் குறிப்பாய் உணர்த்தியதும்... அவனும் வந்தான்... நரேந்திரனுக்கு ஏதோ ஒரு அவசர வேலையைச் சொல்லி அனுப்பி விட்டு... நாராயணனிடம் பேசியவாறு தன் அறைக்கு அழைத்துச் சென்றான்...

ஆர்வம் மேலிட... ஏதோ ஒரு ஃபைலை எடுத்துக் கொண்டு விரைந்தாள் சாதனா...

உள்ளே நுழைகையில்... சரத்சந்திரன் நாராயணனிடம் நலம் விசாரிப்பது தெரிந்தது.

''ஏதோ உங்க புண்ணியத்தால் நல்லா இருக்கேன் எஜமான்' வினயத்துடன் சொன்னார் நாராயணன்.

''ஆமாம்... என்ன திடீர் என்று இங்கு வந்திருக்கிறீர்கள்... நரேந்திரனைப் பார்ப்பதற்கா.''

கொஞ்சம் தயங்கி விட்டுப் பேசினார் நாராயணன்.

''என் மனைவிக்கு காலில் கட்டி சார்... சர்க்கரை வியாதி இருப்பதால் 'ட்ரீட் மெண்ட்' கொடுத்து அதை அறுக்கணும்னு டாக்டர் சொல்றாங்க... என் கிட்டே அதற்கு

பணம் இல்லை. அதான் நரேந்திரன் கிட்டே கடனா வாங்கிட்டுப் போகலாம்னு வந்தேன்.''

''அடடா... என்கிட்டே நேரா வந்திருக்கலாமே நாராயணன். எங்ககிட்டே விசுவாசமாய் உழைக்கிறவர் நீங்கள். உங்களுக்கு இல்லாமலா... இருங்கள். உங்களுக்கு எவ்வளவு பணம் வேண்டும். இருபதாயிரம் போதுமா... இல்லை... இன்னும்...

''அய்யோ... அவ்வளவு எல்லாம் எதுக்கு சார். பதினைந்தாயிரம் கொடுத்தால் போதும்...''

''இல்லை... இருபதாயிரமே இருக்கட்டும்... இதை திருப்பித் தரவும் வேண்டாம்...''

நன்றி மிகுதியில் நாராயணனின் கண்களில் நீர் தேக்கம்.

''ரொம்ப நன்றி எஜமான்.. வேலை விட்டப்புறமும் எனக்கு உதவுகின்றீர்களே... நீங்க எனக்கு தெய்வம் மாதிரி.''

''நான் சாதாரண மனுஷன் தான் நாராயணன்... என்னைப் போய் தெய்வம் அது இது என்று சொல்லாதீர்கள்... முதலில்... நரேந்திரனிடம் வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள்... அது கடன் பணம்... செலவாகி விட்டால் கஷ்டம்...''

''சார்... நரேந்திரன் சார் வேலையாய் வெளியே போய் விட்டாரே. திங்கட்கிழமை தான் வருவார்'' என்று சொன்னாள் சாதனா.

''அடடா.. ஒன்று செய்யுங்கள் நாராயணன். அந்தப் பணத்தை சாதனா மேடமிடம் கொடுத்து விடுங்கள்..



சாதனா அதை நரேந்திரனிடம் சேர்த்து விடுவார்கள். அதில் உங்களுக்கு ஆட்சேபணை இல்லைதானே...''

''இல்லை எஜமான்... எனக்கும் இது வசதிதான். இதற்காக நான் இங்கு வரவேண்டும்... ஆஸ்பத்திரியில் இருந்தாக வேண்டும் என்பதால்... அந்தச் சிரமமும் குறைந்தது. [illegible]''

பணத்தைக் கொடுத்துவிட்டு... கும்பிடு போட்டு விட்டு அவர் சென்றதும்... அந்த ரூபாய் நோட்டுகளின் எண்களை சோதிக்க... அது ஆபீஸ் பணம்தான் என்பது தெள்ளத் தெளிவாயிற்று...

சரத்சந்திரனின் முகம் ஆத்திரத்தில் சிவந்து போனது. தாடை இறுகியது...

''ராஸ்கல்... நம்பிக்கை துரோகி... இவனை நம்பி பணத்தை தந்தது எத்தனை தப்பு... சே...''

''நான் சொன்னது உண்மை என்று புரிந்ததா... இது மட்டும் இல்லை... திங்கட்கிழமை பாங்க் பாஸ் புக்கைப் பாருங்கள்... எவ்வளவு பணம் போடப்பட்டிருக்கிறது என்று தெரிந்து விடும்... பழி ஒரு பக்கம்... பாவம் ஒரு பக்கம் என்று சொல்வது இதைத்தான்...''

''இன்னொரு அதிர்ச்சியான செய்தியை உங்களுக்கு சொல்லட்டுமா எம்.டி.சார். நரேந்திரன் களவாடிய பணம் உங்கள் தங்கையின் கைக்கும் போகிறது... அது தெரியுமா.. உங்களுக்கு...''

கண்களில் அதிர்ச்சி தெரிய அவன் பார்த்தான்.

''என்ன இது... புதுக்கதை...''

''ரொம்ப நாளாய் நடக்கும் பழைய கதைதான்... விஸ்[illegible]

சரத்சந்திரன்...

பணம் இல்லை. அதான் நரேந்திரன் கிட்டே கடனா வாங்கிட்டுப் போகலாம்னு வந்தேன்.''

''அடடா... என்கிட்டே நேரா வந்திருக்கலாமே நாராயணன். எங்ககிட்டே விசுவாசமாய் உழைத்தவர் நீங்கள். உங்களுக்கு இல்லாமலா... இருங்கள். உங்களுக்கு எவ்வளவு பணம் வேண்டும். இருபதாயிரம் போதுமா... இல்லை... இன்னும்...

''அய்யோ... அவ்வளவு எல்லாம் எதுக்கு சார். பதினைந்தாயிரம் கொடுத்தால் போதும்...''

''இல்லை... இருபதாயிரமே இருக்கட்டும்... இதை திருப்பித் தரவும் வேண்டாம்...''

நன்றி மிகுதியில் நாராயணனின் கண்களில் நீர் தேக்கம்.

''ரொம்ப நன்றி எஜமான்.. வேலை விட்டப்புறமும் எனக்கு உதவுகின்றீர்களே... நீங்க எனக்கு தெய்வம் மாதிரி.''

''நான் சாதாரண மனுஷன் தான் நாராயணன்... என்னைப் போய் தெய்வம் அது இது என்று சொல்லாதீர்கள்... முதலில்... நரேந்திரனிடம் வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள்... அது கடன் பணம்... செலவாகி விட்டால் கஷ்டம்...''

''சார்... நரேந்திரன் சார் வேலையாய் வெளியே போய் விட்டாரே. திங்கட்கிழமை தான் வருவார்'' என்று சொன்னாள் சாதனா.

''அடடா.. ஒன்று செய்யுங்கள் நாராயணன். அந்தப் பணத்தை சாதனா மேடமிடம் கொடுத்து விடுங்கள்..



சாதனா அதை நரேந்திரனிடம் சேர்த்து விடுவார்கள். அதில் உங்களுக்கு ஆட்சேபணை இல்லைதானே...''

''இல்லை எஜமான்... எனக்கும் இது வசதிதான். இதற்காக நான் இங்கு வரவேண்டும்... ஆஸ்பத்திரியில் இருந்தாக வேண்டும் என்பதால்... அந்தச் சிரமமும் குறைந்தது. வரட்டுங்களா.''

பணத்தைக் கொடுத்துவிட்டு... கும்பிடு போட்டு விட்டு அவர் சென்றதும்... அந்த ரூபாய் நோட்டுகளின் எண்களை சோதிக்க... அது ஆபீஸ் பணம்தான் என்பது தெள்ளத் தெளிவாயிற்று...

சரத்சந்திரனின் முகம் ஆத்திரத்தில் சிவந்து போனது. தாடை இறுகியது...

''ராஸ்கல்... நம்பிக்கை துரோகி... இவனை நம்பி பணத்தை தந்தது எத்தகைய தப்பு... சே...''

''நான் சொன்னது உண்மை என்று புரிந்ததா... இது மட்டும் இல்லை... திங்கட்கிழமை பாங்க் பாஸ் புக்கைப் பாருங்கள்... எவ்வளவு பணம் போடப்பட்டிருக்கிறது என்று தெரிந்து விடும்... பழி ஒரு பக்கம்... பாவம் ஒரு பக்கம் என்று சொல்வது இதைத்தான்...''

''இன்னொரு அதிர்ச்சியான செய்தியை உங்களுக்கு சொல்லட்டுமா எம்.டி.சார். நரேந்திரன் களவாடிய பணம் உங்கள் தங்கையின் கைக்கும் போகிறது... அது தெரியுமா.. உங்களுக்கு...''

கண்களில் அதிர்ச்சி தெரிய அவன் பார்த்தான்.

''என்ன இது... புதுக்கதை...''

''ரொம்ப நாளாய் நடக்கும் பழைய கதைதான்... மிஸ் சரத்சந்திரன்...

''சாரி... இது உங்கள் குடும்ப விஷயம்... எனக்கு சம்பந்தமில்லாத விஷயம்... ஆனால் இதைப்பற்றி உங்களுக்கு சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் வந்து விட்டது. உங்கள் தங்கை ராதிகா அந்த நரேந்திரனுடன் பழகுகிறாள். அது காதலா... இல்லை நட்பா என்று எனக்குத் தெரியாது. இருவரும் அடிக்கடி வெளியே போகிறார்கள்... தான் சுரண்டிய பணத்தை வள்ளல் மாதிரி ராதிகாவிற்கு அள்ளித் தந்திருக்கிறான் அவன்... சமீபத்தில் தான் அதுவும் எனக்குத் தெரிய வந்தது...'' என்றவள் அந்த ஓட்டல் சம்பவத்தை விவரித்தாள்...

சரத்சந்திரன் முகம் கறுத்தது... பற்கள் நறநறத்தன. கண்களில் சீற்றம் தெரிந்தது... முஷ்டியை இறுக்கிக் கொண்டு தன் கோபத்தை அடக்கப் பார்த்தான்.

''நரேந்திரன் ஒரு அயோக்கியன் என்று தெரியாமல் அவனுடன் பழகுகிறாளோ என்னவோ உங்க தங்கை. அவனை நம்பி அவள் மோசம் போய் விடக்கூடாதே என்று நினைக்கிறேன். அப்புறம் இன்னொரு விஷயம்... திங்கள் அன்று உங்களைத் தேடி நரேந்திரன் வரலாம்... ஊகூம்... கண்டிப்பாய் வந்தே தீருவான்... என் மீது பழி சுமத்தக் கூடும்... கேட்கத் தயாராக இருங்கள் எம்.டி. சார்... நான் வந்த வேலை முடிந்தது... நானும் இங்கிருந்து விலகத் தயாராக இருக்கிறேன்... தாங்க் யூ ஃபார் யுவர் கைண்ட் கோ ஆப்ரேஷன். மிஸ்டர் சரத் சந்திரன்.''

அவள் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தான் சரத் சந்திரன்...

அவனது உள்ளம் அவளைப் பற்றிப் பெருமையாய் எண்ணியது... அவனது கணிப்பில் அவள் உயர்ந்து நின்றாள் என்ன அற்புதமான பெண்... அண்ணன் மீது



எத்தனை பாசம்... அவனைக் குற்றமற்றவன் என்று நிரூபிக்க எத்தனை பிரயத்தனங்கள்... அதற்காக பட்ட சிரமங்கள். எப்படியெல்லாம் கடுமையாய் பேசியிருக்கிறேன்... அவற்றைப் பொருட்படுத்தாமல்... அண்ணன் மீதிருந்த பழியைத் துடைக்க வேண்டி பொறுமையாக சகித்துக் கொண்டு... நீதிக்காக வாதாடி... போராடி... அதை சாதித்தும் காட்டி விட்டாளே...

இப்படிப்பட்ட தங்கையை அடைந்த நந்தகுமார் மிகவும் அதிர்ஷ்டசாலிதான்...

எனக்கும் ஒரு தங்கை வாய்த்திருக்கிறாள்...

பொறுப்பற்றவளாய்... நாகரிகம் என்ற பெயரில் டாம்பீகமாய் ஊர் சுற்றிக் கொண்டு... முகம் சுளித்தான் அவன்....

சாதனா எங்கே... ராதிகா எங்கே...

பெருமூச்சு விட்டான்... சாதனாவை மனைவியாய் அடையும் பாக்கியம் எனக்கில்லாமல் போனதே...

அந்த பாலகிருஷ்ணன்.. 'லக்கிமேன்...' அதிர்ஷ்டசாலி... மனம் ஏங்கித் தவித்தது.

இழக்கக் கூடாத ஒன்றை இழந்து விட்ட தவிப்பு அது.



## 18

அலுவலகத்திற்கு வந்ததுமே சாதனா நரேந்திரனை போட்டு உலுக்காத குறையாய் கேட்டாள்.

''மிஸ்டர் நரேந்திரன்... நான் உங்களிடம் கொடுக்கும் பணம் எதுவும் கரெக்டாய் பாங்கிற்குப் போவதில்லை போலிருக்கிறது... நான் கொடுத்திருக்கும் தொகையும் 'பாஸ் புக் என்ட்ரியும் டேலி' ஆக மாட்டேன்கிறது. நேற்று... நான் கொடுத்த எழுபத்தைந்தாயிரத்தில் கூட இருபத்தைந்தாயிரம் குறைகிறது... இதோ பாருங்க மிஸ்டர் நரேந்திரன்... 'ஆடிட்டிங்'போது எனக்குத்தான் பிரச்சனை யாகும்... முதல்ல பணத்தைக் கட்டி விடுங்கள்... இல்லைன்னா எம்.டி.யிடம் சொல்ல வேண்டி வரும்.. ஆமாம்...''

நரேந்திரன் ஆடிப்போகாதது அதிசயம்... அவன் முகத்தில் திகைப்பு தெரிந்தது... மின்னலாய் அது மறைந்து விட்டது. அகப்பட்டுக் கொண்டோமே என்ற அச்சம் இல்லவே இல்லை...

''என்ன மேடம்... யாரும் என் முன்னே நின்று இப்படிப் பேசியது இல்லை... நீங்க என்ன... மிரட்டுகிறீங்க...'' என்று அலட்சியமாய் பேசினான்.

''இது பணம் விஷயம் மிஸ்டர்... ஏற்கனவே இந்த வேலையில் இருந்தவருக்கு வந்த கெட்ட பெயர் எனக்கும் வரக்கூடாது பாருங்கள்... ஆமாம்... இதற்கு என்ன செய்வதாய் உத்தேசம்.. ம்ம்...'' என்றாள் சாதனா.

''இதோ பாருங்க சாதனா... நான் நினைச்சா லட்சத்தை கூடப் புரட்டிடுவேன்... இந்தத் தொகை எனக்கு சுண்டைக் காய்...'' திமிராகச் சொன்னான் நரேந்திரன்.

''ஓ! அப்போ புரட்டி உடனே பாங்கில் போட்டு விடுங்கள்... எனக்கும் தலைவலி மிச்சம்... உங்களுக்கு இரண்டு நாள் அவகாசம் தருகிறேன். இல்லையோ... எம்.டி.யிடம் புகார் தந்து விடுவேன்...''



அவன் முறைப்பதை பொருட்படுத்தாமல் தன் இருக்கை நோக்கிச் சென்றாள்.

பத்து நிமிடங்களுக்குப் பின்.... நரேந்திரன் எம்.டி.யின் அறையை நோக்கி செல்வதைப் பார்த்து தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

''போடா.. போ.. உன் சாயம் வெளுத்து விட்டது. இனி என்ன சொன்னாலும் அது எடுபடாது மிஸ்டர் நரேந்திரன்...''

அவள் எதிர்பார்த்தபடியே தங்கவேலு வந்து சொன்னான் ''அய்யா அழைக்கிறாங்கம்மா...''

அதுக்காக அல்லவா அவள் காத்திருந்தது... எழுந்து விரைந்தாள்.

''கம் இன் மிஸ் சாதனா... நரேந்திரன் உங்கள் மீது புகார் சொல்கிறார்... பாங்கில் போடும் பணத்தில் நீங்கள் கை வைத்திருக்கிறீர்களாம்... அவரிடம் கொடுத்த பணத்திற்கு சரியான கணக்கு இருக்கிறது... நீங்கள் தான் பணத்தை எடுத்திருக்க வேண்டும் என்று சொல்கிறார்... இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்'' என்று சரத் சந்திரன் சொல்ல...

பதிலாய் புன்னகைத்தவாறு பேசினாள் அவள்.

''என் அண்ணா நந்தகுமார் மாதிரி வாய் மூடிக் கொண்டு இருக்க மாட்டேன் சார்... என் அண்ணனிடம் அம்பதாயிரம் எப்படி வந்தது... அவர் மீது ஏன் பழி சுமத்தப்பட்டது.

உண்மைக் குற்றவாளி யார் என்பதையெல்லாம் அவ சொல்லாமல் போயிருக்கலாம்... ஆனால் நான் அப்ப இல்லை... சொல்லிப் புரிய வைப்பேன். என் அண்ண

மீது சுலபமாய் பழியைப் போட்டு தலை குனிய வைத்த மாதிரி என்னையும் செய்து விடலாம் என்ற எண்ணம் நிச்சயம் நடக்காது சார்.''

இப்போதுதான் உண்மையில் நரேந்திரன் அதிர்ந்து போனது...

சாதனா... நந்தகுமாரின் தங்கையா... பேச்சிழந்து நின்றான் அவன்.

''என்ன நரேந்திரன்... பேச்சு மூச்சில்லை... வாய் திறந்து பேசுங்கள்...'' என்று ஏளனமாய் சொன்னான் சரத் சந்திரன்.

''பார்த்தீங்களா சார்... அண்ணன் ஒரு ஃப்ராட் என்றால்... தங்கை பெரிய.. ஆ!''

அப்போது தான் உணர்ந்தான்... தன் முகவாயில் சரத் சந்திரன் முஷ்டியால் குத்து விட்டிருக்கிறான் என்று... வலியில் முகம் சுருங்க முகவாயைத் தேய்த்துக் கொண்டான் அவன்...

''அன்று மாதிரி உன் பேச்சை நம்பி ஏமாற நான் தயாராக இல்லை... நீ செய்த மோசடியை இன்னொருத்தன் மீது போட்டுவிட்டு... நல்லவன் மாதிரி வேஷம் போட்டாய் பார்... நீயெல்லாம் ஒரு மனுஷன்... சே... அதை நானும் நம்பினேன் என்று நினைக்கவே வெட்கக் கேடாய் இருக்கிறது. உன் மாமா நாராயணன் ஒரு நாணயஸ்தர். அவர் சொன்னாரே என்றுதான் உன்னை வேலைக்குச் சேர்த்தது அவருடைய நாணயத்தில் கடுகளவு உன்னிடம் இல்லையே என்பதுதான் வேதனை. இதோ பார்... நீ உன் மாமாவிற்கு கொடுத்த ரூபாய் நோட்டுகள்... அத்தனையும் கம்பெனி பணம்... இந்தப் பணத்தின் நம்பர்களை



எழுதிக் கொண்டுதான் உனக்குக் கொடுத்திருக்கிறாள் சாதனா... உன்னைக் கையும் களவுமாய் பிடிக்க... ஒருத்தரை... ஒரு தடவைதான் முட்டாளாக்க முடியும்... எப்பவும் முடியாது. பல நாள் கள்வன் ஒரு நாள் நிச்சயம் சிக்கிக் கொள்வான்... அதைத் தெரிந்து கொள்... இனி இங்கே உனக்கு வேலையில்லை... யூ ஆர் டிஸ்மிஸ்ட். அந்த பணத்தை உன்னிடம் இருந்து எப்படி வசூலிப்பது என்பது எனக்குத் தெரியும்! கெட் லாஸ்ட்'' அந்த நேரம் பார்த்துத்தான் ராதிகா உள்ளே வரவேண்டுமா...

அவளைப் பார்த்ததும் முகம் மலர்ந்தான் நரேந்திரன்.

''நான் யார் என்று நினைச்சீங்க... உங்க வீட்டு எதிர்கால மாப்பிள்ளையாக்கும்.. தெரிந்து கொள்ளுங்க.. ராது... உன் அண்ணனிடம் நம்ம காதல் விஷயத்தை எடுத்துச் சொல்... டியர்... அப்பவாவது அவருக்கு மரியாதை தெரிகிறதா என்று பார்க்கலாம்'' என்றான் மிடுக்காய்.

கோபம் தலைக்கேறத் தங்கையின் பக்கம் திரும்பினான் சரத்சந்திரன்... அவன் கண்களில் நெருப்பு ஜ்வாலை தெரிந்தது... அந்த ஜ்வாலையில் பொசுங்கி விடுவோமோ என்று அஞ்சி நடுங்கினாள் ராதிகா...

நேரம் காலம் தெரியாமல் பிதற்றும் நரேந்திரன் மேல் எரிச்சலாய் வந்தது.

''என்ன ராது... எதுவும் பேசாமல் இருக்கே... நீயும் நானும் காதலிக்கும் விஷயத்தை எத்தனை நாள் உன் அண்ணாவிடம் இருந்து மறைக்க முடியும்.. இப்போ... சொல்ல வேண்டிய அவசியம் வந்தாச்சு... உன் வாயால் அதைச் சொல்லு... அப்போத்தான் உன் அண்ண நம்புவார்...''

அவளருகே சென்றாள் ராதிகா...

தன் கையைப் பிடித்துக் கொண்டு சொல்லப் போகிறாள் போலும் என்று சிரிப்புடன் காத்திருந்தவனுக்கு அதிர்ச்சி. ராதிகாவின் கைஓங்கி... 'பளீர்' என்று அறையாய் அவனது கன்னத்தில் இறங்கியது.

அவன் திகைப்புடன் பார்த்தான்.

''ஸ்டுபிட்... உன்னைக் காதலிக்கிறேன் என்று நான் சொன்னேனா... நீயாக கண்டபடி எண்ணிக் கொண்டால்... அதற்கு நானா பொறுப்பு... அண்ணா... இவன் பேச்சை நம்பாதே... இவன் சொல்வதெல்லாம் பொய்... புரட்டு'' என்றாள் ராதிகா.

''என்னடீ... இப்போ தடம் மாறுகிறே... என்னிடம் இழைந்து... குழைந்தது எல்லாம் பொய்யாடீ... என்னுடன் இளித்துக் கொண்டு ஊர் சுற்றித் திரிந்தது எல்லாம் பொய் என்கிறாயா...'' அடிப்பட்ட நாகமாய் சீறினான் நரேந்திரன்.

''ஷட் அப்... நான் லண்டனுக்கெல்லாம் போய் வந்தவள்... நாகரீக வாழ்வில் ஆண் நண்பர்களுடன் சகஜமாய் பழகுவது வழக்கம்... நானும் அப்படித்தான் உன்னுடன் பழகினேன்... உன் சின்ன புத்தியைக் காட்டி விட்டாய் பார்... என் ஸ்டேட்டஸுக்கு நீ அண்ணாந்து பார்த்தாலும் முடியாது. இதில் மாப்பிள்ளை கனவாக்கும்... வேண்டியது தான்... அண்ணா... இந்த ஆளை இரண்டு தட்டு தட்டி வெளியே துரத்து. இந்தக் குறுகிய புத்திக்காரனோடு பழகினேனே என்று எனக்கே அவமானமாய் இருக்கிறது... இவனை...''

தங்கையை இடைமறித்து பேசினான் சரத் சந்திரன்.



''சரி... நீ இங்கிருந்து கிளம்பி வீட்டுக்கு போ... ராதிகா... அப்புறம் உன்னிடம் பேசிக் கொள்கிறேன்...'' என்று அதட்டலாய் சொன்னான்.

''இல்லையண்ணா... என்னை...''

''முதலில் நீ புறப்படு என்றேன்.''

எதையோ முணுமுணுத்தபடி சென்றாள் ராதிகா.

சாதனாவிற்கு ஒரே வியப்பு...

மேனாட்டு நாகரீகத்தில் திளைத்தவளுக்கு... ஆண்களிடம் எந்த அளவில் பழக வேண்டும் என்று தெரியவில்லையோ.. அளவுக்கும் மீறி அவனுடன் ஈஷிக் கொண்டு திரிந்தவளுக்கு... இப்போது 'பட்'டென்று உறவை முறித்துக் கொள்வதும் சகஜமாய் தெரிகிறது போலும். இதுதான் நாகரீகத்தின் இலக்கணமா... இல்லை... பணக்காரர்களின் லட்சணமா...

ஏதோ இருந்து விட்டுப் போகட்டும்.. அந்தத் தலைவலி நமக்கெதுக்கு... வந்தோமா... காரியத்தை முடித்தோமோ... புறப்பட்டோமா என்று இருந்து விட வேண்டும்... நரேந்திரனின் மூக்கு வெளுத்து விட்டது... இனி அவனது பப்பு இங்கு வேகாது...

பாவம்... இப்படியெல்லாம் நடக்கும் என்று அவன் எதிர்பார்த்திருக்க மாட்டான்...

அதுவும் ராதிகா இப்படித் திருகு பாணத்தை தன் மீது ஏவுவாள் என்று கனவிலும் நினைத்திருக்க மாட்டான்....

அவள் அறைந்தபோது அவன் முகம் போன போக்கு... நினைத்து பார்த்தபோது சிரிப்பு வந்தது அவளுக்கு.

முகம் அஷ்ட கோணலாகி... கண்கள் தெறிக்கும் அ
வில் வெளி வந்து... உதடுகள் கோணி... கஷ்டப்பட்

சிரிப்பை அடக்கிக் கொண்டாள். எல்லோரையும் வெறித்து விட்டு... குண்டடிப்பட்ட புலியாய் உறுமிக் கொண்டு வெளியேறினான் நரேந்திரன்.

பணக்கார வீட்டுக்கு மாப்பிள்ளையாகும் கனவு 'புஸ்ஸ்'ஸான கோபம்...

அவன் சென்றதும் சரத்சந்திரனிடம் சொன்னாள் 'தாங்க்யூ... சார்... வந்த வேலை முடிந்து விட்டது. இனி என் ராஜினாமா கடிதத்தை கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்...'' சே... ஏன் இப்படி என் தொண்டையை அடைக்கிறது... நெஞ்சையும் அடைக்கின்றதே... எச்சிலைக் கூட்டி விழுங்கினாள் சாதனா.

''அது மட்டும் முடியாது... சாதனா.. ஒப்பந்தப்படி இன்னும் இரண்டு மாதங்கள் நீ வேலைக்கு வந்தே ஆக வேண்டும்... உன் வேலைகளை முடித்துக் கொடுத்து விட்டு... இரண்டு மாதங்களுக்குப் பிறகு நீ 'ரிஸைன்' பண்ணலாம்... சரத்சந்திரனின் வார்த்தைகள் தேவாமிர்தமாய் இருந்தது அவளுக்கு...

இப்போதைக்கு விலக வேண்டாம்... அது போதும்.

அலுவலகத்திலிருந்து வீட்டுக்கு வந்த சாதனா... தான் வாங்கி வந்திருந்த இனிப்பை எல்லோருக்கும் கொடுத்தாள்.

''என்னடீ விஷயம்...'' என்று கல்பனா கேட்க...

''சொல்கிறேன்... நந்தண்ணா இல்லை...'' என்றாள் அவள்.

அதே நேரம் அங்கு வந்தான் நந்தகுமார்.

''அண்ணா.. இந்தா ஸ்வீட்... நான் நினைத்ததை [illegible]ந்திக் காட்டி விட்டேன்... தெரியுமா... சொன்னதை



சாதித்து விட்டு வந்திருக்கிறேனாக்கும்... என் அண்ணா தப்பு செய்யவில்லை... அனைத்துக்கும் காரணம் நரேந்திரன் தான் என்று நிருபித்து விட்டேன்ம்மா... அவனை எம்.டி. வேலையிலிருந்து தூக்கியாச்சு... ஐ அம் வெரி வெரி ஹாப்பி அண்ணா... இனி நீ தலை நிமிர்ந்து நடக்கலாம்...''

நந்தகுமார் வாய் பிளக்க அவளைப் பார்த்தான்... இவள் என்ன சொல்கிறாள்...

''என்னண்ணா அப்படிப் பார்க்கிறே... ஓ... உனக்கு விஷயம் தெரியாது இல்லே... சரி... சொல்கிறேன்... இரு... நான் வேலைக்கு சேர்ந்தது எங்கே தெரியுமா... உன்னோட ஆபீஸில்... ஆமாம்ண்ணா... வேண்டும் என்றே தான் அங்கு வேலையைத் தேடிக் கொண்டேன். உனக்கு யார் எதிரி... அவனோட நடவடிக்கை எல்லாவற்றையும் உளவு பார்த்தேன். நரேந்திரன் தான் என்று கண்டுபிடித்ததும்... அதைக் கன்ஃபர்ம் செய்து கொள்ள உன்னிடம் விசாரித்தேன்... அவனைக் கையும் களவுமாய் பிடித்துத் தர வேண்டும் என்ற வேகத்தில் செயல்பட்டு... அவனோட தில்லு முல்லுகளை வெட்ட வெளிச்சமாக்கினேன்... காரியத்தை வெற்றிகரமாய் முடித்ததும் உன்னிடம் சொல்லலாம் என்று நினைத்தேன் அண்ணா...''

அவன் மலைத்து நிற்பதைப் பார்த்துச் சிரித்தாள் அவள்.

''என்ன சின்னத் தங்கையா இத்தனையையும் செய்தது. என்னால் நம்ப முடியவில்லையேம்மா...'' என்றான் இன்னும் வியப்புத் தீராமல்...

''எனக்கு அப்பவே தெரியும்... என் பொண்ணு நினைத்[illegible] ததை சாதிக்கும் வர்க்கம் என்று... அந்த தைரியத்தில் தா[illegible]

நான் எதுவும் சொல்லவில்லை தெரியுமா...'' பெருமையாய் சொன்னார் கேசவமூர்த்தி.

''அப்பா... இந்த 'பல்டி'தானே வேண்டாம்ங்கிறது... அண்ணிக்கு என்னிடம் கெஞ்சியது மறந்து விட்டதாக்கும். வேண்டாம்மா... பெரிய மனிதர்களோட சகவாசம்... என்று யாரோ சொன்னதாய் ஞாபகம்...'' சுட்டு விரலை ஆட்டியவாறு சொல்லிச் சிரித்தாள் மகள்.

அசடு வழிய சிரித்தார் கேசவமூர்த்தி.

சாதனா தாயிடம் சொன்னாள்.

''அம்மா... இப்பத்தான் என் மனசு நிறைஞ்சிருக்கு... என் வாழ்க்கையில் மறக்க முடியாத நாளாகி.. விட்டதும்மா... அநியாயம் தோற்றுப் போய்... தர்மம் ஜெயித்த நாள்... ஆச்சே... அதைக் கொண்டாட வேண்டுமே... அண்ணா... ஏதாவது ஓட்டலுக்குப் போய்...''

''ஏன்... வயித்தைக் கெடுத்துக்கணுமா... அதெல்லாம் வேண்டாம்'' என்றாள் கல்பனா.

''அப்போ... நீயே பாயசம்... வடைன்னு சமைத்து விடு...'' என்றாள் மகள்.

''ஆமாம்... என் பொண்ணு ஜெயிச்சுட்டு வந்திருக்காடீ... அருமையா சமையல் செய்து ஜமாய்ச்சிடு...'' என்றார் கேசவமூர்த்தி.

''ஓ... செய்கிறேனே... எல்லோரும் ஒத்தாசை செய்தால்...''

''சரி... அப்பா... நீங்க காய்கறி நறுக்கிக் கொடுத்திடுங்ள்... அண்ணா... உனக்கு மிக்ஸியில் அரைத்து தரும் லை...''

'உனக்கு என்ன வேலை...''



''அம்மா சமைத்ததை ருசி பார்த்து... உப்பு உறைப்பு குறைகிறதா... சரியாக இருக்கிறதான்னு சொல்கிற வேலை...''

''ஆகா... ரொம்ப பெரிய வேலை அது...'' நந்தகுமார் கேலி செய்ய...

கலகலவென்று சிரித்தாள் சாதனா...

நீண்ட நாட்களுக்குப் பின் அந்த வீட்டில் கலகலப்பு திரும்பியது.




மறுநாள் காலை சாதனா பரபரப்புடன் அலுவலகத்திற்கு வந்தாள்...

அவள் நினைத்த மாதிரியே... நரேந்திரனின் விஷயம் ஆபீஸ் முழுக்கத் தெரிந்திருந்தது.

அதைப் பற்றித்தான் அனைவரும் பேசிக் கொண்டிருந்தனர்...

அது மட்டும் அல்ல... சாதனா... நந்தகுமாரின் தங்கை என்ற விஷயமும் அவர்களுக்கு அதிர்ச்சியைத் தந்தது.

''என்னிடம் கூட நீ மூச்சு விடவில்லையே... சாது... நெஞ்சழுத்தக்காரிடீ... நீ'' என்று குறைப்பட்டுக் கொண்டாள் சுமதி.

''எல்லாம் காரணத்துக்காகத்தான்டீ... முதலில் என் அண்ணா மீதிருந்த கறையைத் துடைத்து விட்டு... அப்புறம் நான் யார் என்பதை சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். அடுத்ததாய்... நான் நந்தகுமாரின் தங்கை என்று சொல்லியிருந்தால்... நரேந்திரன் உஷாராகியிருப் பான். இப்படி 'ரெட்' 'ஹாண்டாய்' பிடிப்பட்டிருக்க மாட்டான்... குற்றத்தை என் மீது போட்டு... அண்ண னுக்குத் தப்பாத தங்கை என்று உங்ளையெல்லாம் நினைக்க வைத்திருப்பான்... அப்படி நடக்கக் கூடாது என்று தான் நான் சொல்லாமல் மறைத்து விட்டேன்'' என்று விளக்கினாள் கல்பனா...

''நீ சொல்வதும் சரிதான் சாது... அந்த நரேந்திரன் இந்த அளவு மோசக்காரன் என்பதை என்னால் நம்பவும் முடியவில்லை. எல்லோருக்கும் இது 'ஷாக்' தான். அந்த ராதிகாவும் அவளை அறைந்து விட்டாளாமே... இனி உனக்கும் எனக்கும் ஒட்டும் இல்லை... உறவும் இல்லை என்று சொல்லி விட்டாள் போல... அதைக் கேட்டதும் எனக்கு சிரிப்பு வந்து விட்டது...''

அந்த நேரத்தில் மேனேஜரும் அங்கு வந்தார்.

''என்னம்மா நடந்தது.. என்னன்னவோ சொல்கிறார் கள்.. அது நிஜமா... அந்த நரேந்திரன் ஒரு களவாணிப் பயலாமே... அது எப்படித் தெரிந்தது. என்னவோ கையும் களவுமாய் பிடிபட்டான் என்று பேசிக் கொள்கிறார்கள்... இந்த விஷயத்தை 'பாஸ்' கிட்டே சொன்னது நீயாமே...

எனக்கு தலை கால் புரியவில்லைம்மா... கொஞ்சம் விலாவாரியா சொல்லும்மா... சாதனா... கேட்போம்...'' அவளும் எல்லாவற்றையும் நிதானமாய் விளக்கினாள்.

மேனேஜர் வியப்புடன் கேட்டார்.



''இத்தனை நடந்திருக்கிறதா. பாவம்மா. உன் அண்ணா. எத்தனை வேதனைப்பட்டான் தெரியுமா. ப்ளேட்டை திருப்பிப் போட்டு விட்டான். அந்த அயோக் கிய ராஸ்கல். அவனை சும்மா விட்டிருக்கக் கூடாது. நாலு சாத்து சாத்தி துரத்தியடிச்சிருக்கணும். என்ன அழிச்சாட் டியம்... என்ன அமுக்குளித்தனம்... படவா ராஸ்கல்... எங்கள் கண்களில் மண்ணைத் தூவி விட்டானே... அந்தப் பெண் ராதிகாவை மணக்கப் போவதாய் அளந்தா னாமே... சீர் வரிசையோடு வரவேற்பார்கள் என்ற நினைப்பு... அது சரி... அந்தப் பொண்ணுக்கும் வெட் கம்... மானம் சூடு சொரணைன்னு ஏதும் இல்லை போல... அவனோட ஊரெல்லாம் சுத்திவிட்டு... கடைசியில் நீ யாரோ நான் யாரோன்னு ஒதுங்கிட்டாள் பாரேன்... நல்ல குடும்பம்டா சாமி... அண்ணன் ஒரு ஜொள்ளு பார்ட்டி என்றால்... தங்கை வழிசல் பார்ட்டி... சே... மகா கேவலம்...!''

சாதனாவிற்கு 'சுரீர்' என்றது...

மனசாட்சி விழித்துப் பார்த்தது...

செய்யாத குற்றத்திற்கு தண்டனை அனுபவித்தவன் நந்தண்ணா... அதே மாதிரி தான் சரத்சந்திரனும்.. செய்யாத தப்புக்கு அவப்பெயர் வந்திருக்கிறது. பழிக்குப் பழி என்ற வெறியில் வம்பு செய்து சரத்சந்திரனின் மீது சேற்றை வாரி இறைத்ததை இப்போது நினைக்கும்போது உடம்பும் மனசும் கூசியது... குன்றிப் போனது...

அன்றைய சீற்றமும்... அடிப்பட்ட நாகத்தின் ம நிலையும் இன்று இல்லை...

நிதானமாய் யோசிக்கும்போது... தான் அப்படி செ திருக்கக் கூடாது என்றும் தோன்றியது.

பாவம்... சரத்சந்திரன் நல்லவர் என்பதால் அதை யெல்லாம் பொறுத்துக் கொண்டார்.

ஆத்திரத்தில் புத்தி அடிமட்டமாகிப் போனதே... இனியும் வாய் மூடிக் கொண்டிருப்பது நியாயமில்லை... அண்ணன் மீது பட்ட களங்கத்தைப் போக்கியது போல... சரத்சந்திரன் மீது தான் பூசிய கறையை துடைக்க வேண்டும் என்று தீர்மானித்தாள்.

''உங்களிடம் நான் உண்மையை ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். இல்லாவிட்டால் என் மனசாட்சி என்னைக் குத்தி குதறிப் போட்டு விடும். அன்றைக்கு நீங்கள் பார்த்தது பொய் சாட்சி... எம்.டி. என்னிடம் தவறாக நடந்து கொள்ளவில்லை சார். அவர் கண்ணியமாய் தான் பேசினார்... ஜென்டில் மேனாய் நடந்து கொண்டார். நான் தான் வேண்டும் என்றே அழுது கொண்டு வெளியே ஓடி வந்தேன்'' மேனேஜர் முகத்தில் திகைப்பு.

''என்னம்மா சொல்றே... அன்னிக்கு நீ ஓடி வந்ததைப் பார்த்து விட்டு அந்த மனுஷர் ஏதோ சில்லரைத்தனமா நடந்திருக்க வேணும் என்றல்லவா நினைத்தேன்.

பின்னே... ஏன் அப்படியொரு 'சீன் கிரியேட் பண் ணினே...'' என்றார் இன்னும் நம்ப முடியாமல்,

''அவர் மீது இருந்த ஆத்திரம் என்னை அப்படிச் செய்ய வைத்தது. யாரோ ஒருத்தனின் பேச்சைக் கேட்டு... என் அண்ணன் மீது பழி சுமத்திய அவரை செய்யாத தப்புக்கு அவமானப்பட்டு தலை குனிய வைக்க வேண்டும் என்ற கொதிப்பில் அப்படிச் செய்தேன் சார்... அதை நினைத்து இப்போது வெட்கப்படுகிறேன்...'' வருந்தும் குரலில் சொன்னாள் சாதனா...



''நல்ல பொண்ணம்மா நீ... பழி வாங்க இந்த வழிதான் தெரிந்ததா... ஒரு நல்ல மனிதரை தப்பா நினைக்க வச்சுட்டயே... நல்ல வேளை... இப்பவாவது சொன் னாயே... இல்லாவிட்டால் கடைசி வரைக்கும் அவரைத் தவறான கண்ணோட்டத்தில் பார்த்திருப்போம்.''

''எனக்கும் மனசாட்சி இருக்கிறது சார்... யார் கேட் டாலும் சொல்வேன்... அவர் உத்தமர்... ஒரு ஜென்டில் மேன்... பெண்களிடம் கண்ணியமாய் பழகுபவர். ஹி இஸ் எ ஜெம் என்று...''

''குட்மார்னிங் சார்...''

''குட்மார்னிங்... குட்மார்னிங்...''

தன்னைக் கடந்து சென்றவனின் குரலைக் கேட்டு அதிர்ந்து போனாள் அவள்.

நான் பேசியதைக் கேட்டிருப்பானோ... இருக்கட்டுமே... அவனைப் பற்றி நல்ல விதமாய் தானே சொன்னது.. கேட்டாலும் பரவாயில்லை...

அதுநாள் வரை உள்ளத்தைப் பாறையாய் அழுத்திய குற்ற உணர்வு காணாமல் போனதே... அது போதும்... சுறுசுறுப்புடன் வேலையை ஆரம்பித்தாள்.

இன்டர்காம் ஒலித்தது.

''சாதனா... என் அறைக்கு வா...!'' என்று சரத் சந்திரனின் குரல் அழைக்க... துரிதமாய் எழுந்து சென்றாள்.

''உள்ளே வரலாமா சார்...'' என்று நுழைந்தவளை புன்னகையுடன் வரவேற்றான் சரத் சந்திரன்.

''தாங்க்ஸ் சாதனா...'' என்றான்.

''எதற்கு...''

''என்னைப் பற்றி நல்ல விதமாய் எடுத்துரைத்ததற்கு. என் மீது அவர்களுக்கிருந்த தப்பெண்ணத்தை மாற்றியதற்கு... என்னை ஜென்டில்மேன்... கண்ணியவான் என்று புகழ்ந்ததற்கு...''

அவளது முகம் பட்டு ரோஜாவால் சிவந்து போனது.

''சாரி... நானும் ஏதோ ஒரு ஆத்திரத்தில்... உங்களை பழிவாங்கும் நோக்கத்தில் ஏதேதோ செய்து விட்டேன்... இப்போது நினைக்கும்போது எனக்கே அசிங்கமாய் படுகிறது... கோபம் கண்களை மட்டும் மறைக்கவில்லை... அறிவையும் மழுங்கச் செய்கிறது என்பது உண்மைதான். அதற்காக உங்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று இருந்தேன். நீங்களே அழைத்துப் பேசி விட்டீர்கள்... என்னை மன்னிக்க வேண்டும்... ப்ளீஸ்.''

புன்னகை மாறாமல் பேசினான் அவன்.

''நாம் இருவரும் இப்படி மாறி மாறி மன்னிப்புக் கேட்டுக் கொண்டே இருந்தால் எப்படி.. நடந்த சம்பவங்களை குப்பையாய் எண்ணி ஒதுக்கி விட்டு.. நம் வேலைகளைப் பார்ப்போம் சாதனா... இன்னும் இரண்டு மாதங்கள் தான் இருப்பது... அதற்குள் உன் வேலைகளை முடித்துக் கொடுக்க வேண்டும்...

நானும் இங்கே... என் வேலைகளை சரி பார்த்துவிட்டு சிங்கப்பூருக்கு புறப்படத் தயாராக வேண்டும். அப்புறம் இங்கே வர நேரம் இருக்காது பார்...''

அவனது அழகான புன்னகையில் மெய் மறந்து அவனது பேச்சில் லயித்திருந்தவளுக்கு... முகத்தில் ஐஸ் வாட்டரைக் கொட்டினது போல் இருந்தது.

உன் வழி உனக்கு... என் வழி எனக்கு என்பதை சொல்லாமல் சொல்கிறாரோ... இந்த வார்த்தைகள். ஏற்கனவே



பேசியதுதானே... ஆனால் அப்போது இல்லாத வலி இப்போது ஏன்... இதைக் கேட்டு உள்ளம் துடிக்கிறதே... எதையோ இழந்தது போல ஏன் இந்தத் தவிப்பு... அவன் மீது இருந்த வெறுப்பும் எரிச்சலும் மாயமாகிப் போனதால் வந்த மாற்றமா...

''என்ன சாதனா... உனக்கு வேலைக்கு வர பிடிக்கவில்லையா என்ன... சீக்கிரம் 'ரிஸைன்' பண்ணி விட்டுப் போக வேண்டும் என்ற விருப்பமா... முகம் வாடி விட்டதே...''

அவனது கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தவித்தாள்...

எதையாவது சொல்லி உள்ளத்தைக் காட்டிக் கொண்டு விடுவேனோ என்று பயந்தாள்.

''அதெல்லாம் இல்லை சார்... இரண்டு மாதங்கள் தானே... இரண்டு நாள் மாதிரி ஓடிவிடும்...''

ஏன் தொண்டை இப்படி வறண்டு தொலைக்கிறது... சே...

''உண்மைதான் சாதனா... அதனால் தான் சொல்கிறேன். இரண்டு மாதங்களாவது இருந்து விட்டு செல் என்று. இந்தக் கம்பெனிக்கு நல்லது செய்திருக்கிறாய்... வெளியே தெரியாமல் எலி மாதிரி சுரண்டிக் கொண்டிருந்த ஒருவனைக் காட்டிக் கொடுத்திருக்கிறாய்... உன்னை அப்படியே அனுப்பி வைக்க எனக்கு மன மில்லை. உன்னை சிறப்பாய் வழியனுப்பி வைக்க வேண் டும் என்பது என் விருப்பம்... நிச்சயம் உன் திருமணத் திற்கு ஒரு நல்ல அன்பளிப்பு என்னிடமிருந்து உனக வரும்...''

கடைசி வார்த்தைகளைச் சொல்லும்போது அவன் முகத்தில் இருந்த மலர்ச்சி காணாமல் போனது போல பட்டது.

இல்லை... அது அவளது பிரமையோ என்னவோ. அதற்கு மேலும் அங்கே நிற்கப் பிடிக்காமல் விரைந்தாள்.

ஓடி வந்து அமர்ந்த சாதனாவிடம் ''என்னடி... ஒரு மாதிரியா இருக்கே'' என்று விசாரித்தாள் சுமதி.

சாதாரண மனநிலையில் இருந்திருந்தால்...

''இல்லையே... இரண்டு மாதிரியாகவும் இருப்பேனே... என்று ஜோக் அடித்திருப்பாள்.

ஆனால் இப்போது வேடிக்கையாய் பேசும் நிலையில் மனம் இல்லை...

''ப்ச்சு... இன்னும் இரண்டு மாதம் தான் இருக்கிறது. அதை நினைத்தேன்...'' என்றாள் சலிப்பாக.

''நான் கேட்கிறேன்... உன் வேலையை ஏன் விடணும். தொடர்ந்து பார்க்கலாம் இல்லையா.''

''அந்த எண்ணம் எனக்கு இல்லை சுமதி... வந்த காரணம் முடிந்து விட்டது... நினைத்தது நிறைவேறி யாச்சு... இனியும் இருக்க மனசு ஒப்பவில்லை.''

அதுமட்டுமில்லையே.. வேறொன்றும் இருக்கிறது... அதை வெளியில் சொல்ல முடியாது... உள்ளம் ஊமை யாய் முனகியது.

''உன் பிடிவாதத்தைப் பற்றிக் கேட்கவா வேண்டும்... விடு...'' என்று சொல்லிவிட்டு கம்ப்யூட்டருக்குள் புகுந்து கொண்டாள் சுமதி.

வீட்டிலும் ஒரு பிடிப்பில்லாமல் வளைய வந்தாள் சாதனா.. எல்லாமே சலிப்பாகத் தெரிந்தது.



மாலை... ஏழு மணி சன் நியூஸைக் கேட்டுக் கொண்டு அமர்ந்திருந்தனர் கேசவ மூர்த்தியும் நந்தகுமாரும். கல்பனா சமையல் கட்டில் பீன்ஸை வதக்கிக் கொண் டிருந்தாள்...

சாதனா... சும்மா அமர்ந்திருக்க மனமின்றி... தன் உடைக்கு இஸ்திரி பண்ணிக் கொண்டிருந்தாள்.

அந்த சமயத்தில் தான் அழைப்பு மணி ஒலித்தது. யார் வந்திருப்பது என்று எட்டிப் பார்த்த கேசவ மூர்த்திக்கு ஆச்சர்யம்...

''வாருங்கள்... மிஸ்டர் சரத்சந்திரன்..'' என்று வர வேற்றவாறு கதவைத் திறந்தார்.

இஸ்திரிப் பெட்டியை இயந்திரமாய் நகர்த்திக் கொண் டிருந்த சாதனாவின் கை... சட்டென்று நின்றது. சரத் சந்திரனா... அவர் எங்கே இங்கு. வரப் போவதாய் சொல்ல வும் இல்லையே... இப்படி முன்னறிவிப்பு இன்றி ஏன் வந்திருக்கிறார்... எட்டிப் பார்த்தாள்...

தயக்கத்துடன் வந்து நின்ற நந்தகுமாரின் கரங்களைப் பிடித்துக் கொண்டு... ஆங்கிலத்தில் அவன் பேசியது காதில் விழுந்தது.

''என்னை மன்னிக்க வேண்டும் நந்தகுமார். உங் களைத் தவறாக நினைத்து... திருட்டுக் குற்றத்தை உங்கள் மீது சுமத்தியதற்கு... அதை நினைத்து வெட்கப் படுகிறேன். உங்களிடம் நேரில் வந்து மன்னிப்புக் கேட்டால்... தான் மனம் ஆறும்... அது வரைக்கும் எனக் நிம்மதி வராது என்றுதான் இங்கு வந்தேன்... மன்ன யுங்கள்...''

''என்ன சார்... சூழ்நிலையும் சந்தர்ப்பமும் தான் எனக்கு எதிராய் சதி செய்திருக்கிறது... அதற்கு நீங்கள் என்ன பண்ண முடியும்... விடுங்கள் சார்...'' அண்ணாவின் பதிலைக் கேட்டு சாதனா பூரிப்பு அடைந்தாள்... என்ன பெருந்தன்மை... நந்தண்ணாவிற்கு... பெருமிதத்துடன் நினைத்தாள்.

''வந்து உட்காருங்கள் சரத்சந்திரன்... அன்றைக்கு இருந்த நிலைமையில் நீங்கள் சாப்பிடும் மனநிலையில் இல்லை... இன்றைக்காவது சாப்பிட்டு விட்டுத் தான் போகணும்...'' என்று சொன்னார் கேசவமூர்த்தி.

அவரது உபசாரத்திற்கு மரியாதை கொடுத்து அமர்ந்த வனின் கண்கள் அலைபாய்ந்தன.

''சாதனா. இங்கே வாம்மா'' என்று தந்தை அழைக்க... அங்கே வந்தாள் அவள்.

''வாங்க சார்... என்னிடம் வருகிறேன் என்று சொல்ல வில்லையே'' என்று கேட்டாள்.

''ஏதோ தோன்றியது... அதுதான் வந்தேன்'' என்றவன் கேசவ மூர்த்தியிடம் கேட்டான்...

''கல்யாண ஏற்பாடுகள் எந்த மட்டில் இருக்கிறது.''

நந்தகுமாரின் திருமணத்தைப் பற்றி விசாரிக்கிறான் என்று நினைத்து பதில் சொன்னார் கேசவமூர்த்தி.

''அடுத்த மாதம் பதினெட்டாம் தேதி நிச்சயதார்த்தம். அதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கிறது. கண்டிப்பாய் நீங்கள் வரணும்... ஆபீஸுக்கே வந்து கூப்பிட வேண்டுமா சரத்சந்திரன்.''

''நோ ஃபார்மாலிட்டீஸ்... இங்கு அழைத்ததே போதும்'' என்று சொல்லிவிட்டு... தட்டில் கொண்டு வந்து வைத்த



தேங்காய் பர்பியை விண்டு வாயில் போட்டுக் கொண்ட டான்... காராசேவையும் ருசி பார்த்து விட்டு... சாதனா நீட்டிய காபியைக் குடித்து விட்டு எழுந்தான். ''வருகிறேன் நந்தகுமார்... வருகிறேன் சார்... உங்களது உபசரிப்புக்கு தாங்க்ஸ்... வருகிறேன் சாதனா...'' என்று சொல்லிக் கொண்டு கிளம்பினான் சரத் சந்திரன்.

கொஞ்சம் தூரம் போனதும் நின்று...

''சாதனா... உங்களிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும்'' என்றதும்... அவனுடன் நடந்தாள் அவள்.

''இரண்டு நாட்கள் என்னால் ஆபீஸுக்கு வர முடியாது. 'விசா' விஷயமாய் 'பிஸி'யாக இருப்பேன்... மேனேஜரிடம் ஏதாவது எமர்ஜென்ஸி என்றால் மட்டும் என் 'செல்'லுக்கு 'கான்டாக்ட்' பண்ணச் சொல்... ஓகே... பை...'' என்றான்.

காரில் அமர்ந்தவன்... கண்ணாடியை இறக்கி விட்டு ''குட் நைட் சாதனா... ஸியூ...'' என்று சொல்லிவிட்டு... அவளையே சில கணங்கள் பார்த்தான். பிறகு காரைக் கிளப்பினான்...

கார் மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தாள் சாதனா.

மயிலிறகால் வருடியது போல ஒரு இனிய உணர்வு நெஞ்சில் படர்ந்தது.

அவன் நேரில் வந்து அண்ணனிடம் மன்னிப்பு கேட்ட தால் இருக்கலாம்... பிகு செய்யாமல்... சகஜமாய் இரு தானே... அதற்காகவும் இருக்கலாம் தான். அவனது வர அவளுக்கு இனிமையாய் இருந்தது என்னவோ நிஜம்.



‘ஷாப்பிங்’ என்பதே ஒரு சந்தோஷமான சமாச்சாரம். அதிலும் கல்யாண விஷயம் என்றால்... சொல்ல வேண்டுமா... படு குஷிதான்.

நந்தகுமார்... மீராவின் நிச்சயதார்த்தத்திற்கு ஏதேதோ வாங்க வேண்டி இருந்தது... சாதனா குதூகலத்துடன் கிளம்பினாள்... ஏன்... நந்தகுமார் கூட உற்சாகமாய் புறப்பட்டு விட்டதுதான் ஆச்சர்யம்...

ஆனால் கல்பனா மட்டும் விருப்பம் இல்லாமல் வந்தாள்.

மகனின் திருமண விஷயத்தில் அவள் கண்ட கனவுகள்.

செய்த கற்பனைகள் அனைத்துமே நொறுங்கிப் போய் விட்டதே என்ற அங்கலாய்ப்பில் வெந்து போயிருந்தாள்.

ஒரே பிள்ளை... நன்கு படித்திருக்கிறான். நல்ல எதிர்காலம் என்பது நிச்சயம்தான்... சீரும் சிறப்புமாய் பெண் வீட்டார் திருமணத்தை நடத்தித் தர வேண்டும். விழுந்து... விழுந்து தங்களை உபசரிக்க வேண்டும் என்று அவள் மனதின் ஆசை நிராசையாகிப் போனது. இங்கே பெண் வீட்டார் என்று ஒரு நரப்பிள்ளையும் இல்லையே என்பதுதான் வருத்தம்.



முதல் திருமணத்தில் உதறி விட்டுப் போன உறவுகள் மறுபடியும் ஒட்டுவார்களா என்ன... ஊகூம்... மீராவுக்கு என்று யாரும் இல்லை என்பதால்... இரு பக்கச் செல வையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்ய வேண்டும்...

மீரா தனது சேமிப்பை கொடுக்க முன் வந்தாலும் அதை ஏற்க மறுத்து விட்டான் நந்தகுமார்...

அந்த விஷயத்திலும் கல்பனாவிற்கு மனக்குறை தான்...

எல்லாம் தலைவிதி... இப்படி பரதேசியாய் கல்யாணம் நடக்க வேண்டும் என்ற தலையெழுத்து உள்ளுக்குள் குமைந்தாள் கல்பனா.

தாய் அசிரத்தையாய் வருவதை சாதனாவும் கவனித் தாள்.

“அம்மா... இந்தப் புடவை எப்படி... மீராவுக்குப் பொருத்த மாய் இருக்குமா... நந்தண்ணாவோட செலக்ஷன்” என்று கேட்டாள் மகள்.

“அவன் தான் விரும்பியாச்சே... அப்புறம் என்கிட்டே என்ன கேள்வி...” என்று குத்தலாய் வந்தது பதில். நல்லவேளையாய் நந்தகுமார் சற்றுத் தள்ளி இருந்ததால் அவனது காதில் விழவில்லை.

கேசவ மூர்த்தி அடிக்குரலில் மனைவியிடம் சொன்னார்.

“இதோ பார்... இப்பத்தான் நம்ம பிள்ளை தேறி வந்திருக் கிறான்... அவன் மனம் புண்படும்படி பேசி மறுபடியும் அவனை பழைய நிலைக்குக் கொண்டு போயிடாதே... அப்புறம் உன் பிள்ளைக்குக் கல்யாணம் என்று ஒன்று இல்லாமலே போயிடும்... உஷார்...” அதற்குப் பிற

கல்பனா எதுவும் பேசவில்லை... முகம் மட்டும் 'உர்' என்று இருந்தது.

சாதனாவிற்கு தாயின் போக்கு வருத்தத்தைத் தந்தது. மீராவின் நல்ல குணம் அம்மாவின் மனதை மாற்றி விடும் என்ற நம்பிக்கை அவளுக்கு நிறையவே இருந்தது...

'ஷாப்பிங்' முடிந்ததும் அனைவருக்கும் பசி தெரிந்தது. அருகில் இருந்த ஓட்டலுக்குச் சென்றனர்.

நடுநிசியில் வயிறு கடபுடா என்று இம்சிக்க... அவதியை தாள முடியாமல் எழுந்து ஓடினாள் கல்பனா... ஓட்டல் சாப்பாடு ஒத்துக் கொள்ளவில்லை போலும்... வயிற்று வலியும்... தொடர்ந்து வயிற்றுப்போக்கும் வந்து சேர... கந்தல் துணியாய் துவண்டு விட்டாள் கல்பனா.

அவள் படும் அவதியைப் பார்த்துவிட்டு உடனே டாக்டரிடம் அழைத்துச் சென்றார்கள்.

''என்ன சாப்பிட்டீர்கள்...'' என்று கேட்டார் டாக்டர்.

''ஓட்டலில் சாப்பிட்டது டாக்டர்... உடனே இப்படி ஆகிவிட்டது...'' என்றாள் சாதனா.

கல்பனாவைச் சோதித்த டாக்டர்... 'ஃபுட் பாய்ஸன்' போல் தெரிகிறது... உடனே ஆஸ்பத்திரியில் 'அட்மிட்' செய்யுங்கள்...'' என்றதும்... குழப்பத்துடன் கேட்டாள் சாதனா...

''நாங்களும் ஓட்டலில் சாப்பிட்டோமே டாக்டர்... அம்மாவிற்கு மட்டும் எப்படி ஃபுட் பாய்ஸன் ஆகும்...''

''நீங்கள் என்ன சாப்பிட்டீர்கள்...''

''நானும் அப்பா... அண்ணாவும் நார்த் இன்டியன் டிஷ்... அம்மா மட்டும் சவுத் இன்டியன் மீல்ஸ்...''



''புரிந்ததா... அதில் ஏதோ ஒன்று உங்க அம்மாவுக்கு ஒத்துக் கொள்ளவில்லை... அதுதான்... ஒன்றும் பயப் படாதீர்கள்... மருந்தில் சரியாகிவிடும்... ஆனால் உடனே 'அட்மிட்' பண்ணியாக வேண்டும்... அதைச் செய்யுங்கள்'' என்றார் டாக்டர்.

ஸ்பெஷல் வார்டில் சேர்க்கப்பட்டாள் கல்பனா.

டிரிப்ஸில் மருந்து ஏற்றி உட் செலுத்தப்பட்டது.

அன்றைக்கு தாயுடன் இருந்து விட்டாள் சாதனா.

நாலைந்து நாட்களாவது ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டி இருக்கும் என்று டாக்டரும் கூறிவிட...

எப்படி சமாளிப்பது என்று யோசித்தாள் சாதனா...

தாயுடன் ஒருவர் இருக்க வேண்டும்... வீட்டில் சமையலும் நடக்க வேண்டும்... அம்மாவிற்கு ஓட்டல் இட்லி.. சாதம் எதுவும் கொடுக்கக் கூடாது என்று டாக்டரின் எச்சரிக்கை வேறு... தவிர... ஆபீஸில் வேலை இருக்கிறது...

கல்பனா ஆஸ்பத்திரியில் இருக்கிறாள் என்று மீராவுக்கு தெரிந்ததும் அவள் ஓடி வந்தாள்.

''கவலைப்படாதே சாதனா... அம்மாவோட நான் இருந்து பார்த்துக் கொள்கிறேன்... நீ சமைத்து உன் அண்ணாவிடம் கொடுத்தனுப்பி விட்டு ஆபீஸுக்கு போ.'' என்றாள் கரிசனத்துடன்.

அவளை நன்றியுடன் பார்த்தாள் சாதனா...

அந்த நேரத்தில் தான் கல்பனாவிற்கு வயிற்றைப் புரட்டிக் கொண்டு வந்தது... வாந்தி வருகிறது என்று சைகையில் சொல்ல... சாதனா பேசின் கொண்டு வ விரைந்தாள்.

வாந்திக்கு பொறுமையில்லை... 'உவ்வே' என்று சத்தத்துடன் வெளிவர... மீரா அதை அப்படியே கையில் வாங்கிக் கொண்டாள்.

அந்த சமயத்தில் பேஸனுடன் வந்தாள் சாதனா... கையில் இருந்த வாந்தியை அதில் கொட்டிவிட்டு... பேஸனை வாங்கி... அதை வாயருகில் பிடித்துக் கொண்டாள்.

ஆயாசத்துடன் கேட்டாள் கல்பனா.

''நீ எதுக்கும்மா இதையெல்லாம் செய்யறே... சாதனா பார்த்துப்பாள் விடும்மா...''

''எனக்கும் நீங்க அம்மாதாம்மா... என் அம்மாவுக்கு நான் செய்வதில் என்ன தப்பு...'' வாயைத் துடைத்து விட்டவாறு சொன்னாள் மீரா.

'சுருக்' என்றது கல்பனாவிற்கு...

தாயை அர்த்தத்துடன் பார்த்தாள் சாதனா...

''இப்போது புரிந்து கொண்டாயா அம்மா...''

கல்பனா தன் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.

பேஸினைக் கழுவி வைத்துவிட்டு வந்த மீரா... தலையணையை சரிபண்ணி... கல்பனாவை மெல்ல படுக்க வைத்தாள். பின்பு போர்வை இழுத்துப் போர்த்தி விட்டு சாதனாவிடம் சொன்னாள்.

''சாதனா... அப்பாவையும் உன் அண்ணாவையும் அழைத்துக் கொண்டு வீட்டுக்குப் போ... அம்மாவை நான் கவனித்துக் கொள்கிறேன்...'' என்றாள் உரிமையாய்.

சாதனாவிற்கு ஒரே சந்தோஷம்.

மருமகள் என்ற உரிமையை எடுத்துக் கொண்டு... பொறுப்பாய்... நடந்து கொள்ள ஆரம்பித்து விட்டாளே... தன் தோழியை பெருமிதத்துடன் பார்த்தாள்.



நான்கு நாட்களுக்குப் பின் கல்பனாவை 'டிஸ்சார்ஜ்' செய்து அழைத்துப் போகலாம் என்று டாக்டர் சொல்லி விட... பணம் கட்டிவிட்டு... டிஸ்சார்ஜ் சம்மரி... மருந்து பட்டியல் எல்லாவற்றையும் வாங்கி வர மீரா சென்றிருந்தாள்.

சாதனா... அம்மாவின் உடைகளை 'பேக்' செய்து கொண்டிருந்தாள்.

''என்னம்மா... இன்னிக்கு டிஸ்சார்ஜ்ஜா... சந்தோஷம். ஆஸ்பத்திரி நெடியில்லாமல் வீட்டில் இருக்கலாம்...'' என்றார் அதே ஸ்பெஷல் வார்டில் சேர்ந்திருந்த பேஷண்ட்...

இரண்டு படுக்கைகள்... மத்தியில் சின்ன தடுப்பு... வயிற்று வலி என்று அந்த பேஷண்ட்டும் சேர்க்கப் பட்டிருந்தார்... 'அப்பண்டிஸைட்டிஸ் அறுவை சிகிச்சையாம்... மறுநாள் அறுவை சிகிச்சை...

''உடம்பைப் பார்த்துக்கங்கம்மா... கூட இருந்தது உங்க மகளா...'' என்று கேட்டாள்.

''இல்லை... மருமகள்'' என்றாள் கல்பனா.

''மருமகளா... அடடா... தங்கமான பொண்ணும்மா... நீங்க ரொம்பக் கொடுத்து வச்சவங்க... பெத்தத் தாயாட்டம் இல்லே கிட்டக்க இருந்து கவனிக்குது... இந்தக் காலத்தில் யார் இப்படி மாமியாரை பார்த்துக்கறாங்க... எனக்கும் வாச்சிருக்குப் பாருங்க... நீ செத்தா எனக்கென்ன மாதிரி அலட்சியம்.. நீங்களே கவனிச்சிருப்பீங்களே... ஒரு தடவையாவது வந்து எட்டிப் பார்த்ததுங்களா... ம்ம்.. இவங்களை நம்பி நாம வாழ வேண்டி இருக்கு பாருங்க... அதுதான் கொடுமை... அந்தக் கவலை உங்களுக்கு வராதும்மா. கடைசி வரைக்கும் உங்க மருமக உங்களை கண் கலங்காம பார்த்துக்கும்... பாருங்க...''

ஏற்கனவே மீராவின் பணிவிடையில் கனிந்து போயிருந்த கல்பனாவின் மனம்... அந்தப் பெண்மணியின் பேச்சில் நெகிழ்ந்து போனது.

மீராவின் நல்ல குணத்தை தனக்கு உணர வைக்கத்தான் கடவுள் இந்த வயிற்றுப் போக்கையும் வாந்தியையும் தந்து ஆஸ்பத்திரியில் சேர வைத்தாரோ என்னவோ...

''என்னம்மா... உன் மருமகளின் அருமை இப்போதாவது புரிந்ததா...'' குறும்பாய் கேட்டாள் மகள்.

''எப்பவோ புரிஞ்சாச்சுடீ...''

''இனிமேலாவது மீராகிட்டே அன்பா பேசு... அனுசரணையா நடந்துக்கோ... என்ன...''

''இதோ பார்... இப்படிப் பேசினே எனக்குக் கெட்ட கோபம் வரும்... ஆமாம்...''

''போச்சுடா... மறுபடியும் வேதாளமாயிட்டாயா...''

''இனிமே... அவளை மீரான்னு அழைக்காதே... அண்ணின்னு மரியாதையாக் கூப்பிடு... என்ன தான் தோழியா இருந்தாலும்... இப்ப அவள் உன் அண்ணாவோட மனைவி... தாய்க்குச் சமம்... தெரிஞ்சுக்கோ.''

''அய்யோ... உடம்பெல்லாம் புல்லரிக்கிறதே... என் அம்மா மருமகளுக்கு பரிந்து பேச ஆரம்பித்து விட்டாளே...'' என்று பரிகாசம் செய்தாள் மகள்...

நந்தகுமார் வந்ததும் எல்லோரும் வீட்டிற்குப் புறப்பட்டனர்.

வந்ததிலிருந்தே தோழியை கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள் மீரா... எதையோ உள்ளுக்குள் வைத்துக் கொண்டு தவிக்கிறாள் என்று தெரிந்தது... கலகலப்பாகக் காட்டிக் கொண்டாலும்... மனசுக்குள் ஏதோ சஞ்சலம்



இருக்கிறது... அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் பேசுகிறாள் என்பதை அந்த 'சைக்கியாட்ரிஸ்ட்'க்கு நன்றாகவேப் புரிந்தது.

அது என்ன என்று தெரிந்து கொள்ள விரும்பினாள்... இரவில்... மொட்டை மாடியில் தோழிகள் இருவரும் நீண்ட நேரம் அரட்டை அடித்தனர்.

மீராவிற்கு ஆபீஸில் நடந்த விஷயம் தெரிந்திருந்தபடியால்... அந்த விஷயத்தை கிண்டிக் கிளறவில்லை. அவள் மனதை ஆராய வேண்டும் என்று வேறு எதையோ பற்றிப் பேசினாள் அவள்... மனதளவில் ஒட்டாமல் பதில் சொன்னாள் சாதனா...

அவளை நிறையப் பேசவிட்டு அவளது முகபாவத்தை கவனித்தவளுக்கு ஒன்று மட்டும் நிச்சயமாய் புரிந்தது.

ஆரம்பத்தில் வேலைக்குப் போன சாதனாவிற்கும்... இப்போதைய சாதனாவிற்கும் ரொம்பவே வேறுபாடு இருக்கிறது.

அன்றைய ஆத்திரமும்... வெறியும் அடங்கி விட்டிருந்தது... ஒருவேளை... அண்ணனின் களங்கத்தைப் போக்கி விட்டோம் என்ற நிம்மதியால் இருக்கலாம்...

அடுத்து... ஒன்றைக் கவனித்தாள்... சரத்சந்திரனைப் பற்றிப் பேசும்போது அவளது முகத்தில் மலர்ச்சியும்... கண்களில் ஒளியும் வந்தது... அப்படியென்றால் தன் ஊகம் சரிதான்... அதை இன்னும் ஊர்ஜிதப் படுத்திக் கொள்ள...

''நீ நினைத்தது நடந்து விட்டதே... சாது... இனி வேலையை விட்டு விடலாம் தானே...'' என்று கேட்டாள்.

''ப்ச்சு... இரண்டு மாதத்தில் ரிஸைன் பண்ணத்தான் போகிறேன்...'' என்று வாட்டத்துடன் பதில் வந்தது.

"ஏன்... உனக்கு விருப்பம் என்றால் அங்கேயே தொடர்ந்து வேலை செய்யேன்... உன் விருப்பம் தானே முக்கியம்..."

சரத்சந்திரன் இல்லாத அலுவலகத்தில் ஒரு கணமும் இருக்கப் பிடிக்கவில்லைடீ என்று சொல்ல முடியாமல் தவித்தாள்.

"உனக்கு என்னடீ குழப்பம்... 'பாஸ்' இப்போ சுமுகமாய் பேசுகிறார் இல்லையா... அப்புறம் என்ன பிரச்சனை... அவர் நல்லவர் என்கிறே... அவர் கீழ் வேலை பார்ப்பதில் சந்தோஷம் தானே உனக்கு..."

"அவர் இன்னும் இரண்டு மாதங்களில் சிங்கப்பூருக்குப் போய் விடுவார் மீரா... அவர் இடத்திற்கு வருபவர் யாரோ... எப்படிப்பட்டவரோ... தெரியாது. ஆகையால் நான் 'ரிசைன்' பண்ணப்போவது உறுதி..."

ஓ! அதுதான் விஷயமா... இப்போது புரிந்தது அய்யா இந்தியாவை விட்டுப் போகிறார். அவரைப் பார்க்க முடியாது என்று அம்மணி உருகுகிறாள் போலும்.

அவளது மனதைப் படித்து விட்ட சந்தோஷத்தில் சாதனாவை கேட்டாள் மீரா...

"உன் பிரச்சனை என்ன என்று எனக்கு நன்றாய் புரிந்து விட்டதுடீ... சாது..."

என்ன என்பதுபோல பார்த்தாள் சாதனா.

"நீ சரத்சந்திரனைக் காதலிக்கிறே... அப்படித்தானே..."

திகைப்புடன் பார்த்தாள் சாதனா...

"மைடியர் சாது... நான் ஹியூமன் ஸைக்காலஜி படித்தவள்... மனதை கண்ணாடியாய் படித்து விடுவேன். இப்போது ஒப்புக் கொள்... நான் சொன்னது சரிதானே..."

தலையைக் குனிந்து கொண்டாள் அவள்.



"அப்படித்தான் நினைக்கிறேன் மீ... சாரி அண்ணி... என்னையும் அறியாமல் அவர் மீது ஒரு ஈர்ப்பு வந்து... காதலாகி விட்டது. ஆனால்... இது நடக்குமா என்ற சந்தேகம் என்னுள் குடைகிறது..."

"ஏன் நடக்காது... வீட்டில் தடை சொல்வார்கள் என்றா... நான் எடுத்துச் சொல்லிப் புரிய வைக்கிறேன்டீ... கவலைப் படாதே..."

"அதில்லை அண்ணி... அவரே என்னிடம் வந்து தன் காதலைச் சொன்னபோது... அதை உதாசீனம் செய்தது மட்டுமில்லாமல்... அசிங்கமாகவும் நடந்து கொண்டேன். அதை இப்போது நினைத்தாலும் உடம்பெல்லாம் கூசுகிறது... இன்னும் அவர் மனதில் நான் இருப்பேனா என்பது சந்தேகம்தான் அண்ணி... அவருக்கும் 'ஈகோ' இருக்கும் இல்லையா" என்றாள் வேதனையுடன்.

"ஒன்று சொல்லட்டுமா சாது... உண்மையான அன்பு அசிங்கம்... அவமானம் என்று எதையும் பார்க்காது... குழப்பிக்காதே... எல்லாம் நல்லபடியாக நடக்கும்னு நம்பிக்கையோடு இரு சாது... வா... போகலாம்" இருவரும் கீழே இறங்கிச் சென்றனர்.




நந்தகுமார் - மீரா ஜோடியின் நிச்சயதார்த்த வைப அழகான மண்டபத்தில் நடந்தது.

வீட்டின் முதல் விசேஷம் என்பதால் உறவுகளும் நண்பர்களும் தப்பாமல் வந்துவிட்டனர்.

அனைவருக்கும்... அந்த வீட்டு மருமகள் எப்படி இருக்கிறாள் என்று பார்க்கும் பேரார்வம்...

அதில் பலருக்கு மீராவைப்பற்றி கொஞ்சம் தெரிந்திருந்ததால்... அந்தப் பெண் ஏற்ற மருமகள் தானா என்று அறிந்து கொள்ளும் ஆவல் வேறு...

வந்தவர்களில் பலர் நந்தகுமாரை பிரமிப்புடன் பார்த்தார்கள்... விதவைக்கு மறுவாழ்வு தர வந்திருக்கிறானே... எத்தகைய பரந்தமனம் என்ற வியப்போடு... அதை கேசவமூர்த்தியிடம் சொல்லி மகிழ்ந்தனர்.

சிலர் மட்டும் ஏளனமாய் பேசிக் கொண்டனர்...

“போயும் போயும் கைம்பெண்தானா கிடைக்க வேண்டும்.. என்ன கசமுசாவோ... யாருக்குத் தெரியும்...”

அவர்கள் வாயை அடைக்கும் விதமாய்.. கல்பனா.. எல்லோரிடத்திலும் தன் மருமகளின் பெருமையைப் பேசினாள்...

“நான் ரொம்ப கொடுத்துவைத்திருக்க வேண்டும்.. எனக்கு சாதனா மாதிரி அவளும் பொண்ணுதான்.. சாதனாவுக்கும் குஷி.. தன் சிநேகிதியே தனக்கு அண்ணியா வந்துவிட்டாள் என்று.. பார்த்து பொறுக்கி எடுத்திருந்தால் கூட இப்படி ஒரு அருமையான மருமகள் கிடைக்க மாட்டாள்...”

சாதனாவின் காதிலும் அம்மாவின் வார்த்தைகள் விழுந்தன.. எப்படி இருந்த அம்மா.. எப்படி மாறிவிட்டாள் என்ற வியப்பு அவளுக்கு.

“போதும்மா உன் மீரா பஜனை. என் காது புளித்து விட்டது” என்று கேலி செய்வதும் உண்டு.



மீராவைப் பார்க்கையில் பெருமையாகவும் இருந்தது. படித்த படிப்புக்கு ஏற்ற மிடுக்குடன்.. அதே சமயம் வந்திருந்தவர்களிடம் இனிமையாய் பேசிப் பழகி வளைய வந்ததை பெருமிதத்துடன் பார்த்தாள்.

நல்ல வாழ்வு கிடைத்துவிட்ட மகிழ்ச்சியோ என்னவோ... அவளது வதனத்தில் ஒரு ஜொலிப்பு.. அவளது அழகு சுடர் விட்டு ஒளிர்ந்தது.

‘க்ரீம்’ நிறத்தில் மெரூன் கரையுடன் கூடிய காஞ்சிப் பட்டை உடுத்தி.. தலை நிறைய பூச்சூடி... கைகளில் தங்க வளைகளுடன் புடவைக்கு பொருந்தும் நிறத்தில் கண்ணாடி வளையல்களை அணிந்து... மகாலட்சுமியாய் தெரிந்தாள் மீரா...

அவளையே சுற்றி சுற்றி வந்த அண்ணனைப் பார்க்கும் போது நெஞ்சம் விம்மியது...

அவனது முகத்தில் தெரிந்த பெருமை.. இவள் என் வாழ்க்கைத் துணைவியாக்கும் என்று எல்லோருக்கும் காட்டும் பெருமை.

இராமனுக்கு ஏற்ற சீதைபோல.. அந்த பொருத்தமான ஜோடியைப் பார்த்துப் பார்த்து பெற்ற மனங்களில் பூரிப்பு.

வந்த உறவுகளிடம் தன் மருமகளை அணைத்தவாறு அறிமுகப்படுத்தினாள் கல்பனா.

“எனக்கு இனி கவலை இல்லை... இனி வீட்டுப் பொறுப்பை என் மருமகள்கிட்டே கொடுத்துவிட்டு அக்கடா என்று உட்கார்ந்து விடுவேன்... மீரா பொறுப்பா பார்த்துப்பா...” என்று சொல்லும் போது அவள் முகத்தில் ஜம்பம் தெரியும்...

கேசவமூர்த்தி.. கல்பனாவைப் போல வெளியில் காட்டிக் கொள்ளாவிட்டாலும் உள்ளுக்குள் ஆனந்த தான்.. இப்போதெல்லாம் எதற்கெடுத்தாலும் மீராதான்

''மீரா.. நீ சொல்லம்மா.. என்ன 'மெனு' கொடுக்கலாம்...''

''என்னம்மா மீரா... வந்தவர்களுக்கு தாம்பூலத்துடன் கூடவே ஸ்வீட் தட்டு.. இல்லே.. கிண்ணம் தந்தால் நன்றாக இருக்கும்தானே.. நீ என்னம்மா சொல்றே...''

''மீரா.. வாம்மா.. சத்திரத்திற்கு எந்த மாதிரி அலங்காரம் செய்யணும்னு சொல்லு.. உனக்குத்தான் அது தெரியும்'' என்று ஒவ்வொன்றிற்கும் மருமகளிடம் ஆலோசனை கேட்க ஆரம்பிக்க...

''பார்த்தாயா அண்ணி... இந்த அநியாயத்தை... இதுநாள்வரை என்னிடம் கேட்டவர்... இப்போ என்னை மறந்துவிட்டு மருமகள் கிட்டே கேட்க ஆரம்பித்ததை. இதை வன்மையாய் ஆட்சேபிக்கிறேன்...'' என்று விளையாட்டாக போர்க்கொடி தூக்குவாள் சாதனா.

''என்ன இருந்தாலும் நீ இன்னொரு வீட்டுக்கு போறவள்ம்மா... இந்த வீட்டுக்கு மருமகள்னு ஒருத்தி வந்தாச்சு.. உன் அம்மாவுக்கு பிறகு அவள் தானே இங்கு... இல்லையா கல்பனா...'' என்பார் கேசவமூர்த்தி...

''நான் கல்யாணமே பண்ணிக் கொள்ளாமல் இருந்தால்...'' என்று பயமுறுத்துவாள் சாதனா...

''அது நடக்காது.. நாங்க உன்னை மூட்டைக் கட்டி மனையில் அமர வைத்துவிடுவோம்...''

''உம்ம்.. என்னைத் தூரத்துவதில் அவ்வளவு சந்தோஷம்.. இருக்கட்டும்...'' சாதனா போலியான வருத்தத்துடன் சொல்ல...

''போகட்டும் அப்பா.. வீட்டு மாப்பிள்ளையாகவே பார்த்து விடலாம்... சரியா சாது...'' மீரா கேலி செய்வாள்.



தனிமையில் மீராவின் மடியில் படுத்தவாறு சொன்னாள் சாதனா.

''எனக்கு இப்போதுதான் நிம்தியாக இருக்கிறது அண்ணி... எனக்கு நீ நல்ல தோழியாய் மட்டும் இல்லை..என் அம்மா அப்பாவிற்கு நல்ல மகளாகவும் இருக்கிறாய்.. அதை நினைக்கும் போது என் இதயம் வெடித்துவிடும் போல சந்தோஷம்.. அண்ணி...''

''பார்த்தும்மா.. அந்த இதயத்தில் இருப்பவருக்கு அது ஆபத்தாகி விடும்.. ஜாக்கிரதை'' என்ற கேலியாய் சொன்னாள் மீரா...

அதைக்கேட்டு பெருமூச்சு விட்டாள் அவள்...

இப்போதும் சாதனாவின் மனம் பரபரத்துக்கொண்டு தான் இருந்தது... கண்கள் வாசல் பக்கம் தாவித் திரும்பின... அவன் வருவானா... கண்கள் ஏங்கித் தவித்தன.

ஒருவேளை வராவிட்டால்... அன்றே சொன்னானே.. வர இயலாது என்று...

''சாதனா வாயேன்... உள்ளே இருந்து எல்லாவற்றையும் கொண்டு வந்து வை.. மீரா அறைக்குள் இருக்கட்டும் பெட்டிக்குள் மீராவோட பட்டுப்புடவை.. ரவிக்கை இருக்கிறது... அப்புறம் அப்பாகிட்டே நகையை கொடுத்து வைத்திருக்கிறேன். அவற்றையெல்லாம் மறக்காமல் கொண்டு வந்து என்னிடம் கொடு.. லக்ன பத்திரிகை எழுத ஆரம்பிப்பதற்குள் எல்லாம் ரெடியாகணும்...''

அம்மாவின் குரல் கேட்டு சுறுசுறுப்பானாள் சாதனா. வேலைகளின் மும்முரத்தில் சரத்சந்திரன் வந்ததையும் அவள் கவனிக்கவில்லை.

அழைப்பைத் தட்ட மனமின்றி... கனத்த இதயத்துடன் வந்திருந்தான் சரத்சந்திரன்.

வரக்கூடாது என்று நினைத்தாலும்... கேசவமூர்த்தியின் கட்டாயத்திற்காகவும்.. நந்தகுமாருக்காவும் வர வேண்டி இருந்தது.

நந்தகுமாருக்கு செய்த அநியாயத்திற்கு.. அவர்களது அழைப்பை மதித்து செல்வதுதான் மரியாதை என்று எண்ணினான் அவன்.

ஆனால் யாரோ ஒருவனுடன் சாதனா இணையப் போவதை உறுதி செய்யும் அந்த நிகழ்ச்சியைக் காணவும் அவனுக்கு பிடிக்கவில்லை.

எல்லாவற்றையும் எடுத்து வைத்துவிட்டு.. மீராவின் அலங்காரத்தை சரி செய்து கொண்டிருந்தாள் சாதனா... அதனால் அவன் கண்களில் படவில்லை.

கேசவமூர்த்தி அவனைப் பார்த்ததும் பல்மாய் வரவேற்று அமரச் செய்தார்...

லக்னபத்திரிகை அய்யரால் எழுதப்பட்டது. அதற்கு மஞ்சள் குங்குமம் இட்டு... அட்சதை நிரம்பிய தட்டில் வைத்தார் அய்யர்...

"பெண்ணையும்... பையனையும் வரச் சொல்லுங்கோ" என்று சொன்னார்.

இங்கே... அமர்ந்திருந்த சரத்சந்திரனின் மனதில் படபடப்பு.. இதோ... என் இதயதேவதை வரப்போகிறாள்...

இன்றிலிருந்து அவள் யாருக்கோ உரியவள்... இதயம் வலித்தது. எழுந்து போய் விடலாமா என்று கூட தோன்றியது.



மேடையில் சலசலப்பு.. மயில் கழுத்து நிறத்தில் பட்டுப்புடவை அணிந்து.. அழகு தேவதையாய் நடந்து வந்த சாதனாவை கண்களால் விழுங்கினான் சரத்சந்திரன்... வேதனையில் நெஞ்சம் பாறையாய் கனத்தது... என் சாதனா இனி.. யாரோ ஒருவனின் வாழ்க்கைத் துணையாய்...

இதோ.. மனையில் அமரப் போகிறாள்.. அருகே பாலகிருஷ்ணனுடன்... மாப்பிள்ளை இன்னும் கண்ணில் படவில்லையே.. இன்னும் அலங்காரம் செய்து கொண்டு இருக்கிறானோ...

அவன் பார்த்துக் கொண்டிருக்கையில்.. மீரா மனையில் அமர்ந்தாள்.. அதற்காக காத்திருந்தது போல நந்தகுமாரும் அருகில் வந்து அமர.. அய்யர் மந்திரம் சொல்லத் தொடங்கினார்...

சரத்சந்திரனுக்கு தலை சுற்றுவது போல இருந்தது. யாருக்கு நிச்சயதார்த்தம்.. நந்தகுமாருக்கா...! சாதனாவிற்கு இல்லையா...

இதயத்தை அழுத்திக் கொண்டிருந்த பாரம். 'சட்' டென்று மாயமாகிவிட்டது போல உணர்ந்தான்.

அதுவரை முகாரி ராகம் பாடிய உள்ளம். இப்போது உல்லாசமாய் காதல் கீதம் பாட ஆரம்பித்தது...

மெல்ல எழுந்து வாசல் பக்கம் வந்து நின்று... மூச்சை இழுத்து விட்டான்.. செண்பக மலரின் மணம் நாசியில் நுழைந்து நெஞ்சில் இனிமையாய் பரவியது.

பக்கத்தில் செண்பக மரம் ஒன்று இருக்க வேண்டும்... அப்போதைய மனநிலையில் அது மனதுக்கு இதமாய் இருந்தது... மெய் மறந்து அனுபவித்தான்.

அந்த நேரத்தில் செல் ஒலிக்க.. எடுத்துப் பேசினான். அவனது தந்தை 'பிஸினஸ்' விஷயமாய் ஏதோ பேச... அதில் இருபது நிமிடங்கள் கழிந்தன.

பேசிமுடித்துவிட்டு திரும்பி வந்து அமர்ந்தபோது நந்தகுமார் அப்போதுதான் அவனது வருகையுணர்ந்தவனாய் கையசைத்து வரவேற்றான்.

சம்பிரதாயங்கள் முடிந்ததும் கீழிறங்கி வந்து சரத்சந்திரனிடம் பேசினான் அவன். மீராவையும் அறிமுகப்படுத்தி வைத்தான்... மீராவும் அவனிடம் சகஜமாய் பேசினாள்.

வந்திருந்த பெண்களுக்கு மஞ்சள் குங்குமத்தை நீட்டியவாறு நடந்த சாதனாவின் பார்வை அடிக்கடி அவன் பக்கம் தாவியது...

''என்ன சாதனா.. அடுத்தது உன் கல்யாண சாப்பாடா...
தை சீக்கிரம் போடும்மா.. வந்துவிடுகிறோம்...'' என்று
த்து உறவினர் சொல்ல.. உதட்டுடன் ஒட்டாத ஒரு
னகையை உதிர்த்து விட்டு நடந்தாள்...

ஞ்சள் குங்குமத் தட்டை வைத்துவிட்டு திரும்பிய
ரத்சந்திரன் கொஞ்சம் உரக்கவே சிரிப்பதைக் கண்டு
டன் அவனைப் பார்த்தாள்.

எதையோ சொல்ல அவன் சிரித்திருப்பான்
... என்ன சொல்லியிருப்பாள்.. அப்போதுதான்
தாள்.. கருப்பு நிறத்தில் பேண்ட்டும்... தந்த
சட்டையும் அவனுக்கு மிகப் பொருத்தமாய்
. அத்தனை ஆடவர்களின் மத்தியில் அவனை
ன்று காட்டியது..இந்த ஆணழகன் அன்று
... 'என்னை மணக்க சம்மதமா' என்று.. அந்தக்



கேள்வியை இன்று கேட்கக் கூடாதா... உடனே 'சம்மதம்' என்று சொல்லிவிடுவேனே... அவனை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள் சாதனா...

மீராவிடம் ஏதோ சொல்லி சிரித்துக் கொண்டிருந்த சரத்சந்திரனின் கண்கள் எதேச்சையாய் சாதனா பக்கம் திரும்ப.. கணநேரத்தில் அங்கே பார்வைகளின் சங்கமம் நடந்தேறியது. அதுவும் சில வினாடிகள் மட்டுமே...

'சட்'டென்று அவள் கண்களைத் தாழ்த்திக் கொண்டாள்... அவனையேப் பார்த்துக் கொண்டிருந்ததை அவன் கவனித்துவிட்டானே என்று வெட்கம் அவளைப் பிடுங்கித்தின்றது.. உதட்டைக் கடித்துக் கொண்டு முகம் சிவக்க அவள் நின்றிருப்பதைப் பார்த்து விட்டு அவன் புன்னகைத்தான்...

விருந்து உண்டதும் புறப்பட்டு விட்டான் சரத்சந்திரன். போவதற்கு முன் அனைவரையும் தான் கொடுக்கப் போகும் 'பார்ட்டி'க்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டான்...

கேசவமூர்த்தி.. 'பார்ட்டி'க்கான காரணத்தை வினவ...

புது கம்பெனியொன்றை சிங்கப்பூரில் ஆரம்பிக்க இருப்பதால்.. புறப்படுவதற்கு முன்.. தெரிந்தவர்களை அழைத்து விருந்து கொடுக்க வேண்டும் என்ற உத்தேசம் உள்ளதாயும்.. தப்பாமல் அதற்கு வரவேண்டும் என்று சொன்னான்...

அவனை வழியனுப்பி வைக்க எல்லோரும் சென்ற
போதும் அவளும் உடன் சென்றாள்.

அனைவரும் அவனிடத்தில் சகஜமாய் பேசுகிறார்க
தன்னால் மட்டும் ஏன் முடியவில்லை...

அலுவலகத்தில் கூட முன்னைப் போல் சரளமாய் அவனிடம் பேச முடியவில்லையே.. முன்பில்லாத தயக்கம் இப்போது எதனால் வந்தது.. கோபமும்.. எரிச்சலும் இருந்தபோது அவனிடம் வார்த்தைகளை கொட்ட முடிந்தது... ஆனால்.. அவையெல்லாம் கரைந்து போய்.. காதல் என்று தெரிந்ததும் வாயிலிருந்து வார்த்தைகள் வர மறுக்கிறதே.. ஏன் அப்படி... தெரியாமல் முழித்தாள்...

ஒன்று மட்டும் நன்றாகவே புரிந்தது.. எதையோ இழந்துவிட்டோம் என்பதுதான் அது...




கல்யாண ஏற்பாடுகள் மளமளவென்று நடந்தன.

கல்யாணமண்டபம் 'புக்' ஆகி.. கேட்டரிங்... நாதசுரம்.. பூ அலங்காரம்.. அய்யர் என்று எல்லாவற்றிற்கும் ஏற்பாடும் செய்தாகிவிட்டது.

ஏன்.. ஹனிமூனுக்கு கூட 'டிக்கெட்' 'புக்' செய்தாகி விட்டது...

ஹனிமூன் எங்கே என்று யோசித்து... கடைசியில் மலேஷியா.. சிங்கப்பூர் என்று முடிவானது...

சரத்சந்திரன் ஹனிமூன் பயணச் செலவு தன்னுடையது.. நந்தகுமார் மீராவிற்கு தரும் கல்யாணப்பரிசு என்று சொல்லிவிட்டான்.



அதற்கான பாஸ்போர்ட்... விசா ஏற்பாடெல்லாம் தடபுடலாய் நடக்க.. மீராவும் நந்தகுமாரும் அலைந்து திரிய வேண்டி இருந்தது.

இப்போதெல்லாம் நந்தகுமாரும் சரத்சந்திரனும் அடிக்கடி சந்திப்பது தெரிந்தது... அவர்களின் சந்திப்பெல்லாம் அலுவலகத்திற்கு வெளியே என்பதால் எதற்காக இப்படி ஒட்டி உரசுகிறார்கள் என்று தெரிந்து கொள்ள முடியவில்லை.

மீராவிடம் விசாரித்தாள் சாதனா...

இருவரும் இப்போது நண்பர்களாம்.. எதிர்கால திட்டத்தைப் பத்திப் பேசிக் கொள்வதற்காக சந்திக்கிறார்கள்... அவ்வளவுதான் என்றாள் மீரா.

அலுவலகத்தில் சரத்சந்திரன் எம்.டி.. என்ற அளவில் எட்டியே இருந்தான்... அதுவும் மனதிற்கு கஷ்டமாக இருந்தது.

பழையபடி குழைய பேசமாட்டானா என்று ஏங்கியது உள்ளம்...

காதலை சமர்ப்பிக்க வந்தவனை காலால் எட்டி உதைக்காத குறையாய் தள்ளிவிட்டு.. இப்போது ஏங்கி என்ன பிரயோசனம் என்று மனசாட்சி குத்திக்காட்டியது...

அவன் சிங்கப்பூர் செல்லும் நாளும் நெருங்கிக் கொண்டிருந்தது... அவன் சென்ற பின்பு.. வாழ்க்கை சூன்யமாய் தெரியுமே... அதை எப்படிச் சகிப்பேன்... அவன் இல்லா வாழ்க்கையை நினைத்தும் பார்க்க முடியவில்லையே... வெயில் கண்ட புழுவாய் துடித்தது நெஞ்சம்...

போதாதற்கு.. அவன் குறிப்பிட்டிருந்த அந்த 'பார் நாளும் வந்து சேர்ந்தது...

அந்த விருந்திற்கு போகப் பிடிக்கவில்லைதான்... அவன் சிங்கப்பூருக்கு பறந்து விடப் போகிறான்.. அதற்காக கொடுக்கப்படும் விருந்து ருசிக்கவா போகிறது. அதை நினைக்கும்போதே கசக்கிறதே.. எப்படிச் செல்வது... பேசாமல் தலைவலி என்று ஒதுங்கிவிடலாமா...

ஆனால் விடமாட்டார்களே.. வற்புறுத்தியல்லவா அழைத்துச் செல்வார்கள்...

எருதின் புண் வலி காக்கைக்குத் தெரியாதாமே... என் வேதனை யாருக்குப் புரியப்போகிறது.

மீரா கூட புரிந்து கொண்ட மாதிரி இல்லையே... அவளுக்கு என்று ஒரு தனி ராஜ்ஜியம்.. அதற்கு ராஜா நந்தண்ணா.. சுற்றியிருப்பவர்களை கவனிக்கும் மன நிலையிலா அவர்கள் இருக்கிறார்கள்.. ப்ச்சு...

அவர்களைக் குற்றம் சொல்ல முடியாது.. திருமணம் புரிந்து கொள்ளப்போகும் புது ஜோடிகள் அப்படித்தான் இருப்பார்கள்... தங்களைச் சுற்றி ஒரு மாய வலையைப் போட்டுக் கொண்டு.. அந்த உலகில் அவர்கள் மட்டுமே என்ற எண்ணம்...

ஏனோ... தன்னைத் தவிர எல்லோருமே மிகவும் சந்தோஷமாய் இருப்பது போல தோன்றியது சாதனாவிற்கு...

வேண்டா வெறுப்பாய் ஏதோ ஒரு புடவையை இயந்திரமாய் உடம்பில் சுற்றிக்கொண்டு புறப்பட்ட அவளை உரிமையுடன் கடிந்து கொண்டாள் மீரா.

"சகிக்கவில்லையடீ... நாம போவது உன்னோட எம்.டி ...யின் 'பார்ட்டி'க்கு.. பெரிய பெரிய வி.ஐ.பிகள் வருவார் ...ள்.. அவர்கள் முன்.. சோளக் கொல்லை பொம்மை ...ட்டம் நின்னா.. ஏளனமா உன்னைப் பார்ப்பார்கள் டீ...



நல்ல புடவையா உடுத்தக் கூடாதா... இரு.. நானே 'செலக்ட்' பண்ணிக் கொண்டு வருகிறேன்..." என்றவள்.. அவளது அறைக்குச் சென்று.. அழகான புடவையாய் தேர்வு பண்ணிக் கொண்டு வந்தாள்...

கரு நீலத்தில் தங்கச் சரிகை புட்டா போட்ட புடவை... நடு நிசி வானத்தில் கண் சிமிட்டும் நட்சத்திரங்களாய் மினு மினுக்கும் சின்னச் சின்னப் புட்டாக்கள்.. பார்க்க ரம்யமாய் இருந்தன.

அவள் அதை உடுத்தியதும் 'இப்போ.. பார்... அம்சமா இருக்கு.. அழகா அம்மன் சிலை மாதிரி இருக்கே.. கொஞ்சம் அக்கறையா மேக் அப் போட்டுக் கோயேன்.. இரு.. நானே பண்ணி விடுகிறேன்.. எல்லாம் சொல்லித் தரணும்.. இந்தப் புடவைக்கு ஏத்த நகைகளை அணிந்து கொள்.. அப்போ தான் இன்னும் எடுப்பாகத் தெரியும்..." அண்ணியாகிவிட்ட உரிமையில் அவளை ஆட்டுவித்தாள் மீரா...

"ஓகே... இப்பப் புறப்படலாம் வா..." என்று அவளை இழுத்துக் கொண்டு நடந்தாள் மீரா. சாவி கொடுத்த பொம்மை போல அவளுடன் சென்றாள் சாதனா...

அந்த பிரம்மாண்டமான ஓட்டலின் மாடியில் இருந்தது பார்ட்டி ஹால்.. விசாலமாய்...

அலங்கார பூஷிதையாய் வந்திருந்த சாதனாவைப் பார்த்துவிட்டு பிரமிப்புடன் கூவினாள் சுமதி.

'வாவ்'... கல்யாணப் பெண்ணாட்டம் தெரிகிறேடீ... ஆமாம்.. உன் அண்ணாவுக்கு கல்யாணமா.. இல்லை.. உனக்கா.. பார்த்தா உனக்குதான் நிச்சயமாகியிருக்கிற... போல இருக்கு..."

அதை ரசிக்கும் மனநிலையிலா சாதனா இருந்தாள்... அவளது உள்ளம் குடைராட்டினமாய் சரத்சந்திரனையே சுற்றி வந்து கொண்டிருந்தது.

வந்தவர்களை இன்முகத்துடன் வரவேற்றான் சரத்சந்திரன்.. சாதனாவைப் பார்த்ததும் அவனது கண்களில் பளீர் என்று மின்னல் மறைந்தது... அவளது அழகில் சொக்கி நின்றவன் சுதாரித்துக் கொண்டான்.

ஆனால் சாதனா அவனை ஏறிட்டும் பார்க்கவில்லை. பார்த்தால் புன்னகைக்க வேண்டும்.. பேச வேண்டும்.. அவளால் எதுவுமே முடியாது...

உள்ளம் அலைகடலாய் தத்தளிக்கும் போது புன்னகை வருவதாவது.. கோர்வையாய் பேச தோன்றுவதாவது.. அதைவிட மௌனமே மேல்...

''லேடீஸ் அண்ட் ஜென்டில்மேன்'' என்று ஆரம்பித்தான் சரத்சந்திரன்.

வளவள என்ற பேச்சு நின்று.. கப்சிப் மௌனம்.

''இந்த திடீர் விருந்தின் காரணத்தை சொல்ல வேண்டும் என்றால்.. சிங்கப்பூரில் நம் புதுக் கம்பெனியை ஆரம்பிக்கப் போவதை கொண்டாடும் நோக்கம் என்றுதான் சொல்ல வேண்டும்.. என் நெருங்கிய நண்பர்கள் அனைவரின் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து இந்த விருந்தை ஏற்பாடு செய்தேன்...'' என்று ஆங்கிலத்தில் அவன் சொல்லவும்...

''கங்கிராட்ஸ்...''

''பெஸ்ட் விஷ்ஷஸ்..''

''ஆல் தி பெஸ்ட்...''



''வாழ்க வளமுடன்...'' என்று ஆளாளுக்கு வாழ்த்தினார்கள்.

நந்தகுமார் அவனைத் தொடர்ந்து பேசினான்.

''சரத்சந்திரன் சொல்லாத இன்னொரு காரணமும் இருக்கிறது... நம் எம்.டி.சார் 'பேச்சுலர்' பதவியை உதறி விட்டு 'சம்சாரி' என்ற பதவிக்கு தாவ முடிவு செய்து விட்டார்... அதைக் கொண்டாடவும் தான் இந்த விருந்து...''

மறுபடியும் வாழ்த்துக்கள்...

''யார் சார் அந்த அதிர்ஷ்டசாலி...''

''நாங்கள் பார்க்கலாமா...''

''லவ் மேரேஜா...'' பல கேள்விகள் வந்தன.

''பொறுங்கள்.. முதலில் விருந்து முடியட்டும்... பிறகு சொல்கிறேன்'' என்று சொன்னான் சரத்சந்திரன்.

''அப்போ.. உங்க வருங்கால மனைவி இங்கே இல்லையா.. சரத்சந்திரன்.. அட்டா.. வந்திருந்தால் பார்த்திருப்போமே...'' என்ற ஒருவர் சொல்ல....

''நிச்சயம் நீங்கள் பார்க்கலாம்.. அவளும் வந்திருக்கிறாள்.. சமயம் வரும்போது உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன்... முதலில் விருந்து.. சூடாய் இருக்கும்போதே சாப்பிடுவது நல்லதில்லையா... வாருங்கள்...''

சாதனாவிற்கு கிறுகிறுத்தது.. கண்கள் இருட்ட கொண்டு வந்தது...

சரத்சந்திரனுக்கு திருமணம் என்ற செய்தி அவ பாம்பாய் கொத்திப் பிடுங்கியது..

அவளும் வந்திருக்கிறாளாமே.. யார் அவள்.. துக்கம் தொண்டையை அடைத்தது.. அங்கிருந்து ஓடி விட வேண்டும் போல் இருந்தது.

மீரா பக்கம் திரும்பினாள்... நந்தகுமாரிடம் ஏதோ சொல்லிச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

அய்யோ... அவளுக்கும் என் வேதனை புரியவில்லையே... என் மனதை படித்தவளுக்கும் புரியவில்லையே.. என் நிலைமை... பின்னே ஏன் என்னை அழைத்து வந்தாள்... இதைக் கேட்டுவிட்டு துடிக்க வேண்டும் என்றா...

ஊகூம்... அவளுக்கும் இந்த விஷயம் தெரிந்திருக்காது. ஆனால் அண்ணாவிற்கு தெரிந்திருக்கிறதே... எப்படி... யோசித்து.. யோசித்து மண்டை காய்ந்தது போல இருந்தது அவளுக்கு... தலையை உருட்டுக் கட்டையால் அடிப்பது போல வலி தெறித்தது.

நேரே நந்தகுமாரிடம் வந்தாள். ''அண்ணா... எனக்கு தலையை வலிக்கிறது.. என்னை வீட்டுக்கு அழைத்துப் போயேன்...'' என்று கெஞ்சினாள்.

''என்னம்மா... நல்ல விருந்து காத்திருக்கிறது. இப்படி திடீர் என்று புறப்பட்டுப் போனால்.. சரத்சந்திரன் என்ன நினைப்பார்.. அது மரியாதைக் குறைவாய் படும்டா... கொஞ்சம் பொறுத்துக்கோ.. சாது...'' என்றான் அண்ணன்.

மீராவும் நந்தகுமாருடன் சேர்ந்து கொண்டாள்.

''ஆமாம்.. சாது.. சீக்கிரம் எல்லாம் முடிந்துவிடும்... நாம் றப்படலாம்.. நம் வீட்டு 'ஃபங்ஷனு'க்கு வந்து ரொம்ப ரம் இருந்து விட்டுப் போனார் உன் எம்.டி. நாம் ததும் கிளம்பினால்.. அது நன்றாக இருக்குமா.. சாது..



அது இருக்கட்டும்.. அவருடைய வருங்கால மனைவியை அறிமுகப்படுத்தப் போகிறாராம். அவளையும் பார்த்து விட்டுப் புறப்படுவோம்...''

''என் அவஸ்தை உங்களுக்கு ஏன் புரியமாட்டேன்கிறது... சரி.. நீங்கள் இருந்துவிட்டு வாங்க.. நான் ஆட்டோவில் போய்க் கொள்கிறேன்...'' எரிச்சலுடன் சொன்னாள் சாதனா.

''சாப்பிட வாருங்கள் நந்தகுமார்.. மீரா நீங்களும் தான்.. ஏன்.. சாதனா ஒரு மாதிரியாக இருக்கிறாள். அப்போது அங்கு வந்த சரத்சந்திரன் கேட்க...''

''சாதனாவிற்கு தலைவலியாம்.. ஏதாவது மருந்து இருக்கிறதா... சரத்சந்திரன்...'' என்று வினவினாள் மீரா.

''பசியாக இருக்கலாம்.. சாதனா.. வந்து சாப்பிடு... தலைவலி சரியாகிவிடும்...'' என்று அழைத்தான் அவன்.

''எனக்குப் பசியில்லை.. நான் வீட்டிற்கே போகிறேன். விடுங்கள்'' பிடிவாதமாய் சொன்னாள் சாதனா.

''அடடா.. என்ன இது சாதனா.. புரியாமல் பேசுகிறாய்.. இந்த நேரத்தில் உன்னை எப்படித் தனியாக அனுப்ப முடியும்.. அனைவரின் சந்தோஷமும் உன் ஒருத்தியால் பாழாக வேண்டுமா.. சொல்.. உள் அறையில் வந்து ஓய்வெடுத்துக் கொள்... தலைவலி போய்விடும்.. ஒண்டியாய் இருக்க வேண்டுமே என்ற தயக்கமா.. டோன்ட் ஒர்ரி சாதனா.. உன்னை கவனித்துக் கொள்ள.. நீரஜாவை அனுப்பி வைக்கிறேன்.. போதுமா...''

நீரஜாவா... யார் அது.. அவள்தான் இவன 'வுட்பி'யா.''

அவனை வெறித்துப் பார்த்தாள் சாதனா...

என் வேதனை இவனுக்குப் புரியவில்லையா.. இல்லை.. புரிந்தும் புரியாததுபோல நடிக்கிறானா... என்னைத் துடிதுடிக்க வைக்க இப்படிப் பேசுகிறானா... அன்றைக்கு அவனை உதாசீனப்படுத்தியதற்கு இன்று வழிவாங்கும் படலமா இது...

துக்கம் பொங்கியது.

இந்த சரத்சந்திரனா அன்று.. சில மாதங்களுக்கு முன்.. என் முன்னே மண்டியிடாத குறையாய் மணந்து கொள்ள சம்மதமா என்று கேட்டது.. அத்தனை சீக்கிரத்தில் மனம் மாறிவிடுமா என்ன.. ஆண் மனம் ஆயிற்றே.. அதுதான் பச்சோந்தியாய் நிறம்மாறி போய்விட்டது.. நிலைகொள்ளாமல் தவித்தாள் சாதனா...

''அதுதான் சொல்கிறாரே சாதனா.. அவர் சொல்வது போல ஒய்வெடுத்துக் கொள்.. அப்புறம் பார்... தலைவலி துடைத்துப் போட்டது மாதிரி ஓடிவிடும்.. இந்த விருந்தும் சுவைக்கும்.. போடீ.. சார்.. அவளை அழைத்துப் போய் அறையைக் காட்டுங்கள்.. என்று விரட்டிய மீராவைப் பார்த்து முறைத்தாள்...

வேறுவழி தெரியாமல் அவன் பின்னே நடந்தாள்.. சற்று ஒதுக்குப் புறமாய் இருந்த அறைக்குள் அவளை அழைத்துச்சென்று விட்டான் சரத்சந்திரன். பெரிய அறை... அங்கே 'பங்க்ஷன்' என்று வருபவர்களுக்காக ஒய்வெடுக்கும் அறைபோல் காணப்பட்டது.. அதே மயம் உடைமாற்றிக் கொள்ளவும் இருக்கலாம்.. கட்டில்..



மெத்தை.. சோபா... டிரெஸ்ஸிங் டேபிள் என்ற வசதிகளுடன் இருந்தது அந்த அறை...

''ஒய்வெடுத்துக் கொள்.. சாதனா.. இதோ வருகிறேன்'' என்று சொல்லிப் புறப்பட்டவனிடம் மெல்லிய குரலில் வினவினாள் சாதனா...

''உங்களோட வருங்கால மனைவியைக் காணோம்.''

''ஓ... சொன்னேன் இல்லையா.. இதோ அனுப்பி வைக்கிறேன்...'' புன்னகையுடன் சொல்லிவிட்டு சென்றான் அவன்...

அவள் யார் என்று பார்க்கவேண்டும் என்ற ஆசை ஒரு பக்கம்.. தன் இதய நாயகனின் அன்புக்குரியவளை எதிர்நோக்கும் சக்தி தனக்கு இருக்குமா என்ற கலக்கமும் சேர்ந்து அவளை ஆட்டிவித்தன. கட்டில் மேல் அமர்ந்து கொண்டு கண்களை மூடிக் கொண்டாள்.

பதினைந்து நிமிடங்களுக்குப்பின் கதவை யாரோ தட்டுவது கேட்க.. கண்களைத் திறந்தாள்.

கதவைத் திறந்து கொண்டு அழகான இளம்பெண் கையில் தட்டுடன் வந்து நின்றாள்.. தட்டை டீபாயில் வைத்துவிட்டு...

''சரத்சந்திரன் சொன்னார்.. உங்களுக்குத் தலைவலியாமே.. சாப்பாட்டை இங்கேயே கொண்டு வந்து தரும்படி.. சாப்பிட்டதும் இந்த மாத்திரையை போட்டுக் கொள்ளுங்கள்.. வரட்டுமா...'' என்று கதவைநோக்கி நடந்தாள் அவள்.

இவள்தான் வருங்கால மனைவியோ.. அழகாய் தான் இருக்கிறாள்.. அவருக்கு ஏற்ற ஜோடிதான்...

விட்டார் போல..

அதுதான் என்னை மறந்து கதவருகே சென்ற அந்தப் பெண் ''வேறு ஏதாவது தேவை என்றால் அவரது 'செல்'லுக்கு போன் பண்ண வேண்டுமாம்.. சொல்லச் சொன்னார்'' என்றாள்.

''உங்கள் பெயரைச் சொல்லவில்லையே...''

''நீரஜா...''

''தாங்க்ஸ்.. நீரஜா.. சரத்சந்திரனுக்கு நீங்கள் என்ன வேண்டும்...'' தாளமுடியாமல் கேட்டுவிட்டாள் சாதனா...

''அது அவரையே கேளுங்கள். சொல்வார்.''

ஒரு நமுட்டு சிரிப்புடன் சொல்லிவிட்டு அவள் செல்ல... மூடிய கதவை வெறித்தாள் சாதனா...




ஒன்றை இழக்கப் போகும் போதுதான் அதன் அருமைத் தெரியும்.. அதை இழக்கப்போகிறோம் என்று துக்கம் வரும்...

சாதனாவுக்கு அந்த துக்கம் தான்...

நீரஜாவைப் பார்த்ததும் புரிந்தது... ஏன் சரத்சந்திரனின் மனதில் மாற்றம் வந்தது என்று:..

சுண்டினால் சிவந்துபோகும் மேனி.. பூங்கொடியைப் போன்று மெல்லியலாள்... நடக்கும்போது.. வண்ண ஓவியம் ஒன்று உயிர் பெற்று வந்ததோ என்று சொல்லும்



படியான தோற்றம்.. சந்திரபிம்பம் போல முக வசீகரம்.. இந்த அழகுப் பெட்டகத்தை மறுக்க யாருக்கு மனம் வரும்.. அதுதான் சரத்சந்திரன் பூம்பூம் மாடாய் தலை யாட்டிவிட்டான் போலும்...

நீரஜா கூட அவனுக்குப் பொருத்தமானவள்தான்...

அவளை மணந்து... அவளையும் அழைத்துக் கொண்டு சிங்கப்பூர் போகும் எண்ணமாக இருக்கலாம்... அதுதான் இந்த அவசரக் கல்யாணம்...

நீரஜாவைப் பார்த்த பின்பு வேண்டாதவளாகி விட்டேன் போல...

பின்னே.. எந்த ஆண்மகன் தான் தன் கோரிக்கையை உதாசீனம் செய்தவளிடம்.. மறுபடியும்.. வந்து கேட் பான்.. அவனுக்கு 'ஈகோ' இருக்கும் தானே...

எத்தகைய தப்பு செய்துவிட்டேன்...

கடவுளே.. அந்த நாளை திருப்பித் தரமாட்டாயா.. சரத் சந்தினிடம் 'எனக்குச் சம்மதம்' என்பேனே...

அய்யோ.. அந்த நாளும் வந்திடாதோ... ஏங்கியது உள்ளம்.

தலைவலி மண்டையை பிளந்தது.. தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

கதவு லேசாய் தட்டப்பட்டது... தொடர்ந்து அழுத்த மான காலடி ஓசை.. வந்திருப்பது சரத்சந்திரன் தான் என்று தெரிந்தது...

இதயம் வேகம் எடுத்ததையும் உணர்ந்தாள்...

''என்ன சாதனா.. சாப்பிட்டாயா.. இன்னும் சாப்பாடு அ படியே இருக்கிறது.. ஏன்.. சாப்பிடப் பிடிக்கவில்லைய இல்லை.. சாப்பிட மனசில்லையா...'' அக்கறைய அவன் கேட்டான்.

அவள் நிமிர்ந்தும் பார்க்காமல் அமர்ந்திருந்தாள்.. கண்கள் கலங்கியிருப்பதை அவன் பார்த்து விடக்கூடாது என்ற தவிப்பில்...

''என்ன சாதனா... பதில் பேசாமல் இருக்கறாய்.. தலைவலியா.. அடடா.. நீரஜாவிடம் சொல்லியிருந்தால் உனக்கு மருந்து தடவியிருப்பாளே...''

''.........''

''போகட்டும் சூடாய் காபி கொண்டு வரச் சொல்லட்டுமா சாதனா... நீரஜாவுக்கு போன் செய்தால் நிமிஷத்தில் கொண்டுவந்து விடுவாள்.. பண்ணட்டுமா...''

''.........''

''எதுவும் சொல்லாமல் இப்படி மௌனமாய் இருந்தால் எப்படி சாதனா.. எங்கே.. கொஞ்சம் நிமிர்ந்து என்னைப் பாரேன்...''

''.........''

''ப்ளீஸ்...''

நிமிர்ந்து பார்த்தாள் அவள்.. அவள் கண்களில் தெரிந்த கண்ணீர் முத்துக்களைப் பார்த்ததும் பதறிப்போனான் சரத்சந்திரன்.

''என்னம்மா.. உனக்கு இங்கு இருக்கப் பிடிக்கவில்லை என்றால் சொல்வதுதானே.. உன்னை வீட்டிற்கு அனுப்பி வைப்பேனே.. இப்படி அழுது என்னை வேதனைப் படுத்தாதே சாதனா.. என்னால் தாங்க முடியாது...'' என்றான் வாட்டமாய்.

''முடியவில்லை.. அழக்கூடாது என்று நினைத்தாலும்.. முடியவில்லை...'' என்று கண்களைத் துடைத்துக் கொண்டாள் அவள்.





பிறகு ஒரு பலவீனப் புன்னகையை உதிர்த்தவளாய்,

''சாரி.. உங்களுக்கு 'கங்கிராட்ஸ்' சொல்ல மறந்து விட்டேன்... உங்கள் வருங்கால மனைவியை சந்தித்தேன்.. உங்களுக்கு மிகப் பொருத்தம்.. சரத்...''

அவனது கண்கள் இடுங்கின...

''என் வருங்கால மனைவியா.. நானே காட்ட வேண்டும் என்று இருந்தேன்.. சாதனா...''

''நீரஜா கொடுத்து வைத்திருக்கிறாள்...'' சொல்லும் போது அவளது குரல் கரகரத்தது.

''அப்படியா... ஏன் அப்படி சொல்கிறாய் சாதனா...''

''உங்களை அடைந்ததில்.. உங்களை கணவனாக அடைவதற்கு என்று சொன்னேன்...!''

''ஓ! அப்போ.. நானும் ஒரு விதத்தில் அதிர்ஷ்டசாலி என்று சொல்...'' புன்சிரிப்புடன் அவன் சொன்னதும்... புரியாமல் விழித்தாள் சாதனா... எதைக் குறிப்பிடுகிறான்...

''என்னைக் கண்டாலே பிடிக்காத ஒருத்தியின் வாயால்... என்னை விரோதியாய் பார்த்த ஒருவளின் வாயால்.. என்னை மணப்பவள் ரொம்பவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்ற புகழுரையைக் கேட்கும் பாக்கியம் பெற்றேன் பார் அதற்கு...''

''அன்றைய சாதனா வேறு.. அவளுடைய கோபம்.. ஆத்திரம்.. வெறுப்பு எல்லாமே மாயமாகிவிட்டது... இப்போது இருப்பவள்...'' தலைகுனிந்தவாறே பேசினாள் அவள்..

''ம்ம்... மேலே சொல்லி முடி சாதனா.. இப்போது இருப்பவள்.. ம்ம்...''

''இப்போது இருக்கும் சாதனாவிற்கு.. வந்து...'' திணறினாள் அவள்.

''நான் சொல்லட்டுமா.. என்மேல் நல்ல அபிப்ராயம் வந்துவிட்டது.. கரெக்ட்...''

ஆம் என்று தலையசைத்தாள்.

''அந்த அளவு என்மேல் கௌரவம் வளர்ந்திருக்கிறது.. சரிதானே.''

அதற்கும் தலையசைப்பு...

''என்னை ஒரு ஜென்டில்மேன் என்று ஒப்புக் கொள்ளும் மனம் வந்திருக்கிறது... ரைட்...''

மீண்டும் தலையசைத்து ஆம் என்றாள்.

''அப்படியே என்மேல் காதலும் வந்துவிட்டது... அதுதானே...''

இதற்கும் தலையசைத்துவிட்டு 'சட்' என்று நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

அவளது கண்களில் திகைப்புத் தெரிந்தது...

அவனுக்கு தெரிந்திருக்கிறதே என்பதில்.. சந்தோஷத்திற்கு பதில் கலக்கம் தான் வந்தது...

அவனுக்கு திருமணம் நிச்சயமாகியிருக்கும் வேளையில் என் காதல் விஷயம் வெளியில் தெரிய வேண்டுமா...

''மறுபடியும் என்னம்மா...'' என்று கேட்டான் சரத்சந்திரன்... அவளது கலக்கத்தைப் பார்த்துவிட்டு...

''இதென்ன விளையாட்டு சரத்சந்திரன்.. உங்களுக்கு திருமணம் நிச்சயமாகி விட்டது.. உங்களுக்கு என்று ஒருத்தியும் வந்துவிட்டாள்... இனி என் காதல் இருந்தால் என்ன.. செத்தால் என்ன.. நீங்கள் நீரஜாவுடன் நீண்ட காலம் சந்தோஷமாக வாழ.. என் வாழ்த்துக்கள்...''

அதைக் கேட்டுவிட்டு அவன் உரக்க சிரித்துவிட்டான்.



''அசடு.. அசடு.. நீரஜா என் கஸின்... என் தங்கை மாதிரி பிரியம்.. அவ்வளவுதான்.. சாதனா.. நான் உன்னைக் காதலிக்கிறேன் என்று அவளுக்குத் தெரியும்.. அதுதான் வேண்டும் என்றே உன்னைச் சீண்டிவிட்டுப் போயிருக்கிறாள்.''

அவன் சொல்வதைக் கேட்டு விழித்தாள் சாதனா...

என்னென்னவோ சொல்கிறாரே.. நிஜமா.. பிரமித்தாள் அவள். அவளது விழிப்பு கண்டு அவனது சிரிப்பு இன்னும் அதிகமானது...

''என்னுடன் வா... சாதனா.. சொல்கிறேன்...'' என்று அவளது கையைப் பற்றி அழைத்துச் சென்றான்.

''எங்கே.. எங்கே.. சரத்...''

''என் ஃபியான்ஸியைக் காட்டுகிறேன் என்றேன் இல்லையா அதற்குத்தான்...'' மறுபடியும் சீண்டுகிறானா.. குழம்பியவாறு சென்றாள்...

அங்கிருந்த நிலைக் கண்ணாடிமுன் அவளை நிறுத்தினான் சரத்சந்திரன்...

''இதோ.. பார்த்தாயா.. இவள்தான் என் வருங்கால மனைவி.. என் இனிய தேவதை.. என் உயிரான சாதனா.. இப்போ சொல்... எப்படி இருக்கிறது இந்த ஜோடிப் பொருத்தம்.. மேட் ஃபார் ஈச் அதர் தானே...''

அவனது குரலில் பெருமிதம் தெரிந்தது.

எதிரே தெரிந்த தன் பிம்பத்தைப் பார்த்தாள்.. கூடவே சரத்சந்திரனும்.. உள்ளம் விம்மியது...

''என் மனதைப் படித்திருந்தும் ஏன் என்னை துடிக்க வைத்தீர்கள் சரத்சந்திரன்.. எதற்காக இந்தக் கண்ணாமூச்சி ஆட்டம்...'' விம்மலுடன் கேட்டாள்...

''அதுவா.. உனக்காக நான் எப்படி துடித்தேன் என்பதை நீ உணர வேண்டும் என்பதற்காகத்தான் ஆரம்பத்தி லிருந்து உன் மீதிருந்த அன்பு மாறவே இல்லை சாதனா... இடையில் நடந்த கசப்பான சம்பவங்களால் கூட அது குறையவில்லை.. அண்ணனுக்காக நீ வக்காலத்து வாங்குகிறாய் என்ற ஆத்திரம் வந்ததும் உண்மைதான்... ஆனால் உன்னுடைய முயற்சியும் போராட்டமும் பார்த்துவிட்டு வியந்தேனே தவிர.. என்னால் உன்னை வெறுக்க முடியவில்லை...அந்த அளவு என்னுள் நீ ஆழமாய் பதித்து விட்டாய்... ஆனால் நீதான் என்னிடம் இருந்து சில விஷயங்களை மறைத்துவிட்டாய்...''

''எது...'' என்பது போல பார்த்தாள் சாதனா.

''பாலகிருஷ்ணனின் விஷயம் தான்.. அந்தத் திருமணப் பேச்சு நின்றதை சொல்லவில்லை.. உன் அண்ணனுக்கு நிச்சயதார்த்தம் என்றும் சொல்லவில்லை. அதனால் வந்த குழப்பம் தான் எனக்கு.. அந்த நிச்சயதார்த்தத்தை உன்னது என்று நினைத்து மனம் கலங்கித் தவித்தேன்.. உன்னை இழந்துவிடுவேன் என்ற பயமும் தான்.. நிச்சயதார்த்தம் உன் அண்ணனுக்கு என்று தெரிந்ததும் தான் மூச்சு வந்தது.. அதற்கு பிறகும் உன் மனதை அறிய முடியவில்லை.. நீ என்னை விரும்புகிறாயா.. இல்லை வெறுக்கிறாயா என்று தெரியாமல் துடித்தேன். அப்படியே வெறுத்தாலும்.. உன் காதலுக்காக காலம் முழுக்க காத் திருக்கும் உறுதியும் எனக்கு இருந்தது... உன் அண்ணா நிரபராதி என்று நிரூபணம் ஆனபின்னாவது உன் மனம் மாறும் என்று நினைத்தேன்.. மாறியதா என்றும் உணர டியாமல் இருந்தபோதுதான்.. மீராவின் வார்த்தைகள் ன் நெஞ்சில் பாலை வார்த்தன என்பேன்.''



''மீராவா.. என்னைப் பற்றியா...'' வியப்புடன் கேட்டாள் அவள்..

''உன் வேதனையைப் பொறுக்க முடியாமல் தான் என் னிடம் சொன்னாளாம்.. நான் உன்னைத் தான் விரும்பு கிறேன் என்று சத்தியம் செய்து வெளியிட்ட பின்புதான் ஒப்பு கொண்டாள்... இதை உடனே உன்னிடம் சொல் வேண்டாம்.. கொஞ்சம் விளையாடிவிட்டு சொல்லலாம்.. அதுவரைக்கும் இந்த விஷயம் 'சஸ்பென்ஸா'க இருக் கட்டும் என்றதும் அவள்தான்... அதுதான்.. உன்னை தவிக்க விட்டு வேடிக்கைப் பார்த்தது.. இன்னும் செய்யலாம் என்று நினைத்தேன்.. ஆனால் உன் கண்ணீரைப் பார்த்ததும் துடித்து விட்டேன்.. சாரிம்மா இப்போது ஒரு உண்மையை உனக்கு சொல்லப்போகிறேன்.. சாதனா.. சிங்கப்பூர் போகப் போவது நானில்லை.. உன் அண்ணா.. நந்தகுமார்...''

சாதனா பிரமிப்புடன் அவனைப் பார்த்தாள்.. இது ஒரு அதிர்ச்சியான செய்தி.. ஆனால் இன்ப அதிர்ச்சி!

''உன் அண்ணாவிற்கு செய்த அநியாயத்திற்காக ஒரு பிராயசித்தம் என்று வைத்துக் கொள்ளலாம். அதைவிட.. என் வருங்கால மச்சினன் என்ற அக்கறையாலும் தான்.. தேனிலவு மட்டுமல்ல.. வேலையில் பொறுப்பேற்கவும் தான் இந்தப் பயணம். உனக்கு இது சந்தோஷம் தானே...''

சந்தோஷமா.. அதைவிட.. சொல்லத் தெரியாமல் திக்கு முக்காடினாள்... எதையும் சொல்லாமலே மறைத்துவிட் டார்களே இந்த அண்ணனும்.. அண்ணியும்.. இருக்கட் டும் கவனித்துக் கொள்கிறேன்...

''உன் சந்தோஷத்தை வெளிப்படையாக காட்டக் கூடாது சாதனா.. ஒரு சிரிப்பு.. ஒரு அணைப்பு.. ஊகூம். ஏதுமில்லையே டியர்...''

அதைக் கேட்டுவிட்டு புன்னகைத்தவள் ''நீங்கள் முறைப்படி கேட்டால்தான் எல்லாம் கிடைக்குமாக்கும்'' என்றாள் அவள்.

''ஓ... அப்படியா.. என் இனிய காதலியே... என்னை மணக்கச் சம்மதமா'' என்று கேட்க...

''சம்மதம்.. சம்மதம்.. சம்மதம்'' என்று அவனது தோளில் சாய்ந்தாள்...

அவளை அணைக்கப் போனவன் சட்டென்று விலகி நிற்க...

''என்னவாயிற்று'' என்பது போல அவள் பார்த்தாள்.

''இல்லை.. அன்றைக்குமாதிரி உன் ரவிக்கையைக் கிழித்துக் கொண்டு... வெளியே ஓடிவிடமாட்டாய் தானே'' என்று அவன் கேலியுடன் வினவ...

'ச்சீசீய்' என்று நாணத்துடன் அவனது தோளில் முகம் புதைத்தாள் சாதனா.. அவளை இறுக அணைத்தன அவனது கரங்கள்...

எத்தனை வினாடிகளோ.. நிமிடங்களோ.. தெரியாது.

'செல்'லின் ஓசை அவர்களை விலக்கியது.

''கம்மிங்.. கம்மிங்...'' என்று சொல்லிவிட்டு 'செல்'லை அணைத்தவன்...

''நமக்காக எல்லோரும் காத்திருக்கிறார்களாம்.. வா போகலாம் சாதனா.. அனைவருக்கும் உரக்க சொல்ல... இந்த உலகில் மிகவும் சந்தோஷமான ஜோடி நாம் தாம் என்று.. கமான்.. டார்லிங்...'' இருவரும் கைக்கோர்த்துக் கொண்டு சென்றனர்... அவர்களுக்காக விருந்தினர் மட்டுமல்ல.. அருமையான எதிர்காலமும் தான் கைக்கட்டிக் காத்திருந்தது.

Hero (M.D.) office- heroine’s brother fraud, frame panni mativida,Hero punished her brother & he was mentally disturbed. So, for a revenge, she joined hero's office...and by her brilliant & lucky activities...proved the truth to the hero.Love track is in between her brilliant moves.Hero&Heroine - love track1,Heroine's brother&heroine's friend - love track2.(love track is juicy...but not very elaborate